# ஒரு கட்டில்லாப் பொருளாதாரத்திற்கான வழி சோஷலிச அமைப்பினின்றும் வெளியேறுதல் :

## ஹங்கேரி பற்றிய ஓர் ஆய்வு

ஜெனோஸ் கோர்னாய் ஹார்வட் பல்கலைக்கழகமும்
ஹங்கேரிய விஞ்ஞானக் கழகமும்

# ஒரு கட்டில்லாப் பொருளாதாரத்திற்கான வழி சோஷலிச அமைப்பினின்றும் வெளியேறுதல்:

## ஹங்கேரி பற்றிய ஓர் ஆய்வு

ஜெனோஸ் கோர்னாய்
ஹார்வட் பல்கலைக்கழகமும்
ஹங்கேரிய விஞ்ஞானக்கழகமும்

ஜனவரி 1990

சமூக விஞ்ஞானிகள் சங்கம்
129/6A, நாவல வீதி,
கொழும்பு - 5,
இலங்கை.

© பிரதியாக்கம் பதிப்போருக்கே — 1992

ISBN 955 - 9102 - 01-X

*Printed by*
Karunaratne & Sons Ltd.
647, Kularatne Mawatha,
Colombo - 10.

# முகவுரை

கடந்த சில ஆண்டுகளாக ஹங்கேரி நாட்டில் ஏற்பட்டுவரும் பொருளாதார மாற்றங்கள் பற்றிய பேராசிரியர் கோர்ணாயினது இந்நூலானது 1990 ம் ஆண்டு வைடர் (ஹெல்சிங்கி) நிறுவனத்தினால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. திட்டமிட்ட பொருளாதார அமைப்பினின்றும் கட்டில்லா சந்தைப்பொருளாதாரமாக மாறிக்கொண்டு வரும் ஹங்கேரியினது அனுபவங்களையும் அந்த அனுபவங்களினடிப்படையில் எழும் பிரச்சினைகளையும் அவற்றை எதிர்கொள்வதற்கான வழிவகைகளையும் இது ஆராய்வதோடு, மேற்படி மாற்றத்தின் போது அமுலாக்கப்படவேண்டிய பொருளாதாரக் கொள்கைகள் எவை என்பதையும் முன்வைக்கின்றது.

திறந்த பொருளாதாரக் கொள்கையினை கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக பின்பற்றி வரும் இலங்கைக்கும் இதே கொள்கையினைப் பின்பற்ற முயலும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் ஹங்கேரியினது அனுபவமும் அது பற்றி இந்நூலில் கூறப்பட்டுள்ள கருத்துக்களும் முன்வைக்கப்பட்டுள்ள கொள்கைகளும் பெரிதும் பொருந்தக் கூடியனவாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே இந்நூலானது தமிழிலும் சிங்களத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எமது பிரச்சினைகளை விளங்கிக்கொள்வதற்கும் திறந்த பொருளாதாரக் கொள்கையானது எவ்வாறு அமுலாக்கப்பட வேண்டும் என்பதற்கும் இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலினை தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்த்து வெளியிடுவதற்கு நிதியுதவியளித்த வைடர் நிறுவனத்திற்கும் அதனது இயக்குனர் கலாநிதி லால் ஜயவர்த்தன அவர்களுக்கும் இலங்கை சமூக விஞ்ஞானிகள் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது. இதனைத் தமிழாக்கம் செய்த பேராதனைப் பல்கலைக்கழக பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மு. சின்னத்தம்பி அவர்களுக்கும் எங்களது நன்றி.

**ஜயதேவ உயாங்கொட,**
செயலாளர்,
சமூக விஞ்ஞானிகள் சங்கம்

# பொருளடக்கம்


அமெரிக்கபதிப்பிற்கான முகவுரை

அறிமுகம்

**1. உடைமை**

1.1 தனியார்துறை

1.2 அரசதுறை

1.3 இருதுறைகளினதும் விகிதாசாரத்தில் மாற்றம்: தனியார் மயமாக்கல் செயல்முறை

1.4 அரச, தனியார்துறைகளுக்கிடையிலான தொடர்புகள்

1.5 வேறுவகை உடைமைகள்

1.6 சுருக்கம்: இரட்டைப்பொருளாதாரம்

**2. உறுதியாக்கலுக்கான அறுவைச்சிகிச்சை**

2.1 பணவீக்கத்தை நிறுத்துதல்

2.2 பாதீட்டுச் சமநிலையினைப் புனரமைத்தல்

2.3 பேரினக் கேள்வியினை முகாமை செய்தல்

2.4 பகுத்தறிவான விலைகளை உருவாக்குதல்

2.5 ஒரு சீரான மாற்று விகிதத்தையும் மாற்றுந்தன்மையையும் அறிமுகம் செய்தல்

2.6 இவை ஒரே நேரத்தில் செய்யப்படுவதற்கான தேவை

2.7 மனிதாபிமானமானதும் பொருளாதார ரீதியானதுமான ஒதுக்குகள்

2.8 சர்வதேச உறுதியாக்கல் கோட்பாடு

2.9 பற்றாக்குறைப் பொருளாதாரத்தை அகற்றுதல்

2.10 செயற்பாடும் மீட்சியும்

**3. அரசியல் கண்ணோட்டத்தில் பொருளாதார மாற்றத்திற்கான செயல்கள்:**

3.1 செயற்றிட்டத்தின் சனரஞ்சகத்தன்மை

3.2 நெருக்கடியின் தோற்றுவாய்கள்

3.3 ஒரு வலுவான அரசாங்கத்திற்கான தேவை

**4. ஒரு தற்சுட்டான பிற்குறிப்பு மேற்கோள்கள்**

# அமெரிக்க பதிப்பிற்கான முகவுரை

இந்நூலின் மூலப்பிரதி ஹங்கேரிய வாசகர்களுக்காக எழுதப்பட்டதாகும். முதலாவது சுதந்திரமான தேர்தலின் பின்னர், 1990ம் ஆண்டின் வசந்த காலத்தில் உருவாக்கப்படும் புதிய பாராளுமன்றமும் புதிய அரசாங்கமும் அடுத்த சில ஆண்டுகளில் பின்பற்ற வேண்டிய பொருளாதாரக் கொள்கை தொடர்பாக எனது கருத்துக்களை முன்வைக்குமாறு நான் கேட்கப்பட்டேன். இதற்கமைய, 1989 ஆகஸ்டு 25ம் திகதி நான் வழங்கிய விரிவுரைக்கு பல்வேறு எதிர்க்கட்சிகளின் பொருளாதார நிபுணர்களும், இன்றைய அரசாங்கத்தோடு இணைந்து செயற்பட்டு வரும் அரச உடைமை நிறுவனங்களின் சில அதிகாரிகளும் முகாமையார்களும் சமூகமளித்தனர். இவ்விரிவுரைக்கான குறிப்புக்களினின்றும் உருவாக்கப்பட்டதே இச்சிறிய நூலினது எழுத்துப்பிரதியாகும்.

இங்கு முன் வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் உறங்கேரிக்கு மட்டுமன்றி, சோஷலிச அமைப்பின்றும் கட்டில்லாப் பொருளாதார அமைப்பிற்கு மாறிக்கொண்டிருக்கும் எல்லா நாடுகளுக்குமே பொருந்துமென நான் திடமான நம்புகிறேன். எனினும், அநேக நாடுகளிலேற்பட்டு வரும் இம்மாற்றத்தின் பொதுவான பண்பு எது என்பதைச் சுட்டிக்காட்டுமுன்னர், ஹங்கேரியில் காணப்படும் சில விசேட பண்புகளைப்பற்றிக் கருத்துரைப்பது பொருத்தமாகும்.

1988/ 89ம் ஆண்டுக் காலப்பகுதியிலேற்பட்ட சடுதியான மாற்றங்களுக்கு முன்னர் வரிசையான முக்கிய சில நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இந்த வரிசையிலே ஒரு சில நாட்களுக்கேனும் ஒரு பல கட்சியமைப்பையும் உண்மையான சனநாயகத்தையும் நோக்கித் திரும்பும் மக்களது அரசியல் அவாவினைப் பிரதிபலித்த 1956ம் ஆண்டு புரட்சியினின்றும் நாம் தொடங்க வேண்டும். இப்புரட்சி சோவியத் யுத்த டாங்கிகளால் முறியடிக்கப்பட்டதோடு, இதனைத் தொடர்ந்து கொடூரமான அடக்குமுறையும் கட்டவிழ்த்து விடப்பட்டது. எனினும், எதிர்ப்பு முறியடிக்கப்பட்ட பின்னர் அடக்குமுறை படிப்படியாகத் தளர்த்தப்பட்டது. பெருமளவு நுகர்வோர் சார்ந்த பொருளாதாரக் கொள்கைகளுடன் (மேற்கத்தைய நாடுகளில் இது "குளாஷ்" பொதுவுடைமையென அழைக்கப்பட்டது) செலவுகளைக் கட்டுப்படுத்தல், அரசஉடைமை நிறுவனங்களுக்கு (சந்தை சோஷலிசத்தை நோக்கிய ஆர்வத்தில்) அதிக சுயாட்சி வழங்கல், அவற்றினது விவகாரங்களில் ஆயிரக்கணக்கான தலையீடுகளுடனும் இறுக்கமான மத்திய கட்டுப்பாடுகளுடனும் கூடிய கட்டில்லாச் சந்தை முறையினைப் புகுத்தல், தனியார் சொத்து, தனியார் நடவடிக்கைகள் என்பவற்றில் தாராளப்

போக்கு என்பவற்றுடன், பணிக்குழு கட்டுப்பாடுகளும் நிறைந்த ஒரு நூதனமான கலப்பினைக் கொண்ட ஒரு நாடாக உறங்கேரி மாறியது. அரசியற்றுறையிலும் இதே வித நிச்சயமற்ற தன்மையே காணப்பட்டது. உத்தியோக பூர்வமாக பொதுவுடைமைக் கட்சியின் அரசியல் தனியுரிமை காணப்பட்டபொழுதும், நடைமுறையிலிருக்கும் அரசியலமைப்பிற்கும் மார்க்சிய லெனினிஸ்ட் கோட்பாட்டிற்கும் எதிரானவர்கள் தொடர்பாக சகிப்புத்தன்மையும் சகிப்பிலாத்தன்மையும் கலந்த ஒரு நிலை காணப்பட்டது.

1956-ல் ஆரம்பித்த இந்த நீண்ட முன்வரலாறானது, நடை-முறையிலிருக்கும் சோஷலிச அமைப்பினைச் சீர்திருத்துவதிலும் முழு அரசியல், பொருளாதார அமைப்பினையுமே ஒரு பலாத்காரமற்ற புரட்சிகரமான முறையில் மாற்றுவதற்கான ஒரு பரிசோதனையினை மேற்கொள்வதிலும் 1988/89 வரை ஒரு முன்னோடியாக ஆற்றிய பங்கினை விளக்குகின்றது. அமெரிக்கப் பதிப்பின் உபதலையங்கம் குறிப்பிடுவது போன்று, சோஷலிச அமைப்புக்களினின்றும் இந்நாடுகளை வெளியேற்றும் ஒரு நிலை மாற்றமே இதுவாகும். இம்மாற்றங்களுக்கான காலம் நெருங்கிய பொழுது, ஏனைய கிழக்கைரோப்பிய நாடுகளிலும் பார்க்க உறங்கேரி ஏதோ ஒரு வகையில் கூடியளவு தயார் நிலையிலிருந்தது. சனநாயகம், சந்தைப் பொருளாதாரம் என்பவற்றை நோக்கிய ஒரு மாற்றத்தை ஆதரிக்கும் செல்வாக்குமிக்க ஒரு பிரிவு கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயே இருந்தது. கடந்த கால எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கு பற்றி அனுபவத்தைக் கொண்டதும் ஒழுக்க விழுமியங்களைக் கொண்டதுமான அரசியல் குழுக்கள் சிலவும், சுதந்திரமான சிந்தனைகளைக் கொண்ட புத்தி ஜீவிகளும், ஸ்டாலினுக்கு முந்திய காலந்தொட்டே நீண்ட வரலாற்றைக் கொண்ட அரசியல் கட்சிகளும் இங்குள்ளன. தனியார் முயற்சியும் தனியார் அரசியல் கட்சிகளும் இங்குள்ளன. தனியார் முயற்சியும் தனியார் சொத்தும் வரையறுக்கப்பட்டதாகவிருப்பினும், இவை பொருளாதாரத்தில் ஏற்கனவே உள்ளன. எனவே, உறங்கேரிய சமூகத்தினது மாற்றமானது ஒரு சூனிய நிலையினின்றும் ஆரம்பிக்கத்தேவையில்லை.

உறங்கேரி சில விசேட குணாதிசயங்களைக் கொண்டிருந்த பொழுதும், ஏனைய கிழக்கைரோப்பிய நாடுகளினது நிலைமைகளுக்கும் பொருந்தக்கூடிய பல அடிப்படைக்குணாதிசயங்களும் இங்கு காணப்படுகின்றன. இந்நூலின் முதற் பிரதி உறங்கேரிய மொழியில் எழுதப்பட்டபொழுது (1989 செப்படம்பரில், அதாவது, நான்கு மாதங்களுக்கு முன்னர்), போலந்திலும் ஹங்கேரியிலும் மட்டுமே கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தனியுரிமை உத்தியோகபூர்வமாக நீக்கப்பட்டிருந்தது. இன்று இந்நூலுக்கான முகவுரையினை எழுதிக்கொண்டிருக்கும் வேளையில் கிழக்கு ஜேர்மனி,

செக்கோஸ்லாவேகியா, பல்கேரியா, ருமேனியா போன்ற நாடுகளும் இந்தவரிசையில் இணைந்துவிட்டதோடு, யூகோஸ்லாவியாவிலும் இதேவித அபிவருத்திகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. வரலாறு, பண்பாடு, இன்றைய அரசியல் பொருளாதார நிலைமைகள் என்பவற்றில் முக்கிய வேறுபாடுகள் காணப்பட்ட பொழுதும், இந்நாடுகளுக்கிடையே பொதுவான குணாதிசயங்கள் சிலவும் காணப்படுகின்றன. எனவே, அடுத்துவரும் ஆண்டுகளில் இவை ஏறக்குறைய ஒரே விதமான சிக்கல்களையே எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

இந்த நாடுகள் அனைத்திலுமே பொதுத்துறையானது ஓர் அதிமுக்கிய பங்கினை வகிக்கின்றமையால் , பொருளாதாரத்தை தனியார்மயமாக்கும் முயற்சியில் இந்நாடுகள் ஒரே விதமான தடைகளையே அகற்றவேண்டியிருக்கும். உண்மையான சந்தைப் பொறிமுறையினது சில கூறுகள் பொருளாதாரத்தில் ஆங்காங்கு காணப்படினும், திறம்படச் செயற்படும் கட்டில்லாச் சந்தைக்கான தாபனங்கள், சட்ட ஆதாரம், பண்பாடு, ஒழுக்கநெறி என்பன இன்னமும் வளர்ச்சியடையவில்லை. விலைகள், வட்டிவீதங்கள், நாணய மாற்று விகிதங்கள் என்பன உருக்குலைந்த நிலையிலுள்ளன. சிறிய திறந்த பொருளாதாரங்களைக்கொண்ட இந்நாடுகள், உலகப்-பொருளாதாரத்தின் ஒரு சேதன உறுப்பாக மாறுவதற்குத் துடித்துக்கொண்டிருக்கின்றன. எனினும், இந்நாடுகளின் உற்பத்திச் சேர்க்கையும் தரமும் உலகசந்தையின் கேள்விக்கு ஏற்றனவாக இல்லை. பொருளாதாரத்தின் ஒவ்வொரு சிறுபகுதியிலும் பணிக்குழுவாட்சி முறை நன்கு ஊடுருவியுள்ளது. விகிதாசார அளவில் வேறுபாடுகள் காணப்பட்டபொழுதும், கிழக்கைரோப்பிய நாடுகளின் பொருளாதாரங்களில் ஒரேவிதமான "நோய்க்குறி"யே காணப்-படுகின்றது. மெய்வெளியீட்டிலும் நுகர்விலும் தேக்கநிலை அல்லது பின்னடைவு, திறந்த அல்லது அமுங்கிய பணவீக்கம் அல்லது இரண்டும், தீராத தட்டுப்பாடுகள் என்பவற்றோடு பெரும்பாலான நாடுகளில் பெரியளவு வெளிநாட்டுக்கடன் சேவைப்பளுவும் காணப்-படுகின்றன. சமூக நெருக்கடிகள் சமூகத்தின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக உள்ளன. பொருளாதார உறுதிப்பாட்டிற்காக தொடர்ந்தும் அர்ப்பணங்களை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுவதால், தொழிலாளரிடையே அதிருப்தி நிலவுகின்றது; சனத்தொகையில் பெரும்பாலானோர் வறுமையால் பீடிக்கப்பட்டுள்ளனர். அதே வேளையில், தொழில் நுட்பவியலாளரும், பணிக்குழுவாட்சியினரும், முன்னைய ஆட்சியாளரால் தெரிவு செய்யப்பட்ட முகாமையாளரும், ஆட்சி மாற்றமேற்படுவதை எண்ணி அச்சங்கொணடுள்ளனர்.

மேலே கூறப்பட்ட இந்த நிலைமைகளின் கீழ், அடுத்த சுமார் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் எவ்வித பொருளாதாரக்கொள்கை

பின்பற்றப்பட வேண்டும் என்ற வினாவிற்கு விடையளிக்க இந்நூல் முயலுகின்றது. ஹங்கேரிய நிலைமைகளுக்குப் பொருந்துவதாகவே விடைகள் கூறப்பட்டுள்ளன. இந்தவகையில் இவை ஹங்கேரிக்குச் செல்லுபடியாகுமாயின், ஏனைய (முன்னைய) கிழக்குமண்டல நாடுகளுக்கும் பொருந்தக்கூடியனவாகவே இருக்கும் எனலாம்.

இந்நூலினை எழுதிக்கொண்ருக்கும் இவ்வேளையில், மிகப்பெரிய இரு சோஷலிச ஏகாதிபத்தியங்களான சோவியத் ஒன்றியமும் சீனாவும் இன்றைய கிழக்கைரோப்பிய நாடுகளினின்றும் வேறுபட்ட ஒரு கட்டத்தில் உள்ளன. எனினும், 1989ம் ஆண்டு மாற்றங்களுக்கு முன்னர் யூகோஸ்லாவியா, ஹங்கேரி, போலந்து ஆகிய நாடுகளில் காணப்பட்ட நிலைமைகளைப் பெரிதும் அது ஒத்துள்ளது. சோவியத் யூனியனும் சீனாவும் சீர்திருத்த நடைமுறையின் எல்லைகளை மீறாமலேயே சோஷலிச அமைப்பினை சீர் திருத்துவதில் வெகுதுாரம் முன்னேறியுள்ளன. திறன்கூடிய உற்பத்தி, சகிக்கக்கூடிய ஒரு வாழ்க்கைமுறை என்பவற்றிற்காக நடைமுறை அமைப்பினை மாற்றியமைக்கும் அதேவேளையில், கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் ஏகபோக உரிமை, பொதுவுடைமையின் ஆதிக்கம் போன்ற அடிப்படை அம்சங்களை எவ்விதத்திலும் பாதிக்காதிருக்க இந்நாடுகளின் தலைமைத்துவம் முயலுகின்றது. இன்று கிழக்கைரோப்பாவில் ஆராயப்படும் விடயங்களைத் தமது நாடுகளின் நிலைமைகளோடு ஒப்பிட்டுப்பார்ப்பது இவ்விரு இராட்சத நாடுகளினது வாசகர்களுக்கும் நன்மையபக்குமென நான் கருதுகிறேன். எமது இன்றைய நிலை, அவர்களது எதிர்காலம் பற்றிய ஏதாவது உண்மைகளைக் கூறுவதாக இருக்கக் கூடும். சமகால கிழக்கைரோப்பாவைப்பற்றிய ஆராய்வு, சோஷலிசத்தை சீர்திருத்துவதற்கும் சோஷலிசத்தை விட்டு வெளியேறுவதற்குமுள்ள வேறுபாட்டைத் தெளிவுபடுத்தும். நான்கு தசாப்தங்களுக்கு முன்னர்உேறயக் (Hayek) தனது "The Road to Serfdom" என்ற சிறந்த நூலில், இறுக்கமான மத்திய திட்டமிடலை நோக்கிய போக்கும் அரசின் வியாபகமான சக்தியும், தனியார் உடைமையினை நீக்குதலும் அரசியல் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாகவிருக்குமென்பதை எடுத்துக்காட்டினார். எமது ஆங்கிலப்பதிப்பின் தலைப்பும் உெறயக்கினது நூலினது தலைப்பின் ஓர் எதிரொலியேயாகும். அது மேற்படி வழியினது முதற்பகுதியினை நேரெதிர்த் திசையில் நோக்குகின்றது. ஒருகட்டில்லாச் சமூகத்தை நோக்கிய வழியிற் செல்லும் கிழக்கைரோப்பர்களாகிய நாம், இவ்வழியிற் காணப்படும் தடைகளை எவ்வாறு அகற்றுவது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். எல்பா தொடக்கம் மஞ்சட்கடல்வரையுள்ள பரந்த பிரதேசத்தில் வாழும் நாம் அனைவரும் நன்கு உணர வேண்டிய ஒரு கற்கை இதுவாகும். இந்நூலின் ஆங்கில மொழிப்பதிப்பு

மேற்கூறிய எல்லா நாடுகளிலுமே வாசகர்களின் கைகளைச் சென்றடையுமென நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

எனது எல்லாப் பிரேரணைகளுமே சர்ச்சைக்குரியன என்பதையும் அவை கடும் எதிர்ப்பிற்கும் கண்டனத்திற்கும் உள்ளாகுமென்பதையும் நான் அறிவேன். எனினும், இந்நூலில் ஆராயப்படும் விடயங்கள், இந்நாடுகள் ஒவ்வொன்றிலும் கவனமாக ஆராயப்படவேண்டிய முக்கிய பிரச்சினைகளுட் சில என்பதில் ஐயமில்லை. இந்நூலில் ஆராயப்பட்டுள்ள பிரச்சினைகளின் பட்டியல் பூரணமானதல்ல; ஆனால், இவற்றுள் எதனையுமே தேவையற்றது என ஒதுக்கிவிட முடியாது. நாம் விரும்பினும் விரும்பாவிடினும், அடுத்த சில ஆண்டுகளில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளுட் சிலவே இவை. எமது எல்லாப்பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்வதற்கு உலகளாவிய ரீதியில் கையாளப்படக்கூடியதும் அதி அற்புதமானதுமான ஒரு தீர்வினை இந்நூல் முன் வைக்கவில்லை. மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஈடுபட்டுள்ள எல்லா நாடுகளிலுமே இங்கு கூறப்படும் அணுகுமுறையினைக் கையாள முடியுமென்பது எனது நம்பிக்கை ஆகும். உடைமைகளைத் தனியார்மயமாக்குதல் (முதலாம் அதிகாரம்), உறுதியாக்கல், தாராண்மையாக்கல், பேரினசரிப்படுத்தல் என்பவற்றிற்குத் தேவையான நடவடிக்கைகள் (இரண்டாம் அத்தியாயம்), இம்மாற்றங்களுக்கு அரசியல் ஆதரவினை வலுப்படுத்தல் (மூன்றாம் அத்தியாயம்) என்பன பிரிக்க முடியாதவகையில் பின்னிப்பிணைந்துள்ளன. ஏனையவற்றை நிறைவேற்றாது இவற்றுள் எந்த ஒன்றையும் வெற்றிகரமாகச்சாதிக்க முடியாது. சில இலக்குகளை ஒதுக்கிவிட்டு, வேறு சிலவற்றை எழுமாறாகத் தெரிவு செய்தல் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்துவதோடு, அது சன நாயகப்படுத்தல், பொருளாதார மாற்றம் என்பவற்றை ஏற்படுத்த முயலும் நடவடிக்கைகள் தோல்வியுறுவதற்கும் மதிப்பிழப்பதற்கும் வழிவகுக்கும். இந்தக்கருத்தில் இச் செயற்றிட்டத்தின் பல்வேறு அங்கங்களும் (இந்நூலின் பல்வேறு பகுதிகளும்) ஒரு சேதன உறுப்பாகவிருப்பத்தோடு, மாற்றத்திற்கான ஒரு முழுமையான திட்டத்தினையும் இவை முன் வைக்கின்றன. இத்தகையதொரு முழுமையான திட்டத்தினை ஒரு நூல்வடிவில் தரும் முதல் முயற்சியான இப்பிரேரணைகளில் பலகுறைபாடுகள் உள்ளனவென்பதை நான் அறிவேன். இருந்துங்கூட, மேற்படி பரபரப்பான பிரச்சினைகளுக்கு எதேச்சையானதும். அவ்வப்போது மேற்கொள்ளப் படுவதுமான பகுதி நடவடிக்கைகளை முன்வைக்காது முழுமையான தீர்வுகளைத் தேடவேண்டுமென இது கூறுவதால், பிரச்சினைகள் மீதான விவாதத்திற்கு இவை பெரிதும் பங்களிக்கக்கூடும்.

“கிழக்கில்” உள்ள வாசகர்களைப் பொறுத்தவரை இந்நூலினது உபயோகத்தினை தெளிவுபடுத்திய பின்னர், ஓர் அமெரிக்கன் அல்லது

“மேற்கு நாட்டவன்” இது விடயத்தில் ஏன் அக்கறை கொள்ளவேண்டுமென்ற வினா எழுகின்றது. ஒரு நீதிமன்றத்தீர்ப்பு அல்லது உதைபந்தாட்டப் போட்டி போன்ற சாதாரண விடயங்களுக்குக்கூட இன்று “வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த” என்ற பதங்கள் கையாளப்படுகின்றன. இப்பதங்கள் உண்மையிலேயே ஏதாவதொரு நிகழ்ச்சிக்குப் பொருந்தக்கூடியதெனில், அது சோஷலிச அமைப்புக்களை சனநாயக சமூகங்களாகவும் சந்தைப் பொருளாதாரங்களாகவும் மாற்றும் ஒரு நிகழ்ச்சியே எனக்கூறலாம். இது ஒவ்வொருவரது வாழ்க்கையையும் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கக்கூடியது. இதன் மூலம் பூகோள ரீதியான சமாதானம் தோன்றுமென நம்புவதற்கு இடமுண்டு. மிகக்குறுகிய காலத்தில் இல்லாவிடினும் சிறிது காலத்தின் பின்னராவது பாதுகாப்புக்கெனப் பெருமளவு சாதனங்களைச் செலவிடுவதைக் குறைப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சி, சமூகநலன், விஞ்ஞானமும் பண்பாடும், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வறியோருக்கான உதவி போன்ற ஏனைய நோக்கங்களுக்கு அதிகளவு சாதனங்களை ஒதுக்குவதற்கு இது வாய்ப்பினை ஏற்படுத்தும்.

இவ்விடயத்தில் பொதுவான அக்கறை மட்டுமன்றி, பல்வேறு குழுவினருக்கு விசேட அக்கறையும் இருக்கக்கூடும். முதலாவதாக, அறிவியல் ஆராய்ச்சியுலகில், பொதுவுடைமையப்பினை வேறு சமூக அமைப்புக்களுடன் ஒப்பிட்டு ஆராயும் நிபுணர் குழுவொன்று உள்ளது. சோஷலிச ஆட்சிகளின் கீழிருந்து இப்பொழுது வேறு அமைப்புக்களுக்கு மாறிக்கொண்டிருக்கும் உலகின் இந்தப்பகுதியிலேற்படும் மாற்றங்களை உன்னிப்பாக அவதானிப்பது, அவர்களது முதன்மையான வேலையாகவிருக்கும். சோஷலிசம், மத்திய திட்டமிடல், ஒப்பீட்டுப் பொருளாதார முறைகள் என்பவை தொடர்பான பாடநெறிகளில் மேற்படி மாற்றச்செயல்முறைகளையும் ஒரு பகுதியாகச் சேர்த்துக்கொள்ளுதல் அவசியமாகும். அறிவுத்துறை சார்ந்தவர்கள் மட்டுமே இவ்விடயத்தில் அக்கறை கொண்டவர்களாக இருக்க முடியாது. அரசியல் வாதிகள், அரசாங்க உத்தியோகத்தர், பாராளு-மன்றங்களினதும் காங்கிரசுகளினதும் உறுப்பினர்கள், இராஜதந்திரிகள், சர்வதேச அரசியலை உருவாக்குவதில் ஈடுபட்டிருக்கும் சர்வதேச தாபனங்களின் உத்தியோகத்தர், பொருளியல் ஆலோசகர்கள் போன்றோருக்கும் இதில் அக்கறை இருக்கலாம். உலகின் இப்பகுதி தொடர்பான விவகாரங்களை வெளியிட்டு, பொது அபிப்பிராயத்தில் செல்வாக்குச் செலுத்தும் பத்திரிகைகள், ஏனைய வெகுசன தொடர்புச் சாதனங்கள் என்பற்றுடன் தொடர்புள்ள ஏனையோரும் இதிலடங்குவர். இறுதியாக, இப்புதிய சந்தையில் புகுவதற்கு விரும்பும் வங்கியாளர், வர்த்தகர்கள், ஏற்றுமதியாளர், இறக்குமதியாளர் என்போரையும் இதிலடக்கலாம். இந்த அனைவருமே கிழக்கைரோப்பாவில் காணப்படும்

புதிய நிலைமைகளை விளங்கிக்கொள்வது அவசியம். இக்குழுக்களைச் சேர்ந்த பலர் இப்பிரதேசத்திற்கு வந்துள்ளதுடன், குறிப்பிட்ட சில அபிப்பிராயங்களுடன் திரும்பிச்சென்றுமுள்ளனர். நிலைமைபற்றிய அவர்களது புரிந்துணர்வு சில சந்தர்ப்பங்களில் சரியானதாகவும் வேறு சில சந்தர்ப்பங்களில் பிழையானதாகவும் இருக்கலாம். எவ்வாறாயினும், இவர்களது அறிவு எந்தளவிற்கு ஆழமானதாகவும் சார்பற்றதாகவும் உள்ளதோ, அந்தளவிற்கு கிழக்கைரோப்பிய விவகாரங்களில் இவர்களது தாக்கமும் செயற்றிறன்மிக்கதாக இருக்கும்.

தேவைக்குமதிகமாக எளிமைப்படுத்துவதும் வெறுமனே போலியாகப் பின்பற்றி நடக்குமாறு கூறுவதும் ஒரு பொதுவான குறைபாடாகும். கிழக்கைரோப்பாவிற்கு விஜயம் செய்யும் பலர் எமது பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வுகளை முன்வைப்பதோடு, அவை வெற்றியடையுமென்றும் உறுதியளிக்கின்றனர். தமது நாட்டில் செய்வது போன்று இங்கும் செய்தால் பிரச்சினைகள் தீருமெனவும் கூறுகின்றனர். இது சரியாகவோ, பிழையாகவோ இருக்கலாம். மாற்றச்செய்முறையின் ஆரம்ப கட்டத்தில் இங்கு காணப்படும் அசாதாரண நிலைமைகளை கவனத்திற்கொள்ள வேண்டுமென்பதை இந்நூல் உறங்கேரிய வாசகர்களுக்கும் மறைமுகமாக வெளிநாட்டு வாசகர்களுக்கும் அடிக்கடி நினைவூட்டுகின்றது. அரச உடைமையின் ஆதிக்கத்தினதும் ஒவ்வொரு வியாபார அலகினையும் ஒவ்வொரு குடும்பத்தையும் ஒவ்வொரு தனிநபரையும் சென்றடையும் கோடிக்கணக்கான கரங்களைக் கொண்ட எல்லாம்வல்ல ஒரு பணிக்குழுவினதும் பிடியினின்றும் விலகி அப்பாற் செல்லவேண்டியுள்ளது. இந்நாடுகளில் தனிநபர் இறைமை, தன்னாதிக்கம், தனியார் உடைமை, தனியார் வியாபாரம், அரசியல், அறிவுசார் சுதந்திரம், சனநாயகத்தாபனங்கள், சட்டவாட்சி என்பன பற்றிய சிந்தனைகள் பல தசாப்தங்களாக நசுக்கப்பட்டிருந்துள்ளன. இவற்றை மீண்டும் தாபித்தல் என்பது திடீரென ஏற்பட முடியாதது. ஒரு வரலாற்று ரீதியான செய்முறையின் மூலமே இவ்விதிகளை உருவாக்கி மீண்டும் தாபிக்கலாம். தீவிரப்படுத்தவேண்டியதும் தீவிரப்படுத்தக்கூடியதுமான இது, ஒரு சில வாரங்களில் சாதிக்கப்படக்கூடியதல்ல. மேற்கத்திய நாடுகளினது அனுபவங்களினின்றும் நாம் நிறையக் கற்கவேண்டியிருப்பினும், தெரிவு அடிப்படையிலேயே இவற்றை நாம் மேற்கொள்ளவேண்டும். உடனடியாகப் பின்பற்றுவதற்குத் தேவையான நிபந்தனைகளைப் படிப்படியாக நீண்டகால வளர்ச்சியின் மூலமே உருவாக்கக்கூடிய ஏனையவற்றினின்றும் நாம் கவனமாக வேறுபடுத்துவதோடு, சில முறைகள், தாபனங்கள், பொருத்தமற்ற (அல்லது பின்பற்றத்தகாத) வழக்கங்கள் என்பவற்றை நிராகரிக்கவும் வேண்டும். இச்சமூகங்களின் மீது அவசரமாகவும் செயற்கையாகவும் திணிக்கப்படும் மாற்று

முறைகள், காலஓட்டத்தில் இவற்றினால் ஏற்கப்படாது நிராகரிக்கப்படுமென்பதை நாம் உணரவேண்டும்.

தாபனங்களில் மட்டுமன்றிச் சிந்தனையிலும் புரட்சிகர மாற்றங்கள் ஏற்படவேண்டும். பழைய ஆட்சியாளரால் பல தலைமுறையினரின் மீது திணிக்கப்பட்ட பழைய பெறுமானங்களுக்குப் பதிலாகப் புதியன பதிக்கப்படவேண்டும். ஓர் உதாரணத்தை மட்டும் இங்கு நோக்குவோம். தொழிலில் மற்றையோரிலும் பார்க்கக்கூடிய திறமையுள்ளோர், மற்றையோரிலும் கூடிய வருமானத்தினை உழைக்கும் உரிமை இருக்கவேண்டும் என்பது போன்ற அற்பமான கருத்துக்களை இந்நூல் ஏன் ஆராய்கின்றதென ஒரு மேற்கத்திய வாசகர் கேட்கக்கூடும். ஒரு அமெரிக்கனுக்கோ, ஒரு சுவிஸ்நாட்டவனுக்கோ, இது ஒரு வெளிப்படையான உண்மையாகவிருந்த போதும், ஒரு போலந்து வாசிக்கோ, கிழக்கு ஜேர்மன் வாசிக்கோ இது இயற்கையான ஒன்றாகத் தோன்ற மாட்டது. ஒருவன் பாலர் வகுப்பிற் சேரும் காலந்தொட்டு, அவன் ஓய்வூதியம் பெற்று முதியோர் இல்லமொன்றுக்குச் செல்லும் காலம் வரை வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அவனுக்கு வியாபாரத்தின் மூலமன்றி தொழில் (அதிலும் குறிப்பாக, அரச துறையைச் சார்ந்த ஒரு நிறுவனத்தில் அல்லது தாபனத்தில் செய்யும் தொழில்) மூலம் பெறும் வருமானமே சட்டபூர்வமான ஒரே வருமான மூலகமெனக் கூறப்பட்டு வந்துள்ளது. மேலும், மக்களுக்கு ஊக்குவிப்பு அளிப்பதற்காக ஒரளவு சமமின்மை சகிக்கக்கூடியது அல்லது உபயோகமானது எனினும், அளவிற்கு மீறிய சமமின்மை இருக்கக்கூடாது என்றும் அவனுக்குக்கூறப்பட்டுள்ளது. அதே வேளையில், பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட சலுகைகள் மக்களுக்கு மறைக்கப்படுவதன் மூலம் இவ்விதி எவ்வாறு வெளிப்படையாகவே மீறப்பட்டது என்பது பற்றி அவனுக்கு ஒருபோதும் கூறப்படவில்லை. புதிய சகாப்தம் தொடங்கிவிட்ட பின்னருங்கூடப் பல்வேறு அரசியல் குழுக்களைச் சார்ந்தோர் (கம்யூனிசத்திற்கெதிரான இயக்கங்களைச் சேர்ந்தோர் உட்பட), முன்னர் கூறப்பட்ட சமத்துவப்பெறுமானங்கள் பற்றிய தீவிரமான கருத்துக்களின் பிடிக்குட்பட்டுள்ளனர். இலாபங்கள் அல்லது உயர்ந்த வருமானங்கள் ஒழுக்கமற்ற செயல்களின் விளைவு என்றும், உத்தேசமும் இலாபம் பெறுதலும் ஏற்க முடியாத பேராசையின் சின்னங்களென்றும் அவர்கள் கருதுகின்றனர்.

கிழக்கைரோப்பாவில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு தத்துவத்தையோ, ஒழுக்க நெறியினையோ குறிப்பிடாது இந்நூல், ஒரு சில குழுக்களால் ஏற்கப்படுவதும் வேறு சிலவற்றால் நிராகரிக்கப்படுவதுமான ஒன்றையே கூறுகின்றது. அதன் மைய எண்ணக்கருவான சுதந்திரம் என்பதை அமெரிக்க பதிப்பின் தலைப்பு குறித்து நிற்கின்றது. இது தாராள சிந்தனை சார்ந்த ("தாராள" என்ற

சொல் இங்கு அதன் ஐரோப்பிய வழக்கில் கையாளப்படுகின்றது) அணுகுமுறையாகும். தனிநபரின் உரிமைகளில் கவனம் செலுத்தும் இது, அவர்களது தன்னாதிக்கத்தையும் சுய நிர்ணயத்தையும் மதிக்கின்றது. மாறாக, அரச நடவடிக்கைகள் குறைக்கப்பட வேண்டுமென்பதை ஆதரிக்கின்றது. புத்திசாதுரியமான (அல்லது மடைத்தனமாதும் கொடியதுமான) ஓர் அரசாங்கம், மக்களை ஒன்றுமறியாத குழந்தைகளைப் போன்று நடத்துவதற்கெதிராகவும், அரசினது தயாளப்போக்கிற்கெதிராகவும் இது வாதாடுகின்றது. ஒரு குடிமகன் தனது காலிலேயே நிற்பதையும் தனது சொந்த சக்தியிலும் முயற்சியிலும் தங்கியிருப்பதையும் இது வரவேற்கின்றது. அரசினது பங்கு பின்னர் ஒரு கட்டத்தில் கவனத்திலெடுக்கப்படலாம். ஆனால் மாற்றச் செயல்முறையின் ஆரம்பக் கட்டத்தில் மிதமிஞ்சிய அரசியல் தலையீட்டினையும் பணிக்குழுவினது சர்வாதிகாரத்தையும் மக்கள் வெறுக்கும் நிலையிலேயே உள்ளனர். வரலாறு ஒரு நேர்க்கோட்டு வழியாகச் செல்லாது, கடிகாரப்பென்டுலம் போன்று அசைந்து அசைந்து செல்வது தவிர்க்க முடியாதது போலும். பல தசாப்தங்களாக அரசினது மிதமிஞ்சிய தலையீட்டின் பின்னர், அதனது தலையீட்டினைக் குறைப்பதற்கான காலம் வந்துவிட்டது. அடுத்துவரும் தலைமுறையினர் சில வேளைகளில் ஒரு மிதவாத நடுவழியைப்பற்றிச் சிந்திப்பது சாத்தியமாகலாம்.

நூலின் பெயரில் காணப்படும் கட்டில்லாப்பொருளாதாரம் என்ற கருத்தினை விளக்குவது இக்கட்டத்தில் பொருத்தமானதாகும். கட்டில்லாப் பொருளாதாரமென்பது, ஒரு சந்தைப்பொருளாதார-மேயாகும். ஆனால் இந்த எண்ணக்கருவானது சந்தையே பொருளாதார நடவடிக்கைகளை இணைக்கும் பாலமாக விளங்குகின்றது என்பதைமட்டிலும் கருதாது, அதிலும் பார்க்க ஆழமான ஒரு கருத்தைக்கொண்டதாகும். கட்டில்லாப்பொருளாதாரமென்ற கருத்து, சொத்துடைமையின் ஒரு குறிப்பிட்ட வடிவத்தையும், குறிப்பிட்ட ஒரு தாபன அரசியல் அமைப்பையும் வெளிப்படுத்துகின்றது. இவ்வமைப்பு தனியார் உடைமை சுதந்திரமாகத் தாபிக்கப்படுவதையும் அது பாதுகாக்கப்படுவதையும் ஆதரிப்பதோடு, உற்பத்தியின் பெரும்பகுதி தனியார் துறையினால் மேற்கொள்ளப்படுவதையும் ஊக்குவிக்கின்றது. அது தனியார் முயற்சியை ஊக்குவிப்பதோடு, மிதமிஞ்சிய அரசியல் தலையீட்டினின்றும் அதனை விடுவித்து, சட்டவாட்சி மூலம் அதனைப் பாதுகாக்கின்றது. ஒரு கட்டில்லாப் பொருளாதாரமானது சனநாயக அரசியல் முறையில் பொதிந்துள்ளதும், அரசியல் சக்திகள், கருத்துக்கள் என்பவற்றில் கட்டில்லாப் போட்டி இயல்பினைக்கொண்டதுமாகும். இந்நூலாசிரியரது பெறுமானங்களின்படி, மேற்படி சுதந்திரங்கள் உறுதிப்படுத்தப்படுதல் மிக உயர்ந்த உள்ளார்ந்த பெறுமதி-

யினைக்கொண்டதாகவிருப்பதால், பொருளாதாரக்கொள்கை ஆக்கத்தில் இவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

கிழக்கைரோப்பாவில் எதிர்காலத்திலேற்படக்கூடிய அபிவிருத்திகள் பற்றி உேறஷ்யம் கூறுவது இந்நூலின் நோக்கமன்று. இதுவரையிலான எனது எழுத்து ஆக்கங்களில், நடைமுறையிலிருக்கும் சோஷலிச அமைப்புக்களின் உடைமைகளை ஆராய்வதிலும் விளக்கக்-கோட்பாடுகளை விபரிப்பதிலும் ஈடுபட்டு வந்துள்ளேன். ஒரு விளக்கக் கோட்பாடு உேறஷ்யம் கூறும் சக்தியைக் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், இந்த நூலின் நோக்கம் வேறுபட்டது. எதிர்கால கிழக்கைரோப்பிய பாராளுமன்றத்தினது பங்கு என்னவாகவிருக்கும் என்ற வினாவிற்கு விடையளிக்க முயலாது, அப்பங்கு எவ்வாறானதாக இருக்க வேண்டுமெனக் கூற முயன்றுள்ளேன். சில உறுப்பினர்கள் உள்ளூர், அல்லது துறை சார்ந்த நலன்களை ஆதரிக்க முயலலாம்; ஊழல்கள் இடம்பெறலாம் பாராளுமன்றத்தினது மேற்பார்வைத்திறனுக்கு அதனது நிபுணத்துவம் போதாமை தடையாகவிருக்கலாம். எனினும், நிர்வாகத்தினது நடவடிக்கைகளைக் கண்காணிப்பதிலும் பாரிய அரச துறையினை மேற்பார்வை செய்வதிலும் சுதந்திரமாகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்திற்கு அதிகரித்த பங்கு உண்டென்பதை இந்நூல் ஆதரிக்கின்றது. எனது நோக்கம் ஓரளவிற்கு கற்பித்தல் சார்ந்ததாகும். எதிர்காலப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது தேசியப்பொறுப்பினை உணர்ந்திருக்க வேண்டுமென்றும், குறுகிய உள்ளூர் நலன்களுக்கும் மேலாகத் தமது எண்ணங்களை உயர்த்தவேண்டுமென்றும், அச்சுறுத்தல்களுக்கும் அமுக்கங்களுக்கும் அடிபணியக்கூடாது என்றும் அறிவுறுத்த விரும்புகிறேன். வேதன ஒழுக்காறும் தொழிற்சங்கங்களின் பங்கும் தொடர்பான இன்னொரு பிரச்சினையையும் இங்கு உதாரணமாகப் பார்ப்போம். அண்மிய எதிர்காலத்தில் வேதனங்கள் விலகிச் செல்வதற்கான வலுவான வாய்ப்பும், வேதன ஒழுக்காறு தளர்ச்சியடைந்து தொழிற்சங்க இயக்கத்தில் எதேச்சையானதும் மக்கள் உணர்வுகளைக் கிளறிவிடுவதுமானதொரு போக்கு வளர்ச்சி-யடைவதற்குமான சாத்தியமும் உண்டென்பதை நான் ஏற்கின்றேன். அந்த வழியிற் செல்ல வேண்டாமென இந்நூல் அறிவுறுத்துகின்றது. அவ்வாறு சென்றால், ஊழியத்தினது நெடுங்கால நலனுக்கு அது பாதகமாகவிருக்கும். உறுதியாக்கலுக்கு இறுக்கமான வேதன ஒழுக்காறும், வெளிநாட்டு வர்த்தகத்தின் கேள்விகளுக்கேற்பத் துரிதமான சரிப்படுத்தலும், இறுதியாக துரிதமான வளர்ச்சியும் இன்றியமையாதன. சமூகத்தில் எல்லாப்படையினரதும் மெய்நுகர்வினைத் தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கு இதுவே பாதுகாப்பான வழியுமாகும். மேலும் உதாரணங்களைத்தர முயலாது,

இந்நூலின் உறங்கேரிய மூல வெளியீடு "பொருளாதார மாற்றத்திற்கான உணர்ச்சி பூர்வமான ஒரு சிறு பிரசுரம்" எனப்பெயரிடப்பட்டிருந்தது என்பதை மட்டும் கூறிவைக்க விரும்புகின்றேன். எனது இந்த ஆக்கம், "எவ்வாறு செய்வது............" எனக்கூறும் கைநூல் வகையைச்சார்ந்த ஓர் அமைதியான சிறு நூலன்று. இது வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோளாக மட்டுமன்றி, அவர்களது உணர்வுகளுக்கான ஒரு வெளியீடும் ஆகும். செயல்கள், தாபனங்கள், பெறுமானங்கள் என்பவற்றில் எவ்வித மாற்றங்கள் தேவையென்பதை இது விபரிக்கின்றது. எனது ஆலோசனைகள் யதார்த்தமற்றவையல்ல என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு; இன்றைய அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளில் இவை சாத்தியமானவையே. இவை உண்மையிலேயே நடைபெறுமா என்பது, கிழக்கைரோப்பாவிற்கு உள்ளேயும் வெளியேயும், இதில் சம்பந்தப்பட்ட எல்லோரதும் திடசங்கற்பத்திலும் கட்டில்லாப் பொருளாதாரத்திற்கான பாதையிலுள்ள பல்வேறு தடைகளைத் தாண்டிச் செல்வதில் அவர்களது இடைவிடா முயற்சியிலுமே தங்கியிருக்கும்.

இந்நூலின் ஆக்கத்திற்கு உதவிய எல்லாத்தனி நபர்களுக்கும் தாபனங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த பல ஆண்டுகளாக, சோஷலிசத்தினது அரசியற்பொருளாதாரம் பற்றிய எனது கருத்துக்களை தொகுத்துக்கூறும் ஒரு சவிஸ்தாரமான நூலினை வெளியிடும் ஒரு நீண்டகால ஆராய்ச்சிச் செயற்திட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளேன். அண்மைக்கால நிகழ்வுகளினால் உந்தப்பட்டு எழுதிய இச்சிறு நூல், மேற்படி பாரிய ஆராய்ச்சித் திட்டத்தின் ஒரு பக்க விளைவேயாகும். இந்த நீண்டகாலத்திட்டத்திற்கு ஆதரவு தரும் உறங்கேரிய விஞ்ஞான மன்றத்தின் பெருளியற் கல்லூரி, ஹார்வர்ட் பல்கலைக்கழகம், ஸ்லோன் மன்றம், மெக்டொன்னல் மன்றம், ஐ.நா. வைடர் (ஹெல்சிங்கி) ஆகியவற்றிற்கும் எனது நன்றிகள் உரியன.

உற்சாகமூட்டும் தமது தனிப்பட்ட கருத்துக்களை வழங்கிய அனைவருக்கும் எனது நன்றிகள். சூசா டேனியல் வழங்கிய பேருதவியை இங்கு நான் விசேடமாகக்குறிப்பிட விரும்புகிறேன். உறங்கேரிய மொழிப்பிரதி வெளியிடப்பட்ட பின்னர் எனது உறங்கேரிய நண்பர்கள் பலரிடமிருந்தும் பல கருத்துரைகளைப் பெற்றேன்; அவர்களுக்கும் எனது நன்றிகள். உறங்கேரிய வெளியீட்டினது முதலாவது ஆங்கில மொழிபெயர்ப்பினை வாசித்து பல ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கிய ஹார்வர்ட் நிறுவனத்தைச் சேர்ந்த ஜெப்ரி செக்சுக்கு எனது உளமார்ந்த நன்றிகள். உறுதியாக்கல் நிகழ்ச்சித்திட்டம் பற்றிய அவரது பரந்த அறிவுக்கும் மேலாக, அவரது கருத்துக்கள் போலந்தினது உறுதியாக்கல் திட்டத்தில் அவர் பெற்றிருந்த அண்மைக்கால

அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. போலந்தினது நிலைமை பற்றிய அவரது எழுத்தாக்கங்களை நான் இந்நூலில் பெரிதும் கையாண்டுள்ளேன். உண்மையில் இந்நூல் ஒரு மொழிபெயர்ப்பு மட்டுமன்று ; மூல நூலினது கருத்துக்களில் சில திருத்தங்களோடு, மேலதிக தகவல்களையும் இது கொண்டுள்ளது. மூல நூலின் ஒரு திருத்தப்பட்ட பதிப்பே இது. மூல நூலுக்குக்கிடைத்த ஹங்கேரிய ஆரம்ப வரவேற்பும், மிக்க தைரியத்துடன் மேற்கொள்ளப்படும் போலந்தினது உறுதியாக்கல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அடிப்படையாகவிருந்த கருத்துக்களும் மேற்படி திருத்தங்களுக்குத்தூண்டுகோலாக அமைந்தன.

ஹங்கேரிய, ஆங்கில மூலப் பிரதிகளைத் தயாரிப்பதற்கு உதவிய எல்லோரும், அதிலும் விசேடமாக எனது நெருங்கிய சகாக்களான மரியா கோவக்ஸ், கார்ளா குறுாகர் என்போருக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். மொழிபெயர்ப்பில் பங்குபற்றிய டிபர் சென் டீ. பிரயன் மெக்லீன், ஜுலியன்னா பார்ட்டி, அன்னா செலனி ஆகியோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

இறுதியாக, அமெரிக்க வெளியீட்டாளர்களாகிய W.W. நோர்ட்டன் கம்பெனியாளருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கேம்பிரிட்ஜ், மஸ்ஸசுசட்ஸ், ஜனவரி, 1990.

## முகவுரை

ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகத்தின் அனுசரணையின் கீழ் செயற்பட்டு வரும் அபிவிருத்திப் பொருளியல் ஆராய்ச்சிக்கான உலக நிறுவனமானது (WIDER) 1984ல் நிறுவப்பட்டது. இது பின்லாந்தில் ஹெல்சிங்கி நகரில் அமைந்துள்ளது. சர்வதேச ரீதியானதும் அபிவிருத்தி சார்ந்ததுமான பிரச்சினைகள் தொடர்பாக கொள்கை சார் ஆராய்ச்சியினை ஊக்குவிப்பதும் பல்வேறு நாடுகளினது பிரச்சினைகளை அவற்றினது சர்வதேச சூழலினடிப்படையில் ஆராய்வதும் இந்நிறுவனத்தினது பிரதான நோக்கங்களாகும். சோஷலிச அமைப்புக்களின் அரசியற்பொருளாதாரம் பற்றிய ஆய்விற்காக தனது ஆயுட் காலம் முழுவதையுமே அர்ப்பணித்துள்ள பேராசிரியர் கொர்ணுய் போன்ற ஒருவரது கண்ணோட்டத்தில் அது பற்றிய தீர்க்கமான ஒரு ஆய்வினை மேற் கொள்ளுதல் எமது ஆராய்ச்சிப்பட்டியலில் முதன்மை வகிக்கும் ஒன்றாகும். வைடர் நிறுவனத்தில் ஜேம்ஸ் எஸ். மெக்டொன்னல் ஆய்வாளராக தனது நேரத்தில் ஒரு பகுதியைச் செலவிட்டு சோஷலிசம் பற்றிய ஒரு முழுமையான ஆய்வினை மேற்கொள்ளுவதற்கு அவரை ஈடுபடுத்த முடிந்தமை எனது அதிர்ஷ்டமெனலாம். இவ்வித ஆய்விற்கு பல வருடகாலம் தேவைப்படுமென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வானது இப்பொழுதுங் கூட தொடர்ந்து நடைபெற்று வருகின்ற போதும், 1989ம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் கிழக்கைரோப்பாவில் இடம் பெற்ற சில நிகழ்வுகளின் தாக்கமானது இந்த நூலினை மேற்படி ஆய்வின் ஒரு பக்க விளைவாக வெளிக் கொணர வேண்டிய கட்டாயத்தினை ஏற்படுத்திற்று. இது பற்றிய முழுமையான ஒரு ஆய்வினை வெளியிடு முன்னரேயே கொள்கை ஆக்கத்தில் தீர்க்கமான செல்வாக்கு செலுத்தக்கூடிய சனரஞ்சகமானதும் உணர்வு பூர்வமானதுமான ஒரு நூலினை வெளியிடுவது தவிர்க்க முடியாததாயிற்று.

ஹங்கேரியிலும் ஏனைய சோஷலிச நாடுகளிலும் தனித்தனித்தீர்வுகளினால் இது வரை காலமும் தீர்க்க முடியாதிருந்து வந்துள்ள சில பரிச்சியமான பிரச்சினைகளை "ஒரே நேரத்தில்" எதிர் கொள்ள வேண்டுமென்பது பேராசியர் கொர்ணுயினது நூலின் தனித்துவமான அம்சமாகும். பேரின ரீதியிலான தீராத மிகைக்கேள்வி, உள்நாட்டு நாணய மிகை, (வெளிப்படையானதும் நசுக்கப்பட்டதுமான) பணவீக்கமும் தட்டுப்பாடுகளும், உண்மையிலுங்கூடிய பெறுமதி-யளிக்கப்பட்ட நாணய மாற்று விகிதங்கள், மாற்றுந்தன்மையற்ற நாணயம், நிலுவையற்ற பாதீடுகள், இலாபமற்ற அரசாங்க முயற்சிகள், அளவு கடந்த நுகர்வோர் - உற்பத்தியாளர் மானியங்கள், தவறான சார்பு விலையமைப்பு, சீரற்ற உற்பத்தி சாதன ஒதுக்கீடு என்பவற்றை இங்கு குறிப்பிடலாம். மேற்படி பிரச்சினைகள் விருத்தியடையும் நாடுகள்

பலவற்றிலும் காணப்படுதல் பேராசியர் கொர்ணுயினது இந் நூல் பரவலான உபயோகத்தினைக் கொண்டது என்பதைக்குறிக்கின்றது.

உறுதியாக்கலும் பேரின சரிப்படுத்தலும் பல நாடுகளில் முழு சமூக, அரசியலமைப்பினதுமே மாற்றத்தோடு, அதிலும் குறிப்பாக உடைமைகளுடன் நெருங்கிய தொடர்புள்ளதாக உள்ளது. இயைபின்மைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் இட்டுச் செல்லும் சிறு மாற்றங்களுக்குப் பதிலாக பாரிய மாற்றங்களை பேராசியர் கோர்ணுய் நீண்டகாலமாகவே ஆதரித்து வந்துள்ளார். அவரது இத்தத்துவம் சோஷலிச அமைப்புக்கள் பற்றிய அவரது ஆய்வினதும், "சந்தை சோஷலிசம்" தொடர்பான பரிசோதனைகள் பற்றிய அவரது கண்டனங்களினதும் ஒரு தர்க்கரீதியான விளைவெனலாம். பேரின உறுதியாக்கலைப் பொறுத்தவரை அவர் ஒரு பெரிய அறுவைச் சிகிச்சையினையே சிபாரிசு செய்கின்றார். சொத்துரிமைத் தொடர்புகளைப் பொறுத்த வரை, அவர் (பொருத்தமான கொள்கைகளினால் துரிதப்படுத்தக் கூடிய) பரிணாம ரீதியான ஒரு முறைக்கு சார்பாக வாதிடுகின்றார். வழமையான உறுதியாக்கல் - சரிப்படுத்தல் செயற்றிட்டங்களைக் கண்டிக்கும் ஆய்வாளரைப் போன்றே பேராசியர் கோர்ணுயும், போதியளவு சாதனங்கள் காணப்படுமாயின் சரிப்படுத்தலினால் இடைக்காலத்தில் பாதிக்கப்படும் பாடசாலைப் பிள்ளைகள், ஓய்வூதியம் பெறுவோர் போன்றோரை விசேடமாகப் பாதுகாப்பதன் மூலம் இவ்விடைக்கால இன்னல்களை ஓரளவு குறைக்க முடியுமெனக் கூறுகின்றார். எனினும், இவ்வித சந்தர்ப்பங்களிற் கூட, விலைகளை உருக்குலையச் செய்யும் மானியங்கள் கைவிடப்பட்டு (பாடசாலைப் புத்தகங்கள், அடிப்படை பங்கீட்டு முறை போன்றவற்றிற்கு) மொத்தப்பண உதவிகளோ, கூப்பன்களோ வழங்கப்படலாமென்கிறார்.

ஒவ்வொரு நாடும் தனது சொந்த மானிட பௌதீக சாதனங்களிலேயே தங்கியிருக்க வேண்டுமெனினும், வெளிநாட்டு சாதனங்களும் அவற்றிற்குப் பெருமளவு தேவைப்படும். இங்கு கூறப்பட்டது போன்ற ஒரு உறுதியாக்கல் திட்டத்தினை அமுலாக்கி வரும் போலந்திற்கு (சர்வதேச நாணய நிதி, உலகவங்கி, வேறு அரசாங்கத்தாபனங்கள் என்பவற்றிடமிருந்து) பெருமளவு வெளிநாட்டுதவி கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது. பேரின உறுதியாக்கலில் ஈடுபட்டு வரும் ஏனைய நாடுகளுக்கும் இதே வித தேவைகளுண்டு. இந்நூலில் விளக்கப்பட்டது போன்ற ஒரு நடவடிக்கைக்கு சர்வதேச நிதி நிறுவனங்களுக்கு வழமையாகக் கிடைப்பதிலும் பார்க்கக்கூடியளவு வெளிநாட்டு சாதனங்கள் தேவைப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

போதியளவு வெளிநாட்டு நிதியுடன் செயற்படுத்தப்படுமானால் பேராசிரியர் கோர்ணுயினது கொள்கைகள் தொடர்ச்சியான பாயும்

பணவீக்கத்தையும் வேறு நிலுவையின்மைகளையும் அனுபவிக்கும் ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க விருத்தி பெறும் நாடுகள் பலவற்றிற்றினதும் எதிர்கால விருத்தியினை புரட்சிகரமாக்கும். மேலும், ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகளினது நடைமுறைக்கணக்கு மிகைகளை உறிஞ்சுவதற்குத் தேவையான உள்நாட்டு நிலைமைகளை சோஷலிச நாடுகளிலும் விருத்தி பெறும் நாடுகளிலும் இது உருவாக்கும்.

ஒரு முழுமையான அணுகுமுறையினை முன் வைப்பதனால் பேராசிரியர் கோர்ணுயினது நூல் சோஷலிச நாடுகளையும் விருத்தி பெறும் நாடுகளையும் சேர்ந்த கொள்கை ஆக்குவோர் கட்டாயமாக வாசித்தறிய வேண்டிய ஒன்றாகும்.

ஹெல் சிங்கி, பெப்ரவரி 1990. லால் ஜயவர்த்தன

இயக்குனர், வைடர்.

பணயக் கைதிகளாகக் கொண்டு, [illegible]
குழுக்கள், [illegible]
பலதரப்பினரையும் [illegible] பூகோள அரசியல். மேலும்,
[illegible]
[illegible]
[illegible]

இந்த [illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]

# அறிமுகம்

இந்த ஆய்வு உறங்கேரிய பொருளாதார அபிவிருத்தியினது நெடுங்கால இலக்குகளைப் பற்றிய ஒரு வியாக்கியானமன்று. மாறாக, தொடர்ந்து வரும் ஆண்டுகளில் பொருளாதாரத்தில் மேற்கொள்ள வேண்டிய அதிமுக்கிய கருமங்களில் கவனம் செலுத்தும் இது, 1. உடைமை, 2. பேரினப் பொருளாதார உறுதியாக்கல், 3. பொருளாதாரத்திற்கும் அரசியலுக்குமிடையிலான தொடர்பு என்ற மூன்று முக்கிய விடயங்களை ஆராய விழைகின்றது. எனினும், இம்மூன்று விடயங்களுள் ஒன்றேனும் முற்று முழுதாக ஆராயப்படவில்லை என்பதும், இந்த ஆய்வின் பரப்பிற்கு அப்பாற்பட்ட வேறு பல முக்கிய பிரச்சினைகள் இங்கு முன்வைக்கப்படமாட்டாது என்பதும் வலியுறுத்தப்படவேண்டியுள்ளன. புதியதும் மூலாதாரமானதுமான கருத்துக்களை மட்டும் இங்கு நான் முன் வைக்கவில்லை. கடந்த சில ஆண்டுகளில் இடம் பெற்ற பரந்துபட்ட உரையாடல்களில் ஆராயப்பட்ட பல முக்கிய கருத்துக்கள் துறைசார்ந்த நூல்களிலும் கட்சி மேடைகளிலும் அரசியல் விவாதங்களிலும் முன்வைக்கப்பட்டுள்ளன. நன்கு பரிச்சயமான மேற்படி கருத்துக்கள் என்னுடைய சொந்தக்-கருத்துக்களுடன் சில சந்தர்ப்பங்களில் ஒத்தனவாகவும் வேறு சில சந்தர்ப்பங்களில் வேறுபடுவனவாகவும் அவற்றுக்குச் சவால் விடுவனவாகவும் உள்ளமையை வாசகர்கள் உணரலாம்.

இந்த நூலின் உறங்கேரிய மூலவெளியீடு "உறங்கேரியில் பொருளாதார மாற்றத்திற்கான உணர்ச்சி பூர்வமான ஒரு சிறுபிரசுரம்" எனப்பெயரிடப்பட்டிருக்கின்றது. மேற்படி நூலை ஒரு விஞ்ஞான பூர்வமான ஆய்வெனக் கருதாதனாலேயே அதனை "ஒரு சிறுபிரசுரம்" என அழைத்தேன். ஆசிரியரினது கூற்றுக்கள் பரீட்சிக்கப் படக்கூடியனவாக இருப்பதே ஒரு விஞ்ஞான பூர்வமான ஆய்வின் அடிப்படைத் தகுதி விதியாகும். கோட்பாடு சார்ந்த ஆய்வுகளானவை தெளிவாகக் கூறப்பட்ட எடுகோள்களினின்றும் எழுவதோடு, அவற்றினது தேற்றங்களும் இவ்வெடுகோள்களினின்றே பெறப்படும். மேற்படி தேற்றங்கள் தர்க்க முறையில் நியாயப்படுத்தப்படும். ஏனைய சந்தர்ப்பங்களில், கடந்த காலத்தினது ஒரு பகுதியின் நிகழ்வுகளை ஆராய்ந்து, இதினின்றும் சில பொதுவான முடிவுகளைப் பெறுகின்றோம். இச்சந்தர்ப்பங்களில் நிகழ்வுகளை வாசகர்களுக்கு விளக்குவதோடு, இந்நிகழ்வுகளைக் குறிப்பிட்ட விதமாக விளங்கிக் கொள்வதற்கான காரணங்களையும் கூற வேண்டுமென பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், தூயகோட்பாடு சம்பந்தப்பட்ட வரையில் அல்லது கடந்த காலம், நிகழ்காலம் என்பன தொடர்பான நிகழ்வுகளைக் கூறுமிடத்து மட்டுமே இறுக்கமான தகுதிவிதிகள்

ஏற்புடையன. மாறாக, நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை ஆராய முற்படும் போது, ஒரு இறுக்கமானதும் குறுகியதுமான கருத்தில் விஞ்ஞானம் என்ற கட்டுக்கோப்பிற்கு வெளியிலேயே இதனை நாம் மேற்கொள்ள வேண்டும். பொருளாதாரக் கொள்கை தொடர்பான ஒரு பிரேரணை, "முழுநேர" விஞ்ஞான ஆய்வாளன் ஒருவனது உள்ளார்ந்ததும் வெளிப்படையானதுமான கூறுகளின் ஒரு கலவையாக வெளிவரினும், அது தவிர்க்க முடியாதவாறு ஓர் அரசியல் நிலைப்பாட்டினைப் பிரதிபலிப்பதாகவே இருக்கும். இந்நூலில் நானுங்கூட விஞ்ஞான ஆய்வில் வழமையாகக் கையாளப்படும் தர்க்கமுறையான நியாயங்காட்டல், நிகழ்வுகளை மேற்கோள் காட்டல் போன்ற முறைகளையே கையாண்டுள்ளேன். அதே வேளையில், எனது அரசியல் ஒழுக்கப் பெறுமானங்கள் உட்படத் தனிப்பட்ட ஏமாற்றங்கள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றையும் இந்நூலிலிருந்து தெளிவாக உணரலாம். இந்த உண்மையினை மறைக்க முயலாது உறங்கேரிய மூலநூலில் 'உணர்ச்சி பூர்வமான' என்ற பதத்தைக் கையாளுவதன் மூலம் அதனை வலியுறுத்தியும் உள்ளேன்.

எனது அறிவின் வரம்புகளையும் வாசகர்களிடமிருந்து மறைப்பதற்கு நான் விரும்பவில்லை. உறங்கேரி எதிர்நோக்கும் கடன் சேவைப்பிரச்சினை அல்லது கட்சிகளுக்கிடையிலான பேச்சு-வார்த்தைகளில் முக்கியமாக ஆராயப்படும் விடயங்கள் போன்றவை பற்றி என்னிலும் மேலான அறிவுடைய வல்லுநர்கள் பலர் உள்ளனர். எனினும், அன்றாடப் பொருளாதார, அரசியல் பிரச்சினைகளையும் வேறு விபரங்களையும் எட்ட நின்று நோக்கும் ஒருவனது கருத்து, மேற்படி விவாதங்களுக்குப் புதுமெருகூட்டும் என்பது எனது நம்பிக்கையாகும். சோஷலிசப் பொருளாதாரங்கள் (சோஷலிச அமைப்பினை இங்கு நான் பொதுவாகவும் ஹங்கேரிய பொருளாதாரத்தினை அதன் ஒரு பகுதியாகவும் கருதுகிறேன்) பற்றிய கோட்பாட்டாளனாகவே என்னை நான் கருதுகிறேன். இந்த அமைப்பினது பண்புகளையும் அதன் உட்கூறுகளையும் கோட்பாட்டு அடிப்படையில் ஆராய நான் முயலுகிறேன். முன்னைய எனது நூல்களில் சோஷலிச அமைப்பிற்கும் வேறு சமூக, பொருளாதார அமைப்புகளுக்கும், அதிலும் குறிப்பாக, முதலாளித்துவத்தின் நவீன வடிவங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளைப் பலமுறை ஆராய முயன்றுள்ளேன். இதன் மூலம் பெற்ற ஆரம்ப அறிவினைப் பிரயோகிப்பதற்கான ஒரு முயற்சியே இந்த நூல் எனலாம்.

இந்த நூலில் ஆராயப்படும் பல பிரச்சினைகள் விரிவான விவாதத்திற்குரியன. இவை பற்றிய எனது சிந்தனைகள் தவறானவையென எனது விமரிசகர்கள் கருதக்கூடும். இவ்வித கண்டனங்களினின்றும் தப்பித்துக் கொள்வதற்காக எனது கருத்துக்களை

மூடி மறைத்தோ, திரிபுற்ற முறையிலோ கூற முயலமாட்டேன். பிரச்சினைகளை மேலும் ஆழமாக ஆராய்வதற்கும் அவை பற்றிய விவாதங்களைத் தூண்டுவதற்கும் உதவுமென்ற காரணத்தினால் எனது கருத்துக்களை ஐயப்பாடற்ற வகையில் இயன்றவரை திட்டவட்டமான நிலைப்பாட்டினைக் கொண்டதாக வெளியிடுவேன். இதினின்றும் எழக்கூடிய ஆபத்துக்களை ஏற்கவும் நான் தயாராக உள்ளேன்.

இச்சிறு பிரசுரமானது உேறஸ்யம் கூறும் ஒன்றல்ல. எதிர் காலத்தில் உறங்கோரி பின்பற்றக் கூடிய மாற்று வழிகளையோ, இதில் எவ்வழியினை உறங்கோரி உண்மையிலேயே பின்பற்றும் என்பதையோ ஆராய்வதற்குப்பதிலாக, நிறைவேற்றப்படவேண்டிய கருமங்கள் யாவை, தவிர்க்கப்படவேண்டிய வழிகள் எவை என்பதைக்கூறவே இங்கு நான் விழைகின்றேன். எவ்வித அரசியல் நிலைமைகளின் கீழ் இம்முக்கிய கருமங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது பற்றிய ஒரு சுருக்கம் 3-ம் அத்தியாயத்தில் தரப்படுகின்றது.

இறுதியாக, இந்நூலில் ஆராயப்படும் மாற்றங்களின் சமகால நிகழ்வும் அவற்றினது இயக்கவியலும் பற்றிய ஒரு சில ஆரம்பக் கருத்துக்களைக் கூறுவதும் அவசியமானதாகும். சில மாற்றங்கள் படிப்படியாகவும் வேறு சில (அவை திடீர் அதிர்ச்சியை ஏற்படுத்தக் கூடியனவாக இருப்பினும்) ஒரேயடியாகவும் அறிமுகப்படுத்தப்பட வேண்டியனவாகும். இரண்டாம் வகையைச் சார்ந்த அதிர்ச்சி தரக்கூடிய மாற்றமொன்று 2-ம் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. இப்படியானதொரு தீவிர மாற்றமானது அதன் வெற்றிக்குத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்கிய பின்னர், உடனடியாகவே மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

எங்களது நிகழ்ச்சி நிரலில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் எந்த வகையினைச் சார்ந்தது (அதாவது சிறிய நடவடிக்கைகளின் மூலம் படிப்படியாக மேற்கொள்ளப்படவேண்டியனவா, அல்லது ஒரேயடியாக மேற்கொள்ளப்பட வேண்டியனவா) என்பதைத் திட்டவட்டமாக நிர்ணயித்துக் கொள்ளுதல் முக்கியமானதாகும். ஒரேயடியாக மேற்கொள்ள வேண்டியவற்றை இழுத்தடிப்பதோ, படிப்படியாக மேற்கொள்ள வேண்டியவற்றிற்கு உடனடித் தீர்வுகளைக் காண முயலுவதோ தவிர்க்கப்படவேண்டும். இந்த வேறுபாடு நூலில் திரும்பத்திரும்ப வலியுறுத்தப்படும்.

# 1. உடைமை

தனியார் துறை, அரச துறை என்ற இரண்டிலும் மட்டுமே இங்கு நான் கவனம் செலுத்துகிறேன். மூன்றாம், நான்காம் துறைகள் இருக்கின்றனவா, அல்லது இருக்க வேண்டுமா என்ற பிரச்சினையையும் பொதுவாகச் சுட்டிக்காட்டியுள்ளேன்.

## 1.1 தனியார் துறை

தெளிவான விளக்கத்திற்காகத் தனியார் துறையினது கூறுகள் யாவை என்பதை வெளிப்படையாகக் கூறுதல் உசிதமானது. அவையாவன:

அ. ஒரு பொருளாதார அலகாக வீட்டுத்துறை: தனது தேவைகளுக்காக வீட்டுத்துறை தனக்குள்ளேயே மேற்கொள்ளும் உற்பத்திகளும் சேவைகளும் இதிலடங்கும்.

ஆ. சட்ட விதிகளுக்கமையச் சட்டப்படி செயற்படும் முறைசார்ந்த தனியார் முயற்சிகள்: ஒரு நபர் முயற்சிகளுக்கும் பேரளவு முயற்சிகளுக்குமிடையே இவற்றின் பருமன் வேறுபடும்.

இ. முறைசாரா தனியார் முயற்சிகள்: அதாவது, நிழற் பொருளாதாரத்தின் அலகுகள். நிர்வாக அதிகாரிகளிடையே நடைபெறும் பரிமாற்றங்களும் முறைசார்ந்த தனியார் முயற்சிகளுக்கும் அரசஉடமை முயற்சிகளுக்கும் தனிநபர்களால் செய்யப்படும் உற்பத்தி, சேவை நடவடிக்கைககளும் இதிலடங்கும்.

ஈ. தனியாருக்கு உரித்தான வீடுகளை வாடகைக்கு விடுவது முதல் தனிநபர்களுக்கிடையே நடைபெறும் பணக்கடன் கைமாறல்கள் வரையிலான தனியாள் செல்வம் அல்லது தனியார் சேமிப்புக்களின் எல்லாவித உபயோகங்களையும் இது உள்ளடக்கும்.

இந்த நான்கு வகைகளும் ஒன்றுடனொன்று பிணைந்திருக்கவும் கூடும். ஒரு பொருளாதார அலகு என்ற வகையில் தனிநபருக்கும் முறைசார்ந்ததும் முறை சாராததுமான தனியார் துறைகளுக்குமிடையே வேறு எவ்வித வேறுபாடும் தொடர்ந்து வரும் ஆய்வில் காட்டப்படமாட்டாது. ஒரு பொருளாதார அலகு என்ற வகையில் வீட்டுத்துறையானது தனியார் துறையின் ஒரு பகுதியாகவே கணிக்கப்படும்.

உறங்கேரி முழு அளவில் ஒரு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளதென அடிக்கடி கூறப்படுகின்ற போதும், இதனை நான்

முழுமையாக ஏற்கவில்லை. பேரினப் பொருளியல் மட்டத்தில் மோசமான நெருக்கடிகளும் சமநிலையின்மையும் காணப்படுகின்றன என்பதும், எல்லாப்பிரச்சினைகளையும் எல்லாப் பொருளாதார செயற்பாடுகளையும் இவை பாதிக்கின்றன என்பதும் உண்மையே. எனினும், தனியார் துறையானது பொருளாதாரத்தின் ஒரு சிறப்பு மிகு அங்கமாக உள்ளது. கடந்த சுமார் ஓரிரு தசாப்தங்களாத் தனியார் உற்பத்தியும் தனியார் சொத்தும் கணிசமான அளவு வளர்ச்சியடைந்துள்ளன. தனியார் துறையே பொருளாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையிலான முக்கிய துறையாகவிருப்பதோடு, அதனது அபிவிருத்தியே இதுவரைகாலச் சீர்திருத்த நடவடிக்கைகளின் அதிமுக்கிய விளைவெனக் கூறினும் அது மிகையாகாது.

பாதகமான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் தனியார் துறை வளர்ச்சியடைந்துள்ளமை, அதனது உயிர்ப்பினை நிரூபிக்கின்றது. அடிக்கடி கூறப்படும் "ஒரு நிமிடக்கதைகள்-உறங்கேரி" என்ற தலைப்பினைக் கொண்ட உறங்கேரிய எழுத்தாளர் ஒருவரின் கதைகள் ஒரு குண்டு வெடிப்புக்குப்பின்னர் உறங்கேரியத் தலைநகரை விபரிக்கின்றன. நகரில் எலிகள் மலிந்துள்ளன. அதனிடையில் சிதைந்த நிலையிலிருக்கும் ஒரு வீட்டில் ஒரு சுவரொட்டிஒட்டப்பட்டுள்ளது. திருமதி வர்சான்யி வாடிக்கையாளர் சார்பாக எலிகளை ஒழிப்பார் என்ற வாசகத்தை இது கொண்டுள்ளது. கடந்த இரு தசாப்தங்களாக இது போன்ற பலவற்றை இங்கு நாம் கண்டுள்ளோம். தனியார் துறை, தனியார் முயற்சி, தனியார் சொத்து என்பன, தொடர்ந்து ஏற்பட்ட தேசிய மயமாக்கல், கூட்டுச் சேர்த்தல், பறிமுதல் செய்தல் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டு வந்துள்ளன. எனினும், சிறுசிறு சலுகைகளுங் கூட தனியார் துறை மீண்டும் கையோங்குவதற்குப் போதுமானதாக இருந்துள்ளன. சட்டப்பிரமாணங்களை மீறுவோரைக் கண்டும் காணாதது போல் இருத்தல் ஒன்றே, வழமையாக இரண்டாம் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படும் பொருளாதார நடவடிக்கைகள் தோன்றக் காரணமாயிருந்துள்ளது.

தனியார் துறையினது உயிர்ப்பிற்கு இன்னொரு ஆதாரம், அது தன்னிச்சையாகவே பரவுதலாகும். இதற்கு மாறாக, அரசதுறையினது அமைப்புக் கட்டுக்கோப்பு, முகாமை, பரஸ்பர இணைப்பு என்பன மேல் மட்டத்திலிருந்து வரும் மத்திய நடவடிக்கைகளினூடாகச் செயற்கையான முறையில் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன.

மறுபுறம், தனியார் துறையானது மத்திய அறிவுறுத்தல்கள் எதுவுமின்றியே சமூகத்தின் கீழ்மட்டத்தில் தன்னிச்சையாகவே அபிவிருத்தியடைகின்றது. தனியார் துறை நிறுவனங்களானவை சந்தை வழியில் நடப்பதற்குத்தூண்டுகோல்களோ, சுற்று நிரூபங்களோ

தேவைப்படுவதில்லை. தனியார் துறையின் இயல்பான வாழும் வழி இதுவேயாகும். ஆனால், தொடர்ச்சியான ஊக்குவிப்புக்கள் அளித்தும், சந்தையைப் பின்பற்றுமாறு கட்டளைகள் பிறப்பித்தும் கூட, அரசதுறை நிறுவனங்கள் முறையாகச் செயற்பட முடியாதுள்ளன.

உறங்கேரியில் இன்று தனியார் துறையினது உண்மையான பருமன் என்னவென்பது எவருக்குமே தெரியாது. இது தொடர்பான புள்ளி விபரங்கள் பல காணப்பட்ட பொழுதும், இத்துறைபற்றிய சரியானதொரு கணிப்பு இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. சில வருடங்களுக்கு முன்னர் அண்ணளவான ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இவ்வித மதிப்பீடொன்றின்படி, உறங்கேரிய மக்கள் தமது மொத்த வேலை நேரத்தில் மூன்றில் ஒரு பகுதியினைத் தனியார் துறை நடவடிக்கைகளிலேயே செலவிடுகின்றனர். அண்மைக் காலத்தில் இத்துறை மேலும் வளர்ச்சியுற்றிருக்கக் கூடும். எவ்வாறாயினும், தனியார் துறை பொருளாதாரத்தின் ஒரு பலம் வாய்ந்த பகுதியாக இன்று வளர்ச்சி பெற்றுள்ளது எனக்கருதுவதற்குப் போதுமான காரணங்கள் உள்ளன. இத்துறை மேலும் வளர்ச்சியடைய ஊக்குவிக்கப்படுமா என்பதே நாட்டினது பொருளாதார வளர்ச்சி பற்றிய இன்றைய முக்கிய வினாக்களில் ஒன்றாகும்.

இன்று உறங்கேரியில் பல்வேறு பொருளாதாரக் கோட்பாடுகளையும் அரசியல் சித்தாந்தங்களையும் முன்வைப்போர், தனியார் துறை அபிவிருத்தி தேவையானது என்பதை ஏற்கின்றனர். இருப்பினும், இவர்களது கூற்றுக்கள் பல பொதுவானவையாகவும் வெறுமையானவையாகவுமே உள்ளன. பொருளியலாளன், அரசியல்வாதி அல்லது இது தொடர்பாக ஆராயும் கட்சிகள் திட்டவட்டமான நிலைப்பாட்டினைக் கொள்ளாதிருப்பதற்கு, மேற்படி பொதுவான தன்மை உதவுகின்றது. தனியார் துறையின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமான தீர்க்கமான நிபந்தனைகளைக் கீழே தருகின்றேன். வேறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளோர் இவற்றை ஏற்கவோ, மறுக்கவோ சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்பதற்காகப் பிரச்சினைகளை வெட்ட வெளிச்சமாக்கும் வகையில், அவற்றை மூடி மறைக்காது விரிவாக முன்வைத்துள்ளேன்.

இன்னொரு விளக்கக் குறிப்பும் இங்கு தேவையானதாகின்றது. நான் கூறப்போகும் நிபந்தனைகள் நடைமுறையில் செயலாக்கப்படுமாயின் குறிப்பிட்ட சில கட்டங்களில் நன்கு பரிசீலிக்கப்பட்ட விதிவிலக்குகளும் தற்காலிக இணக்கப்பாடுகளும் தேவைப்படும். இந்த விதிவிலக்குகள், இணக்கப்பாடுகள் பற்றிய விபரங்கள் இந்நூலின் ஆய்வுப் பரப்பிற்கு அப்பாற்பட்டன. நூற்றுக்கணக்கான இந்தக் குழப்ப விவகாரங்களை ஆராய்வதற்குப் பதிலாக, சிலதெளிவான விடயங்களை மட்டும் இங்கு எளிமைப்படுத்தி முன்வைக்கின்றேன்.

## 1. தனியார் துறை பூரணமாகவும் உண்மையாகவும் தாராண்மைப்படுத்தப்பட வேண்டும்.

தனியார் துறை மீதான நிர்வாகக் கட்டுப்பாடுகளில் சிலவற்றைத் தொடர்வதற்கும் வேறுசிலவற்றைத் தளர்த்துவதற்கும் நூற்றுக் கணக்கான புதிய பிரமாணங்கள் தேவையற்றன. பதிலாக, பொருளாதாரத்தில் தனியார் துறை நடவடிக்கைகளுக்கு கட்டற்ற வாய்ப்பு உண்டு என்பதை சட்டரீதியாவும் ஐயப்பாட்டிற்கு இடமின்றியும் வலியறுத்துவதன் மூலம் இதனை அணுகுவது சிறந்ததாகும். சட்டப்படியான பொருளாதாரக் காரணங்களுக்கு உட்படாத அவற்றின் நடவடிக்கைகள் (உதாரணமாக, நேர்மையற்ற, அல்லது பலாத்கார நடவடிக்கைகள்) இதற்கு விதிவிலக்காகும். மேலும் பொருளாதாரக் காரணங்களுக்காகச் சில சட்டரீதியான கட்டுப்பாடுகளை அவற்றின் மீது விதிக்கவும் நியாயமுண்டு. உதாரணமாக, தனியார் துறை வரிவிதிப்பிற்குட்படுவதோடு, அது சூழல் பாதுகாப்பிற்கான சில விதிகளை மதித்து நடக்கவும் வேண்டும். இத்தகைய கட்டுப்பாடுகள் எவை என்பது நன்கு தெரிந்த ஒன்று என்பதால், அவற்றை இங்கு விரிவாக ஆராயத் தேவையில்லை. பொதுவாக, தனியார் துறை நடவடிக்கைகளைத் தடைசெய்யும் எவ்வித கட்டுப்பாடுகளும் மேற்கொள்ளப்படலாகாது என்ற அடிப்படை விதி இங்கு வலியுறுத்தப்பட வேண்டும்.

தாராண்மைப்படுத்தல் ஏன் தேவையானது என்பதற்கான அடிப்படைப்பொருள் விளக்கம் இன்னும் தெளிவானதாக இல்லை. அது பல கூறுகளைக் கொண்டது எனினும், ஒரு சில முக்கிய கூறுகள் மட்டுமே இங்கு பட்டியல் செய்யப்படுகின்றன.

- ஒரு நிறுவனத்தைத் தாபிப்பதற்கான சுதந்திரம்; உற்பத்தி துறையில் தடையில்லாப் பிரவேசம்,
- விற்போருக்கும் கொள்வோருக்குமிடையிலான தன்னிச்சையான ஒப்பந்தத்தின் மூலம் எழும் கட்டற்ற விலைகள்:
- வாடகைக்கு விடுவோனுக்கும் வாடகை பெறுவோனுக்கு மிடையிலான தன்னிச்சையான ஒப்பந்தத்தின் அடிப்படையில், தனியார் உடைமைச் சொத்துக்களை வாடகைக்கு விடுவதற்கான கட்டற்ற உரிமை. தனியாருக்கு உடைமையான வீடுகள், மெய் ஆதனங்களென்பவற்றை மேற்படி இரு சாராருக்குமிடையிலான ஒப்பந்தத்தினடிப்படையில் வாடகைக்கு விடுதலையும் இது உள்ளடக்கும்.
- தனியார் துறை தொழில் வழங்குநர் (வீட்டுத்துறை, அல்லது நிறுவனம்) ஊழியரை வேலைக்கமர்த்துவதற்குக் கட்டற்ற

உரிமை. தொழில் வழங்குநரும் ஊழியரும் தன்னிச்சையாக வேதனங்களை நிர்ணயிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

- பெறுமதிவாய்ந்த பொருட்களை (உ+ம். அரிதான உலோகம்) திரட்டவும் வாங்கவும் விற்கவும் கட்டற்ற உரிமை.
- உறங்கேரிய பிரசைகளுக்கும் வெளிநாட்டாருக்குமிடையே, அல்லது தனியார் துறை அங்கத்தவர்களிடையே கொடுக்கல் வாங்கல்களில் வெளிநாட்டுச் செலாவணியை வாங்கவும் விற்கவும் திரட்டவும் கட்டற்ற உரிமை.
- உள்நாட்டு, வெளிநாட்டு நாணயங்களை உட்கொண்டு வரவும் வெளியே எடுத்துச் செல்லவும் கட்டற்ற உரிமை.
- ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடத்தனியார் துறையினருக்குக் கட்டற்ற வர்த்தக உரிமை.
- கடன் கொடுப்போருக்கும் கடன் பெறுவோருக்குமிடையே தன்னிச்சையாக ஏற்படும் பரஸ்பர கடன் நிபந்தனைகளினடிப்படையில் கடன் வழங்க கட்டற்ற உரிமை.
- வேறு தனியாரது தனிப்பட்ட முயற்சிகளில் நிதி முதலீடு செய்யச் சுதந்திரம்.
- தனியாருக்கு உடைமையான வீடு, மெய் ஆதனம், சொத்து என்பவற்றைக் கட்டில்லா விலைகளில் வாங்கவும் விற்கவும் சுதந்திரம்.

மேலே கூறப்பட்ட "சுதந்திரத்திற்கான நிபந்தனைகளை" இன்றைய நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தல் பயனுடையது. இவற்றை ஒவ்வொன்றாக ஒப்பிட்டு நோக்குவது சாத்தியமில்லை. ஆனால், தனியார் துறையினை உண்மையாகத் தாராண்மைப்படுத்துவதற்கு முட்டுக்கட்டையாக உள்ள நூற்றுக்கணக்கான சட்டத் தடைகளைக் காட்டுவதற்கு ஒரு எழுமாறான பரீட்சையே போதுமானதாகும். முறை சாரா இரண்டாம் பொருளாதாரம், நிழற் பொருளாதாரம், வெளுப்புச் சந்தை, கறுப்புச் சந்தை, புலப்படா வருமானங்கள் என்பன காணப்படுதல், தனியார் நடவடிக்கையினையும் தனியார் சொத்துக்களினது உபயோகத்தையும் பாதிக்கும் நூற்றுக்கணக்கான வரையறைகளின் ஒரு விளைவேயாகும். இரண்டாம் பொருளாதாரமொன்று காணப்படுதல் அர்த்தமற்ற சட்டப்-பிரமாணங்களுக்கும் நிர்வாகக்கட்டுப்பாடுகளுக்குமெதிரான ஒரு சட்டமறுப்பு இயக்கம் என்றே கருதப்படலாம். அரசு தனது நிர்வாகக் கட்டுப்பாடுகளில் ஒரு சிலவற்றையாவது தனியார் துறையின் மீது விதிக்கத் தவறியமை ஓரளவு நன்மையானதே. மேற்படி இரண்டாவது சந்தை நடவடிக்கைகள் கறுப்புச் சந்தை நடவடிக்கைளன்றி வெளுப்புச் சந்தை நடவடிக்கைகளே என்று கருதிக்கௌள்ளும் நிலைக்கு அரசு

தள்ளப்பட்டு விட்டதையே இது காட்டுகின்றது. எல்லாவற்றுக்குமே ஐயந்திரிபற்ற முறையில் வெள்ளை நிறந்தீட்டுங்காலம் இப்பொழுது வந்து விட்டது. மேலே கூறப்பட்ட சுதந்திரங்கள், ஒரு தனியார் துறை அங்கத்தவர் அதே துறையினைச் சேர்ந்த இன்னொருவருடன் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டுமே செல்லுபடியாகுமென்பது, இதனைத் தவறாக விளங்கிக் கொள்வதனைத் தவிர்ப்பதற்கு உதவும். அதாவது கொள்வோன்-விற்போன், வாடகைக்கு விடுபவன் - வாடகைக்கு எடுப்பவன், கடன் கொடுப்போன் - கடன் பெறுவோன் என்போருக்கிடையிலான கொடுக்கல், வாங்கல்களையே இது கருதுகின்றது. அரசையும் அல்லது அதனது சில தாபனங்களையும் தனியார் துறையோடு இணைக்கும் தொடர்புகள் பின்னர் ஆராயப்படவுள்ளன.

உதாரணத்திற்காக, வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களைப் பார்ப்போம். மேலே கூறிய நிபந்தனைகளுள் இது முதன்மையானது என்ற காரணத்தினாலன்றி, தெளிவான விளக்கமொன்றினைத் தருவதற்காகவே இது இங்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். மேற்கொள்ளப்படும் வேறு நடவடிக்கைகளைக் கருத்தில் கொள்ளாமல், இங்கு முன்வைக்கப்படும் கொள்கைச் சிபாரிசுகளை உடனடியாகப் புகுத்துமாறு கூறவும் நான் தயாராக இல்லை. தனியார் துறையினது வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களைத் தாராண்மைப் படுத்தல் அத்துறையினைத் தாராண்மைப்படுத்தும் பொதுவான நடவடிக்கையின் ஓர் அங்கமாக இருந்தால் மட்டுமே அது வெற்றியளிக்கும். மேலும், 2-ம் அத்தியாயத்தில் கூறப்படும் உறுதியாக்கல் திட்டம் அமுலாக்கப்படுகின்றது என்ற எடுகோளும் இங்கு கைக்கொள்ளப்படுகின்றது.

மேலே கூறப்பட்ட முதலாவது நிபந்தனை, ஒரு உறங்கேரியப் பிரசையான எனக்கு, அரசவங்கி போரின்டிற்கு (ஹங்கேரிய நாணயம்) எதிராக வெளிநாட்டு நாணயத்தினை எவ்வித வரையறையுமின்றி விற்க வேண்டுமென்பதைக் குறிக்க மாட்டாது. உறங்கேரிய நாணயத்திற்கெதிராக அரசவங்கி என்ன நிபந்தனைகளின் கீழ், எந்தளவு வெளிநாட்டு நாணயத்தை மாற்ற வேண்டுமென்பது, நிபந்தனைகளினின்றும் புறம்பான முறையில் தீர்மானிக்கப்பட வேண்டும் (பகுதி 2.5 இல் இதனை மீண்டும் நோக்குவோம்).

மேலே கூறப்பட்ட சுதந்திர நிபந்தனை என்பது, போலீஸ்காரர் பார்த்திருக்கவே தெருவில் என்னிடமிருக்கும் டொலர்களை விற்பதற்கும், அதே நிலைமைகளின் கீழ் அவற்றைக் கொள்வனவு செய்யவும் எனக்குச் சுதந்திரமிருக்க வேண்டும் என்பதைக் குறிக்கின்றது. விரும்பியளவு வெளிநாட்டு நாணயத்தை எனது வீட்டில் வைத்திருக்கவும் எனக்குச்

சுதந்திரமிருக்க வேண்டும். இது தொடர்பாகத் திருடர்களுக்கேயன்றி போலீசுக்கோ, வெளிநாட்டு நாணய அதிகாரிகளுக்கோ அஞ்சும் நிலைமை இருக்கக்கூடாது. எனது டொலர்களை, அவை எங்கிருந்து பெறப்பட்டன என்பதைக் கூறாமலேயே, அரச வங்கிக்கு விற்கும் உரிமை இருத்தல் வேண்டும். அரசவங்கியினது மாற்றுவிகிதத்தை நான் விரும்பாவிடில், அதிலும் பார்க்க உயர்ந்த மாற்று விகிதத்தை வழங்குபவருக்கு அவற்றை விற்கும் உரிமை இருக்க வேண்டும். இது உறங்கேரிய நாணயத்தை வியன்னாவில் ஒரு தனியார் வங்கிக்கு விற்கவும் அல்லது எந்த ஒரு நபருக்கும் அவுஸ்திரிய நாணயத்திற்கு விற்கவும் எனக்கு உரிமையுண்டு என்பதையும் உள்ளடக்கும். எனக்குச் சொந்தமான உறங்கேரிய நாணயத்தை வியன்னாவுக்கோ, வேறு எந்த இடத்திற்குமோ என்னுடன் கொண்டு செல்லவும், மாற்றக் கூடிய நாணயத்தை விரும்பியளவு கொள்வனவு செய்யவும் உரிமை இருக்க வேண்டும்.

இவ்வித நாணயமாற்றுக் கொடுக்கல் வாங்கல்கள் சட்டப்படி தடை செய்யப்பட்டிருந்தாலுங்கூட, இன்றும் நடைபெறவே செய்கின்றன. இத்தகைய நடவடிக்கையிலீடுபடுவோரை இயன்றளவு போலீஸ்காரர்களும் கண்டும் கவனியாது விடுகின்றனர். இத்தகைய இரண்டுங்கெட்டான் நிலை இரு மாற்று வழிகளுக்கு இடமளிக்கின்றது. முதலாவது, சட்டவிதிகளை முக்கியமாகக்கருதி அவற்றை இறுக்கமாகச் செயற்படுத்தல், இரண்டாவது, கட்டுப் பாடுகளை முற்றாக நீக்குதல், இவற்றில் பின்னையதையே நான் சிபாரிசு செய்வேன்.

நாம் உதாரணமாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் மேலும் சற்றுக் கவனம் செலுத்தி, போரின்டினது மாற்றுந்தன்மையினை அது எவ்வாறு பாதிக்கும் என்பதைப் பார்ப்போம். போரின்டுக்கும் மாற்றக்கூடிய நாணயங்களுக்குமிடையே உண்மையான ஒரு சந்தை மாற்றுவிகிதத்தினை ஏற்படுத்த அது உதவும். அதுவும், ஒவ்வொரு வாடிக்கையாளனும் தனது சொந்தப் பணத்தினைச் செலுத்தும் தனியார் சந்தைகளில் இதனை ஏற்படுத்தும். கறுப்பாகவோ, வெளுப்பாகவோ இல்லாது, பிரகாசமான தூய வெள்ளை நிறமான தனியார் மாற்று விகிதமொன்றினை ஏற்படுத்த வழி சமைத்தல் முக்கியமானது என்பதையே இந்த நிபந்தனை கூறுகின்றது. அதாவது, தனியார் சந்தையில் போரின்டினை ஒரு மாற்றக்கூடிய நாணயமாக ஆக்க வேண்டும். நிர்வாக அதிகாரிகளினால் இவ்வீகிதம் செயற்கையாக நிர்ணயிக்கப்படாது, போரின்டினது மெய்ச் சந்தைவிலையினடிப்படையில் இது இயல்பானதாக அமைய வேண்டும். தனது சொந்தப்பணத்தைச் செலுத்தும் ஒரு ஹங்கேரியப் பிரசைக்கு, சில்லிங்கிற்கெதிரான போரின்டினது பெறுமதியானது, வழமையான

கொடுக்கல் வாங்கல் செலவுகள் நீங்கலாக, புடாபெஸ்டிலும் வியன்னாவிலும் ஏறத்தாழ ஒரேயளவினதாகவிருக்கும்.

தனியாரது வெளிநாட்டுச் செலாவணி மாற்று நடவடிக்கைகளைச் சட்டரீதியாக்குதல் மட்டும் நாணயமாற்று விகிதம் தொடர்பான அடிப்படையான பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமைய மாட்டாது. அரசவங்கியானது ஒரே சீரான மாற்று விகிதத்துடன் கூடிய உலகளாவிய மாற்றக்கூடிய தன்மையினை உறுதி செய்தால் மட்டுமே இதற்கு உண்மையான ஒரு தீர்வு ஏற்படும். முன்னரே குறிப்பிட்டது போன்று இப்பிரச்சினை பகுதி 2.5இல் ஆராயப்படும். எவ்வாறாயினும், வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளைத்தாராண்மைப்படுத்தல், தனியார் துறையினது அடிப்படைப் பொருளாதார உரிமைகளின் ஒரு முக்கிய அம்சம் என்ற கருத்தினையே இங்கு சுருக்கமாக நான் முன்வைக்க விரும்புகிறேன்.

மேலே கூறப்பட்ட நிபந்தனைகள் ஹங்கேரிய மக்களுக்கு அரசு வழங்கும் ஒரு பெரும் சலுகையாகவன்றி, அவை இதுவரைகாலமும் மறுக்கப்பட்டிருந்த அடிப்படைக் குடியுரிமைகளாகக் கருதப்படவேண்டும். சீர்திருத்தக் காலந்தொட்டு ஹங்கேரிய பிரசைகளின் பொருளாதாரச் சுதந்திரம் அதிகரித்து வந்துள்ள போதிலும், இதுவரை அனுமதிக்கப்பட்ட சுதந்திரம் போதுமானதன்று. இவ்வாறான வரையறுக்கப்பட்ட சுதந்திரத்திற்கு மாறாக, நேர்மையான தாராண்மைப்படுத்தலே தேவையானதாகும்.

### 2. தனியார் ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படல் சட்டத்தினால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

தனியார் ஒப்பந்தமொன்று முறிக்கப் படுமானால், அதனால் பாதிக்கப்பட்ட பிரசை வழக்குத்தொடரவும், அதன் மூலம் ஒப்பந்தத்தின் உண்மையான அமுலாக்கத்தை உறுதி செய்து கொள்ளவும் வகை செய்யவேண்டும். பொருத்தமான நீதியமைப்பு, போதுமான சட்ட நிபுணர்கள், நவீனத்துவம் வாய்ந்ததும் விரிவானதுமான ஒரு குடிச்சட்டத்தொகுதி போன்றன இதற்குத் தேவையானவையாகும். இந்தச் சட்ட அமைப்பிற்கான நடைமுறைச் செலவினங்கள் தனியார் துறையினாலேயே பொறுப்பேற்கப் படவேண்டும். அதாவது, சட்ட நிபுணருக்கும் வாடிக்கையாளருக்குமிடையிலான ஒப்பந்தக் கட்டணத்திற்கமைய நீதிமன்றச் செலவுகளனைத்தையும் தனியாரே செலுத்த வேண்டும். மறுபக்கத்தில், நீதிமன்றத்துக்குச் செல்வதன் மூலம் வீண் கால விரயமே ஏற்படுமென்ற உணர்வு, அவ்வித தனியார் ஒப்பந்தத்துடன் சம்பந்தப் பட்டோரிடம் ஏற்படும் வகையில், ஒரு தனியார் வழக்கு நெடுங்காலத்திற்கு இழுத்தடிக்கப்படக் கூடாது.

ஒப்பந்தக்காரரிடையே முரண்பாடு தோன்றும் போது நீதியை நிலை நாட்டுவதே அரசின் கடமையாகும். எனினும், பிரசைகளுக்கிடையிலான இத்தொடர்புகளில் அரசாங்கம் வேறுவழிகளில் தலையிடுதல் தவிர்க்கப்படவேண்டும்.

அடுத்த நான்கு நிபந்தனைகளும் தனியார் சேமிப்புக்களுக்கும் முதலீட்டிற்கும் தூண்டுகோல் வழங்குவது தொடர்பான வழிகாட்டு விதிகளாகும். எனினும், இணக்க முயற்சிகளின் மூலமாகவன்றி, தனியார் முயற்சியாளர்கள் தன்னிச்சையாகவே சேமித்து முதலீடு செய்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்குதலே சரியான முறையாகும்.

### 3. தனியார் சொத்தினது பூரணபாதுகாப்பு திட்டவட்டமாகப் பிரகடனம் செய்யப்படுதல் வேண்டும்.

இதனை எவ்வாறு சாதிக்கலாம் என்பதை விளக்குவது இந்நூலின் நோக்கமன்று. சட்டங்களிலும் கட்சி நிகழ்ச்சித் திட்டங்களிலும் முன்னணி அரசியல்வாதிகளினது கூற்றுக்களிலும் இதற்கான உறுதிமொழி காணப்படவேண்டும்.

ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்ட தனியார் சொத்துக்களை மீள அளித்தல் முதன்மையான ஒரு தேவையன்று. குறிப்பிட்ட சில விதிவிலக்குகள் தவிர்ந்த வேறு சந்தர்ப்பங்களில் இது பொதுவாக நடைமுறைச் சாத்தியமற்றது. இப்படியானதொரு விதிவிலக்கு சிறு நில விவசாயிகளினது காணிகளாகும். வருங்காலத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான மனவிருப்பினைப் பொறுத்தவரை, மீண்டும் இவை பறிமுதல் செய்யப்படமாட்டா என்ற நம்பிக்கை ஏற்படும் விதத்தில் பிரகடனம் ஒன்று செய்யப்படுதல் அத்தியாவசியமானது.

### 4. வரிமுறை தனியார் முதலீட்டினை கட்டுப்படுத்தக் கூடாது.

வரியமைப்பு இந்நூலின் பிற்பகுதியில் ஆராயப்படுவதால், இதுபற்றி இங்கு ஒரு சில விடயங்கள் மட்டுமே சுட்டிக்காட்டப்படுகின்றன. மொத்த முதலீட்டில் தனியார் முதலீட்டினது பங்கு அதிகரிக்க வேண்டுமென்பதை ஏற்போர், மொத்த சேமிப்பில் தனியார் சேமிப்பு பெரும் பகுதியாக இருக்க வேண்டுமென்பதையும் ஏற்கவே செய்வர். தனியாரது வருமானம் அதிகரிப்பதற்கேற்பவே, அவர்களது சேமிப்புக்களும் அதிகரிக்கும். மக்கள் தம்மால் இயன்றமட்டும் உழைப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்பதை இது கருதும். தனியார் சொத்து பெரியளவில் திரண்டால் மட்டுமே தனியார் உற்பத்தியானது நவீனமயமாகவும், அதிகரிக்கவும் கூடும். அத்துடன் நவீன பாரிய நிறுவனங்கள் ஏற்படுவதும் சாத்தியமாகும்.

இது தொடர்பாக, அரசியல்வாதிகளதும் பொருளியலாளரதும் நிலைப்பாடு திட்டவட்டமானதாக இல்லை. ஒருபக்கம், அரசினது எல்லை

மீறிய அதிகாரத்தையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச பாதீட்டினது உயர்ந்த விகிதத்தையும் எதிர்க்கும் இவர்கள், மறுபக்கம், தனியார் துறையினது உயரிய வருமானங்களுக்கு எதிராகவும் வாதிடுகின்றனர். இந்த இரண்டிலும் உண்மையிலேயே எதனைக்குறை கூறுகிறார்கள் என்பதை இவர்கள் தெளிவாக்க வேண்டியது அவசியமானதாகும்.

மேற்கூறப்பட்டவை உண்மையிலேயே ஒரு விருத்தி முறை தனியாள் வருமான வரிக்கெதிரான வாதங்களாகும். என்றோ ஒருநாள் இவ்வித வரியினை முன்வைக்கும் கட்டத்தினை உறங்கோரி அடைவது மட்டுமன்றி, எதிர் காலச் சுதந்திரப் பாராளுமன்றமொன்று இவ்வித வரியினைப் புகுத்துவதற்கு வாக்களிக்கவும் கூடும். எனினும், இன்றைய நிகழ்ச்சி நிரலில் இது நிச்சயமாக இல்லை.

## 5. தனியார் முதலீடு: தனியார் மூலதன ஆக்கமும் அதனது வளர்ச்சியும் கடன் மூலமாக ஊக்குவிக்கப்படவேண்டும்.

இரு துறைகளுக்குமே சமமான வாய்ப்பு என்ற சுலோகம் பொய்யானதாகும். 1949-ம் ஆண்டுத் தேசியமயமாக்கல் தொட்டே வாய்ப்புக்கள் சமமானதாக இருந்ததில்லை. இன்று வெவ்வேறு துறைகள் சமமின்றியே உள்ளன. அரசதுறையில் பெருமளவு முதல் திரட்டப்பட்டுள்ளதோடு, நிர்வாகக் கருவியும் அரச வங்கியமைப்பும் அரச நிறுவனங்களும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்துள்ளன. காரியம் சாதிக்க என்ன செய்யவேண்டுமென்பது அரசதுறைக்கே நன்கு தெரியும். இப்பரவலான சமூக, பொருளாதார சக்திக்கும் தனியார் துறைக்குமிடையே எவ்வாறு நாம் சமமான வாய்ப்பினை எதிர் பார்க்க முடியும்?

அரசாங்கத்தின் வருடாந்தத் திட்டத்தின் கட்டுக்கோப்புக்குள் பொருளாதாரத்தின் மொத்தக் கடன் நிரம்பலில் எவ்வளவு தனியார் துறைக்கு ஒதுக்கப்படவேண்டும் என்பதைச் சட்ட சபை நிர்ணயிக்க வேண்டும். இப்பங்கானது ஒவ்வொரு வகைக்கடனிலும் அடிப்படையான கோட்டாக்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். உதாரணமாக, அடுத்துவரும் இறையாண்டில் அரசாங்கத்துறையினால் வழங்கப்படும் மொத்த முதலீட்டுக்கடனில் எத்தனை வீதம் தனியார் துறைக்குச் செல்ல வேண்டுமென்பதை இத்தீர்மானம் தெளிவாகக் கூறவேண்டும். பலம்மிக்க அரசதுறையானது, மேற்படி கோட்டாக்களைத் தன்பக்கம் ஈர்த்துக்கொள்ளும் முயற்சிக்கெதிராக உத்தரவாதமளித்தல் முக்கியமானது. எனினும், இந்த அரசாங்கப் பிரேரணை பாராளுமன்றத்தின் முன் செல்லும் போது, அரசியல் பிரசாரத்திற்கு மாறாக நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம். முதலீட்டுக் கடன்களின் எத்தனை வீதம் தனியார் துறைக்குச் செல்ல வேண்டுமென்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சினையாகும்.

5ஆவது நிபந்தனை, தனியார் துறையினது கடன் உரிமைகளை அரச துறை ஈர்க்க முயலுவதினின்றும் பாதுகாப்பதற்காகவே கூறப்பட்ட போதும், இலாபங்களைக் கவனியாது கடன்கள் பங்கிடப்படவேண்டும் என்பதைக் கருதமாட்டாது. கடன்களுக்கான மூலகங்களுள் ஒன்று 1ஆவது நிபந்தனையிலிருந்து தோன்றுகின்றது. அதாவது, தனியார்துறை நபரொருவர் இன்னொருவருக்கு கடன் கொடுத்தல். இக்கடன்களின் நிபந்தனைகள் இறுக்கமானவை. தனது கடனைத் திருப்பிப் பெறமுடியுமென்ற உறுதிப்பாடு இன்றி, எந்தவொரு புத்திசாலியும் கடன் கொடுக்க முன்வரமாட்டான். எனினும், அரசாங்க வங்கிகளும் இதே போன்ற இறுக்கமான நிபந்தனைகளையே விதிக்க வேண்டுமென்று கூறி வைக்க விரும்புகிறேன். ஒரு கடனமைப்பின் வழமையான கருவிகளாகிய வேறுபட்ட ஆவணங்கள், கூட்டு ஈடுகள், பிணைகள் போன்றன கையாளப்பட வேண்டும். 4ஆவது நிபந்தனை தனியார் துறை அங்கத்தவர்கள் தம்மால் இயன்றளவு பணம் சம்பாதிக்க அனுமதிக்கப்பட வேண்டுமெனக் கூறியது. அவர்கள் தமது கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தவறினால் தமது முதலீட்டை இழக்கும் ஆபத்து உண்டு என்பதையும் இங்கு கூறவேண்டியுள்ளது. கடன்சந்தைமுறைகளுக்கேற்ப வேறுபட்ட கடன் நிபந்தனைகள் விதிக்கப்படலாம். ஒருவன் தனது மொத்த தனிப்பட்ட சொந்தச் சொத்தினின்றும் கடனைத் திரும்பிச் செலுத்த உத்தரவாதமளிப்பானாயின் (வரையறுக்கப்படாத பொறுப்பு), ஒரு கடன் கொடுப்போன், அவனுக்கு அவனது சொந்த முதலீட்டிலும் பார்க்கக்கூடிய கடனைக் கொடுக்கத் தயாராகவிருப்பான். தனியார் முதலீட்டிற்கும் மேலான உத்தரவாதத்தைக் கொண்டிராத (வரையறுக்கப்பட்ட பொறுப்பு) நிலையில், கடனது பங்கும் குறைவாகவே இருத்தல் வேண்டும். கடன் நிபந்தனைகள் எவையாகவிருப்பினும், நிதிப்பிரச்சினைகள் தோன்றும் போது முதலீடு வீழ்ச்சியடையும் என்ற பயமும் தனியார் முயற்சியாளனுக்கு இருக்க வேண்டும். அதாவது, தனியார் துறை உண்மையிலேயே இறுக்கமான பாதீட்டுக் கட்டுப்பாடுகளுக்கு உட்படவேண்டும். தேவைக்கதிகமான பாதுகாப்புடனோ, கண்ணாடிக் குழாய்க்குள் வளர்க்கப்படும் ஒரு தூயமாதிரி போன்றோ தனியார் துறையினை வளர்க்க முயலுதல், பஞ்சு மெத்தையில் பராமரிக்கப்படும் அரச நிறுவனங்கள் போன்ற ஒரு பலவீனமான தனியார் துறையினையே உருவாக்கும்.

“முயற்சியாளன்” என்ற பதத்தினது தாராள உபயோகம் தடுக்கப்படவேண்டுமென்பது எனது அபிப்பிராயமாகும். அரச நிதியினை உபயோகிக்கும் எவருமோ, தமது நட்டங்களை அரசைக்கொண்டு ஈடுசெய்யும் எவருமோ, இதனைக்கையாள அருகதையற்றவராவர். நட்டம் ஏற்படும் போது தமது சொந்தப் பணத்தை இழப்போர் மட்டுமே “முயற்சியாளராவர்”.

## 6. தனியார் துறைக்குச் சமூகமதிப்பு ஏற்படவேண்டும்.

இதனை எதிர்மாறாகக் கூறின் இந்நிபந்தனை மேலும் தெளிவாகவிருக்கும். தனியார் துறைக்கெதிராக எதிர்ப்புக்களைத் தூண்டிவிடுதல் நிறுத்தப்படவேண்டும். தமது துண்டுக்காணிகளில் விவசாயம் செய்யும் சிறுநில விவசாயிகளையும் சிறுபட்டறைகளில் தொழில் புரியும் கைவினைஞர்களையும் மக்கள் இன்று மதிக்கின்றனர். அதாவது, ஒரு தேநீர்க்டை உரிமையாளன், அல்லது காய்கறி வியாபாரி போன்றோருக்கெதிராக இடம்பெறும் கிசுகிசுப்புக்கள் முன்னையோருக்கு எதிராக இடம்பெறுவதில்லை. பொறாமையினால் உந்தப்பட்டோ, பொதுமக்களது ஆதரவைத் திரட்டும் பொருட்டோ, முன்னேற்றகரமான முயற்சியாளரை "சுறாக்கள்", "சுயநலவாதிகள்" எனப் பட்டஞ் சூட்டுதல் நிறுத்தப்படவேண்டும். முதலாளித்துவத்திற்கெதிரான இவ்வித பழமையான போக்கு, ஒரு வர்த்தகன் மலிவான விலையில் வாங்கி இயன்றளவு உயர்ந்த விலையில் விற்க வேண்டுமென்ற சந்தைப்பண்புக்கு மாறானது. ஒரு வர்த்தகன் விற்கும் பொருள் ஒருவனுக்குத் தேவையானதாகவும், அதற்கு கேட்கும் விலையினைக் கொடுக்க அவன் தயாராகவும் இருக்கும் நிலையில் இவ்வர்த்தகனின் நடத்தை சமூகத்திற்குப்பயனுள்ளதாகும். கூடிய விலையில் வாங்கிக் குறைந்த விலையில் விற்றல் சரியான வர்த்தகமல்ல. இவ்வித வர்த்தகத்தினால் முழு நாடுமே பெரும் நட்டத்தை அடைந்துள்ளது என்பது நன்கு தெரிந்ததே. கெட்டித்தனமான வர்த்தகர்கள் மதிக்கப்படவேண்டிய வர்களேயன்றி, வஞ்சம் தீர்க்கப்படவேண்டியவர்களல்லர்,

தனியார் துறை அபிவிருத்தியினை உறுதிப்படுத்தும் ஆறு நிபந்தனைகளும் மேலே விபரிக்கப்பட்டுள்ளன. அவைபற்றிய வேறு சில கருத்துக்களையும் இங்கு கூறுவது உசிதமானது.

அடையாளங் காணக்கூடிய தனிப்பட்ட முயற்சியாளரா, அவ்வாறல்லாத கூட்டுப்பங்கு நிறுவனங்களா நாட்டிற்குத் தேவை என்பது பற்றி, இன்று ஒரு பெரும் விவாதமே நடைபெறுகின்றது. எனினும், தனியார் கூட்டுப்பங்கு நிறுவனங்களினது பிரச்சினைகள் பற்றி மட்டும் இங்கு நான் சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். (அரசாங்க அல்லது இலாப நோக்கமில்லாத தாபனங்களுக்கு உரிமையான பங்குகளை வெளியிடுதல் பற்றிப் பின்னர் விரிவாக ஆராய்வோம்.

மேற்படி வினாவிற்கு விடைகாணுவதில் சட்ட அம்சங்களுக்கும் மேலாகச் சமூக, பொருளாதார அம்சங்களையே நான் வலியுறுத்துவேன். நாம் விரும்பும் சமூகமாற்றத்தின் முக்கிய கூறுகளிலொன்று, முயற்சியும் சிக்கனமும் கொண்டவர்களை மையமாகக் கொண்ட ஒரு புதிய நடுத்தர

வகுப்பினரின் வளர்ச்சியாகும். சிறியதும், நடுத்தர அளவானதுமான உற்பத்தி அலகுகளின் உரிமையாளர்களினின்றும் சந்தையினது இயற்கைத் தெரிவு முறை காரணமாகப் படிப்படியாகப் பொருளாதார முன்னேற்றத்தின் முன்னோடிகளும் பெரிய நிறுவனங்களின் தாபகர்களும் உருவாகுவர். பின்னர் இந்த முயற்சியாளரைச் சுற்றிப் பங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலமோ, வேறு வழிகளிலோ முதலீடு செய்ய விரும்பும் ஒரு குழுவினரும் தோன்றுவர். இவர்கள் தாமாகவே புதிய நிறுவனங்களைத் தாபிப்பவர்களோ, புதிய தாபனங்களை நிறுவுபவர்களோ அன்று.

உரிமை குறிப்பிட முடியாதிருப்பதே சோஷலிச அரச சொத்து முறையின் ஒரு முக்கிய குறைபாடாகும். எல்லோருக்கும் உரிமையான அரச சொத்து எந்த ஒரு தனிப்பட்டவனுக்கும் சொந்தமானதல்ல. ஹங்கேரியில் இடம்பெறும் மாற்றத்தினிடையே மேற்படி முரண்பாடு நன்கு உணரப்பட வேண்டும். தனியார் தமது சொத்தினை முதலீடு செய்து தோல்வி ஏற்பட்டால் அவர்களே நட்டமடையும் நிலை ஏற்படவேண்டும். ஒரு முயற்சியாளன் ஏனையோர் தமது பணத்தை தன்னிடம் ஒப்படைக்கச் செய்வானாயின் அதுவும் நல்லதே. நேரடியாக வியாபாரத்தில் ஈடுபடாத பங்காளரைக் கொண்டிருக்கும் உரிமை அவனுக்கு இருக்க வேண்டும். குறுகிய காலத்திலேயே சில தனியார் செய்தியகங்களும் நிதி இடை நிறுவனங்களும் உருவாகி, இவர்கள் தம் பங்குகளைக் கொள்வனவு-விற்பனவு செய்ய வழி ஏற்படுமெனக் கூறலாம். மேற்படி அபிவிருத்திகளினூடாகக் காலப்போக்கில் தனியார் இருப்புக்கள், சட்டபூர்வமான தனியார் கூட்டுப்பங்கு கம்பெனிகள், தனியார் இருப்புச் சந்தை என்பன உருவாகுமென நாம் எதிர்பார்க்கலாம்.

மேற்கூறிய மாற்றங்களனைத்தும் தனியார் சொத்தினது வரலாற்று ரீதியான சேதன வளர்ச்சியுடன் இணைந்து ஏற்படுவதாக இருக்கும். இந்த வரலாற்றுரீதியான வளர்ச்சிக்கட்டத்தைத் தவிர்க்க முயலுதல் உசிதமானதோ, சாத்தியமானதோ அன்று. ஆனால், பொருத்தமான வழி முறைகளைக் கையாண்டு, அதனது வளர்ச்சியினைத் துரிதப்படுத்தலாம். அரச நடவடிக்கைகளின் மூலம் தனியார் துறையினை அழிக்கலாம் ஆனால், அதே வழியினைக் கையாண்டு அதனை உருவாக்க முடியாது. ஒரு தனியார் துறையினை உருவாக்க முயலும் போது, பல தசாப்தங்களாக இருந்து வந்துள்ள இடைவெளியினை நாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம். தனியார் உடைமைக்குப் பாதுகாப்பு, தனியார் சொத்து, சந்தைகள் என்பவற்றோடு தொடர்பான குடிமைவிதிகள், பெறுமானங்கள் என்பவற்றை இன்றைய பரம்பரையினர் அனைவருமே மறந்து விட்ட நிலையிலுள்ளனர். இதனை

நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். தனியார் துறையொன்றினை உருவாக்குவதற்கு, முன்னணி முதலாளித்துவ நாடுகளின் சட்ட, வியாபார வடிவங்களைப் பிரதி செய்து நம் நாட்டிலும் அவற்றைக் கையாளுதல் மட்டும் போதுமானதன்று. ஆபிரிக்க ஆதிவாசிகளையும் பின்தங்கிய ஆசிய கிராமிய சமூகங்களையும் பொதுவுடைமைக்கு இட்டுச்செல்ல முயன்று தோல்வியுற்றமையை இங்கு நாம் ஒப்பிட்டு நோக்கலாம். இதே வழியினை நாமும் பரீட்சித்துப் பார்க்கத் தேவையில்லை.

19-ம் நூற்றாண்டில் நிலவிய சந்தைப் பொருளாதார முறையினையா, அல்லது அதன் 20-ம் நூற்றாண்டு வடிவத்தையா ஹங்கேரி பின்பற்ற வேண்டும் என்ற கேள்வி இன்றைய அரசியல் விவாதங்களில் முக்கிய இடம் பெற்று வருகின்றது. இரண்டாவதையே நான் தெரிவு செய்வேன் என்பது சொல்லாமலேயே புரியும். எனினும், எமது சொந்தத் தெரிவுகளுக்கும் நாட்டின் இன்றைய அபிவிருத்திக்கட்டம், மாற்றுவேகம் என்பவற்றுக்குமிடையே கணிசமான இடைவெளி உள்ளது. இன்றைய ஹங்கேரியில் தனியார் துறையினது உண்மையான நிலையினை நோக்குவோமாயின், ஒரு சில விதி விலக்குகள் நீங்கலாக, இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் போல்கன் பிரதேசத்தில் காணப்பட்ட, அல்லது இன்றைய விருத்தியடையும் நாடுகளில் காணப்படும் நிலைமையே இங்கும் காணப்படுவதை உணரலாம். ஹங்கேரியில் தனிப்பட்ட விவாசாயிகள் உபயோகிக்கும் லொறிகள், டிராக்டர்கள் போன்றவற்றிற்கும், டென்மார்க், அமெரிக்கா போன்ற நாடுகளில் உபயோகிக்கப்படும் இத்தகைய இழுபொறிகளுக்குமிடையே பெரும் வேறுபாடு காணப்படுகின்றது. ஹங்கேரிய விவசாயிகளிடம் சொந்த லொறிகளோ, டிராக்டர்களோ இல்லை; ஒரு சொந்தத் தொலைபேசியினைப்பற்றி அவன் நினைத்துப் பார்க்கவும் முடியாது. அவ்வாறே கைவினைஞரின் பட்டறைகளையோ, சேவைகள், அல்லது வர்த்தகத்தில் தனியார் துறையினர் செயற்பாட்டையோ நோக்குவோமாயின், தெருவர்த்தகரின் சிதைந்த தேநீர்க் கடைகளையும், நெருக்கமான, அழுக்கு நிறைந்த கடைகளையுமே நாம் காணுகின்றோம். தனியாரின் உற்பத்தி நடவடிக்கைகளின் பெரும்பகுதி அரைகுறையான சட்டவழியிலும் போதுமான உபகரணங்கள் இல்லாமலும், அரசதுறையினின்றும் களவாடிய, அல்லது கடன்வாங்கிய தளபாடங்களுடனுமே செயற்படுவதைக் காணலாம். 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காணப்பட்ட நிலையிலும் பார்க்கத் தனியார் துறை பின்தங்கிய நிலையிலேயே இன்று உள்ளது. அது தனது இந்தப் பின்தங்கிய நிலையினின்றும் விடுபட்டு, மேற்கத்திய நாடுகளில் இன்று காணப்படும் தனியார் துறையினது நிலையினை அடைவதற்கு அரசாங்கம் நாள் குறிப்பது மட்டும் போதுமானதன்று. நாம் முன்னர்

குறிப்பிட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்வதன் மூலம் இந்த அபிவிருத்தியினைத் துரிதப்படுத்தவேண்டுமென்பது உண்மையே (அரசசொத்தின் ஒரு பகுதியினைத் தனியார் துறைக்கு மாற்ற வேண்டும். இதனைப் பின்னர் ஆராய்வோம்). ஆனால், பொறுமையிழந்து வேகமாகப் பாய முயலுதல் பகுத்தறிவான செயலன்று. தனியார் துறை அலகுகள் அவற்றினது சட்டவடிவத்தின் நவீனத்துவம், வியாபார முறைகள், தொழில் நுட்பத்தன்மை என்பவற்றைப் பொறுத்தவரை வேறுபட்டனவாகவும், வேறுபட்ட பரம்பரைகளைச் சேர்ந்தனவாகவும் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு இருக்குமென நாம் எதிர்பார்க்கலாம். அதாவது, அவற்றுட் சில கடந்த நூற்றாண்டைச் சேர்ந்தனவாகவும், வேறு சில நவீனமயப்பட்டனவாகவும் இருக்கும்.

மேற்படி விடயம் இன்னொரு கருத்திற்கும் இட்டுச் செல்கின்றது. படிப்படியான மாற்றங்களே தனியார் துறை அபிவிருத்தியினது பண்பாகும். தனியார் சொத்தினைத் திடீரென ஏற்படுத்த முடியாது. முதலாளித்துவ மயமாக்கல் என்பது ஒரு நீண்டகால வரலாற்றுச் செயற்பாடாகும். ஹங்கேரியில் 1949-ல் தனியார் சொத்தில் தீவிர பாதிப்பு ஏற்பட்ட பின்னர், கடந்த பல தசாப்தங்களாக இதன் வளர்ச்சி தடைப்பட்டிருந்தது. 1960 களில் வீட்டுத்துறை விவசாயம், தனியார் சட்ட நடவடிக்கைகள், இரண்டாவது துறையினது வளர்ச்சி போன்ற சில துறைகளில் இது புத்துயிர்ப்புப் பெற்றது. இன்று இது மேலும் துரிதமாக வளர்வதற்கான சூழ்நிலை தோன்றியுள்ளது. ஏமது ஆறு நிபந்தனைகளும் எந்தளவு இசைவாக நிறைவேற்றப்படுகின்றனவோ, அந்தளவிற்கு இதன் வளர்ச்சியும் துரிதமானதாகவிருக்கும். வேறுபட்ட துறைகளில் இதன் வளர்ச்சி ஒரே சீரானதாக இருக்கவும் மாட்டாது. முதற்செறிவு குறைந்த உற்பத்தி நடவடிக்கைகள், உள்நாட்டு – வெளிநாட்டு வர்த்தகத்துறை என்பவற்றில் இதன் வளர்ச்சி துரிதகதியில் ஏற்படலாம். எனினும், உற்பத்தியின் பெரும் பகுதியைத் தனியார் துறை மேற்கொள்ள இன்னும் பல ஆண்டுகள் செல்லலாம். அபிவிருத்தியடைந்த, நவீனமயமான, முதிர்ச்சியுற்ற ஒரு தனியார் துறை தோன்றுவதற்கு நீண்டகாலமெடுக்கும்.

எனது இக்கருத்துக்கள், தனியார் துறையினது பங்கினைப் பொதுவாகவோ, இன்றைய உறங்கேரியில் குறிப்பாகவோ இலட்சிய ரீதியாக்கும் நோக்கங் கொண்டனவல்ல. வாடிக்கையாளரை ஏமாற்றியும், அரசிற்கு வஞ்சனை செய்தும், தனியார் துறையினர் பேராசையுடன் எவ்வகையிலேனும் பணம் சம்பாதிக்க முயலுவது சாதாரணமாக நடைபெறும் ஒன்று என்பதையும் நான் அறியாமலில்லை. நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கக் கூடிய நிறுவனங்களை உறுதியாகவும் நிதானமாகவும் தாபிக்க முயலாது, மிகக் குறுகியகாலத்தில் உயர்ந்த இலாபத்தினைச் சம்பாதிப்பதைத் தமது முதன்மை நோக்கமாக இவர்கள் கொள்கின்றனர். இவ்வித முயற்சியாளர் உற்பத்தி சார்ந்த

முதலீடு என்ற பெயரில் வெளிப்படையான நுகருந் தன்மையினையே ஏற்படுத்துகின்றனர். இத்தகைய முயற்சியாளர்கள் வாடிக்கையாளரை மதியாததோடு, அரசதுறையில் பற்றாக்குறை காணப்படும் பொருளாதாரத்தில் "எடு அல்லது விடு" என்ற வகையிலான நடத்தையினைக் கொண்டவர்களாகவும் உள்ளனர். இவ்வித தவறான நடத்தைகள் தனியார் துறைக்கெதிரான பொது அபிப்பிராயத்தைத் தோற்றுவிக்கும் என்பதுடன், தமது வியாபாரத்தினைப் பெருக்குவதற்கு நியாயமான வழிகளைக் கையாண்டு, கௌரவமான முறையில் முயற்சியுடனும் சிக்கனத்துடனும் நடந்து கொள்ளும் முயற்சியாளரையும் இவை பாதிக்கும் என்பதிலும் ஐயமில்லை.

நியாயமான வியாபார விதிகள், சிக்கனம், நீண்டகால வியாபார நடத்தை என்பவற்றைப் போதிப்பதன் மூலமும் கல்வியின் மூலமும் இதனை மாற்றியமைக்கலாம். தனியார் துறைக்குழுக்களும் திட்டக்குழுக்களும் ஒழுக்கவியல் குற்றங்களுக்கெதிராகச் செயற்பட வேண்டும். சட்டப்பிரமாணங்களும் தேவையானவையே. கார்ட்டெல் அமைப்புக்கள், கூட்டுச் சேருதல், தனியுரிமை, நியாயமற்ற போட்டி என்பனவும் தடைசெய்யப்படவேண்டும். எனினும், இவையனைத்தையும் விட மேலே கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தல் முக்கியமானதாகும். பற்றாக்குறைப் பொருளாதாரம் முடிவுக்கு வருதல் (பகுதி 2.8ஐப் பார்க்கவும்), போட்டியும் போட்டியாளரும் தோன்றுதல், வியாபாரத் தோல்வி பற்றிய பயம் நீங்குதல் என்பனவே தனியார் துறை முயற்சியாளர்கள் வாடிக்கையாளரில் கவனம் செலுத்தத் தேவையானவையாகும்.

இறுதியாக இங்கு கூறப்படும் கருத்து, வெளிநாட்டு முதலினை அறிமுகம் செய்வது தொடர்பானதாகும். ஹங்கேரியில் ஏற்படக்கூடிய தனியார் துறையினது வளர்ச்சியே வெளிநாட்டு முதலீட்டுக்கான அடிப்படையாகும்.

வெளிநாட்டு முதலீடானது, அதற்கு வழங்கப்படும் விசேட சலுகைகளினடிப்படையில் ஏற்படுமென்பதை நான் ஏற்கமாட்டேன். ஹங்கேரியில் உள்நாட்டுத் தனியார் நிறுவனங்களுக்கெதிராக, வெளிநாட்டு முதலுக்கு விசேட சலுகை வழங்கும் சட்டங்கள் பல ஏற்கனவே உள்ளன. இச்சலுகைகள் எந்நேரத்திலும் வாபஸ் பெறப்படலாமென்பதைப் புத்திசாலியான எந்தவொரு வெளிநாட்டு முதலீட்டாளனும் அறிவான். இந்நிலையில், தனது நாட்டு அரசாங்கம் அவ்வித முதலீட்டினது பாதுகாப்பினை உறுதி செய்தால் மட்டுமே அதனை அவன் மேற்கொள்வான். எனவே, வெளிநாட்டு முதலீடானது தாய்நாட்டு அரசாங்கத்தினது கொள்கையின் ஒரு தொழிற்பாடாக அமைகின்றது. ஓரளவு மட்டுமே இது எமக்கு உதவலாம். மேலும், குறுகியகால அவகாசத்தில் தமது முதலீட்டை விடுவித்துக்-

கொள்ளக்கூடிய விரைவான இலாபத்தைத் தேடும் முதலீட்டாளர்களை மட்டுமே இது கவரக்கூடும். இதற்கு மாறாக, நிதானமான வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஹங்கேரியில் தனியார் முயற்சியினது அந்தஸ்து யாது என்பதை முன்கூட்டியே அறிய முயலுவர். ஒவ்வொரு உறங்கேரியப் பிரசையும் தனது ஊழிய சக்தியையும், பணம், செல்வம் என்பவற்றையும் தான் விரும்பியவாறு பயன்படுத்தவும், கட்டுப்பாடுகளின்றி வெளிநாட்டு வர்த்தகத்திலீடுபடுத்தவும் கூடுமாயின் மட்டுமே, வெளிநாட்டு முதலீட்டாளன் எவ்வித ஐயமுங்கொள்ளமாட்டான். இதற்கு மாறாக, இதமான வார்த்தைகளின் மூலம் ஹங்கேரிய அரசியற் தலைவர்கள் வெளிநாட்டு முதலீட்டை வரவழைக்க முயலுவது சிறு பிள்ளைத்தனமானது என்பதே எனது சொந்தக் கருத்தாகும். இந்நாட்டில் அந்த முதலீடுகளுக்குப் பாதுகாப்பு உண்டு என்றும், பல்வேறு நிர்வாகக் கட்டுப்பாடு குறித்த அச்சுறுத்தல்கள் ஏதுமில்லை என்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உணரும் போது தான் வெளிநாட்டு முதலீடுதானாகவே இங்கு ஏற்படும்.

## *1.2 அரசதுறை*

பல்வேறுபட்ட எல்லாப் பொது உடைமைகளையும் இதில் நான் உள்ளடக்குகிறேன். தனியார் உடைமையில் இல்லாதவையே அரசதுறைக்கு உரித்தான நிறுவனங்கள், தாபனங்கள் என எதிர்க் கருத்திலும் இதனைக் கூறலாம்.சொத்துடைமை பற்றிய பொருளியல் கோட்பாடு கூறுவது போன்றே வரவுகளுக்கும் செலவு-களுக்குமிடையிலான எச்சவருமானம் தனிப்பட்ட நபர்களுக்குச் செல்லாததும் நட்டங்கள் அதே நபர்களால் ஏற்கப்படாததுமான நிறுவனங்கள், தாபனங்கள் என்பனவே அரச உடைமைகள் என்று கூறலாம். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, அரச சொத்து எல்லோருக்கும் உரியது; ஆனால், எவரொருவருக்கும் தனிப்பட்ட முறையில் உரித்தானதல்ல.

ஹங்கேரியிலும் ஏனைய சோஷலிச நாடுகள் சிலவற்றிலும் "சந்தைச் சோஷலிசம்" என்ற தத்துவம் சீர்திருத்தங்களுக்கு வழிகாட்டியாக கருதப்படுகின்றது. இது ஒரு சிக்கலான கோட்பாடாக இருப்பதால், இதன் மையப்பிரச்சினையை இங்கு ஆராய உள்ளேன். இத்தத்துவத்தின்படி, அரசநிறுவனங்கள் தொடர்ந்தும் அரச உடைமையாகவே இருக்க, பொருத்தமான சூழ்நிலைகளை உருவாக்குவதன் மூலம் சந்தையின் ஓர் அங்கம் போன்று அவை செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றது. "சந்தை சோஷலிசம்" = அரச உடைமை + சந்தை இணைப்பு என்ற குறுகிய கருத்தில் கூறப்படும் சந்தைச் சோஷலிசத்திற்கெதிராக இங்கு நான் சவால் விடுகின்றேன்.

வெளிப்படையாகவே இங்கு நான் கடுமையான வார்த்தைகளைக் கையாள உள்ளேன். சந்தைச் சோஷலிசத்தின் அடிப்படைக் கருத்து மங்கி மறைந்து விட்டது. யூகோஸ்லாவியா, ஹங்கேரி, சீனா, சோவியத் யூனியன், போலந்து ஆகியன இதன் தோல்விக்குச் சாட்சியங்களாக உள்ளன. எவ்வாறாயினும், இன்னும் சிலர் இதனை ஆதரிக்கின்ற பொழுதும், மேற்படி உண்மையை உணர்ந்து இத்தத்துவத்தைக் கைவிட வேண்டிய காலம் வந்துவிட்டது. இதனை ஆதரிப்போரது கருத்துக்களை என்னால் ஏற்க முடியாது. இது தொடர்பான பின்வரும் உண்மைகள் சிலவற்றை நான் குறிப்பிடாதிருக்க முடியாது.

சந்தைப் பொறிமுறையானது இயற்கையாகவே தனியார் துறை நடவடிக்கைகளை இணைக்கின்றது. சந்தைப்பொறிமுறையின் கீழ் தீர்மானம் மேற்கொள்வோனது தன்னிச்சையான நடத்தை, சந்தைப் பொறிமுறையினது செயற்பாட்டிற்கும் தனியார் சொத்தினது பாதுகாப்பிற்கும் உறுதுணையாகவிருக்கும் கட்டில்லா ஒப்பந்தம் என்பவற்றாலேயே இந்த இணைப்பு ஏற்படுகின்றது. இந்தநிலையில், அரச நிறுவனமொன்று தனியார் துறைக்கு உரித்தானது போன்று செயற்படவேண்டுமென்றும், ஒரு சந்தை முகவர் போன்று இயல்பாகவே செயற்படுமென்றும் எதிர்பார்ப்பது வீணானதே. இந்த வீண் நம்பிக்கையை இப்பொழுதேனும் கைவிடுவது நல்லது. அரச உடைமை நிறுவனமொன்று (அரச நிர்வாக அணியின் ஒரு சேதன உறுப்பாகவிருப்பதால்) பணிக்குழுவாட்சியினை நிரந்தரமாகவே ஏற்படுத்தும் என்பதை இங்கு நாம் ஆராயத்தேவையில்லை. சீர்திருத்தங்களின் ஆரம்பகட்டத்தில், திட்ட ஏவுதலைக்கைவிடுதல் அரசஉடைமை நிறுவனங்களுக்கிடையே சந்தை இணைப்பை ஏற்படுத்த உதவுமென்று நம்பினோம். ஆனால், இந்த நம்பிக்கை நிறைவேறவில்லை. 1968-ம் ஆண்டிற்குப் பிந்திய கால ஆய்வுகள் பல காட்டுவது போன்று, அரசதுறையின் மீதான நேரடி பணிக்குழுக் கட்டுப் பாட்டிற்குப் பதிலாக இப்பொழுது மறைமுக கட்டுப்பாடுகள் வளர்ச்சியுற்றுள்ளன. நிறுவனங்களின் செயற்பாட்டில் தலையிடுவதற்கு அரச அதிகாரிகள் பல்வேறுபட்ட வழிகளைக் கையாளுகின்றனர். ஒருவித தலையீட்டை அகற்றும் பொழுது, வேறொன்று தலைதூக்குகின்றது. சந்தை இணைப்பு தனியார் சொத்தின் ஓர் இயல்பான விளவாகவும், இயற்கையான வழியாகவும் இருப்பது போன்று, அரச உடைமையில் பணிக்குழு இணைப்பு உள்ளது. உறங்கேரியினதும் சீர்திருத்த எண்ணங்கொண்ட ஏனைய நாடுகளினதும் இருபது வருட அனுபவம் மேற்படி முடிவிற்குச் சான்றாக உள்ளது. எனவே, இது இனிமேலும் சர்ச்சைக்குரிய ஒரு விடயமன்று; இது ஏற்கப்பட வேண்டிய ஓர் உண்மையாகும்.

அரசதுறையினது பங்கினை எவ்வாறு குறைக்கலாம், அது எவ்வாறு குறைக்கப்படவேண்டும் என்பன பற்றிப் பின்னர் ஆராய்வோம்.

இம்மாற்றங்களின் இறுதியில் மொத்த உற்பத்தியில் அரச துறையினது பங்கு குறைவாகவிருக்கலாம் அல்லது அவ்வாறு குறைக்கப்படுவது விரும்பத்தக்கது. தனியார் பொருளாதாரம் என்ற பரந்து விரிந்த கடலில், அரசஉடைமை நிறுவனங்கள் சிறுதீவுகளாக மாறிய பின்னர், அவையும் தனியார் நிறுவனங்கள் போன்று செயற்படுமென நாம் எதிர்பார்க்கலாம். எனினும், இன்றும், இன்னும் பல வருடங்களுக்கும் கூட, அரசஉடைமை நிறுவனங்களென்ற சமுத்திரத்தால் சூழப்பட்ட சிறு தீவுகளைக் கொண்டதாகவே தனியார் துறை இருக்கும்.

ஹங்கேரியில் இன்று காணப்படும் நிலைமைகளில் அரசஉடைமை நிறுவனங்கள் ஒரு சமூகக் கண்ணோட்டத்தில் அரச பணிக்குழுவாட்சியின் ஓர் அங்கமாகவே உள்ளன என்பது எனது கருத்தாகும். அரசஉடைமை நிறுவனங்களை வியாபாரம் என்பதிலும் பார்க்க, அரசாங்கம் என்ற பகுதிக்குள் அடக்குவதே பொருத்தமானது. அரசதுறையினை நிபந்தனையற்ற முறையில் தாராண்மைப் படுத்தக்கூடாது. மாறாக, அதன் மீது கவனம் செலுத்தி, அத்துறையிலிருக்கும் ஒவ்வொரு அமைப்பும் பொதுமக்களது பணத்தை எவ்வாறு விரயம் செய்கின்றன என்பதை ஆராய்ந்து, இப்போக்கினைத் தடுத்து நிறுத்த ஆவன செய்ய வேண்டும்.

மேற்படி பிரச்சினை குறித்து ஏற்கனவே பல கோட்பாட்டுரீதியானதும், நடைமுறைரீதியானதுமான ஆய்வுகள் கவனம் செலுத்தியுள்ளன. தற்போது நாம் ஒரு பாராளுமன்ற சனநாயகத்திற்கும் அரச நிர்வாகத்தின் எவையேனும் கிளைகளுக்கிடையிலுமான (உ+ம், இராணுவம்) தொடர்புகளை அவதானிப்போம். அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் பென்டகனது அதிகரித்து வரும் செலவு நாட்டத்தை வெறுமனே ஏற்க வேண்டியவர்களாக உள்ளனர். அரச பாதீடு இச்செலவீடுகள் மீது வரையறைகளை விதிக்கும் வகையில் தயாரிக்கப்படுகின்றது. இவ்வரையறைகளை விதிப்பது பாதீட்டுக் கட்டுப்பாட்டின் கடமையுமாகும். ஆனால், காங்கிரஸ் அரசியல் ரீதியான நிர்ப்பந்தத்திற்குட்படுவதோடு, இராணுவமும் தனக்கான செலவீட்டினை அதிகரிக்குமாறு நிர்ப்பந்திப்பதாக உள்ளது. ஒரு சோஷலிசப் பொருளாதாரத்தில் அரச முதலீடுகள் மேற்கொள்ளப்படும் வழமையான முறைகளையே இங்கு இராணுவமும் கையாளமுற்பட்டுள்ளது. ஓர் இராணுவக் கட்டடம் அல்லது இராணுவத்தளபாடத்தினை நிறுவுதற்கான ஆரம்ப மதிப்பீடு ஒரு மில்லியன் டொலராக இருக்குமானால், வேலை தொடங்கிய பின்னர் அச்செலவு ஆரம்ப மதிப்பீட்டின் இரண்டு மடங்காகவோ, மூன்று மடங்காகவோ இருக்கலாம். ஏற்கனவே வேலை ஆரம்பித்து விட்டபடியால், இக்கட்டத்தில் முழுத்திட்டத்தையும் கைவிடமுடியாத நிலை ஏற்படுகின்றது. காங்கிரஸினது பூரண கட்டுப்பாடு தேவையென்பதற்கு

இதுவும் ஒரு வாதமாகும். இராணுவச் செலவினங்களை மேற்பார்வை செய்வதற்கு விசேட குழுக்களும் உள்ளன. எதிர்க்கட்சிகளும் இவற்றை உன்னிப்பாகக் கவனிக்கும். எனவே, தவறான முறையில் பணம் செலவிடப்படுமாயின், அதனைக் கண்டு பிடிப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

இராணுவத்திற்கும், சுதந்திரமாக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்திற்குமிடையிலான பொதுவான தொடர்பின் ஓர் உதாரணம் மட்டுமே இது. முதலாவது விரிவடையக் கூடியதாகவிருப்பதால், பின்னையது அதனைக் கண்காணிக்க வேண்டியுள்ளது. பணிக்குழுவினால் செலவிடப்படும் பணம் அதனது சொந்தப் பணமன்று. அது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பணமாகும். இப்பொதுப் பணம் எவ்வாறு செலவிடப்படுகின்றது என்பதை மேற்பார்வை செய்வது பாராளுமன்றத்தினது கடமையாகும்.

ஒரு வருடத்திற்குமுன்னர் கூட இவ்வாறு கூறுவது ஹங்கேரியைப் பொறுத்தவரை வெறுங்கற்பனையாகவே இருந்திருக்கலாம். இன்றுங்கூட, பாராளுமன்றம் அரசதுறையினை மேற்பார்வை செய்வதற்கான அரசியல் தாபனவமைப்பு உருவாக்கப்படவில்லை. சுதந்திரமாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு பாராளுமன்றம் இதற்குத்தேவையானதாகும். இவ்வித மாற்றங்கள் தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் இன்று காணப்படுவதால், அரச உடைமை நிறுவனத்தினது முகாமையாளருக்குக் கட்டுப்பாடில்லாத அதிகாரம் வழங்கப்படக்கூடாது என்று கூறுங்காலமும் நெருங்கி விட்டது.

ஹங்கேரியில் அரசஉடைமை நிறுவனங்களைத் தாராண்மைப் படுத்த வேண்டுமெனக் கூறுவோர், அரசஉடைமை நிறுவனமொன்றின் முகாமையாளனை, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் காணப்படும் ஒரு கூட்டு முதல் கம்பெனியின் முகாமையாளரோடு ஒப்பிடுகின்றனர். இந்த இருவரினதும் சமூக அந்தஸ்து சமமானது என இவர்கள் கருதுவது தவறானதாகும். தனியார் நிறுவனமொன்றில் முகாமையாளனின் தவறான ஒரு செயல் தனிப்பட்டோருக்கு நட்டத்தினை ஏற்படுத்தும். சட்டக் கருத்தில், தனி நபர்களான இவர்கள் நிதியிழப்புக்களைத் தாமே ஏற்க வேண்டும். மாறாக, ஹங்கேரியைப் பொறுத்த வரை, அரசினது அடித்தளமற்ற மூலகங்களிலிருந்து இப்பணம் பெறப்படுவதனால், முகாமையாளன் அரச பணிக்குழுவில் ஒரு நடுத்தர உத்தியோகத்தனாகவே இருப்பான். அவன் விடுகின்ற தவறைக்கண்டு பிடித்தல் அத்தனை இலகுவானதல்ல.

பொருளாதாரம் தாராண்மைப் படுத்தப்படுதலை ஆதரிப்பவனாகிய நான், சாதாரண ஒரு பிரசையையும் தனது சொந்தப் பணத்தை இழப்பதற்கும் தயாராகவிருக்கும் ஒரு தனியார் நிறுவன

உரிமையாளனையும் தாராள மனதுடனேயே நோக்குவேன். மாறாக, வரி செலுத்துவோரது பணம் எவ்வாறு செலவிடப்படுகின்றது என்பதில் இறுக்கமான கட்டுப்பாடுகளை விரும்புபவன் நான். ஓர் அரசஉடைமை நிறுவனத்தின் முகாமையாளனை அரச உத்தியோகத்தரின் வரிசையிலேயே அடக்குவேன். இந்த முகாமையாளன் திறமையாகத் தனது கடமையை ஆற்றுவானாயின், அவனுக்கு அளிக்கப்படும் உயர்ந்த வேதனத்தைப்பற்றி நான் குறை கூறமாட்டேன். (இது பற்றி பின்னர் ஆராயப்படும்). ஆனால் இவ்வாறு செயற்படத் தவறும் பொழுது, அவனைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும். அரசஉடைமை நிறுவனமொன்றினது முகாமையாளன் ஒரு முயற்சியாளனல்லன், ஏனைய அரச நிறுவனங்களின் தலைவர்கள் போன்றே செலவீட்டை இயன்றளவு அதிகரிக்க அவன் முயலுவான் என்ற உண்மையை நாம் புறக்கணிக்க முடியாது. மேலும், முதலீட்டை அதிகரிக்கவும், பெருமளவு மாற்றக்கூடிய நாணயங்களைப் பெறவும், மேற்படி சந்தைகளிலிருந்து அதிக இயந்திரங்களையும் பொறிகளையும் இறக்குமதி செய்யவும், வெளிநாடுகளுக்குப்பிரயாணம் செய்யவும் அவன் விரும்புவான். தனது ஊழியருக்கு உயர்ந்த வேதனங்கள் வழங்கி, அவர்களது நல்லெண்ணத்தைப் பெறுவதன் மூலம் தன்னைச் சுற்றியுள்ள நெருக்கடிகளை அகற்ற முயலுவான். செலவீட்டில் கண்ணுங்கருத்துமாக இருந்து தமது பணத்தைப்பாதுகாக்கும் தனியார் உடைமையாளரது போட்டியினை இதுவரை காலமும் எதிர்நோக்காமையினால், தான் விரும்பியவாறு செயற்படும் சுதந்திரம் அவனுக்கிருந்தது. இம்முகாமையாளன் குறிப்பிட்ட எல்லைக்கு மேல் செலவிட்டிருந்தால், அரச பாதீட்டின் மூலமாகவோ, வங்கியமைப்பின் மூலமாகவோ அதனை ஈடு செய்யும் வாய்ப்புமிருந்தது. தேசீயப் பொருளாதாரத்தில் அரசதுறையினது ஆதிக்கம் நீடிக்கும் வரை, நிறுவனங்கள் தமது உள்ளார்ந்த பிரச்சினைகள் காரணமாகச் சிக்கனத்தைப் பின்பற்ற மாட்டா. இந்நிலையில் இறுக்கமான பாதீட்டுக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ள முடியும் என்ற எண்ணத்தைக் கைவிடுவதே சிறந்தது.

எனது கருத்துக்களை அளவுக்கும் மேலாக எளிமைப்படுத்தியோ, இறுக்கமாகவோ வெளியிட நான் விரும்பவில்லை. ஓர் அரச நிறுவனமானது, பெருந்தெருக்கள் திணைக்களம், போலீஸ் துறை, அல்லது வரிச்செயலகம் போன்ற பல்வேறு செயலகங்களுள் ஒன்று என்றோ, அவற்றினின்றும் அது வேறு பட்டதல்ல என்றோ நான் கருதமாட்டேன். ஓர் அரச நிறுவன முகாமையாளனது நோக்கம், ஒரு நகர பிதாவினதோ, போலீஸ் அத்தியட்சகரினதோ நோக்கினை ஒத்ததல்ல. ஓர் அரச நிறுவனம் தனது உற்பத்திப் பொருட்களைப் பணத்திற்கு விற்கின்றது; வருமான – செலவுக் கணிப்பீடு

களினடிப்படையில் செயற்படுகின்றது; விற்போர் வாங்கு-வோரிடையிலான தொடர்புகளைக் கொண்டிக்கின்றது. இந்த வகையில், வியாபாரிகளின் இயல்புகள் அரசநிறுவன முகாமையாளரிடமும் காணப்படுகின்றன. 1968-ம் ஆண்டு சீர்திருத்தங்களுக்குப் பிந்திய இரு தசாப்தங்களில் மேற்படி இயல்புகள் மேலும் வலுவடைந்துள்ளன இவற்றைப் பலவீனப்படுத்துவது நல்லதன்று. அதேவேளையில், அரச நிதிகளைச் செலவிடுவதற்குப் பொறுப்பானவர்கள் என்ற உண்மை எல்லா இயக்குநர்களுக்கும் உணர்த்தப்பட வேண்டும்; இதற்கு வகை சொல்லும் பொறுப்பும் அவர்கள் மீது சுமத்தப்படவேண்டும். பொதுமக்களது பிரதி நிதிகள் அவர்களது கடமைகளை மேற்பார்வை செய்வதும் முற்றிலும் நியாயமானதே.

மேலே கூறியவற்றினின்றும் பல நடைமுறைக் கருத்துக்கள் எழுகின்றன. இக்கருத்துக்கள் பற்றிய தொழில்நுட்ப, நிர்வாக விபரங்களை விபரிப்பது இந்நூலின் நோக்கமன்று, எனவே, அடிப்படை விதிகள் சில மட்டுமே இங்கு முன்வைக்கப்படுகின்றன.

1. பின்வரும் தீர்மானங்களை மேற்கொள்வதில் ஓர் அரசநிறுவனத்தின் முகாமையாளனுக்குப் பூரண சுதந்திரம் இருக்க வேண்டும். வெளியீட்டினது சேர்க்கை, அளவு என்பவற்றை நிர்ணயித்தல், உள்ளீட்டுச் சேர்க்கை, தொழில் நுட்பத்தெரிவு, உள்ளீட்டினை நிரம்பல் செய்வோர், வெளியீடுகளைக் கொள்வனவு செய்வோர் ஆகியோருடன் உடன்படிக்கை செய்தல், ஊழியரை வேலைக்கமர்த்தல், நீக்குதல் என்பன.

   மேற்படி தீர்மானங்கள் நிறுவனத்தினது கட்டுப்பாட்டுக்குள் இருப்பது போலத்தோன்றிய போதும், நடைமுறையில் அரச உயர் அதிகாரிகள் பல்வேறு வழிகளில் இதில் தலையிடுகின்றனர். எனவே, இவற்றில் பூரண சுதந்திரம் இருப்பதை நான் ஆதரிக்கிறேன். விருத்தியடைந்த முதலாளித்துவ நாட்டின் தனியார் நிறுவனங்களுக்குள் தனிப்பட்ட உற்பத்தி அலகுகளுக்கு இருப்பது போன்ற சுதந்திரம் இவர்களுக்கும் இருக்க வேண்டும். அடிப்படையான நிதி இலக்குகளைப் பெரிய நிறுவனங்களின் தலைமையகங்கள் நிர்ணயித்த போதும், உப அலகுகளின் முகாமையாளர்கள் பெரும்பாலான தீர்மானங்களை மேற்கொள்ளும் சுதந்திரத்தைக் கொண்டுள்ளனர்.

2. விற்பனை விலையினை நிர்ணயிக்கும் உரிமை அரசநிறுவனத்தினது இயக்குநரின் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும். சந்தைப் பொருளாதாரங்களில் பொருட்களினதும் சேவைகளினதும் விலைகளை உற்பத்தியாளரே நிர்ணயிப்பது போன்று, அரச நிறுவனமே அதாவது, உற்பத்தியாளனே அவற்றை நிர்ணயிக்க வேண்டும். விற்பனையாளன் என்ற வகையில்

கொள்வோருடன் (அரச நிறுவனம் அல்லது தனிப்பட்டோர்) அவ்விலைகள் தொடர்பாக உடன்படிக்கை செய்யும் சுதந்திரம் இதற்குப்பக்கத்துணையாகவிருக்கும்.

நியாயப்படுத்தப்படக்கூடிய சந்தர்ப்பங்களில் மட்டுமே அதிகாரிகள் விலைகளை நிர்ணயிக்கலாம் ஆயினும், சுயேச்சையான விலை நிர்ணயமென்ற பொதுவிதிக்கு புறநடைகளாக மட்டுமே இவை இருக்கலாம்.

அரச நிறுவனத்தினது சுதந்திரத்தைக் கட்டுபடுத்த வேண்டிய சில சந்தர்ப்பங்களை இப்பொழுது நோக்குவோம்.

3. அரசவங்கித் துறையானது அரசதுறைக்குக்கடன் கொடுத்தல் கட்டுப்படுத்தப் படவேண்டும்; இறுக்கமான பணக்கட்டுப்பாடு அமுலாக்கப்படவேண்டும்; எந்த விதமான நெருக்கடிகளுக்கும் அது அடிபணியக்கூடாது.

4. அரச திறைசேரிக்கும் அரசஉடைமை நிறுவனங்-களுக்குமிடையிலான தொடர்புகளில் இறைக்கட்டுப்பாடு இருத்தல் அவசியம். நட்டத்திலியங்கும் அரச நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்குவதை முடிவிற்குக் கொண்டுவருதல் பற்றி 2-ம் அத்தியாயத்தில் விரிவாக ஆராய்வோம். அதுவரை காலமும் நட்டத்திலியங்கும் நிறுவனங்களுக்கு நட்டஈடு அளிக்கும் வழக்கத்தின் மீது இறுக்கமான எல்லைகள் விதிக்கப்படுதலை மட்டும் இங்கு நான் வலியுறுத்த விரும்புகிறேன். வரிகள் திரட்டப்பட வேண்டும், பொதுவாகத் திறைசேரிக்கும் அரசஉடைமை நிறுவனங்-களுக்குமிடையிலான பேரம் பேசலுக்கு முற்றுப் புள்ளியிட வேண்டும்

5. அரச நிறுவனங்களினது வேதனக் கொள்கைகளைத் தாராளப் படுத்தக்கூடாது. வேதனங்களை நிர்ணயிப்பதில் அரச நிறுவனங்களுக்குப் பூரண சுதந்திரம் இருக்க வேண்டுமென்ற பரவலான கருத்திற்கு இது முரணானது என்பது தெளிவு. மேற்படி எனது கருத்திற்கான நியாயங்களை இந்நூலில் ஆங்காங்கே காணலாம்.

6. கட்டுப்பாடற்ற ஓர் அரச நிறுவனம் வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய போரிண்டை எப்படியேனும் பெறலாமென்ற நம்பிக்கையில் இறக்குமதிகளுக்காக அதிகளவில் செலவு செய்யும் ஆபத்து உண்டு. இது தொடர்பான எனது கருத்துக்களை இரு மாற்று வழிகளில் கூறமுடியும்.

(அ) 2-ம் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்ட உறுதியாக்கல் நடவடிக்கையினைப் பூர்த்தி செய்தல், அரச நிறுவனங்களுக்கான கடன் நிரம்பல் மீதான கட்டுப்பாடுகளை இறுக்கமாக அமுலாக்கல், ஓர் உண்மையான மாற்று விகிதத்தில் போரின்டினது மாற்றக்கூடிய

தன்மையினை உறுதிசெய்தல் என்ற மூன்றையும் வெற்றிகரமாக நிறைவேற்றினால் மட்டுமே, அரச நிறுவனங்கள் வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்வதன் மீதான கட்டுப்பாடுகளை நீக்க முடியும். அதுவரை, அரச நிறுவனங்களுக்கு மட்டுப்படுத்திய அடிப்படையில் போரின்டைக் கிடைக்கச் செய்வதன் மூலம், வெளிநாட்டு நாணயங்களுக்கான கேள்வியையும் கட்டுப்படுத்தலாம்.

(ஆ) மேலே (அ) வில் கூறிய நிலைமைகள் பூர்த்தி செய்யப்படாவிடின், அரசஉடைமை நிறுவனங்களின் வெளி நாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் நேரடி நிர்வாக வழிகளின் மூலம் கட்டுப்படுத்தப்படவேண்டும்.

7. தனது சொந்தச் சேமிப்புக்களைக் கொண்டோ, வங்கிக் கடன்களைக் கையாண்டோ, முதற்சந்தையில் பெறப்பட்ட நிதிகளைக் கையாண்டோ நிதிப்படுத்தக்கூடிய முதலீட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தவரை, அரச உடைமை நிறுவனத்திற்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். எனினும், அம் முதலீடுகளை நிதிப்படுத்துவதில் மத்திய, அல்லது உள்நாட்டு அரச பாதீடும் பங்கு கொண்டிருக்குமாயின், அல்லது அக்கடன்கள் அரச உத்தரவாதம் கொண்டதாக இருக்குமாயின் அந்நிதியினை வழங்கும் அரச நிறுவனத்தை மேற்பார்வை செய்யும் சட்ட அமைப்பினது (பாராளுமன்றம் அல்லது உள்நாட்டுச்சபை) அனுமதியின் பேரிலேயே அது மேற்கொள்ளப்படவேண்டும். முதலீட்டு அமுலாக்கம் அரசாங்கங்களுக்கிடையிலான உடன்படிக்கைகளினடிப்படையில் மேற்கொள்ளப்படுமாயின், பாராளுமன்ற அங்கீகாரமும் இதற்குத் தேவைப்படும். உறங்கேரியின் பங்கெடுப்புடன் கூடிய சோவியத் யூனியனிலான சைபீரியக் குழாய்வாயுத் திட்டம் போன்ற மோசமான முதலீட்டுத் திட்டங்களில் பாரிய நட்டங்கள் எதிர்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய தவறான அணுகுமுறைகளினால் இன்றைய, வருங்கால சந்ததியினரைப் பலியிட முடியாது. ஒரு முதலீடு நட்டம் தரக்கூடிய ஒன்றாகவோ, வேறு வழிகளில் ஆபத்து நிறைந்ததாகவோ இருக்குமாயின், அதனைக் கைவிடவேண்டும். அரச நிதிகளைச் செலவிட முன்னரும், அது தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளில் கைச்சாத்திட முன்னரும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அதுபற்றி பொறுப்பு மிக்க தீர்மானங்களை மேற்கொள்ள அவர்களுக்கு உரிமை வழங்க வேண்டும்.

8. அரசஉடைமை நிறுவனங்களினது முகாமையாளருக்கு அவற்றை விற்கும் உரிமை இல்லை. இது உடைமையாளரின் ஓர் உரிமையாகும்; முகாமையாளன் ஓர் ஊழியனேயன்றி உடைமையாளனல்லன். இது பற்றிப் பின்னர் விரிவாக ஆராயப்படும்.

1-ம், 2-ம் விடயங்களில் கூறப்பட்ட சுதந்திரங்களும், 3 தொடக்கம் 8 வரையிலான மேற்படி சுதந்திரங்களின் மீதான வரையறைகளும் மட்டும் அரச நிறுவனங்களினது திறமையான செயற்பாட்டை உறுதிப்படுத்துமென்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. இந்த விடயத்தில் வாசகர்களை ஏமாற்ற நான் விரும்பவில்லை. அரச நிறுவனங்கள் பொருளாதாரத்தில் அதிமுக்கிய உடைமைமுறையாக இருக்கும் வரையில் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்க வேண்டியனவாக உள்ளன. அவற்றினது திறனை உயர்த்துவதற்கு அதிசய மருந்துகள் எதுவுமில்லை. அதேவேளையில், அரசதுறையினது திறமையின்மை பற்றி எவரும் வாளாவிருக்கவும் முடியாது. மேலே நான் கூறிய அறிவுரைகள் அவற்றினது திறமையனைத்தையும் ஓரளவு குறைக்கக்கூடும். மேற்படி செயல்முறையினை நியாயப்படுத்தும் வேறு காரணங்களும் உள. அவற்றுள் இரண்டை இங்கு நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

தனியார் துறையினைப் பாதுகாத்தல் இன்றியமையாததாகும். நாட்டினது வரையறுக்கப்பட்ட சாதனங்களைத் தனியார் துறையினரும் அரசதுறையினரும் உபயோகிக்க விரும்புகின்றனர். ஆனால், சாதனங்களைப் பெறுவதிலான போட்டியில் அவர்களது வாய்ப்புக்கள் சமமானவையன்று. அரசதுறை மென்மையான பாதீட்டு வரையறைகளுக்குட்பட்டுப் பழக்கப்பட்டு விட்டதால், சாதனங்களுக்கான அதனது பசி தணிக்க முடியாததாகவுள்ளது. ஆனால், இறுக்கமான பாதீட்டு வரையறைகள் தனியார் துறையின் சாதனங்களுக்கான கேள்வியினைத் தணிக்கின்றன. வங்கிகளுடனும் அரச அதிகாரிகளுடனும் அரச நிறுவனங்கள் எப்போதும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. சாதனங்களைப் பெறுவதில் அவற்றினது பாரிய அளவும் சாதகமாக அமைகின்றது என்பதை இங்கு வலியுறுத்தத் தேவையில்லை. எனவே, சாதனங்களைத் தன்பால் அதிகளவில் ஈர்க்கும் அரச நிறுவனங்களினது இயல்பான தன்மையினால் தனியார் துறை ஒதுக்கப்படுவதினின்றும் அதனைப் பாதுகாக்கும் முகமாக அரச நிறுவனங்கள் கட்டுப்படுத்தப் படவேண்டும். அரச நிறுவனங்களுக்கான கடன்கள், அவற்றினது வேதனங்கள் என்பன கட்டுப்படுத்தப்படுவதோடு, அவற்றினது முதலீடுகளும் மேற்பார்வை செய்யப்படவேண்டும். இரு துறைகளுக்குமிடையிலான சாதனப் பங்கீட்டை அரசியல், பொருளாதார சக்திகளின் சுதந்திரமான நிர்ணயிப்பிற்கு விடுவதை, தனியார் துறையினது அபிவிருத்தியில் அக்கறை கொண்ட எவருமே அனுமதிக்க முடியாது.

இரு துறைகளுக்குமிடையில் சமமான போட்டி என அடிக்கடி கூறப்படும் சுலோகத்தினை ஆதரிப்பவனல்ல நான். மாறாக, தேசிய பொருளாதாரத்தின் எல்லாத்துறைகளும் சமமாக மதிக்கப்படக்கூடாது

என ஐயப்பாட்டிற்கிடமின்றி வாதிட நான் தயாராகவுள்ளேன். அரச நிதிகளைச் செலவிடுவோர் சொந்த நிதிகளில் தங்கியிருப்போருக்கு இருக்கும் அதே உரிமைகளைக்கோர முடியாது. தனது சொந்தப் பணத்தைச் செலவிடுபவன் ஓர் அடிப்படை மனித உரிமையினை அனுபவிக்கின்றான். ஆனால், அரச பெட்டகத்திலிருந்து வரும் பணத்தைச் செலவிடும் அரசதுறையின் மீது இறுக்கமான கட்டுப்பாடு விதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது. “தனியார் துறை மீது கை வைக்காதே” என்பது எந்தளவிற்கு நியாயமனதோ, அந்தளவிற்கு அரச துறையின் மீது இறுக்கமான கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டுமெனக் கோருவதும் நியாயமானதேயாகும்.

தனியார் துறை மீதான பணிக்குழுவாட்சியின் கட்டுப்பாடும் அரச துறையினைத் தாராண்மைப்படுத்தலும் மேற்படி கருத்திற்கு மாறானது என்பது கவனிக்கப்படவேண்டும். இன்றைய கொள்கைகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப் படுவதோடு, அவற்றை விரிவுபடுத்தவும் வேண்டுமென்ற பொருளியலாளரதும் அரசியல்வாதிகளதும் கருத்துக்களுக்கு எனது கருத்து மாறுபட்டதாகும். தனியார் துறை மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் அதேவேளையில், அரசஉடைமை நிறுவனங்கள் தாராண்மைப் படுத்தப்படுவதை உறுதி செய்யவும் அவர்கள் விழைகின்றனர்.

அரச துறையினைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையினை நியாயப்படுத்தும் இரண்டாவது முக்கிய நோக்கம் பேரினப்பொருளாதார உறுதியாக்கலாகும். அரச சாதனங்களைப் பயன் படுத்துவது தொடர்பான முதலீட்டுத் தீர்மானங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்படுவது போன்று, இறைக்கட்டுப்பாட்டையும் வேதனக்கட்டுப்பாட்டையும் இறுக்கமாக அமுலாக்கல் தவிர்க்க முடியாதது என்பது 2-ம் அத்தியாயத்தில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. மேற்படி பகுதியில் எதிர்கால ஹங்கேரிய பாராளுமன்றத்தினது பங்கு பலமுறை கூறப்பட்டுள்ளது. எதிர்கால ஹங்கேரிய பாராளுமன்றத்திற்கும், எதிர் காலத்தில் ஹங்கேரி எவ்வாறு இருக்கவேண்டுமென்பது பற்றிய அரச துறைப் பொருளாதாரத் திட்டங்களை வரையும் பணிக்குழுவுக்குமிடையே எவ்வித தொடர்பு இருக்க வேண்டுமென்பது பற்றி இங்கு நான் ஆராய விரும்பவில்லை. இத்தொடர்பினை நிர்ணயிப்பதில் திட்டமிட்ட பொருளாதாரத்தின் கீழ் முன்னணி அரசியல் தாபனங்களுக்கும் , கீழ்மட்டப் பொருளாதாரத் தாபனங்ககளுக்குமிடையே காணப்பட்ட தொடர்புகளினின்றும் நாம் பெற்ற அனுபவங்கள் (பேரம்பேசல், தகவல் திரிபுபடுத்தல் என்பன) கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அபிவிருத்தியடைந்த பாராளுமன்ற சனநாயகங்களினது அனுபவங்களின் நன்மை தீமைகளும் (இந்நாடுகளில் பாராளுமன்றத்திற்கும் அரசபணிக் குழுவிற்குமிடையிலான தொடர்புகள்) சீர்தூக்கிப் பார்க்கப்படவேண்டும். அதேவேளையில், ஹங்கேரியினது எதிர்காலப் பாராளுமன்றம்

எதிர்நோக்கவிருப்பது போன்று, இதுவரை எந்தவொரு பாராளுமன்ற சனநாயகமும் மிகப்பெரிய அரசதுறையொன்றினை எதிர் நோக்கவில்லை என்பதையும் நாம் ஏற்கவேண்டும். எமது எதிர்காலப் பாராளுமன்றம், பணிக்குழுவினது தீர்மானங்களை வெறுமனே ஏற்கும் ஒன்றாக இருப்பதையும், முடிவிலாப் பாராளுமன்ற விவாதங்கள் காரணமாக அரச துறை செயலிழப்பதையும் தவிர்க்க விரும்புவோமாயின், பாராளுமன்றத்திற்கும் அரசதுறைக்குமிடையே ஒத்துழைப்பினை ஏற்படுத்த முயலுவது தவிர வேறு வழியில்லை. இது தேவையற்ற தலையீட்டையும் எல்லையற்ற தாராண்மையையும் தவிர்க்கும். ஒவ்வொரு அரசியல் தாபனமும் ஒரு சிறு நிபுணர் குழுவினை வைத்திருத்தல் அரசதுறையின் அன்றாட நடவடிக்கைகளில் தேவையின்றித் தலையிடாத அதேவேளை உண்மையான கட்டுப்பாட்டினைச் செலுத்தவும் உதவும்.

அரசநிர்வாகத்திற்கு ஒரு செயற்றிறன் வாய்ந்த எதிர்த்தளமாக அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழன்றி, பாராளுமன்றத்தின் மேற்பார்வையின் கீழிருக்கும் சில தாபனங்களை உருவாக்குதல் வேண்டும். ஏற்கனவே இது ஆரம்பமாகிவிட்டது. அரசதாபனங்களினது செலவீடுகளைக் கண்காணிப்பதற்கென ஏனைய பாராளுமன்ற சனநாயகங்களைப் பின்பற்றி ஓர் அரச கணக்குப்பரிசோதகர் செயலகம் தாபிக்கப்பட்டுள்ளது. இப்புதிய தாபனம் பாராளுமன்றத்தால் மேற்பார்வை செய்யப்படும்; மத்திய வங்கியும் உறங்கேரியினது தேசிய வங்கியும் கூடப்பாராளுமன்றத்தினது கட்டுப்பாட்டின் கீழிருத்தல் நடைமுறைக்கேற்றதாகும். அரசாங்க இயந்திரத்தின் கட்டுப் பாட்டிற்குட்படாத வேறுபல தாபனங்களும் தேவைப்படலாம்.

எதிர்கால உறங்கேரிய பாராளுமன்றத்திடமிருந்து நாம் அதிகம் எதிர்பார்க்கக் கூடாது. பாராளுமன்ற உறுப்பினரும் அதற்குப் பொறுப்பான தாபனங்களும் தமது கடமைகளைத் திறமையாக ஆற்றுவதற்கு ஒரு சேதனமுறையான அபிவிருத்தியும் நீண்டகால அறிவுதிரட்டலும் தேவைப்படும். குறிப்பாக இந்தக் காலப்பகுதியிலும் அதற்குப் பின்னரும் கூட அரசதுறையினைக் கண்காணிப்பதில் பத்திரிகைகளும் பொதுசன அபிப்பிராயமும் பெரும் பங்கினைக்கொண்டிருக்கும் என்பதை இது குறிக்கின்றது. அரசஉடைமை நிறுவனங்களினது வியாபார விளைவுகள் (இலாபங்கள் அல்லது நட்டங்கள்) இரகசியமாக வைக்கப்படக்கூடாது. அவற்றிற்கான செலவினை இறுதியாக ஏற்போரான நாட்டுமக்கள் அவற்றை அறியுமாறுசெய்தல் வேண்டும்.

அரசஉடைமையினது பணிக்குழுப் பண்பு பற்றி மேலே கூறியவற்றினின்றும், அரச சொத்துக்களை உண்மையாகவே தனியார் கைகளுக்கு மாற்றாது வேறுபட்ட சட்டவடிவங்களில் (உதாரணமாக,

பங்குகளை மாற்றுதல்) வேறொரு அரசஉடைமைத்தாபனத்திற்கு, அல்லது நிறுவனத்திற்கு மாற்றும் "சொத்துச்சீர் திருத்தம்" சந்தேகத்திற்குரியது என்பது தெளிவாகும். அதேபோன்று, அரச முதல் சந்தை என்பதும் சந்தேகத்திற்குரியதே. அது ஹங்கேரிய சீர்திருத்த நடவடிக்கைகளனைத்திலும் பரிகாசத்திற்குரிய ஒன்றாகும். கடந்த தசாப்தங்களில் இப்படியான பல போலிச் சீர்திருத்தங்கள் மலிந்து காணப்பட்டன. இன்று நாம் காணுவதும் இவ்வித போலியான மாற்றங்களேயாகும். அரசினது பணத்தைச் செலவிடும் அதிகாரம் கொண்ட ஒரு தாபனம் அதனைப் பொறுப்பின்றிச் செலவிடுவதை நாம் கண்டுள்ளோம். இதற்குப் பரிகாரமாக, அந்த அதிகாரம் வேறொரு அரச தாபனத்திற்கு மாற்றப்படும் போது, அந்தக் தாபனமும் அதனைப் பொறுப்பற்ற முறையில் செலவிடுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

நான் கண்டு கவலை கொள்ளும் மாற்றங்கள் பலவாகும். இவற்றுள் ஒன்று, ஹங்கேரிய மொழியில் குறுக்கு உடைமை எனக் கூறப்படுகின்றது. இதன்படி, ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அரசஉடைமை நிறுவனங்களோ வேறொரு அரசஉடைமை நிறுவனத்தினது கூட்டுஉடைமையாளராக மாறுகின்றன. அரசஉடைமை வணிக வங்கிகள் வேறு அரசஉடைமை நிறுவனங்களோடு இணைதல் இன்னொரு மாற்றமாகும். ஒன்றில் வங்கி அரசஉடைமை நிறுவனத்தினது பங்குகளைக் கொள்வனவு செய்கின்றது அல்லது அரசஉடைமை நிறுவனம் வங்கியின் ஒரு பங்குதாராராக மாறுகின்றது. தாபனரீதியான உடைமை என்பது இன்னுமொரு மாற்றமாகும். இத்திட்டத்தின் கீழ் ஓர் அரசஉடைமை காப்புறுதிக் கம்பெனியோ, நகரசபையோ ஓர் அரசஉடைமை நிறுவனத்தினது பங்குகளைக் கொள்வனவு செய்கின்றது.

மேற்படி மாற்றங்கள் ஒரளவு அறிமுகம் செய்யப்பட்டுள்ளதோடு, அவை பெருகியும் வருகின்றன. ஹங்கேரிய சீர்திருத்தம் பற்றிய நூல்கள் இம்மாற்றங்களையும் அவற்றினது பெருக்கத்தையும் ஆதரிக்கின்றன. இப்போக்கு கருத்து மட்டத்திலும், அறிவுசார் விவாதத்திலும், நடைமுறையிலும் எந்தளவு வலுவடைந்துள்ள பொழுதும் இதனை எதிர்ப்பதற்கு நான் தயங்க மாட்டேன். இவ்வித போலியான செயல்களை நான் மட்டுமன்றி, வேறு பலரும் வெறுக்கின்றார்களென்பதை இங்கு குறிப்பிடவேண்டும். இவ்வித நடவடிக்கைகள் பலவற்றை நாம் ஏற்கனவே மேற்கொண்டுள்ளோம். அரசஉடைமை நிறுவனமொன்று இலாப உச்சப்படுத்தும் நிறுவனம் போன்று செயற்பட முயலுதல், போட்டி நிலையிற்போன்று பணித்துறையினது கைத்தொழிற் கொள்கைகளினூடாகப் பல்வேறு உற்பத்தித் துறைகளின் உற்பத்தியினை ஒழுங்குபடுத்த முயலுதல், சந்தையொன்றில் விலை நிர்ணயிக்கப்படுவது போன்று விலைக் கட்டுப்பாட்டுச் செயலகம் விலைநிர்ணயிக்க முயலுதல்

போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம். இதேபோன்றே கூட்டுமுதல் கம்பெனிகள், முதல் சந்தை, பங்குச்சந்தை என்பவற்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவையனைத்தும் சேர்ந்து ஹங்கேரியில் செயற்கையான கனவுலகம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளன. உலகவங்கியிலிருந்தோ, சர்வதேச நாணய நிதியிலிருந்தோ குறுகியகாலங்களுக்கு மட்டும் இங்கு வருகைதரும் வெளிநாட்டினர் இதைக் கண்டு மயங்கி விடுகின்றனர். தமக்கு நன்கு பரிச்சயமான வங்கிகள், கூட்டுப் பங்குக் கம்பெனிகள், பங்குச்சந்தை என்பன இங்கும் இருப்பதைக் கண்டு உவகை யுறுகின்றனர். உண்மையிலேயே இங்கு நடப்பது ஒரு வித தனியுரிமை விளையாட்டே. ஆனால், இச்சூதாட்டத்தில் கலந்துகொள்வோர் நன்கு முதிர்ச்சியடைந்த அரச அதிகாரிகளாகவிருப்பதோடு, இச்சூதாட்டத்தில் அவர்கள் கையாளும் பணம் உண்மையான அரச நிதிகளேயன்றி கடதாசிப் பணமல்ல.

இவ்விடயம் பற்றிக் கலந்துரையாடும் போது, இன்றைய முதலாளித்துவ உலகைச் சற்று நோக்குவோமாயின், அங்கும்கூட பெரும்பான்மைப் பங்குகள் வேறு நிறுவனங்களின் கையிலிருக்கும் கூட்டுப்பங்குக்கம்பெனிகள், காப்புறுதிக் கம்பெனிகள், இலாபமீட்டாத தாபனங்கள் (உ+ம் ஓய்வூதிய நிதிகள், பல்கலைக் கழகங்கள்) போன்றனவற்றை நாம் காணக்கூடியதாக உள்ளது என்ற எதிர்வாதம் முன்வைக்கப்படுகின்றது. இத்தனியாரைச் சாராத உடைமைகளின் விகிதாசாரம் சமகால முதலாளித்துவ நாடுகளோடு ஒப்பீட்டு அடிப்படையில் உறங்கேரியில் குறைவாக இருக்கவேண்டுமென எதிர்பார்ப்பது ஏன்?

வரலாறு என்பது நினைத்த மாத்திரத்தில் நிறுத்தக் கூடியதும், விரும்பிய நேரத்தில் வேகமாகவோ மெதுவாகவோ ஓடவிடக்கூடியதுமான ஒரு படச்சுருளன்று. சோஷலிச அரசஉடைமை என்பது சொத்தினை 100 வீதம் தனிநபர் சாராததாக ஆக்குதலாகும். இவ்விகிதாசாரத்தைப் படிப்படியாக 95, 90, 85 வீதமாகக் குறைக்கும் வகையில் பின்தள்ள முடியாது. இச்சுருளை முற்றாக மீளச்சுற்றிய பின்னரே ஆரம்பித்தலிருந்து ஒட்டலாம். முதலாளித்துவ உலகின் கடந்தகால, நிகழ்கால அபிவிருத்திகளை நாம் சற்று நெருக்கமாக நோக்குவோம். இன்றைய ஹங்கேரியில் தனியார் துறை பற்றிய ஆய்வில் நாம் ஏற்கனவே இதுபற்றி ஆராய்ந்துள்ளோம். பல நூற்றாண்டு கால முதலாளித்துவ அபிவிருத்தி இயக்கப்பாடுகளைச் சுருக்கமாக ஆராய்வதன் மூலம் இதனை நோக்குவோம்.

எல்லா நாடுகளிலுமே முதலாளித்துவ அபிவிருத்தியின் முதலாவது இயந்திரம் தனிப்பட்ட முயற்சியாளர்களாவர். சிற்றளவு வியாபாரிகளாக விருந்து திறமை, அல்லது அதிர்ஷ்டம் காரணமாக அடுத்தடுத்து வரும்

தலைமுறைகளில் முதல் திரட்டியோரே இவர்கள். முயற்சியாளர் வருவதும் போவதும் சகஜம்; சிலர் நீடித்து நிலைக்க வேறு சிலர் முடங்கி விடுகின்றனர். ஒரு சிலர் சிறிய கடைக்காரர்களாகவோ, நடுத்தர ஆலை உடைமையாளர்களாகவோ நிலைத்து விட, வேறு சிலரது முயற்சிகள் மாபெரும் கம்பெனிகளாக மாறிவிடுகின்றன. இதேவேளையில், தனிநபர் சாராத முதலைப் பெறுவதும் தொடர்ந்து நடைபெறுகின்றது. இம்முதலானது வங்கி வைப்புக்களாகவோ, பங்குகளாகவோ தமது சேமிப்பை வைப்போருக்கு உரியதாகும். உடைமை உறுதியடைந்து, அதனோடு தொடர்பான அடிப்படைச் சட்டவமைப்புக்கள் அபிவிருத்தியுற்று நியாயமான வியாபார முகாமையினது ஒழுக்க விழுமங்கள் வளர்ச்சியுறும் போது பல்வேறு வித தனியாரிடமிருந்தல்லாத முதலீடுகளும் கூடவே விரிவடையுமென நாம் எதிர் பார்க்கலாம். இந்நிலையில் அரசு சிறந்த வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவோனாகச் செயற்படும்.

இறுதியாக நோக்குமிடத்து, இத்தாபன ரீதியான முதலீட்டு அமைப்புக்களின் பின்னால் உடைமையாளரின் நலன்கள் முதலீடுகளின் நடத்தையைக் கட்டுப்படுத்தும். தனக்கெனச் சொந்தப் பாரம்பரியங்களையும் உண்மையான சுய ஆட்சிக்கான உறுப்புக்களையும் கொண்ட பல்கலைக்கழகம் அல்லது மன்றம் போன்று ஓரளவு பலம் வாய்ந்த ஒரு தாபனம் இதற்குப் பின்னணியிலிருக்கலாம். இந்நிறுவனம் நிதிவிடயங்களில் தன்னிச்சையானதாகவும், அரசினது சலுகை ஆதரவைப் பெறாததாகவும் இருப்பதால், முதலீடுகள் இலாபந்தருவதை உறுதிப்படுத்தும் வகையில் அது கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கும். தனியாரல்லாத முதலீடுகளின் விகிதாசாரமும் இச்செயற்பாட்டின் ஒரு சார்பாகவே வளர்ச்சியடையும்.

மேலே கூறியவற்றைத் தெளிவுபடுத்தும் வகையில் இரு கருத்துக்கள் இங்கு கூறப்படவேண்டியுள்ளன. ஒன்று, அந்தநிறுவனம் உண்மையிலேயே புதிய ஒன்றாக இருக்குமாயின், அது தனியாரிடமிருந்தல்லாத ஒரு முதலீடாகவிருப்பது அபூர்வமே. கடந்த ஐம்பது ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட முக்கியமான புதிய பொருட்கள் தனிப்பட்ட முயற்சியாளரின் முயற்சியால் அல்லது சொந்தப் பணத்தினின்றும் புதிய கண்டுபிடிப்புக்களை நிதிப்படுத்திய ஒரு குழுவினரின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டனவாகவிருத்தலே உண்மையாகும். இராணுவ அபிவிருத்தி, அடிப்படை அமைப்பு சார்ந்த பாரிய திட்டங்கள் என்பன தொடர்பான கண்டுபிடிப்புக்கள் மட்டுமே இதற்கு விதிவிலக்காகும். ஒரு புதிய விமானத்தளத்தினை அமைப்பதற்கான நிதியினைத் திரட்டுவதும் அது தொடர்பாக உள்நாட்டு அதிகார சபைகளுடன் கூட்டுச்சேரலும் மத்திய அரசாங்கமே மேற்கொள்ள வேண்டுமென எதிர் பார்ப்பது இயல்பானதே. ஆனால்,

உண்மையிலேயே ஏதாவது புதிய ஒன்று புகுத்தப்படும் போது, அது இவ்வித தாபனத்தினால் மேற்கொள்ளப்படுவது குறைவு. ஒரு சந்தையில் அல்லது புதிய கைத்தொழிற் கிளையில் முன்னோடிகள், ஒரு புதிய பொருளிலிருந்து பெரும் இலாபத்தினைப் பெறுவதே வழமையான ஒரு நிகழ்வாகும். முயற்சி தோல்வியடையுமாயின், இவர்களே நட்டத்தையும் தாங்கிக்கொள்கின்றனர். மிக உயரிய இலாபத்தினை எதிர் நோக்கி முதலீடு செய்ய முன்வரும் வெளிப்புறத் தனியார்களின் முதலீடுகளினால் ஆரம்ப முயற்சியாளரின் இந்த முதல் ஈடுசெய்யப்படும்.

இரண்டாவது கருத்து உண்மையிலேயே ஒரு வினாவாகும்; சமகால முதலாளித்துவத்தில் சொத்து எந்தளவிற்குத் தனிநபர் சாராததாக உள்ளது என்பது உறங்கேரிக்கு ஏன் வழிகாட்டியாகக் கருதப்படவேண்டும்? ஐப்பானில் தாபனரீதியான உடைமை 42 வீதமாகவும் அமெரிக்காவில் அது 37 வீதமாகவும் (இவை கற்பனையானவை) இருக்குமாயின் இதே வீதங்களை நாமும் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டுமா? மேற்கு நாடுகளிற்கூடச் சொத்தினைத் தனிநபர் சாராததாக்குதல் குறை கூறப்படுகின்றது. மேற்படி கண்டனங்கள் சரியானவையே. இன்றைய முதலாளித்துவத்தில் சோஷலிசத்திற்கான வித்துக்களும் இருக்கவே செய்கின்றன. காப்புறுதித் தொழில், சுகாதார சேவைகள், வங்கித் தொழில் என்பவற்றில் உடைமை பெருமளவிற்குத் தனியார் சாராததாக உள்ளதென நம்புவோர் பலர் உள்ளனர். அமெரிக்காவில் வீடமைப்புத் திட்டங்களை நிதிப்படுத்துவதில் சிறக்குமியல்பு பெற்ற சேமிப்பு, கடன் சங்கங்களைப் பொறுத்தவரை, பாதீட்டுக் கட்டுப்பாடுகள் இலகு படுத்தப்படுவதை நாம் காணலாம். நம்பத்தகாத ஒப்பந்தக்காரர்களுக்குப் பெருமளவு கடன்களைக் கொடுப்பதன் மூலம் வைப்பாளர்களினது நம்பிக்கையைத் துஷ்பிரயோகம் செய்தமையால், இச்சங்கங்களுட் பல ஏற்கனவே முறிவடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. ஒரு ஹங்கேரியப் பொருளியலாளனுக்கு இது ஒன்றும் புதுமையானதல்ல. சொந்த நிதியினைக் கையாண்டு, இச்சங்கங்களை மீட்பது அரசினது பொறுப்பாகிவிட்டது. வைப்பாளர் இச்சங்கங்களினின்றும் தமது வைப்புக்களை மீட்க முயலுவதன் காரணமாக அவை முறிவடையநேரும் போது, 1929-ம் ஆண்டுப் பொருளாதாரப் பின்னடைவு போன்ற மோசமான நிதி நெருக்கடிகளுக்கு அது வழி வகுக்கக் கூடும். இப்படியானதொரு வழியினை நாமும் பின்பற்றத் தேவையில்லை. ஆரம்பந்தொட்டே இச்சங்கங்களின் மீது இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் அரச உறுதிப்படுத்தலுக்கான நிபந்தனைகள் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்க வேண்டுமென்றும் பல அமெரிக்கப் பொருளியலாளர்கள் கருதுகின்றனர். கடந்த சில தசாப்தங்களில் அரசு தயாளப் போக்கினைக்

கொண்டிருக்க வேண்டுமென்பதில் அசையாத நம்பிக்கை இங்கு வேரூன்றியுள்ளமையால், இவ்வாறான ஒரு முறையினைப் பின்பற்றாதிருக்க ஹங்கேரி போன்ற ஒரு நாடு விசேட கவனம் செலுத்தவேண்டும்.

இப்பொழுது நாம் அரசஉடைமை நிறுவனங்களின் முகாமையாளரது வேதனங்களைச் சுருக்கமாக நோக்குவோம். ஓர் அரசஉடைமை நிறுவன முகாமையாளனது கௌரவமானது ஓர் இராஜதந்திரி, ஒரு நகரபிதா, அல்லது ஓர் இராணுவத்தளபதியினது கௌரவத்திற்கு எவ்வகையிலும் குறைந்ததல்ல எனக் கருதுபவன் நான். ஆனால், அவன் ஒரு வியாபாரியல்ல, தனது கடமையைச்சரிவரச் செய்தால் அவனுக்கு நல்ல வேதனம் அளிக்கப்படவேண்டும். ஆனால், அவ்வேதனங்கள் நம்பமுடியாதளவு உயர்வாக இருக்கக்கூடாது. நாடு பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றது என்ற ஒரு காரணத்தால் மட்டும் இதனை நான் எதிர்க்கவில்லை. நாடு செல்வங்கொழிப்பதாக இருந்தாற்கூட, அரசதுறை முகாமையாளனொருவன் அரச பாதீட்டினின்றும் வேதனம் பெறும் ஓர் உத்தியோகத்தனாகவே இருப்பான். தனிப்பட்டோரின் பணத்தை முகாமை செய்வதற்கு அனுமதிபெற்ற ஒருவனாக இருக்க மாட்டான். பிரதம மந்திரியினதும் இராணுவத்தளபதியினதும் வேதனத்தைப் பாராளுமன்றமே நிர்ணயிப்பது போன்று, அரசஉடைமை நிறுவன முகாமையாளரின் வேதனங்களுக்கும் அதுவே உச்சவரம்பை விதிக்க வேண்டும்.

முன்னரே குறிப்பிட்டது போன்று, சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக ஹங்கேரி ஓரளவு பன்முகப்படுத்தப்பட்டுள்ளமை, அரசஉடைமை நிறுவனங்களின் முகாமையாளரிடையே உண்மையான வியாபாரிகளின் சில பண்புகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த அபிவிருத்திகள் அவர்களது நிதி, ஒழுக்க ஊக்குவிப்புக்களிலும் பிரதிபலிக்கப்பட வேண்டுமென்பது நியாயமானதே. குற்றவாளிகள் மொத்தமாக எத்தனை ஆண்டுகள் சிறைச்சாலையில் கழிக்கின்றார்களோ அதற்கு விகிதாசாரமாக ஒரு சட்ட நிபுணனுக்கு ஊக்குவிப்பு போனஸ் அளிக்க வேண்டுமென எவரும் கூறமாட்டார்கள். ஆனால், அரசநிறுவனங்களது முகாமையாளருக்கு, அவர்களது வேதனத்திற்கும் மேலாக ஊக்குவிப்பு போனஸ் வழங்குவதை நியாயப்படுத்தலாம். எனினும், இவை மிதமானவையாக இருக்க வேண்டும். இன்றைய ஹங்கேரியில் காணப்படும் உருக்குலைந்த விலை, வரியமைப்பு என்பவற்றின் மத்தியில் "இலாபங்களின்" பொருளாதார ரீதியான வரைவிலக்கணம் சர்ச்சைக்குரியதாக உள்ளது. எனவே, அரசஉடைமை நிறுவன முகாமையாளருக்கு இலாபத்திற்கேற்ப போனஸ் வழங்கும் முகமாக, அவற்றை ஏதாவது சூத்திரத்தைக் கையாண்டு இலாபங்களோடு இணைப்பது, பொருளாதார ரீதியாக நியாயமாகத் தென்படவில்லை.

ஹங்கேரியின் எதிர்காலப் பாராளுமன்றம் அரச நிறுவனங்களது முகாமையாளரின் வேதனங்கள் மீது உச்ச வரம்பு விதிக்க வேண்டுமென நான் கூறும் போது, அதே போன்ற வரம்புகள் தனியார் நிறுவனங்களின் முகாமையாளர் மீதும் விதிக்க வேண்டுமெனக் கருதவில்லை. தனியார் நிறுவனத்தினது உடைமையாளன் ஒருவன் தனது ஊழியனுக்குச் சொந்தப் பணத்திலிருந்து ஒரு மில்லியன் போரின்டுகளைக் கொடுக்க விரும்பினால் அது அவனது விருப்பமே; அவ்வாறு கொடுப்பது தகுமா என்பது அவனுக்குத் தெரியும். ஆனால், கம்பெனியினது பணத்தைத் தான் விரும்பியவாறு எடுப்பதற்கோ, அப்பணம் அரசபாதீட்டினின்றும் பெறப்படுமாயின், அதனை ஏதேனுமொரு நிர்வாக அதிகாரம் அனுமதிக்கச் செய்யவோ எவருக்குமே உரிமையில்லை.

ஒரு பொருத்தமான உதாரணத்தை இங்கு பார்ப்போம். 1995ம் ஆண்டு உலகக்கண்காட்சியை ஹங்கேரி ஏற்று நடத்த வேண்டுமா என்பது பற்றி இன்று நாட்டில் ஒரு விவாதமே தோன்றியுள்ளது. இப்பிரச்சினை பாராளுமன்றத்திற்குச் செல்லவிருக்கின்றது. இது பற்றிய அரசாங்கத்தினது பிரேரணையின் மீது பாராளுமன்ற அங்கத்தவர்கள் வாக்குரிமையளிக்க வேண்டும்.

இப்பிரேரணையைக் கொண்டுவரும் அரசாங்க உத்தியோகத்தர்கள், குழு அங்கத்தவர்கள், அமைச்சு ஆணையாளர் ஆகியோர் தமது தனிநபர் சொத்துக்களை (தனிப்பட்ட வீடுகள், மேலதிக வீடுகள், கார்கள், கலைப் பொருட்கள் என்பன) இதற்குப் பிணைவைக்கவேண்டும். அப்பிரேரணையின் பின்னிணைப்பாக இச்சொத்துக்களின் விபரம் சேர்க்கப்படவேண்டும். இவற்றுள் எச்சொத்துக்களை மேற்படி பிணையினின்றும் ஒதுக்கிவைக்க விரும்புகிறார்களென்பதை நிர்ணயிக்கும் உரிமை அவர்களுக்கு இருக்க வேண்டும். ஆனால், பிணையாக வைக்கும் சொத்துக்கள் அவர்களுக்குப்-பெறுமதிவாய்ந்தனவாக இருத்தல் வேண்டும். இப்பிணைகள் அந்நபர் தனது ஆயுட்காலத்தில் திரட்டிய மொத்த செல்வத்தின் ஒரு கணிசமான பகுதியாக இருப்பதும் நல்லது.

கண்காட்சி எதிர்பார்த்த அளவிற்கு வெற்றியளிக்குமாயின், கண்காட்சி தொடர்பான மசோதாவினைக் கொண்டுவந்தோருக்குத் தாராளமாக போனஸ் கிடைப்பதை அது உறுதிப்படுத்த வேண்டும். அதே மசோதா, கண்காட்சி தோல்வியில் முடியுமாயின், குறிப்பிட்ட பிணைச்சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

அம்மசோதாவைக் கொண்டு வருவோர் தம் சொந்தச் சொத்துக்களை இழக்கும் ஆபத்தினை எதிர்நோக்க வேண்டிவருமென்பதை மேற்படி நிபந்தனைகள் அவர்களுக்குத் தெளிவாக்கும். இந்த

நிலைமைகளின் கீழ், அவர்கள் தமது மசோதாவைக் கைவிட முன்வருவார்களாயின், அதற்கான உரிமையும் அவர்களுக்கு இருக்கவேண்டும்.

எல்லா நாட்டு அரசாங்கங்களுமே ஒவ்வொரு சட்டவரைவிற்கும் இவ்வித முறையினைப் பின்பற்ற வேண்டுமென நான் கூறவில்லை. இன்றைய ஹங்கேரிக்கு மட்டுமே இது பொருந்தும். கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக கட்சி உத்தியோகத்தரும் அரச அதிகாரிகளும் தீர ஆலோசியாமலேயே பாரிய திட்டங்களின் மீது பெருமளவு போரின்டுகளைச் செலவிடும் தீர்மானங்களை மேற்கொண்டு வந்துள்ளனர். இத்திட்டங்கள் வெற்றியளித்திருக்குமாயின் நல்லதே. இவை தோல்வியடைந்திருக்குமாயின், மேற்படி உத்தியோகத்தர்கள் தமது பணத்தில் ஒரு சதத்தையேனும் இதற்காக இழக்கவில்லை. தீர்மானம் மேற்கொள்ளுவோரின் சொந்தப் பணத்திற்கும், அவர்கள் மேற்கொள்ளும் தீர்மானங்களுக்குமிடையே ஒரு இணைப்பினை ஏற்படுத்தவேண்டுமென்ற கருத்தை முன்வைக்கவே மேற்படி உதாரணம் தரப்பட்டது.

### 1.3 இரு துறைகளுக்குமிடையிலான விகிதாசாரத்தில் மாற்றம் :

### தனியார்மயப்படுத்தல்.

நாட்டினது மொத்த உற்பத்தியில் தனியார் துறை பெரும்பகுதிக்குப் பொறுப்பாகவிருக்கும் வகையில், அத்துறையினது விகிதாசாரத்தை அதிகரித்தல் விரும்பத்தக்கது. அபிவிருத்தியினதும் சமூக மாற்றத்தினதும் இணைந்த செயற்பாட்டின் மூலமே இதனைச் சாதிக்கலாம். இது ஒரு அண்மைக்காலப் போக்கன்று; இரண்டொரு தசாப்தங்களாகவே இது இழுபறிப்பட்டுவருகின்றது. பல நடைமுறைச் செயல்களின் மூலம் இதனைத் துரிதப்படுத்த வேண்டியது அவசியம்.

இது தொடர்பாக, “மீளவும் தனியார் மயப்படுத்தல்” என்ற சுலோகத்தை நான் விரும்பவில்லை. பிரித்தானியாவில் தேசியமயமாக்க வலையில் சிக்காதுவிட்ட தனியார் துறை தொடர்பான கொள்கைகளை அமுலாக்குவதில் மார்கரெட் தெச்சர் இச்சுலோகத்தினைக் கையாண்டிருக்கலாம். மேலும், நியாயமான சந்தைவிலையில் அரசதுறையினைக் கொள்வனவு செய்வதற்குப் போதுமான உள்நாட்டு முதல் பிரித்தானியாவிலுண்டு (எனினும், அங்கும் கூட மீளவும் தனியார்மயப்படுத்தல் பல சிக்கல்களை எதிர் நோக்குகின்றது என்பதைக்கூறி வைக்க விரும்புகிறேன்.)

ஹங்கேரியில் நாம் சாதிக்கக் கூடியன யாவை, தப்பெண்ணத்தை ஏற்படுத்தக் கூடியவை யாவை என்பதையும் இங்கு ஆராய்வோம்.

இரக்கம் காரணமாக அரச சொத்துக்களை எவருக்கேனும் வெறுமனே பங்கிடக்கூடாது. இவ்வித செயல்கள் அடிக்கடி நடைபெறவும் செய்கின்றன. உதாரணமாக, அரசஉடைமையான வீடுகளை அவற்றின் குடியிருப்பாளருக்கு உண்மையான சந்தைவிலையின் ஒரு சிறு பகுதிக்கு விற்றல் முற்றிலும் நியாயமற்றது. மேலும், இக்கொள்வனவு விலையில் ஒரு சிறு அளவை மட்டுமே குடியிருப்பாளர் வைப்பாக இடுமாறு கேட்கப்படுகின்றனர். அதே குடியிருப்பாளர்கள் ஏற்கனவே பல வருடங்கள் அல்லது தசாப்தங்களாகக் குறைந்த வாடகையில் அந்த வீடுகளில் குடியிருந்திருப்பார்களென்பதால் இது அர்த்தமற்ற ஒரு செயலாகும்.

அரசஉடைமை நிறுவனங்களைக் கூட்டுப்பங்குக் கம்பெனிகளாக மாற்றும் இன்றைய முயற்சியில் ஒரு தனிநபர் எத்தனை பங்குகளைப் பெறுகின்றார் என்பது பற்றியோ, இந்நிறுவனங்களின் முகாமையாளரும் வேறு ஊழியரும் எவ்வித அளவினைப் பெறுகின்றனர் என்பது பற்றியோ நான் அறியேன். ஒரு குறிப்பிட்டளவு முன்னுரிமையும் கழிவும் வழங்குதல் நியாயமானதே. எனினும், எவரொருவரும் அவர் அந்த நிறுவனத்தின் ஒரு முகாமையாளனாகவோ, ஊழியனாகவோ இருந்தாலும் கூட, மிகக்குறைந்த செலவில் பங்குடமையாளனாக மாற்றப்படுவது முற்றிலும் தவறானதாகும்.

அரச செல்வம் மக்களிடையே ஒரு குடியுரிமையென்ற வகையில் பங்கிடப்படவேண்டுமென்ற ஒரு பிரேரணையும் முன்வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரஜைக்கும் கிடைக்கும் சிறிய அளவுமுதலை முதலீடு செய்யவோ, விற்கவோ அவனுக்குச்சுதந்திரம் இருக்கும் எனக்கூறும் இப் பிரேரணை தவறானதாகும். தனது சொத்துக்களை அனாதையாக விடப்பட்ட பிள்ளைகளிடையே சமமாகப் பங்கிடுமாறு கூறிவிட்டு, பிதாவான அரசு எதிர்பாராத விதமாக இறந்து விட்டது என்ற எண்ணத்தையே இது எனக்குத்தருகின்றது. ஆனால், அரசு உயிரோடும் சுகமாகவும் உள்ளது; அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள செல்வத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் புதியதொரு உடைமையாளன் தோன்றும் வரை, அச்செல்வத்தினைக் கவனமாகப் பாதுகாப்பதற்கு அரசினது முகவர்கள் கடமைப்பட்டுள்ளனர். இச்சொத்துக்களைப் பகிர்ந்தளிக்காது, அவற்றை உண்மையாகவே சிறந்த ஒரு உரிமையாளனிடம் ஒப்படைப்பதே சரியானது. இதற்கு நேர்மைமிக்க தனியார் முயற்சி தோன்றுவது இன்றியமையாதது.

இப்பொழுது எனது புதிய பிரேரணைகளை நோக்குவோம்:

1. அரச துறையினது செல்வத்தினைப் பொருத்தமாக வகுக்கப்பட்ட பகுதிகளாகத் தனியார் துறை அங்கத்தவர்கள் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். அரசஉடைமை வீடுகள்,

கடைகள் என்பவற்றை வீட்டுத்துறையினர் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கவேண்டும். தனியார் துறை முயற்சியாளர் அரசஉடைமை நிறுவனங்களைக் கொள்வனவு செய்ய உரிமையிருக்க வேண்டும். இன்றைய உறங்கேரியில் பெரிய அரசஉடைமை நிறுவனங்களைத் தனியார் துறையினர் கொள்வனவு செய்ய முடியுமென எதிர் பார்ப்பது தவறானது. ஆனால், சிறிய நிறுவனங்களை அவர்கள் கொள்வனவு செய்யும் வாய்ப்பு இருக்கவேண்டும். செயற்கையான முறையில் பல சிறு அலகுகளை இணைத்திருக்கும் பெரிய ஹங்கேரிய நிறுவனங்களைச் சிறுபகுதிகளாகப் பிரிப்பதன் மூலம் இதனைச் சாத்தியமாக்கலாம். "முழுவதாக வாங்கு அல்லது விடு" என்ற விதி இங்கு பிரயோகிக்கப்படக்கூடாது.

அரச சொத்தினைத் தனியார் கைகளுக்கு மாற்றும் இந் நடவடிக்கை, பிரிக்கமுடியாத பெரிய அலகுகளை உடைத்தெறிவதாக இருக்கக்கூடாது. விருத்தியடைந்த கைத்தொழில் நாடுகளோடு ஒப்பீட்டுரீதியிலும் கூட, ஹங்கேரிய பொருளாதாரம் இன்று குவிவுத்தன்மை கூடியதாக உள்ளது. சிறிய அலகுகளை உருவாக்குவதற்குப் போதிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றமையால், அவசரப்பட்டு இதனை மேற்கொள்ளத் தேவையில்லை. இந்த விடயத்தில், போட்டியினாலேற்படும் இயற்கைத் தேர்வு காணப்படும் உண்மையான சந்தைப் பொருளாதாரங்களின் குவிவு அமைப்பினை நன்கு ஆராய்தல் முக்கியமானது. இப்பொருளாதாரங்களில் பெரியதும் நடுத்தர அளவினதும் சிறியதுமான நிறுவனங்களோடு, குடிசைக் கைத்தொழில்களும் ஒன்றுடனொன்று ஒத்துழைப்பதோடு, சகவாழ்வும் கொண்டிருக்கின்றன. இந்த எல்லாவித அளவுகளிலுமான நிறுவனங்களுமே ஹங்கேரிக்குத் தேவையானவையாகும்.

பொருளாதாரத்தின் எக்கிளையைச் சார்ந்தது, அதன் பருமன் யாது என்பதைக் கவனியாது ஒரேசீரான முறைகளைக் கையாளுதல் புத்திசாலித் தனமானதல்ல. ஒரு பெரிய நிறுவனத்திற்கும் அரசஉடைமையான ஒரு காய்கறிக் கடை அல்லது சிறிய கார் பழுது பார்க்கும் கடைக்குமிடையே வேறுபட்ட நடை முறைகள் கையாளப்பட வேண்டும். கீழே 2 முதல் 8 வரை ஆராயப்பட்டுள்ள தனியார்மய வடிவங்களைத் தெரிவு செய்வதிலும் இதே முறை கையாளப்படவேண்டும். சிறிய அவகுகளை அரசஉடைமையிலிருந்து தனிநபருக்கோ, ஒரு குழுவினருக்கோ மாற்றுதல் சுலபமானது. பெரிய நிறுவனங்களைப் பொறுத்தவரை, வேறு சட்ட வடிவங்கள் தேவைப்படும் (கீழே 9 இல் கூறப்படும் கூட்டுப்பங்குக் கம்பெனி பற்றிய கருத்துக்களைப் பார்க்கவும்).

2. தனியாருக்கு விற்கப்படும் அரசசொத்து எந்த அளவினதாகவிருப்பினும், உண்மையான சந்தை விலையிலேயே அது கைமாற்றப்படவேண்டும். இச் சொத்து பொதுவாக ஏலத்தில் விடப்படுவதோடு, அவ்வித பொது விற்பனை பற்றி அதனைக் கொள்வனவு செய்யக்கூடியோருக்கு முன்னதாகவே அறிவிக்கப்படவேண்டும். அச்சொத்தினை விற்பதற்குப் பொறுப்பான அரசதாபனம் ஓர் உண்மையான (பொருத்தமான உயர்ந்த) விற்பனை விலையினை நிர்ணயிப்பதில் அக்கறை காட்ட மாட்டாது என்பதால், விலையினைப் பிரேரிப்பதற்குச் சுயேச்சையான குழுக்களின் உதவி பெறப்படலாம். சில வகையான விற்பனைகளைப் பொறுத்தவரை, விலையினை நிர்ணயித்தல் சுலபமாகவிருக்கலாம். உற்பத்தி நிறுவனங்களை விற்கும் பொழுது அவற்றின் விலைகளை நிர்ணயிப்பது சுலபமானதல்ல. இவ்வித சந்தர்ப்பங்களில், இதேமாதிரியான ஒரு உற்பத்தி அலகினைத் தாபிப்பதற்கு ஒரு தனியார் துறை உற்பத்தியாளன் எவ்வளவு பணத்தை முதலீடு செய்ய வேண்டுமோ, அது ஓர் ஆரம்ப விலையாகவிருக்கலாம்.

3. அரச சொத்தினைத் தனியாருக்கு விற்கும் போது அவ்விற்பனையோடு தொடர்புள்ள ஒரு கடனமைப்பு உருவாக்கப்படவேண்டும். பின்வரும் உதாரணம் இத்தகையதொரு கடனமைப்பை விளக்குகின்றது. இது ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே.

20 மில்லியன் போரின்ட் பெறுமதியான ஓர் அரச சொத்தினைக் கொள்வனவு செய்ய ஒரு தனிநபரோ அல்லது ஒரு குழுவோ விரும்புவதாகக் கருதுக. (இது அச்சொத்தின் உண்மையான விலையெனவும் கருதப்படலாம்). இதைக் கொள்வனவு செய்ய விரும்புவோன் 5 மில்லியன் போரின்டை ஆரம்ப கட்டணமாகச் செலுத்துவதோடு, மிகுதி 15 மில்லியன் போரின்டையும் சமமான கட்டணங்களாக ஐந்து வருடங்களில் செலுத்த வேண்டுமெனக் கொள்வோம். 20 மில்லியன் போரின்ட் பெறுமதியான இந்த அரச சொத்து, கைமாற்றம் நடந்த உடனேயே தனியார்உடைமையாக மாறும். ஆனால், கடன் பெறுமதிக்குச் சமமான பிணைச்சொத்தாகவே அது கருதப்படும்.

இப்பிணைமுறை மிக இறுக்கமாகப் பின்பற்றப்படவேண்டும் புதிய உடைமையாளன் தவணைக் கட்டணத்தைக் குறித்த காலத்தில் செலுத்தத் தவறினால், அவன் (சட்ட நடவடிக்கைகளின் பின்னர்) தனது ஆரம்ப முதலீட்டில் ஒரு விகிதாசாரத்தினை இழக்க வேண்டி நேரிடும்; அதேவேளையில், அச்சொத்து கடன் வழங்கிய அரசதாபனத்திற்கு உரித்தாக்கப்படும்.

பொருளாதாரக் கொள்கை சம்பந்தமான இரண்டு முக்கிய நிபந்தனைகளை விளக்குவதே இந்த உதாரணத்தின் நோக்கமாகும். முதலாவதாக, தனியாருக்கு விற்பனை செய்யும் பொழுது, விற்பனையின் உச்சவரம்பு அவரிடம் இருக்கும் மொத்த செல்வத்தினால் நிர்ணயிக்கப்படாது, கடன் பெறுவதனூடாகத் தன்னிடமிருக்கும் முதலிலும் பார்க்கப் பன்மடங்கு கூடிய அரசஉடைமையை அவர் கொள்வனவு செய்யலாம். இது அரசஉடைமைகளைத் தனியார் துறைக்கு மாற்றுதலைத் துரிதப்படுத்தும். இரண்டாவதாக, மேற்படி கடன் தொட்டுணர முடியாத இருப்புச் சந்தையினூடாகப் பங்கிடப்படாது, உண்மையான நபர்களுக்கே வழங்கப்படவேண்டும். இப்படியாக ஒருவர் பெருமளவு கடனைப் பெறக்கூடியதாக இருக்கும் அதேவேளையில் தனது தவணைக் கொடுப்பனவைச் செலுத்தத் தவறினால், அவர் ஆரம்ப முதலையுங்கூட முற்றாக இழக்கும் நிலையும் இருக்கவேண்டும்.

4. அரசசொத்துக்களைத் தனிநபர்களுக்குக் குத்தகைக்கு விடும் வழக்கம் ஹங்கேரியில் ஏற்கனவே பரவலாகக் காணப்படுகின்றது. இது தேவையான ஒன்றே. எனினும், இதனைப் பொறுத்தவரை இருவிதமான தவறுகள் தவிர்க்கப்படவேண்டும். ஒன்று, அரசஉடைமை நிறுவனம் குத்தகைக்கு விடும் தாபனமென்ற வகையில், பேராசையினால் மிக உயர்ந்த குத்தகைப் பணத்தைக் கோருதல். இது குத்தகைக்கு அச்சொத்தினைப் பெறுபவன் ஆகக்கூடிய இலாபம் பெறும் வகையில் அதனைச் சுரண்டுவதற்குத் தூண்டும். மற்றது, குத்தகைக்கு விடும் அரசதாபனம் மிகக்குறைவான குத்தகைப் பணத்தைக் கோருவதன் மூலம் அரச சொத்தினைத் தவறாகக் கையாளுதல். சுருங்கக் கூறின், குத்தகை பகுத்தறிவானதாகவும் நியாயமானதாகவுமிருக்க வேண்டும்.

இவ்வித குத்தகை முறையானது விற்பனைக்கு ஒரு வழியாகவும் அமையலாம். ஒரு பக்கத்தில், குத்தகைக்கு எடுப்போன் அந்த அரச சொத்தைக் கொள்வனவு செய்வது இலாபகரமானதா என்பதை அனுபவத்தினூடாக அறிய அது வழிவகுக்கும். மறுபக்கத்தில், அரசஉடைமையாளன் உண்மையான சந்தை விலையினை அறிய அது வாய்ப்பளிக்கும். குத்தகையினை மீண்டெழாத முதல் பெறுமதியாக மாற்றுவதற்குப் பல சூத்திரங்களும் உள்ளன.

5. ஹங்கேரிய அரசஉடைமையின் ஒரு பகுதி தேசிய நலனுக்குப் பாதகமில்லா வகையில் வெளிநாட்டாருக்கும் விற்கப்படலாம்.

முதலில் நாம் வெளிநாட்டு முதலினது நலன்களை நோக்குவோமாயின், அது ஹங்கேரியின் மீதுள்ள இரக்கத்தினால் இங்கு வருவதில்லை. இலாபம் பெறுதலே அதனது முதன்மையான

நோக்கமாகும்; வேறு நோக்கங்களும் இருக்கலாம். உதாரணமாக, கிழக்கைரோப்பிய சந்தையினைப் கைப்பற்றுவதற்கு ஹங்கேரியை ஒரு ஆரம்ப பயிற்சிக்களமாகக் கருதவும்கூடும். எவ்வாறாயினும், சொந்த நலன்களினாலேயே அவை உந்தப்படுகின்றன. சித்தாந்தங்கள் காரணமாகவோ, ஒழுக்கத்தப்பெண்ணங்கள் காரணமாகவோ இச்செய்முறையினை முறியடிக்க முயலுவது அர்த்தமற்றது.

வெளிநாட்டு முதல் தனது இலாபங்களைப் பெற்ற பின்னர் ஹங்கேரிக்கு ஏதும் நன்மைகள் மிஞ்சுமா? இவ்வினாவிற்கு எல்லாச்சந்தர்ப்பங்களிலும் ஏற்கக்கூடிய ஒரு விடை இல்லை. ஏனெனில், அது சூழ்நிலைக்கேற்ப வேறுபடும். எவ்வித நிபந்தனைகளுமின்றி வெளிநாட்டு முதலைக் கவரமுயலுதல் அர்த்தமற்றது. நியாயமான விலை கிடைக்குமானால், அது ஹங்கேரிக்கு நன்மையானது. மேலும், வெளிநாட்டு முதலானது, முகாமை, வியாபாரம், தொழில் நுட்பம் என்பன சார்ந்த நிபுணத்துவத்தையும் நவீன சாதனங்களையும் கொண்டு வருமாயின், உறங்கேரி அதன் மூலமும் நன்மையடையலாம். நிறுவனம் வெளிநாட்டினரால் முகாமை செய்யப்படுமாயின், சிறந்த அமைப்பினையும் ஒழுக்கத்தையும் புகுத்துவதும் சாத்தியமாகலாம்.

வெளிநாட்டு முதல் தொழில் வாய்ப்புக்களின் மீது கொண்டுள்ள விளைவுகளையும் ஆராய வேண்டும். இந்த வகையிலும் அது நன்மையான விளைவுகளைக் கொண்டிருக்கலாம். எனினும், இதனை மட்டும் அடிப்படையாகக்கொண்டு வெளிநாட்டு முதலை நாம் நியாயப்படுத்திவிடமுடியாது. உறங்கேரியத் தொழில் மட்டத்தைப்பாதுகாப்பதற்காக அரச உடைமைச் சொத்துக்களைக் குறைந்த விலையில் வெளி நாட்டாருக்கு விற்க முடியாது. இவ்வாறு விற்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வேறுபட்ட விதிகளை நாம் கையாள வேண்டியிருக்கும்.

எத்தனை வீதமான ஹங்கேரிய சொத்துக்களை வெளிநாட்டார் கொள்வனவு செய்ய முடியும் என்பதற்கும் உச்சவரம்பு விதித்தல் நன்மையானது.

வெளிநாட்டார் அரசாங்கச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதன் மீது உச்சவரம்பு விதிக்கப்பட்டாலும், வெளிநாட்டுத் தனியார் முதலீட்டிற்கு (அதாவது வெளிநாட்டு முதல் பெருமளவு வெளிநாட்டுச் சாதனங்களைக் கொண்டு புதிய தொழில்களைத் தாபித்தல்) கட்டுப்பாடு விதிப்பதில் நியாயமில்லை.

6. அரசாங்கச் சொத்துக்களை விற்பதன் நோக்கம் பாதீட்டிற்கு மேலதிக வருமானத்தை ஏற்படுத்துவதல்ல என்ற வாதம் இங்கு அடிக்கடி கூறப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளில் சமநிலைப்

பாதீடு என்ற கருத்தைச் சிலர் குறை கூறியுள்ளதோடு, அதற்கான வருமானத்தைத் திரட்டுதல் வெட்கப்படவேண்டிய ஒன்று என்ற கருத்தையும் வெளியிட்டுள்ளனர். அடுத்த அத்தியாயத்தில் பாதீடு பற்றி விரிவாக ஆராயப்படும். அரச சொத்துக்களின் விற்பனை, அரச பாதீட்டுக்கான ஒரு பிரதான மூலமாக வரப்போகின்றது என்பதை மட்டும் இங்கு கூறிவைப்போம். எனவே, விற்பனை விலைபற்றி எவரும் அக்கறை கொள்ளாதிருக்க முடியாது. உயர்ந்த வருமானங்களின் மீது அதிக வரிவிதித்தலைச் சிலர் வலியுறுத்தவதில்லை. இதனை ஏற்கனவே நான் கண்டித்துள்ளேன்; இதனைப் பின்னர் மீண்டும் ஆராய்வோம். இதேவேளையில், அவர்கள் அரசஉடைமை வீடுகளை வாங்கும் போது, குத்தகைக்கு இருப்போர் அதனை என்ன விலைக்கு வாங்குகின்றனர் என்பது பற்றி எதுவும் கூறுவதில்லை.

உள்நாட்டினருக்கோ, வெளிநாட்டினருக்கோ நல்ல விலையில் அரச உடைமைகள் விற்கப்படும் பொழுது, ஹங்கேரிய பிரஜைகள் வரிமூலமோ, பணவீக்கத்தின் மூலமோ திறைசேரிக்கு அதேயளவு பணத்தைச் செலுத்துவதினின்றும் விடுவிக்கப்படுகிறார்கள். இந்த அரசவருவாய் நிரந்தரமானதும், மீண்டெழுவதுமல்ல. ஆனால், நாடு உறுதியாக்கல் நடவடிக்கையில் மாபெரும் இன்னல்களை எதிர்நோக்கும் ஒரு சூழ்நிலையில் அது நாட்டிற்குக் கிடைப்பது குறிப்பிடவேண்டிய அம்சமாகும்.

7. மேலே 6இல் அரச உடைமையினது இறைசார்ந்த விளைவுகளை ஆராய்ந்தோம் இப்பொழுது அதனது பணரீதியான விளைவுகளை நோக்குவோம். தனியார்துறையும் பொதுமக்களும் கணிசமான அளவு பணத்தைத் திரட்டியுள்ளனர். இதில் கட்டாய சேமிப்பு எவ்வளவு என்பதை எம்மால் கூறமுடியாது. செலவிடப்படாத இப்பணம் சந்தை மீது வீக்க அழுத்தத்தினை ஏற்படுத்தும். இதனை சந்தையினின்றும் வெளியேற்றுவதற்கு பலவழிகள் உண்டு. அரசஉடைமைகளை விற்றல் இவற்றுள் ஒன்றாகும்.

விற்பனை தொடர்பான கொடுக்கல் வாங்கல்களில் உண்மையான காசு - கடன் விகிதம், இறை அடிப்படையிலும் பண அடிப்படையிலும் முக்கியமான ஒன்றாகும். எமது 20 மில்லியன் போரின்ட் உதாரணத்தில், ஆரம்ப செலுத்தல் எவ்வளவாக இருக்க வேண்டுமென்பது அர்த்தமற்றதாகும். பேரினப் பொருளியல் அடிப்படையில் இதன் பங்கு மிக உயர்வாகவிருத்தல் சிறந்தது. எனினும், இதனை மிகவும் உயர்வாக நிர்ணயித்தல் விற்பனைக்குத் தடைகளை ஏற்படுத்தக்கூடும். இதுபற்றிச் சந்தையில் சில பரிசீலனைகளை மேற்கொள்ளுதல் தவிர்க்க முடியாதது.

8. ஓர் அரசஉடைமை நிறுவனம் தன்னை ஒரு கூட்டுமுதல் கம்பெனியாக மாற்றிக் கொள்வதற்கும், பங்குகளைப் பல்வேறு உரிமையாளருக்கு மாற்றுவதற்கும் உறங்கேரிய கூட்டுத்தாபன சட்டம் வசதியளிக்கின்றது. சாதகமான மாற்றங்களேற்படுவதற்குத் தேவையான நெகிழ்ச்சி காணப்படும் அதே வேளையில், பாதகமான மாற்றங்கள் ஏற்படுவதற்கும் இது இடமளிக்கக்கூடும். இதுபற்றிப் பரவலான பொது விவாதமொன்று இப்பொழுது நடைபெறுகின்றது; இதில் அக்கறையுள்ளோரும் வெளி அவதானிகளும் இதுபற்றி அடிக்கடி கண்டனங்களை எழுப்புகின்றனர். இதுபற்றிய எனது நிலைப்பாட்டையும் இங்கு தெளிவு படுத்த விரும்புகிறேன்.

கூட்டுமுதல் கம்பெனிகளாக மாற்றுதல் உண்மையான தனியார் மயப்படுத்தலை ஏற்படுத்துமாயின், அது தனது நோக்கத்தினை அடையுமென்பதில் ஐயமில்லை. பங்குகள் ஓர் அரச தாபனத்திடமிருந்து இன்னொன்றுக்கு மாற்றப்படுவதில் தீமைகளெதுவும் இல்லையாயினும், இதன் மூலம் எந்தவித மாற்றங்களும் ஏற்படமாட்டா. முந்திய பகுதியில் இது பற்றிய எனது ஐயப்பாடுகளைக் குறிப்பிட்டுள்ளேன்.

பங்குகள் தனியார் கைகளுக்குச் செல்வதைப் பொறுத்தமட்டில், நான் பிழையெனக்கருதும் ஒருசெயல் முறையினை எல்லாவற்றிற்கும் முன்னரே குறிப்பிடுகின்றேன்.

அரசிடம் வேதனம் பெற்றுவந்த இன்றைய முகாமையாளர் நிறுவனங்களைத் தமதாக்கி, உடைமையாளராகவோ அல்லது உடைமை, முகாமைத்துவமென்ற இரண்டையும் இணைத்து உடைமையாளர் - முகாமையாளர் எனத் தம்மை மாற்றிக் கொள்வதையோ அனுமதிக்க முடியாது.

முகாமையாளரை நியமிப்பதற்கு (அதாவது, பழைய முகாமையைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளவோ, புதியவர்களை நியமிக்கவோ) புதிய முகாமையாளருக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். முகாமையாளரது வேதனங்களையும் வேறு நிதி ஊக்குவிப்புக்களையும் அவர்களே தீர்மானிக்க வேண்டும் பங்குகளில் ஒரு பகுதியை கழிவுடன் மாற்றிக்கொடுக்கும் உரிமையையும் இது உள்ளடக்க வேண்டும். முன்னைய முகாமையாளர் தாமே புதிய உடைமையாளர்களைத் தெரிவு செய்யவோ, தம்மையே புதிய உடைமையாளர்களாக உயர்த்திக் கொள்வதற்கோ அனுமதிக்கக்கூடாது.

மேலே குறிப்பிட்டது போன்று, நிறுவனத்தினது ஊழியர் பங்குகளைக் கழிவுடன் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படலாம். ஆனால், பங்குகளின் ஒருசிறு பகுதிக்கு மட்டும் இது வரையறுக்கப்படவேண்டும். நிறுவனத்தினது எல்லாப்-

பங்குகளையும் ஊழியரே கொள்வனவு செய்வதன் மூலம் (இதனை முன்வைப்போர் கூறுவது போன்று, பங்குகள் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்படக் கூடாது) நிறுவனம் ஊழியரின் கூட்டுச் சொத்தாக மாற்றப்படக் கூடாது. இது உண்மையில் சுய முகாமைச்சொத்து வடிவினையே ஏற்படுத்தும். அடுத்த பகுதியில் இதற்கெதிரான வாதங்களைக் கூறியுள்ளேன். இங்கு இதனது ஒழுக்க விழுமத்தை மட்டும் குறிப்பிட விரும்புகின்றேன். மாற்றம் ஏற்படும் நேரத்தில், நிறுவனம் கொண்டிருக்கும் செல்வம் அதனது ஊழியர்களால் மட்டும் உருவாக்கப்பட்டதல்ல; அந்நிறுவனம் பெற்ற அரசமுதலீடுகள், அரச மானியங்கள் என்பவற்றினூடாக எல்லாக் குடிமக்களுமே அதற்குப் பங்களித்துள்ளார்கள். குடிமக்களில் ஒரு பகுதியினர் மட்டும் அச்செல்வத்தை அன்பளிப்பாகப் பெறுவதை அனுமதிக்க முடியாது. மேலும், இவ்வாறு பெறும் ஊழியர்கூட்டுக்கள் சில தாம் பெற்ற நிறுவனம் இலாபந்தரும் ஒன்றாக இருக்குமாயின் நன்மையடையவர்; நட்டத்திலியங்கும் நிறுவனத்தைப் பெறும் ஊழியர்கள் கடனில் சிக்கிய ஒரு நிறுவனத்தையே பெறுவர். ஒரு நிறுவனத்திற்குச் சட்ட உடைமையைப் பெறுவதிலும் பார்க்க, அதனைத் திறமையாகச் செயற்பட வைப்பதையே பிரதானமாகக் கருதவேண்டும். சாதனங்கள் செயற்றிறனுடன் பயன்படுத்தப் படுவதை நிரந்தரமாக உறுதிப் படுத்துவதற்கான ஊக்குவிப்புக்களை வழங்கக் கூடியது உண்மையான தனியார் உடைமையே என்பது எனது கருத்து.

பங்குகளின் உடைமை எவ்வாறு பங்கிடப்படவேண்டுமென்பதைச் சட்டத்தின் மூலமோ வேறு பிரமாணங்களின் மூலமோ முன்கூட்டியே கூற முடியாது. அதனைப் பொறுத்தவரை, விரும்பத்தக்க போக்கு என்ன என்பதை மட்டுமே இங்கு கூறலாம். முன்னர் அரசஉடைமை-யாகவிருந்த ஒரு நிறுவனம் 10,000 பங்குகளைக் கொண்டிருப்பதாகக் கொள்வோம். ஹங்கேரியில் இன்று காணப்படும் நிலையில் இந்தப் பங்குகளை 10,000 வேறுபட்ட பங்குடைமையாளர்களிடையே பங்கிடுதல் நன்மையானதல்ல. இவ்வாறு செய்வோமாயின், முன்னிருந்த தனிநபர் சாராத அரசஉடைமை, அதேபோன்ற ஒரு தனிநபர் சாராத தனியார் உடைமையாக மாற்றப்படுவதையே இது குறிக்கும். தமது முதலீடுகளின் (கணிசமான அளவு பங்குடைமைகளின்) காரணமாக, நிறுவனத்தினது வெற்றியில் அக்கறை கொண்ட ஆதிக்கமுள்ள தனிப்பட்ட பங்குடைமையாளரோ, கணிசமான கட்டுப்பாடு கொண்ட சிறு பங்குடைமையாளரோ இருத்தலே நன்று. நிறுவனத்தினது நிர்வாகிகளை நியமனம் செய்வதிலும், மேற்பார்வை செய்வதிலும் இவர்களுக்குப் பூரண அதிகாரம் இருக்க வேண்டும் என்பதற்குச் சாதகமாக இந்நூலில் முற்பகுதியில் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட

வாதங்கள் இதனுடன் ஒத்துப்போகக்கூடியன. இவர்கள் ஹங்கேரியராகவோ, வெளி நாட்டினராகவோ இருக்கலாம்; உடைமை காரணமாக எழும் நேரடி அக்கறையே தேவையானதாகும். கூட்டு முதல் கம்பெனியாகவோ அல்லது வேறு சட்டப்படியான தனியார் சொத்தாகவோ மாற்றுதல், அப்படியானதொரு தனிநபர் அல்லது பங்குடைமையாளர் தோன்றிய பின்னரே மேற்கொள்ளப்படவேண்டும். தொட்டுணரக் கூடிய உடைமையாளர் தோன்றி, பெருமளவு பங்குகளை வாங்குவதன் மூலம் ஆபத்தினை ஏற்பதற்கான தமது விருப்பினை நிரூபித்த பின்னர், எஞ்சிய பங்குகள் ஏனையோருக்கு விற்கப்படலாம். பங்குகளை எல்லோருக்கும் விற்றபின்னர், நிறுவனத்தின் முகாமையில் தனது கட்டுப்பாட்டைச் செலுத்தக்கூடிய ஒருவர் தோன்றுவாரென எதிர்பார்ப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை.

9. அரச செல்வத்தினைச் சந்தைப்படுத்தல் ஒரு பொதுச் செயற்பாடாக இருப்பதோடு, அதற்கான சட்ட அமைப்பானது சட்டத்தினால் வரையறுக்கப்படவேண்டும். முன்னைய முகாமையாளரது உரிமைகள், கடமைகள் என்பவற்றை ஒழுங்கு படுத்துவதிலும் வரையறை செய்வதிலும் சட்டம் கவனமாக இருக்கவேண்டும். இதனை எழுதும் பொழுது, தனியார் மயமாக்கலைச் செயற்படுத்தும் அரச தாபனங்களினது சட்ட, அமையக் கட்டுக்கோப்புக்கள் உருப்பெற்றுக்கொண்டிருக்கின்றன. தனியார் மயமாக்கலுக்குப் பொறுப்பாகவிருக்கும் அரச தாபனங்களின் மீது தன்னிச்சையான கட்டுப்பாட்டைச் செலுத்தவும், சட்ட அமுலாக்கத்தினை மேற்பார்வை செய்யவும் பாராளுமன்றக் குழு ஒன்று இருக்க வேண்டும்.

இதில் பத்திரிகை உலகுக்கும் ஒரு முக்கிய பங்குண்டு. அரசஉடைமைகளைக் கொள்வனவு செய்யக்கூடியவர்களுக்குச் சரியான தகவலைக் கொடுக்கும் ஒரு உண்மையான வியாபார பத்திரிகை உலகு அவசியமாகும். ஏலவிற்பனைபற்றிய அறிவித்தல்களை ஆங்காங்கு பிரசுரிப்பது மட்டும் போதுமானதன்று. இவ் வியாபாரப் பிரசுரங்கள் இருள் மண்டிக்கிடக்கும் இன்றைய சந்தையினை ஒளி மயமாக்க வேண்டும். அரசஉடைமை வீடுகள், ஆதனங்கள், தொழிற்சாலைகள் என்பன என்னவிலையில் விற்பனவு, கொள்வனவு செய்யப்படுகின்றன என்பதை அது பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டும். அரசே விற்பனை-யாளனாகவிருக்கும் சந்தர்ப்பங்களில் வியாபார இரகசியங்கள் என்பதற்கு இடமில்லை. இவ்வித இரகசியங்கள் நியாயமானவையாக இருக்கும் சந்தர்ப்பங்களிற் கூட, பாராளுமன்றக் குழு உண்மை நிலையினையறிய அனுமதிக்கப்படவேண்டும்.

சிறக்குமியல்பு பெற்ற வியாபார பத்திரிகைசாலைக்கு மட்டுமன்றி, தொடர்பு சாதனங்களின் ஏனைய கிளைகளுக்கும், அரசியல் எதிர்க்கட்சிக்கும் கூட, துஷ்பிரயோகங்களை வெளிக்கொணருவதில் முக்கிய பங்குண்டு.

அரசஉடைமைகளை விற்பதில், அவ்விற்பனையைத் துரிதப்படுத்தல் முக்கிய வழிகாட்டும் விதியாகவிருத்தல் கூடாது. தனியார் உடைமையை விட, அரசஉடைமை சில கருமங்களைச் சிறப்பாக ஆற்றுமானால், அவற்றிற்கு நிச்சயமான ஓர் இடமுண்டு. உதாரணமாக, பெருந்தெருக்களைத் தனியார் உடைமையாக்க எவரும் விரும்புவதில்லை. அரசஉடைமையா, தனியார் உடைமையா சிறந்தது என்பதை நிர்ணயிக்க முடியாத சந்தர்ப்பங்களிற் கூட, குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல், மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளினடிப்படையில் திறமையானதா என்பதை அறிய விசேட ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். பேரினப் பொருளியல் கண்ணோட்டத்தில் சாதகமானதாகவும், சிற்றினப் பொருளியல் நோக்கில் புதிய உடைமையாளன் பழைய உடைமையாளனிலும் திறமையாகச் செயற்படுவானென்ற உறுதியும் இருந்தாலும் மட்டுமே அரச சொத்துக்கள் தனியார் உடைமையாக்கப்படவேண்டும். தனியார் உடைமை நல்கும் ஊக்குவிப்புச் சக்தியை நடைமுறையில் செயற்படுத்துவதே தனியார் மயமாக்கலின் நோக்கம் என்பதை மறந்து விடக்கூடாது.

## 1.4 அரச, தனியார் துறைகளுக்கிடையிலான தொடர்புகள்

அரச, தனியார் துறைகளுக்கிடையே ஒரு "பேர்லின் சுவர்" இருக்கமுடியாது. அவற்றிற் கிடையே பல்வேறு தொடர்புகள் உருவாகலாம்; அவற்றுட் சில நன்மையானதும் ஊக்குவிக்கப்பட வேண்டியனவுமாகவும், வேறுசில தீமையானவையாகவும் இருக்கலாம்; பின்னையவற்றைத் தவிர்க்க வேண்டும். அரசஉடைமை நிறுவனங்களுக்கும், ஏனைய அரசதாபன- ங்களுக்கும், தனியார் துறைக்குமிடையிலான வர்த்தக நடவடிக்கைகளைத் தடைசெய்யும் சட்டவிதிகள் உடனடியாக விலக்கப்படவேண்டும். தனியார் துறையுடனான பொருளாதாரப் பிணைப்புக்கள் அரச உடைமை நிறுவனங்கள் நெகிழ்வுடன் செயற்படவும், பற்றாக்குறைப் பொருளாதாரத்தில் காணப்படும் இடைவெளிகளை நிரப்பவும் உதவலாம். ஓர் அரசஉடைமை நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருட்களை உபயோகிக்கும் இன்னோர் அரசஉடைமை நிறுவனத்திற்கு, அப்பொருளைக்- கொண்டு செல்லத் தனியார்துறை வர்த்தகர்கள் கையாளப்படலாம். அரசதுறை நிறுவனங்களது உள்ளீடுகளை இறக்குமதி

செய்வதற்கும், அவற்றினது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் தனியார்துறை வர்த்தகர்கள் அனுமதிக்கப்படவேண்டும்.

எல்லாச் சமூகங்களிலுமே தனியார் முயற்சியும் அரசாங்கத்துறையும் தொடர்பு கொள்ளும் போது, ஊழல் ஏற்படுவது சகஜம். ஓர் அரசஉடைமை நிறுவனம் (முன்னர் வரையறை செய்யப்பட்ட கருத்தில்) குறிப்பிட்ட ஒரு விதத்தில் அரசாங்கத்துறையின் ஒரு பகுதியாகவிருப்பதால், இதற்கும் தனியார் நிறுவனங்களுக்குமிடையிலான தொடர்பில் பல்வேறு விதமான ஊழல்கள் ஏற்படுமென எதிர்பார்க்கலாம்; ஏற்கனவே இவ்வித ஊழல்கள் ஏற்பட்டுமுள்ளன. தனியார்துறை வலுப்பெறும் போது, இது மேலும் அடிக்கடி நடைபெறலாம். மாற்றம் நடைபெறும் காலத்தில் சேர்ந்து வரக்கூடிய வெறுக்கக்கூடியதும் பாதகமான விளைவுகளைக் கொண்டதுமான இவ்வூழல்களை முற்றாகத்தடுப்பது இயலாத காரியம். எனவே, இதனை முடிந்த மட்டும் குறைப்பதற்கு எல்லாவித முயற்சிகளையும் மேற்கொள்வது நன்மைபயக்கும். சட்டப்படி தடை செய்யப்பட்டதும் ஒழுக்கரீதியாக வெறுக்கப்படவேண்டியதுமான தொடர்புகளை, சரியான, நேர்மையான தொடர்புகளினின்றும் வேறுபடுத்துவதற்குத் தேவையான, பொருத்தமான சட்ட ஏற்பாடுகளும், ஒழுக்க விதிகளும் உருவாக்கப்பட வேண்டும். மேலும், இச்சட்டப் பிரமாணங்களையும், ஒழுக்க நியமங்களையும் அமுலாக்குவதற்கான போராட்டத்தினைக் குற்றவியல் விசாரனை அதிகாரிகளும், பொதுமக்களும் மேற்கொள்ளவேண்டும்.

இதைவிட முக்கியமானது, தனியார் மயமாக்கல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுதலாகும். அரசதுறை தனது ஆதிக்கத்தினை இழந்ததும், சந்தைப் போட்டியின் ஒழுக்காறு இறுக்கமடையும். அரசதுறையுடனான தமது தொடர்புகளைக் கையாண்டு தனியார் துறையினர் சிலர் விசேட நன்மைகளையடைவதற்கான வாய்ப்புக்களும் குறையும். இதை விட, 2ம் அத்தியாயத்தில் ஆராயப்பட்ட பொருளாதார மாற்றங்கள் (ஒருமைப்படுத்திய கட்டில்லா விலையமைப்பு, ஒருமைப்படுத்திய நாணயம், பணவீக்கமும் பற்றாக்குறைப் பொருளாதாரமும் நீக்கப்படல்) ஊழலுக்கான வாய்ப்பினையும் விருப்பினையும் குறைக்க உதவும்.

இரு துறைகளிலும் கால் வைப்போரைப் பற்றி இங்கு விசேடமாகக் குறிப்பிடவேண்டும். அரசஉடைமை நிறுவனமொன்றில் தொழில் புரியும் ஒருவன் தனது ஓய்வு நேரங்களில் பழுதுபார்த்தற் தொழிலைச் செய்வதாகக் கொள்வோம், அவனது இந்த இரட்டைத் தொழில் கண்டிக்கப்படவேண்டிய ஒன்றல்ல. அரசதுறை தரும்

பாதுகாப்பினை விரும்பும் அதே நேரத்தில், தனியார்துறை மூலம் தனது வருமானத்தை உயர்த்திக் கொள்ள விரும்பும் ஒருவனது நிலைமையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீண்டவேலை நேரத்தையும் சுய சுரண்டலையும் ஏற்படுத்தும் இந்த இரட்டை வாழ்க்கையை எவ்வளவு காலம் வாழ விரும்புகிறான் என்பதை அவனே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வித பிணைப்பினைத் துஷ்பிரயோகம் செய்யாதிருப்பதை உறுதிப் படுத்தச் சட்ட நடவடிக்கைகளும் பொது அபிப்பிராயத்தினது உக்கிரமும் கையாளப்படவேண்டும். அரசஉடைமை நிறுவனத்தினது உற்பத்திச் சாதனங்களைப் பறித்துக்கொள்ளவோ, வாடகை செலுத்தாது உபயோகிக்கவோ முயலுவோருக்கும் இது பொருந்தும். ஒரு அரசஉடைமை நிறுவனம் அல்லது தாபனத்தின் தலைவராகவும் அதே வேளையில் ஒரு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு தனியார் நிறுவனத்தின் உடைமையாளனாகவோ, முகாமையாளனாகவோ, ஆலோசகனாகவோ இருக்கும் ஒரு நிர்வாகியினது இரட்டை வேடம் இதைவிடப் பாரதூரமானதும் வெறுத்தொதுக்க வேண்டிய ஒன்றுமாகும். ஒழுக்க ரீதியாகப் பொருத்தமற்றதும், முரண்பட்ட நலன்களை ஏற்படுத்துவதுமான இவ்விரட்டைப் பிணைப்புக்களைச் சரியாக வரையறை செய்வதற்கும், அவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்கும் இறுக்கமான பிரமாணங்கள் ஆக்கப்படவேண்டும். இவ்வித பிரமாணங்கள் பல விருத்தியடைந்த மேற்கத்திய சனநாயகங்களின் சட்ட அமைப்புக்களில் காணப்படுகின்றன இதே போன்ற பிரமாணங்களை இங்கும் ஏற்படுத்துவதற்குக் கவனமாக இவற்றை ஆராய்தல் பெரிதும் உதவும்.

## 1.5. வேறுவகை உடைமைகள்

மூன்று வகையான உடைமைகள் இங்கு ஆராயப்படும்.

### அ. / கூட்டுறவு

பின்வரும் மூன்று விதிகளும் பின்பற்றப்படுமானால், கூட்டுறவு அமைப்புக்கள் ஓரளவு நன்மையான பங்காற்றலாம்: 1. அங்கத்தவர் உள்வரவும் வெளியேறவும் சுதந்திரம், 2. அவ்வாறு வெளியேறும்போது, அங்கத்தவர் தமது ஆரம்ப முதலையும், திரட்டிய முதலில் தமது பங்கினையும் எடுத்துச் செல்லும் சுதந்திரம், 3. சுதந்திரமாகத் தெரிவு செய்யப்பட்ட உண்மையான சுய ஆட்சியைக் கொண்டிருக்கும் கூட்டுறவு. இவ்வித கூட்டுறவு ஒரு விசேட வகையான தனியார் உடைமையே. இந்தக்கருத்தில் இது பொருளாதாரத்தின் ஒரு தன்னிச்சையான "பெரும் துறை" யன்று ; தனியார் துறையின் ஓர் அங்கமே இது.

ஏற்கனவே இருக்கும் இப்படியான கூட்டுறவுகள் மேலும் விரிவடைவதை நான் வரவேற்கின்றேன். ஆனால், இவை அவ்வாறு விரிவடையுமா என்பது சந்தேகத்திற்குரியதே.

பல்வேறுபட்ட போலியான கூட்டுறவுகளை நான் இதேபோன்று கருதவில்லை. இவை பணிக்குழுவாட்சிக்குட்பட்ட அரச உடைமைகளின் எல்லா எதிர்க்கணிய பண்புகளையும் கொண்டுள்ளன. இப்போலியான கூட்டுறவுகள் தாமாகவே உண்மையான கூட்டுறவுகளாகவோ அல்லது சட்ட விதிகளுக்கமையச் செயற்படும் தனியார் துறை அலகுகளாகவோ மாறுதல் உசிதமானது. போலியான இக்கூட்டுறவுகள் வெளிப்படையாகவே அரச உடைமைகளாக ஏற்கப்படவேண்டும் இவ்வித போலியான கூட்டுறவுகளை எவ்வாறேனும் அகற்றியே ஆகவேண்டும்.

### ஆ. / உள்ளூராட்சி அரச உடைமை:

பிரதேச, நகர, கிராம அரசாங்கங்களுக்குச் சொந்தமான ஒரு பொருளாதார அலகினது அந்தஸ்து பற்றிப் பொதுவான அடிப்படையில் மதிப்பீடு செய்ய முடியாது. ஓர் உள்ளூராட்சி அரசாங்கம் எந்தளவிற்கு உண்மையான உடைமையாளனாகச் செயற்பட முடியுமென்பதே வினா. இது தொடர்பாக வேறு இரு வினாக்களையும் நாம் எழுப்பலாம். உள்ளூராட்சி சட்ட மன்றம் உண்மையான பிரதிநிதித்துவத்தைக் கொண்டதா, அது அப் பிரதேசங்களை அரசியல் ரீதியாக பிரதிநிதித்துவம் செய்கின்றதா, அது சனநாயக ரீதியானதா என்பது முதலாவது வினாவாகும். ஒரு உள்ளூராட்சியினால் நிர்வகிக்கப்படும் பிரதேசத்தினது அளவு, குடித்தொகை என்பன தொடர்பானது இரண்டாவது வினா. நாட்டினது தலை நகரில் காணப்படும் பல பெரிய நிறுவனங்களின் உரிமையாளனாக புடாபெஸ்ட் நகர சபை அவற்றை நிர்வகிப்பதை விட, ஒரு கிராமசபை தனது குறுகிய சட்ட வரம்பிற்குட்பட்ட ஒரு நிறுவனத்தின் உடைமையாளன் என்ற கடமையைத் திறம்பட ஆற்றலாம்.

உள்ளூராட்சி அரசஉடைமை எந்தளவிற்கு முன்னைய அரச உடைமையினது பணிக்குழுவாட்சிப் பண்புகளைப் பாதுகாக்கும் என்பதையும், எந்தளவிற்கு உண்மையான உடைமை நலன்களைக் கொண்டிருக்கும் என்பதையும் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். உண்மையான உடைமை நலன்கள் உருவாகலாமென்பதை நான் மறுக்காதபோதும், அவை ஏற்பட நெடுங்காலம் செல்லலாம். மேலும், சமூக உற்பத்தியின் கணிசமான பகுதியினை உள்ளடக்கும் வகையில் இது ஒரு பெரிய துறையாக வளருமெனவும் நாம் எதிர்பார்க்க முடியாது.

## இ. / ஊழியர் - முகாமை:

இந்தவித உடைமைமுறை ஆதிக்கமுள்ளதாக வரவேண்டுமென்றோ, இன்றைய அரச துறையில் காணப்படும் ஊழியர் - முகாமைப்பண்பினைக் கொண்டதாக அது மாற்றப்படவேண்டுமென்றோ நான் கூற மாட்டேன். எந்தளவு ஊழியர் - முகாமை காணப்படுகின்றது என்பதும் நிச்சயமற்றதாக உள்ளது. கணிசமான அரசஉடைமை நிறுவனங்களில் ஒரு வித போலியான ஊழியர் - முகாமை காணப்படவே செய்கின்றது. இது உண்மையான ஊழியர் - முகாமையாக மாற்றப்படவேண்டுமென்பதற்குச் சாதகமாக பலர் வாதாடுகின்றனர்.

ஊழியர் முகாமைக்குச் சாதக பாதகமான வாதங்கள் பல உள்ளன. இன்றைய ஹங்கேரியைப் பொறுத்தமட்டில் இரு எதிர்வாதங்களை இறுதியானவையான நான் கருதுகின்றேன். அவற்றுளொன்று, வேதன ஒழுக்காற்றை அமுல்படுத்தலாம் என்பதாகும். ஸ்டாலினிய மாதிரியிலான ஏவுதல் பொருளாதாரத்தினை அகற்றுவதில் இது ஒரு முன்தேவை ஆகும். இவ்வித பொருளாதாரத்தில் ஓர் அரசஉடைமை நிறுவனத்தினது வேதன மட்டமும், வேதனச் செலவுகளும் கட்டாய நிர்வாக வரையறைக்குட்பட்டிருக்கும். மிக இறுக்கமாக அமுலாக்கப்படும் சில திட்டப் பணிப்புரைகளுள் இதுவும் ஒன்றாகும். வேதனம் சம்பந்தமான பிரமாணங்களைப் பின்பற்றுவோருக்குச் சன்மானங்களும், அவற்றைப் புறக்கணிப்போருக்குத் தண்டனையும் கொடுக்கப்படும். சீர்திருத்த நடவடிக்கைகளின் கீழ் வேதன நிர்வாகத்தினை எந்தளவு தாராண்மைப்படுத்துகின்றோமோ, அந்தளவிற்கு வேதனங்கள் துரிதமாக உயரும். பணியகவாட்சியினது பலவந்தம் தொடர்ந்தும் செல்லுபடியாக மாட்டாது. அதே வேளையில், தனியார் உடைமையினால் உருவாக்கப்படும் எதிரான நலனும் உருவாகவில்லை.

தனியார் உடைமையின் இயற்கையான நலன்கள் மிகையான கூலி உயர்வுக்கு எதிரானதாகும். உடைமையாளனொருவன் தனது சொந்தப்பணத்திலிருந்தே ஊழியனுக்கு வேதனமளிப்பதாகக் கருதுவதால், அவ்வாறு அளிக்கப்படும் ஒவ்வொரு மேலதிக போரின்ட்டும் தனது நலன்களையும் உயர்த்தும் (சிற்றினப் பொருளியல் கருத்தில், ஊழியனது வேதனம், ஊழியத்தினது எல்லை விளை திறனுக்குக் குறையாமல் இருத்தல்) எனக்கருதினால் மட்டுமே அதனைக்கொடுப்பான். மறுபக்கத்தில், ஓர் அரசஉடைமை நிறுவனத்தின் முகாமையாளன் தனது சொந்தப் பணத்தைக் கையாளாததாலும் (ஒரு தனியார் உடைமையாளனின் கீழ் நேரடி ஊழியனாக இல்லாதிருப்பதனாலும்), அரசினது பணத்தையே ஊழியருக்கு கைமாறுவதனாலும் இவ்வித இயற்கையான நலன் பற்றிய அக்கறை அவனுக்கு ஏற்படுவதில்லை. உண்மையில் முகாமையாளன் உயர்ந்த வேதனங்களை அளிப்பதன் மூலம் ஊழியரது நல்லெண்ணத்தைப் பெறவே முயலுவான். நிறுவனத்துக்குள்ளிருக்கும்

நெருக்கடிகளை அகற்றுவதற்குச் சிறந்த வழி வேதன உயர்வினை அறிவிப்பதே. தாராண்மைப் படுத்தும் சீர்திருத்தங்களோடு மக்கள் உடைமையான நிறுவனங்கள் பணிக்குழுவாட்சியின் கட்டுப்பாட்டிற்குட்படும் பொருளாதாரமாகவோ, தனியார் உடைமையின் ஒழுக்காற்றுக்குட்படும் ஓர் உண்மையான சந்தைப் பொருளாதாரமாகவோ இன்றி, இரண்டுங் கெட்டான் நிலையினை அடைந்து விட்டன. இதன் விளைவாக, சீர்திருத்தத்தினைப் புகுத்தும் எல்லா நாடுகளிலுமே வேதன வீக்கம் ஏற்பட்டுள்ளது. ஐயத்திற்கிடமின்றிப் புள்ளி விபரங்கள் காட்டுவது போன்று, உறங்கேரி உட்பட சீனா, சோவியத் யூனியன், போலந்து ஆகிய நாடுகளில் இந்நிலைமை காணப்படுகின்றது.

ஊழியர் – முகாமையானது வேதன ஒழுக்காற்றை மேலும் பலவீனப் படுத்தும். அதிகாரிகளை அவர்களது சொந்த உத்தியோகத்தர்களே தெரிவு செய்யும் ஒரு நிலைமையை நாம் இங்கு பார்ப்போம். அவ்வாறு தெரிவு செய்யப்படும் ஒருவன், வேதனங்களின் உயர்வினைத் தடை செய்வதன் மூலம் அவன் தன் மீது ஊழியருக்குள்ள நல்லெண்ணத்தை ஏன் இழக்கவேண்டும்? ஹங்கேரியில் அண்மையில் புகுத்தப்பட்ட ஊழியர் – முகாமை முறை இந்நாட்டில் வேதனங்களின் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தியுள்ளது. அடிப்படையானதும், உத்தியோகபூர்வமானதுமாகப் பிரகடனம் செய்யப்பட்ட ஊழியர் – முகாமை முறையினைப் பல தசாப்தங்களாகக் கொண்டுள்ள யூகோஸ்லாவியாவில் ஏனைய நாடுகளிலும் பார்க்க வேதன வீக்கம் மிக வேகமாக அதிகரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஊழியர் – முகாமைக்கு எதிரான அடுத்த முக்கிய வாதம் அரசியல் சார்ந்த ஒன்றாகும். உற்பத்தியானது கட்சிச் சச்சரவுகளில் சிக்கிவிடக் கூடாது என்பதைப் பல எதிர்க்கட்சிகள் கூறிவந்துள்ளதோடு, தொழிற்சாலைகளுக்குள் கட்சிக் கிளைகளை அமைப்பதற்கெதிராக ஒரு தடையையும் அண்மையில் பாராளுமன்றம் விதித்தது. இன்றைய நிலைமைகளில் ஹங்கேரிய நிறுவனங்களில் உண்மையான ஊழியர் – முகாமை தாபிக்கப்படுமானால், முகாமையாளர், கம்பெனிச் சபைகள் என்பவற்றுக்கான தேர்தல் கட்சிப் போராட்டத்திற்கு ஒரு களமாக மாற்றப்பட்டுவிடும். ஒவ்வொரு கட்சியும், கட்சிக் கூட்டுக்களும் தத்தமது வேட்பாளரை நிறுத்தி, அவர்கள் சார்பாகப் பிரசாரங்களையும் ஆரம்பித்து விடும். பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு முகாமையாளரும் ஒரு சிறுபான்மையினரின் எதிர்ப்பை எதிர்நோக்க நேரிடும். ஒருகட்சி அரசான யூகோஸ்லாவியாவில் இப்பிரச்சினை தலைதூக்கவில்லை. ஏனெனில், அங்கு நடைபெறும் தேர்தல் உண்மையானதல்ல. ஹங்கேரி ஓர் உண்மையான பல கட்சி நாடாக மாற்றப்படுமாயின், சுதந்திரமான முறையில் முகாமையாளரைத் தெரிவு செய்தல் கட்சிப் போட்டிக்கு இடமளிக்கும்.

அரசியல் சனநாயகத்திற்கு, அல்லது அதன் ஒரு முக்கிய அங்கமான கட்சிகளுக்கிடையிலான தேர்வு என்பதற்கு ஒரு மாற்று முறையினை விரும்புவோரே, "நேரடி" சனநாயகவிதியினை ஆதரிக்கின்றனர். பாராளுமன்ற சனநாயகத்திற்கு ஊழியர் - முகாமையினை ஒரு நிரந்தர மாற்றீடாகக் கருதுவோர், அது ஒரு பொருத்தமற்ற பலவந்தமான மாற்றீடு என்பதைக் காலப்போக்கில் உணருவர். உண்மையான பன்மை முறை இல்லாத நிலையில் ஊழியர் - முகாமையினை ஒரு சிறந்த மாற்றீடாகவோ, அல்லது ஒரு தந்திரோபாயமாகவோ தேர்ந்தெடுப்போர், அவ்வித செயற்றிறனற்ற மாற்று வழிகள் எமக்கு இனிமேலும் தேவையற்றன என்பதை உணரவேண்டும்.

## 1.6. சுருக்கம்: இரட்டைப் பொருளாதாரம்:

உறங்கேரியில் உருவாகியுள்ள இரட்டைப் பொருளாதாரத்தையும் அதன் அங்கங்களான அரசு, தனியார் துறைகள் என்ற இரண்டினையும் அடுத்த பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு ஏற்றே ஆகவேண்டும்.

அரசதுறையினது பங்கு படிப்படியாகவே குறைக்கப்படலாம். எனவே, இடைக்காலத்தில் அது திறமையுடன் செயற்படுவதை நாம் உறுதி செய்ய வேண்டும். எனினும், இதுபற்றி வீண் நம்பிக்கை கொண்டிருத்தல் கூடாது. அதனை உண்மையான ஒரு முயற்சியாக மாற்றுவதற்கு அதிசய மாத்திரைகள் ஏதும் கிடையாது. நாம் விரும்பினும், விரும்பாவிடினும் அது பல எதிர்க்கணியப்பண்புகளைக் கொண்டிருக்கவே செய்யும். எனவே, நிதி ஒழுக்காற்றின் மூலமும், பொருத்தமான பாராளுமன்ற மேற்பார்வையின் மூலமும் இந்த எதிர்க்கணியப் பண்புகளைக் குறைப்பதற்கும், தனியார் துறை நலன்களுக்கு மாறாக அரசதுறை பெருமளவு சாதனங்களை ஈர்த்துக் கொள்வதைத் தடுப்பதற்கும் நாம் முயலவேண்டும்.

தனியார் துறை செயற்படுவதற்குப் பொருத்தமான சூழ்நிலைகளை உருவாக்குவதோடு, அதனது துரிதமானதும் ஊட்டமானதுமான அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்குப் பொருத்தமான இறை, பணக்கருவிகளும் தேவைப்படும். அதே வேளையில், இந்த அபிவிருத்தியானது படிப்படியாகவும் காலப் போக்கிலுமே ஏற்படுமென்பதையும் நாம் உணரவேண்டும். தனியார் துறைக்கும், அரச துறைக்குமிடையிலான விகிதாசாரங்கள் தொடர்ந்து தனியார் துறைக்குச் சாதகமாக (இயன்றளவு வேகமாக) மாறிய போதும், அவையிரண்டும் சகவாழ்வு வாழ வேண்டிய காலம் நீண்டதாகவிருக்கும். இந்த ஒன்றியவாழ்வு முரண்பாடுகளையும், உராய்வுகளையும் கொண்டதாக-விருப்பினும், குறிப்பிட்ட காலத்திற்கு இது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும்.

## 2. உறுதியாக்கலுக்கான பொருளாதார அறுவைச்சிகிச்சை:

பின்வரும் இந்த ஆய்வு சுதந்திரமான தேர்தல் மூலம் புதிய அரசாங்கமொன்று உருவாக்கப்படுமெனவும், இவ்வரசு பாராளுமன்றத்தினது நம்பிக்கையையும் அதனூடாக பெரும்பான்மையான வாக்காளரது நம்பிக்கையையும் கொண்டதகாவிருக்குமெனவும் கருதுகின்றது. அதிமுக்கியத்துவம் வாய்ந்த இந்த அபிவிருத்திக்குத் தேவையான அரசியல் நிலைமைகளை ஆராய்வதோ, அவற்றினது எதிர்காலப் போக்கினை எதிர்வு கூறுவதோ இந்நூலின் நோக்கமன்று. பொருளாதாரக் கொள்கைக்கும், அரசியலுக்குமிடையிலான தொடர்பு இறுதி அத்தியாயத்தில் ஆராயப்படும். புதிய அரசாங்கம் செயல்படுத்த வேண்டிய உறுதியாக்கல் நிகழ்ச்சித்திட்டம் யாது என்ற பிரச்சினை குறித்தே இங்கு நான் நோக்கவுள்ளேன்.

தேவையான கருமங்கள் சிலவற்றை விரைவாக நிறைவேற்றுதல் வேண்டும் என்பதையும் அதேவேளை சிறுசிறு நடவடிக்கைகள் மூலம் இவற்றைச் சாதிக்க முடியாது என்பதையும் இந்த ஆய்வு விபரிக்கின்றது. பதிலாக, இந்நடவடிக்கைகள் ஒரேயடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். தேவையான எல்லா ஒழுங்கு விதிகளையும் எவ்வித தவிர்ப்புமின்றி ஒரே சூழலில் நடைமுறைப் படுத்தவேண்டுமென இங்கு நான் கூறவில்லை. கீழே தரப்பட்டுள்ள பட்டியல் எனது கருத்தினை விளக்குவதாகக் கொள்ளப்படவேண்டுமேயன்றி, ஒரு திட்டவட்டமான பிரேரணையாகக் கருதப்படக்கூடாது.

புதிய அரசாங்கம் தாபிக்கப்பட்ட ஒரு வருடத்திற்குள் "ஒரு தொகுப்பு" நடவடிக்கைகளை நிறைவேற்றுவது சாத்தியமானதாக இருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட திகதியில் பொருளாதார "அறுவைச்சிகிச்சை" ஆரம்பிக்கப்பட்டு, ஒரு வருடத்தினுள் அது பூர்த்தியடைய வேண்டும். இச் சிகிச்சையின் எதிர்வு கூறக்கூடிய சில கூறுகள் முன்னதாகவே மக்களுக்கு அறிவிக்கப்படவேண்டும். ஏனையன செயற்பாட்டின் போதே தோற்றம் பெறும். செயற்பாட்டின் போதும் அதன் பின்னரும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றிய விடயங்களும் அவ்வப்போது மக்களுக்கு அறிவிக்கப்படவேண்டும்.

மேற்படி சிகிச்சையும் அதனது முக்கியமான அரசியல், பொருளாதார கூறுகளும் அரசை உருவாக்கும் பொழுதே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டுமென்பது வெளிப்படையானதாகும். அத்துடன், இக்கூறுகள் புதிய அரசாங்கத்தினது பொருளாதாரத் திட்டத்துக்கான மூலக்கற்களுள் ஒன்றாக இருக்கும். இவற்றை நிர்ணயிப்பதற்கென ஒரு வருடகால அவகாசம் அரசாங்கத்துக்குக்

கொடுக்கப்படலாம். பல விற்பன்னர்கள் சேர்ந்து பலமாதகாலங்களுக்குச் செய்யவேண்டிய காரியத்தினை இங்கு முழுமையாக விளக்க முடியாது. எனவே, மிகமுக்கிய கொள்கைகள் சிலவற்றை இயன்றவரை தெளிவாக விளக்குவதே இங்கு எனது நோக்கமாகும். இத்தகைய உறுதியாக்கல் நிகழ்ச்சித் திட்டம் நூற்றிற்கும் மேற்பட்ட குறிப்பான பிரச்சினைகளை உள்ளடக்கியதாகவிருக்கும். இவ்வித நிகழ்ச்சித் திட்டம் பற்றிய மேலோட்டமான ஓர் ஆய்வென்றே இந்நூல் கருதப்படவேண்டும். இம்மேலோட்டமான ஆய்வுகூட சிலமுக்கியமான விடயங்களை முழுமையாகவே கைவிட்டுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிகளனைத்துமே விவாதத்துக்குட்பட்டன வெனினும், இவற்றுள் ஒன்றையேனும் கவனியாது விடமுடியாது என்பது எனது கருத்தாகும். தேர்தல் பிரசாரத்தின் போதான கொள்கை விளக்கங்களில் இவ்விடயங்கள் மூடிமறைக்கப்படலாம் என்பது அசாத்தியமானதொன்றல்ல. ஏதோ ஒரு கட்சி ஆகக்கூடிய வாக்குகளை எவ்வாறு பெறலாமென்பது பற்றி ஆலோசனை கூறுவது என்னுடைய நோக்கமன்று. ஓர் அரசியல் கட்சி தனது இக்கட்டான நிலையினை எந்தளவு முன்கூட்டியே வாக்காளருக்கு அறிவிக்க வேண்டும், எந்தளவினைப் பின்னர் கலந்துரையாடுவதற்கென விட்டு வைக்க வேண்டும் என்பது தொடர்பான ஒழுக்க நெறி, அரசியல் என்பன தொடர்பான விவகாரங்களில் பக்கம் சாரும் எண்ணம் எனக்கு இல்லை. உதாரணமாக, கூட்டுப் பேச்சுவார்த்தைகளில் தீர்க்கப்படுவதற்கான விடயங்கள் பற்றிய பட்டியலையோ, புதிய அமைச்சரவை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டிய விடயங்கள் பற்றிய இன்னொரு பட்டியலையோ நான் முன்வைக்கப் போவதில்லை. புதிய அரசாங்கத்தினது கருமங்கள் என்னவாக இருக்க வேண்டும் என்ற வினாவுக்கு மட்டுமே இந்நூல் விடை காண முயலுகின்றது.

இங்கு கூறப்படும் கருத்துக்களை ஏற்காத விமர்சகர்கள் பலர் இருப்பர் என்பது நிச்சயமானது. எப்பகுதி பற்றி இவர்கள் விமர்சனம் செய்ய வேண்டுமென்பது குறித்து என்னால் கூறமுடியாது. எனினும், இப்போதைக்கு இரண்டாந்தர விடயங்கள் ஒதுக்கிவைக்கப்பட வேண்டுமென்பதைக் கூற விரும்புகிறேன். இந்த இரண்டாந்தர விடயங்களுக்கான தீர்வுகள் குறித்துப் பல விற்பனர்களினது விரிவான ஆய்வுகள் பின்னர் மேற்கொள்ளப்படும். நியாயபூர்வமான அடிப்படை விடயங்கள் அரசியல், பொருளாதார விவாதங்களில் எடுத்துக் காட்டப்படவேண்டும்.

செயல்முறை பல பாகங்களைக் கொண்டது. இப்பாகங்களை ஒவ்வொன்றாக ஆராய்ந்து விட்டு, பின்னர் அவை ஒரே நேரத்தில் அமுலாக்கப்படவேண்டுமென்பதற்குச் சார்பாக விவாதிக்க உள்ளேன்.

## 2.1. பணவீக்கத்தை நிறுத்துதல்:

முதலாவதும், முக்கியமானதுமாக பணவீக்கம் ஒரு பெரும் பிரச்சினை என்பதை உணர்ந்து செயல் முறையானது அதற்கேற்ப அமையவேண்டும். இது எல்லோருக்கும் இலகுவில் விளங்கக்-கூடியஒன்றல்ல. பணவீக்கம் "பாதுகாப்பான கரங்களில்" இருப்பதாகப் பெருமளவான அரச அலுவலகர்களும், பொருளியலாளரும் கருதுவதால் இப்பிரச்சினையை முக்கியமானதாக அவர்கள் கருதுவதில்லை. விதியே ஹங்கேரி மீது பணவீக்கத்தை ஏவி விட்டுள்ளதென நம்புவதால், அதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாதது என்பது இவர்களது கருத்தாகும்.

அரசாங்கக் கட்சியோ, எதிர்க்கட்சியோ தேர்தலின் பின்னர் தாம் பதவிக்கு வந்தால் பணவீக்கத்தை ஒழிப்போம் என்ற தெளிவான வாக்குறுதியை வழங்கவில்லை.

நீதிஅமைச்சர் லஸ்வோ பெக்கேஸியினது ஒரு கூற்று பின்வருமாறு: "எதிர் வரும் வருடங்களில் பணவீக்கத்தை நீக்குவது சாத்தியமற்றது என்பது கவலைக்குரியதே. ஒரு புறத்தில், தன்னிச்சையான முன்னைய பொருளாதாரக் கொள்கைகளின் வெளிப்பாடான சமமின்மைகள், வினைத்திறன் இன்மை என்பவற்றின் ஒரு பரம்பரைச் சொத்தாக இது உள்ளது. மறுபுறத்தில், மீளமைப்புடன் கூடவரும் இயற்கையான சுகவீனமே பணவீக்கமாகும்." இக் கூற்றை என்னால் ஏற்க முடியாது. இப்போதைய நிதியமைச்சரும் அவருக்கு முன்னர் இப்பதவியை வகித்தோரும் "பணவீக்கம் இருக்கட்டும்" என்ற நோக்கில் செயற்பட்டமையே பணவீக்கத்திற்கான காரணமாகும். "பணவீக்கத்தை இங்கிருந்து அகற்றுவோம்" என்ற கொள்கையை, இப்போதைய நிதியமைச்சரும், அவரைத் தொடர்ந்து வருவோரும் கடைப்பிடித்தால் மட்டுமே பணவீக்கம் நீங்கும். பணவீக்கம் ஓர் இயற்கை அழிவல்ல; அது அரசாங்கத்தினாலும், அதற்குப் பின்னாலுள்ள அரசியல் சக்திகளினாலும் உருவாக்கப்படும் ஒன்றாகும். எனவே, அரசாங்கத்தாலும் அதற்குப் பின்னாலுள்ள இந்த அரசியல் சக்திகளாலும் மட்டுமே இதனை முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

சற்று வலுவானதாகவிருந்தாலுங் கூட இக்கூற்று, பணவீக்கச் செயல் முறையினை உருவாக்கும் ஒரே தாபனமான நிர்வாகமே அதனை இறுதியாக முடிவுக்குக் கொண்டுவரக் கூடியது என்ற வெளிப்படையானதும், தீவிரமானதுமான முடிவுக்கு இட்டுச் செல்லக்கூடாது. பல வீரர்கள் கலந்து கொள்ளும் ஒரு விளையாட்டே இது: நிதிச்செயற்பாட்டினை நிர்ணயிப்பதில் பங்கு கொள்ளும் எல்லோரது கைகளிலுமே பணவீக்கம் தங்கியுள்ளது. பொதுமக்களும் கூடத் தமது பொருளாதாரத்திட்டங்களை வரைவதில் எதிர்கால

விலையேற்றங்களைக் கவனத்திற்கொள்ள வேண்டியிருப்பதால், விரும்பியோ விரும்பாமலோ பண வீக்கத்திற்குக் காரணமாக உள்ளனர். பணவீக்கச் செயல்முறை இருக்கும் காலங்களில் இவ்வித பணவீக்க எதிர்பார்க்கைகள் தோன்றவே செய்யும். துரதிர்ஷ்டவசமாக ஹங்கேரியில் இது ஏற்கனவே தோன்றிவிட்டது. குறிப்பிட்ட மட்டத்திற்குப் பின்னர், இவ்வெதிர்பார்க்கை தன்னையே உயர்த்திக் கொள்ளும் ஒன்றாக மாறிவிடுகின்றது. வேதனம் உழைப்போர் 20 வீதமான பணவீக்கத்தை எதிர்பார்த்தால், 20 வீதத்திற்கும் குறையாத வேதன உயர்வினைப் பெற்றுக் கொள்ள முயலுவர். இவ்வாறு பல பாத்திரங்கள் இடம் பெறும் ஒரு நாடகத்தில், சிறு பாத்திரங்களை ஏற்போரைப் பிரதான பாத்திரமேற்கும் நட்சத்திரங்களினின்றும் வேறுபடுத்த வேண்டும். எந்த அமைப்பாயினும் சரி, பணவீக்கமென்ற நாடகத்தில் அரசாங்கமே அதிலும் விசேடமாக நிதி நிர்வாகமே அதிமுக்கிய பாத்திரத்தை ஏற்கின்றது. முதலாளித்துவ முறையிலும் பார்க்க விலைகள், வேத்னங்கள், கடனமைப்பு, முதலீடுகள், வேறு பொருளாதாரச் செயற்பாடுகள் என்பவற்றை மையப்படுத்திய ஒரு சோஷலிசப் பொருளாதாரத்தில் அரசாங்கம் பெரும் செல்வாக்குக் கொண்டுள்ளமையால், அரசாங்கத்தின் பங்கு கூடுதலாகவே இருக்கும்.

வங்கித்தாள் வெளியீட்டு அச்சகம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதோடு, தனது வரவிற்கும் செலவீட்டிற்குமிடையேயுள்ள இடைவெளியை நிரப்புவதற்கு அது வங்கித்தாள்களை அச்சிடுகின்றது. மேலும், அரசதுறை விரிவானதாகவிருக்கும் ஒரு நாட்டில், நட்டத்திலியங்கும் நிறுவனங்கள் தொடர்ந்து உற்பத்தியில் நிலைக்கவும், உயர்ந்து செல்லும் வேதனங்களை வழங்கவும் அரசாங்கம் தாள்வெளியீட்டை மேற்கொள்கின்றது. எனவேதான், பணவீக்கத்திற்கு அரசாங்கமே பொறுப்பாகவிருக்கின்றது.

புகழ்வாய்ந்த பொருளியலாளர்கள் (அவர்களிற்பலர் சீர்திருத்தவாதிகளுங்கூட) பணவீக்கக் கொள்கையினை அரசாங்கம் எவ்வித தயக்கமுமின்றி மேற்கொள்ளலாமெனச் சிபாரிசு செய்தனர். இந்த சிபாரிசு பிழையானதென்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அரசாங்கமும் தானே தனது ஆலோசகர்களையும், தனது கொள்கைகளை ஊக்குவிப்போரையும் தெரிந்தெடுக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

உத்தியோகபூர்வ புள்ளி விபரங்கள் காட்டுவதிலும் பார்க்க, ஹங்கேரியில் இன்று உயர்வான பணவீக்கம் நிலவுகின்றது என்பது எனது திடமான நம்பிக்கை. உத்தியோகபூர்வ கணிப்பு தனியார் துறை விலைகளுக்கு, அதிலும் குறிப்பாக உத்தியோக பூர்வமாக பதிவு செய்யப்படாத நிழற் பொருளாதாரத்தின் விலைமட்டத்திற்குப்

போதியளவு நிறையளிப்பதில்லை. அரசாங்கத் துறையிலும் பார்க்க இங்கு பணவீக்கம் உயர்வானது. மொத்த நுகர்வில் தனியார் துறை நிரம்பல் செய்யும் பொருட்கள், சேவைகளின் பங்கு உயர்வாக இருப்பதோடு, அது அதிகரித்து வருவதையும் நாம் இங்கு மறக்கக்கூடாது. பணவீக்கம் பற்றிய அறிக்கையில் மேலும் பல திரிபுகள் காணப்படுகின்றன. அரசாங்கத் தாபனமான மத்திய புள்ளிவிபர அலுவலகத்திற்குப் புறம்பாகப் பணவீக்கத்தினைச் சுதந்திரமான முறையில் கணிப்பதற்கு ஓர் ஆய்வுக் குழுவினை உருவாக்க இதுவரை எவரும் முன்வராமை வருந்தத்தக்கதே. இவ்வித குழு ஒன்று, நன்கு பரீட்சிக்கப்பட்ட பொருளியல், புள்ளிவிபரத் தகுதி விதிகளைக்கையாண்டு, கோடிக்கணக்கான சாதாரண மக்கள் கூறும் உத்தியோக பூர்வ அறிக்கை காட்டுவதிலும் பார்க்கப் பணவீக்கமானது வேகமாக உயருகின்றது என்ற கூற்றினைச் சார்பற்ற முறையில் ஆராய வேண்டும்.

கணிப்புத் தொடர்பான பிரச்சினைகளை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு, உண்மையிலேயே பணவீக்கம் வருடாந்தம் 15 வீதத்திற்கும் 20 வீதத்திற்குமிடைப்பட்டது எனக்கருதுவோம். இரு காரணங்களுக்காக இது ஒரு கெடுதியான பிரச்சினையென நான் கருதுகிறேன்.

1. பணவீக்கம் ஈவிரக்கமின்றி மக்களைப் பாதிக்கின்றது. இது தொடர்ச்சியான அமைதியின்மைக்கு இடமளிக்கின்றது. மக்கள் தாம் கஷ்டப்பட்டுச் சேகரித்த சேமிப்புக்கள் கரைவதை உணருகின்றனர்.

   மறுபங்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இன்று அடிக்கடி கூறப்படுகின்றது. ஆனால், பணவீக்கம் தானுகவே ஒருவித நிரந்தரமான மறு பங்கீட்டை ஏற்படுத்துகின்றது. இது மிகவறிய மக்கள், ஊதியம் உழைப்போர், ஒய்வூதியம் பெறுவோர் என்போரையே பெரிதும் பாதிக்கின்றது. விதவைகளும், வயது முதிர்ந்தோரும் தமது ஓய்வூதியங்கள் ஒரு சில ஆண்டுகளில் கரைவதைக் காணுகின்றனர். குழந்தைகளுக்கான படிகள், குடும்ப உதவிப்படிகள் என்பவற்றின் கொள்வனவுச் சக்தி தொடர்ந்து வீழ்ச்சியடைகின்றது. விலைகளுக்கும், பணவேதனங்களுக்குமிடையிலான இப்போட்டியில், போதியளவு தாபனரீதியான உதவியும், அரசியல் செல்வாக்கும் இல்லாதோரே தோல்வியுறுகின்றனர். இவர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கையாண்டு, அதிகரிக்கும் விலைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் வேதன உயர்வினைப் பெறமுடியாது இன்னலுறுகின்றனர்.

   நலன்சார் கொள்கை வறியமக்களுக்கு எவ்வாறு உதவக்கூடும் என்பது பற்றிப் பல கட்டுரைகளை வாசித்துள்ளதோடு, பல அரசியல் கூற்றுக்களையும் கேட்டிருக்கின்றேன். இது பற்றிப் பின்னர் ஆராய்வோம், இது பற்றி குறிப்பிட்ட ஒரு நிலைப்பாட்டைக் கொள்ளாது, ஒரு விஷயத்தை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

பெரும்பாலான இக்கூற்றுக்கள் பணவீக்கப் பிரச்சினையை முற்றாகவே குறிப்பிடாது விடுதல் ஆச்சரியத்திற்குரியதே. இன்று ஹங்கேரியில் நலன்சார் கொள்கை பற்றிப்பேச முன்வருவோர் பணவீக்கம் பற்றிய தமது கருத்தினை வெளியிடுமாறு கேட்கப்படவேண்டும். அது தொடர்ந்து இருப்பதை எவ்வித சந்தடியுமின்றி அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்களா? அதிலும் முக்கியமாக, பணவீக்கத்தை மேலும் தூண்டும் நடவடிக்கைகளை அவர்கள் முன்வைக்கின்றார்களா?

2. பகுத்தறிவான பொருளாதாரக் கணிப்பீடுகளைச் சாத்தியமற்றதாக்குவதன் மூலம், பணவீக்கமானது பொருளாதார அமைப்பின் பொருளாதார மாற்றுருவம் பெறல் என்ற அடிப்படை நோக்கத்திற்கு முரணாகச் செயற்படுகின்றது. விலைகளிலேற்படும் சார்பு மாற்றங்களின் விளைவுகள் விலைமட்டத்திலேற்படும் பொது அதிகரிப்பினூல் பாதிக்கப்படுவதனால், விலைகள் தமது குறிகாட்டும் பணியினைச் செய்ய முடியாது போகின்றது. A, B என்ற இரு பொருட்கள் ஒன்றுக்கொன்று பதிலீடுகளென்ற நிலையில், குறிப்பிட்ட எல்லைப்பதிலீட்டு விகிதத்தில் B யோடு ஒப்பீட்டு ரீதியில் A மிக மலிவானதாக இருக்குமாயின், பொருளியல் விதிகளின்படி A யினது விலை உயர்த்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யும் போது, B யினது விலை மாறாதிருக்குமென்ற உள்ளார்ந்த எடுகோள் இதன் பின்னணியில் இருக்கும். எனினும், A பொருளினது விலையதிகரிப்பைத் தொடர்ந்து, B யினது விலை பணவீக்கத்தால் உயருமாயின், சார்பு விலை மாற்றம் அர்த்தமற்றதாகி விடும்.

ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் உற்பத்தியினது இலாபத்தின் மூலமே உற்பத்தித் திறன் வெளிப்படுகின்றது. அதேவேளையில், திறனற்ற உற்பத்தி நட்டத்திற்கு இட்டுச்சென்று, அவ்வித உற்பத்தியாளன் காலப்போக்கில் சந்தையை விட்டு வெளியேற்றப்படுகிறான். சந்தைப் பொருளாதாரம் திறமையாகச் செயற்படுவதற்கு ஒரே வழி இதுவே. ஓர் உண்மையான சந்தைப் பொருளாதாரத்திற் கூட இவ்வித தேர்வு நூறு வீதம் நடப்பதில்லையெனினும், அது நடைபெறுவதற்கான சாத்தியக்கூறு மிக உயர்வானதாகும். ஆனால், பணவீக்கச் சூழ்நிலையில் இவ்விதத் தேர்வு மழுங்கி விடுகின்றது. ஏனெனில், திறமையான உற்பத்தியும், திறமையற்ற உற்பத்தியும் அங்கு தொடர்ந்து நடைபெறும். தொழிலினது தரம் வீழ்ச்சியடைந்தாலுங்கூட, ஓர் உற்பத்தி நிறுவனம் காலப்போக்கில் விலையினை உயர்த்துவதன் மூலம் தனது செலவுகளை மீளப்பெறலாம். இவ்வாறு விலைகளை உயர்த்த விரும்பும் நிறுவனங்கள் தாம் சிலவேளை திறமையாகச் செயற்படாதிருக்கக்கூடும் என்பதைக் கவனியாது, செலவு

உயர்வினைக் காரணங்காட்ட முற்படுகின்றன. தனியார் துறையின் பாதீட்டு வரையறைகளை பணவீக்கம் மீறச்செய்கின்றது. உறங்கேரியில் அரசஉடைமை நிறுவனத்தோடு ஒப்பிடுகையில், தனது தொழிலைத் திறம்பட ஆற்றாத தனியார் வர்த்தகன் ஒருவன், தனது வாடிக்கையாளரின் அதிருப்திக்கு உள்ளாகுகின்றான் எனக்கொள்வோம். ஏதோ ஒரு வகையில் அவன் தனது விலையினை உயர்த்துகின்றான். இவ்விடயத்தில் நாம் அந்த வர்த்தகன் பேராசை பிடித்தவனென்றோ, ஒரு சுறா என்றோ குற்றஞ்சாட்ட முடியாது. தம்மைத் தாமே கட்டுப்படுத்தும் துறவிகளது நடத்தையின் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயற்பட முடியாது. இதிலுள்ள பிரச்சினை யாதெனில், பணவீக்கச் செயற்பாடு பெருமளவு பணத்தினை உருவாக்குவதால், தனியார் வர்த்தகர்களின் விருப்பத்திற்கேற்ப தரங்குறைந்த சேவைகளுக்குக் கூட உயரிய விலைகளைச் செலுத்த ஹங்கேரிய வாடிக்கையாளர் தயாராக உள்ளனர்.

மேற்படி கூற்று ஹங்கேரிய அரச துறைக்கு இன்று மிகவும் பொருந்தக்கூடியது. இங்கு ஒரு விதமான இசைக்கேற்ற நடனம் நடைபெறுவதை நாம் அவதானிக்கலாம். இதில் பங்குகொள்ளும் அங்கங்கள் வருமாறு:-

உத்தியோகபூர்வ விலைகளைக் குறிக்கும் விலைக்கட்டுப்பாட்டு அலுவலகம்; கட்டில்லா விலைகளில் விற்கக்கூடிய பொருட்களின் விலைகளை நிர்ணயிக்கும் அரசஉடைமை உற்பத்தி நிறுவனங்கள்; அரசினது பணத்தை வழங்கும் வணிகவங்கி; பணத்தைச் சுழற்சியிலிட்டு அதன் பங்கீட்டை ஒழுங்குபடுத்தும் தேசிய வங்கி; பாதீட்டுத் திட்டத்திற்குப் பொறுப்பானதும், பொதுவாக வருவாயிலும் கூடிய செலவினங்களைக் கொண்டதுமான நிதியமைச்சு என்பனவாகும். இறுதியாக வரும் ஆறாவது அங்கமானது, அதிமுக்கியத்துவம் வாய்ந்ததான அரசாங்கமும், அதற்குப் பின்னணியிலிருக்கும் அரசியல் அதிகாரங்களுமாகும். இந்த ஒவ்வொரு அங்கத்தினைச் சார்ந்தோரும் தாமே பணவீக்கத்தை ஏற்படுத்தும் அதேவேளையில், இதே குற்றத்திற்காக மற்றையோரைச் சாடவும் செய்கின்றனர். மேலே குறிப்பிட்ட அனைத்தும் உண்மையில் அரசாங்கத்தின் பல்வேறு அங்கங்களே. இவை ஒன்றிலிருந்து ஒன்று சுதந்திரமாக இல்லாததோடு, பகுதி 2.1. இல் கூறப்பட்ட “அரசாங்கத்துறை” என்பதில் அடங்குகின்றன.

பணிக்குழுவாட்சி சார்ந்த அரசஉடைமையானது, பொருளாதாரத்தில் முக்கிய துறையாகவிருக்கும்வரை, அரசஉடைமை நிறுவனங்களின் மீது இறுக்கமான பாதீட்டுக் கட்டுப்பாடுகளை அமுலாக்குதல் சாத்தியமற்றது. இந்த

உண்மையினைச் சமூகவியல் காரணிகளினடிப்படையில் விளக்கலாம். அரசு தனது நிறுவனங்களினது முகாமையாளர், வேறு பதவி வகிப்போர் ஆகியோரது பதவிகளை விரும்பியோ, விரும்பாமலோ உறுதிப்படுத்த வேண்டியுள்ளது (இது பற்றிப் பின்னர் ஆராய்வோம்). பணவீக்கத்தின் விளைவுகளும் இதேபோன்ற சமூகவியல் காரணிகளுடன் தொடர்புள்ளனவே. ஏற்கனவே மென்மையாகவிருக்கும் பாதீட்டுக்கட்டுப்பாடு பணவீக்கத்தினால் மேலும் மென்மையடைகின்றது. எனவே, அரசஉடைமை நிறுவனங்கள் செம்மையாக செயற்படுகின்றனவா என்பதை நிர்ணயிப்பதும், அதிகரிக்கும் செலவுகளுக்கான காரணங்களை அறிவதும் அசாத்தியமாகின்றது. சில காரணிகளின் விலைகள் உயரும்பொழுது ஏனையவற்றின் விலைகள் உயராதிருந்தால் மட்டுமே செலவுகள் பற்றிய ஆய்வு, உற்பத்தித்திறன் பற்றிய உண்மைகளை அறிய உதவும். எல்லாச் செலவுகளும் எல்லா விலைகளும் உயரும் பொழுது, அரசஉடைமை நிறுவனங்களை மதிப்பீடு செய்தல் இயலாது.

ஓர் அரசியல்வாதி, அல்லது பொருளியலாளன் எந்தளவு சந்தை சார்பானவனோ, அந்தளவிற்கு அவன் பணவீக்கத்திற்கு எதிரானவனாக இருக்கிறான். மாறாக, அரச சார்பானவனாக-விருந்தால் பணவீக்கம் பற்றி அக்கறை காட்டமாட்டான் என்பது உலகைச்சுற்றி நோக்குவோமாயின் புலனாகும்.

எனவே, இந்தச் செயற்பாட்டின் அறுவைச் சிகிச்சையின் அடிப்படைக் கருமங்களிலொன்று பணவீக்கச் செயற்பாட்டினை முடிவிற்குக் கொண்டு வருதலாகும். மொத்த நிரம்பலும் மொத்தக் கேள்வியும் சமநிலைப்படுத்தப்படவேண்டும். இந்நிலையில் விலைகள் தன்னிச்சையாக நிர்ணயிக்கப்பட விடுவோமாயின், ஏதோ ஒரு விலையில் சமநிலை ஏற்படும். மேற்படி தொடர்பினது மூன்று மாறிகளை மேலும் குறிப்பாக ஆராய்வோம்.

1. எதிர்பார்க்கப்பட்ட மொத்த நிரம்பலை முன்னதாகவே சரியாக மதிப்பிடுதல் இயலாததொன்று. உற்பத்தி நடைபெறும் பொழுது, சில துறைகளில் உற்பத்தி குறைந்து வேறு சிலவற்றில் உற்பத்தி கூடலாம். பல கிளைகளிலும், நிறுவனங்களிலும், பிரதேசங்களிலும், காணப்படும் ஊழியத்தட்டுப்பாடு, வேறு சிலவற்றில் காணப்படும் மிகை ஊழியத்திற்குத் தொழில் வாய்ப்பு அளிக்கலாம். இது ஊழியத்தையும் வேறு சாதனங்களையும் மீள் ஒதுக்கீடு செய்ய உதவுகின்றது. பகுதி 1.1 இல் கூறப்பட்டவை சரியாக அமுலாக்கப்படுமாயின், தனியார்துறைச் செயற்பாட்டிற்கு அது சாதகமாகவிருக்கும். உறுதியாக்கல் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் தனியார் உற்பத்தி

மீது பாதகமான விளைவினைக் கொண்டிருத்தல் கூடாது. மேலே கூறியவற்றினின்றும் மொத்த மட்டத்தில் அதாவது தேசீயப் பொருளாதார மட்டத்தில் உறுதியாக்கல் செயற்பாடு தொடங்கிய பின்னர் நிரம்பல் ஓரிரு வருடங்களுக்கு மாறாதிருக்குமெனக் கொள்ளலாம்.

2. மொத்தக் கேள்வியானது செயற்பாட்டின் ஆரம்பத்திற் போன்றே இருக்கும். மாற்றம்பெறும் காலப்பகுதியில் அது சற்று அதிகரித்தல் தவிர்க்க முடியாதது. செயற்பாடு ஆரம்பித்த பின்னர் அதனைக்கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவருதல் இன்றியமையாதது. செயற்பாட்டின் ஓர் அடிப்படை அம்சம், மொத்தக் கேள்வியையும், அதன் பிரதான கூறுகளையும் கட்டுப்படுத்தலாகும். இது பகுதி 2.3 இல் விரிவாக ஆராயப்படும்.

3. மொத்த நிரம்பல் தரப்பட்டு, அதனை எதிர்நோக்கும் மொத்தக் கேள்வியும் தரப்படுமாயின், கேள்வியும் நிரம்பலும் சமநிலையடையும் சராசரி பொதுவிலைமட்டம் யாது என்ற வினா எழுகின்றது. இதனை எவருமே கூற முடியாது என்பது எனது அபிப்பிராயமாகும். நான் முன் வைக்கும் நடவடிக்கைகள், சோவியத் யூனியனில் பல முறையும், கிழக்கைரோப்பிய நாடுகளில் ஓரிரு முறையும் நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை ஒத்தனவல்ல. அந்த நடவடிக்கைகள் விலை, செலவு என்பவற்றின் இடைத்தாக்கங்களை முன்னதாகவே நிர்ணயிக்க முயன்றன. கோடிக் கணக்கான விலைகளை விலையதிகாரிகளின் செயலகங்களில் முன்னதாகவே நிர்ணயிப்பது எமது நோக்கமல்ல. இவை சந்தையால் இயல்பாகவே நிர்ணயிக்கப்படவேண்டும்.

இன்றைய விலைமட்டத்திலும் பார்க்க உயர்ந்த ஒரு சராசரி விலை மட்டத்தினை இது உருவாக்குமென எதிர்பார்க்கலாம். ஆரம்பந் தொட்டே அரசாங்கம் பணவீக்கத்திற்கெதிரான கொள்கையினை இறுகப்பிடிக்குமாயின் இவ்விலையதிகரிப்பு மீண்டும் ஏற்படாது தடைசெய்யலாம். செயற்பாட்டின் விளைவாக ஏற்படும் விலையேற்றம் பணவீக்கத்திற்கு இட்டுச்செல்லாது, இவ்விலையேற்றம் சிகிச்சைக்கு முன்னைய ஆண்டுகளிலிருந்த சராசரி பணவீக்கத்திலும் உயர்வாக இருந்தாலுங்கூட, பின்னர் இது அதிகரிக்கும் வீக்கத்தினை ஏற்படுத்த மாட்டாது. பணவீக்கம் இயக்கச் செயற்பாட்டிற்குரியது என்பதை நாம் தெளிவாக உணரவேண்டும். விலைகள், வேதனங்கள், செலவுகள் என்பவற்றின் ஏற்றம் நீக்கப்படுமாயின், பணவீக்கத்தினைத் தவிர்க்க வாய்ப்புண்டு. நாம் செய்ய வேண்டியதும் இதுவே.

## 2.2 பாதீட்டு சமநிலையினைப் புனரமைத்தல்

இங்கும் இறைச் சமநிலையின்மையினைத் தீர்க்க முடியாது என்ற ஒரு இயலாத்தன்மை நிலவுகின்றது.

இது தொடர்பாக பல்வேறு வெளிநாடுகளின் உதாரணங்கள் உள்ளன. இவற்றுள் ஒன்று, கெடுதியானதும் தொடர்ச்சியானதுமான அமெரிக்கப் பாதீட்டுக் குறைநிலையாகும். இப்பிரச்சினையினை அமெரிக்கரே தீர்க்க முடியா விட்டால், உறங்கேரியராகிய நாம் எவ்வாறு தீர்க்க முடியும்? அமெரிக்காவினது நிலைமை ஹங்கேரிய பிரச்சினைகளினின்றும் அடிப்படையிலேயே வேறுபட்ட ஒன்றாகும். அமெரிக்காவைப் பற்றிப்பேசும் பொழுது, ஏறத்தாழ எல்லா அமெரிக்கர்களுமே பாதீட்டுக் குறைநிலை மோசமானதொரு பிரச்சினை என்பதை ஏற்கின்றனர். எனினும், இதனைத் தீர்ப்பதற்கான ஒரு வழியினைப் பொறுத்தவரை, அமெரிக்கப் பொது மக்களிடையேயும், அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் காங்கிரசிலும் வேறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. சில குழுவினர் வரிகளை உயர்த்த வேண்டுமெனக்கூற, வேறுசிலர் இதனைத்திட்டவட்டமாக நிராகரிப்ப தோடு, இக்குறை நிலையின் பாதகமான விளைவுகளைத் தாங்கிக் கொள்ளவும் தயாராக உள்ளனர்.

அமெரிக்காவை விட வேறு பல முதலாளித்துவ நாடுகளிலும் பாதீட்டுக் குறைநிலைகள் பாரதூரமான பிரச்சினையாக இருந்து வந்துள்ளன; இன்றும் உள்ளன. ஒரு சில முதலாளித்துவ நாடுகள் பாதீட்டுக் குறைநிலை இன்றியே தமது பொருளாதாரத்தினை நிர்வகித்துள்ளன என்பதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

நிலுவையான பாதீட்டின் நன்மைகள், குறைநிலை ஏற்படும் போது சமநிலையினை மீண்டும் ஏற்படுத்துதல் என்பன மேற்கத்திய பொருளியலாளரிடையே சர்ச்சைக்குரியனவாக உள்ளன. நவீன முதலாளித்துவப் பொருளாதாரங்களின் வேறுபட்ட பாதீட்டுக் கொள்கைகள் பற்றி தீர்ப்பு அளிப்பது, எமது இந்த ஆய்வின் நோக்கமல்ல. பாதீட்டுச் சமநிலையினைப் பாதுகாத்தல் சாத்தியமற்றது என்பதற்கோ, நிலுவையான பாதீடு ஏற்கமுடியாததும், அடைய முடியாததுமான ஒன்று என்பதற்கோ முதலாளித்துவத்தின் வரலாற்றில் ஆதாரமில்லை. நவீன முதலாளித்துவத்தைக் குறை கூறுவதை விடுத்து, எமது சொந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்தவேண்டிய காலம் வந்துவிட்டது.

உறுதியாக்கல் செயற்பாட்டின் போது தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதீட்டுச் சமநிலை ஏற்படுத்தப்படல் வேண்டும். பல ஆண்டு காலப் பாதீட்டுச் சமநிலையின்மையின் பின்னர் வரவுக்கேற்பச் செலவு செய்யும் இந்த வாய்ப்பினைத் தவறவிடக் கூடாது.

பொதுச் செலவீட்டினைக் குறைக்க வேண்டுமென்பது பாதீட்டுச் சமநிலை பற்றிய விவாதங்களிலும், அரசியல் விவாதங்களிலும் அடிக்கடி கூறப்படும் ஒன்றாகும். செலவீடு குறைக்கப்பட-வேண்டுமென்பதை நான் முற்றாக ஏற்கின்றேன். எனினும், அதனோடு தொடர்புள்ள வேறு கருமங்கள் பற்றி இச்சந்தர்ப்பத்தில் ஆராய நான் விரும்பவில்லை. சில செலவீடுகளை வெகுவாகக் குறைத்தல் (உ+ம். மானியங்களை நீக்குதல்) சிகிச்சையின் ஓர் அம்சமாகும். இக்குறைப்பை மட்டும் நாம் ஏற்றாலுங்கூட, அரச நிர்வாகம், இராணுவம் என்பவற்றுக்கான செலவுகள், அரசாங்கத்தினதும் அரசதுறையினதும் வெளிநாட்டுக் கடன் மீளச்செலுத்துதல், பொருளாதார நலன்சார் செலவுகள் என்பவற்றுக்கான பாதீட்டுச் செலவுகளை நாம் எதிர்நோக்க வேண்டியிருக்கும். இவ்வருடாந்தச் செலவீடுகளை எதிர் கொள்ளத் தேவையான வரிவருவாயியினை வருடாந்தம் திரட்டவேண்டியிருக்கும். சிகிச்சைக்கான ஆயத்தங்களைச் செய்யும் போது, எதிர்பார்த்ததிலும் கூடுதலான செலவீட்டுக்குறைப்பு ஏற்படுமெனக் கருதுவது தவிர்க்கப்படல் வேண்டும். ஓர் அரசியல்வாதி மக்களது நல்லெண்ணத்தைப் பெற இது உதவலாம். ஏனெனில், அரச வருவாய்களை அதிகரிப்பதிலும் பார்க்க, அதனைக் குறைப்பதை ஆதரிப்பவனுக்கே மக்களது ஆதரவு கிடைக்கும். செலவீட்டிற்குத் தேவையான வருவாயியினைத் திரட்டுவதைச் சிகிச்சைத் திட்டத்தின் மூலம் நிர்ணயிக்க வேண்டும்.

இவையனைத்திற்குமே வரியமைப்பினை மாற்றியமைத்தல் இன்றியமையாதது. ஹங்கேரிய வரியமைப்பு இன்று ஒரு சோஷலிசப் பொருளாதாரத்தினது மறுபங்கீட்டு அடிப்டையொன்றினையும், ஒரு வறிய மூன்றாம் உலக நாட்டினது வரிமுறையின் பலவீனத்தினையும், ஒரு ஸ்கேன்டினேவிய சமூகநலவரசின் விருத்திமுறை வரித்தத்துவத்தினையும் கொண்ட ஒரு கலவையாக உள்ளது. சமகால மேற்கத்திய மூலதனச் சந்தைபற்றி ஆராய்ந்த பொழுது, முன்னைய அத்தியாயத்தில் ஹங்கேரியில் நவீன முதலாளித்துவம் எவ்வாறு போலியாகப் பிரதிசெய்யப்பட்டுள்ளது என்பதைப்பார்த்தோம். ஹங்கேரியினது வரிப்பிரமாணங்களை ஆக்கியோர், பொருளாதாரத் தலைமைத்துவமும், பாராளுமன்ற உறுப்பினர்களும், பொது மக்களில் ஒரு பகுதியினரும் அதனை ஏற்கச் செய்துள்ளமையிலும் இதே தன்மையினைக் காணலாம். ஹங்கேரி ஒரு சிறிய சுவீடன் போன்று செயற்படவேண்டுமென அவர்கள் விளக்கினர். சுவீடனின் உயர்ந்த வரிகள் கழிக்கப்பட்டதாகவே ஹங்கேரிய வேதனங்கள் காணப்-படுகின்றன என்ற கசப்பான ஒரு புடாபெஸ்ட் ஹாஸ்யத்தினை இங்கு நினைவுகூறலாம். துரதிர்ஷ்டவசமாகச் சில மேற்கத்திய அவதானிகளும் உறங்கேரிய வரியமைப்பினை இந்த நாட்டின் மேற்கத்திய மயப்படுத்தலின் ஓர் அடையாளமாக ஏற்றுக்கொண்டு விட்டனர்.

உறுதியாக்கலின் ஓர் அங்கமாக புதியதொரு வரியமைப்பினை நாம் உருவாக்க முயலும் போது, பழைய வரியமைப்பினை முற்றாகவே நீக்கி விட்டு, அதனைப் புதிதாகவே ஆரம்பிக்க வேண்டும். நடைமுறையிலில்லா விடினும், எமது கற்பனையிலாவது இது இருக்கவேண்டும். புதிய வரிமுறையின் அடிப்படையான விதிகளை நாம் முறையாகச் சிந்திக்க வேண்டும். வரியமைப்பினைத் திருத்தியமைக்கும் போதும், உறுதியாக்கல் செயல் முறைக்கான ஆயத்தங்களைச் செய்யும் போதும் குறிப்பாகக் கவனத்திலெடுத்துக்கொள்ள வேண்டிய சில விதிகளை இங்கு நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

வரிகளை எங்கு "பெரியளவில்" திரட்ட முடியுமோ, அவற்றிற்கு முதலிடம் கொடுத்து, ஓர் எளிமையான வரி முறையினை உருவாக்கவேண்டும். வெளிப்படையாக ஒழுக்க நியதியற்றதாக இது தோன்றியபோதும், ஒழுக்கம், அரசியல் என்பன சம்பந்தமான நிபந்தனைகள் இதில் இருக்கவே செய்கின்றன.

நாம் ஆராய்வது ஸ்கேண்டினேவியாவைப் பற்றியல்ல; ஹங்கேரியைப் பற்றியே. அரசு மக்களுக்கே உரியது என மேற்கொள்ளப்பட்ட கடந்த கால உத்தியோகபூர்வ பிரசாரங்களை மக்கள் நம்பவில்லை. எவனாவது அரசினை ஏமாற்றுவானாயின் அல்லது அரச சொத்தினைக் களவாடுவானாயின் அல்லது தனது கடமைகளைச் செய்வதினின்றும் தவறுவானாயின் அது வெட்கப்படவேண்டிய ஒன்றாகவன்றி, போற்றப்பட வேண்டிய ஒன்றாகப் பொதுவாகக் கருதப்பட்டது என்ற உண்மையை நாம் ஏற்கவேண்டும். இவ்வாறு செய்யாதோர் ஏமாற்றுக்காரர்கள் எனவும் கருதப்பட்டனர். அரசாங்கப்போக்குவரத்துச் சாதனங்களில் கட்டணம் செலுத்தாது பிரயாணம் செய்வது பற்றி இளைஞர் பெருமையடித்துக்கொள்வது சர்வ சாதாரணமாகவிருந்தது. இப்படியான நடத்தை கடந்த சில தசாப்தங்களில் வளர்ந்தோரிடையிலும் பரவத்தொடங்கியது. எத்தனை பெரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டாலும், இவ்வித நடத்தைகள் உடனடியாக மாறுமென எதிர்பார்ப்பது பகுத்தறிவற்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் திறைசேரியினைக் கட்டுப்படுத்த ஆரம்பித்த உடனேயே இம்மாற்றம் தோன்றி விடாது; இதற்கு எவ்வளவு காலம் செல்லுமென்பதையும் எவரும் கூறமுடியாது. அடுத்த இரண்டு, அல்லது மூன்று ஆண்டுகளில் (இந்த நூலின் கால நீட்சியும் இதுவே) இம்மாற்றம் ஏற்படாது என்பதை மட்டும் திட்டவட்டமாக இங்கு கூறலாம்.

எனவே, பாதீட்டு வருவாயினைப் பற்றிச் சிந்திக்கும் பொழுது, கணிசமான அளவு மக்கள் வரிகளைத்தவிர்க்க முயலுவர் என்பதை நாம் உணரவேண்டும். இயன்றளவிற்கு மக்கள் தமது வருமானத்தைக்- குறைத்தே காட்டுவர். மேற்கத்திய நாடுகளிலும் கூட மக்கள் இவ்வாறே நடந்து கொள்கின்றனர். ஆனால், இதனது தீவிரம் நாட்டுக்கு நாடு

வேறுபடலாம். வடக்கிலும் பார்க்கத் தெற்கு ஐரோப்பாவிலேயே இப்பிரச்சினை கூடுதலாக உள்ளது. ஸ்கேன்டினேவியாவிற்கூட வரி செலுத்தலில் நேர்மை இப்பொழுது குறைந்து வருகின்றது. ஹங்கேரியைப் பொறுத்தவரை, இதற்கு இன்னொரு காரணமும் உள்ளது. தனியார்துறையின் ஒரு கணிசமான பகுதி இன்றும் நிழற் பொருளாதாரத்தைச் சார்ந்ததாகவிருப்பதால், அது தானாகவே நிழலினின்றும் வெளிச்சத்திற்கு வரச் சிறிது காலமெடுக்கலாம். இது நடைபெறத் தேவையான சில ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் விரிவான பட்டியலொன்று பகுதி 1.1 இல் தரப்பட்டுள்ளது.

இவ்வித சூழ்நிலைகளில் வரியமைப்பானது, சுயமானவரி மதிப்பீடுகளில் தங்கியிருப்பதன் அர்த்தமென்ன?

அரசாங்கம் ஆகாயத்தில் கோட்டை கட்டுகின்றது என்பது முதலாவது விடையாகவிருக்கலாம். அது வருவாயியினைப் பெறலாமென்று எண்ணி ஏமாற்றமடைகின்றது; வரிகளில் பெரும்பாலானவை திரட்டப்படுவதில்லை.

மக்கள் எவ்வாறேனும் ஏமாற்றுவார்களென்ற எண்ணத்தில் அரசாங்கம் நியாயமான முறையில் நடந்து கொள்ளுகின்றது என்பது இரண்டாவது விடையாகவிருக்கலாம். இந்த அணுகுமுறை ஓரளவு சரியானதாகவிருந்த பொழுதும் இது நேர்மையற்றதாகும். வரிச்சட்டங்களைக் கொண்டுவரும் பாராளுமன்ற உறுப்பினர்களும், அச்சட்டங்களை அமுலாக்கும் நிர்வாகிகளும், வரி செலுத்தாது ஏமாற்றுவோரும் ஒரே விதமாகச் சிந்திப்பதையே இது காட்டுகின்றது.

கடைசியாக, இவ்வாறு சிந்தியாது வருமான வரிகளைத் திரட்டுவதற்குத் தீர்க்கமான முடிவினை மேற்கொள்ளுதல் மூன்றாவது வழியாகும். வரி செலுத்தலில் நேர்மை குறைவாகவிருக்கும் ஒரு நாட்டில் அரசு என்ன செய்யலாம்? வரி செலுத்துவோரின் வருமான மூலகங்களையும் செலவுமுறைகளையும் விசாரித்தறிவதன் மூலம் வரி அதிகாரிகள் அவர்கள் மீது ஒற்று வேலை மேற்கொள்ளலாம். ஆடம்பரமாக வாழும் அண்டை வீட்டார்கள் வரிகளை உரியமுறையில் செலுத்துவதில்லையெனச் சந்தேகங்கொண்டால் போலீசுக்கு அறிவிக்குமாறு மக்களை ஊக்குவிக்கலாம். இறுதித்தீர்வு ஓர் ஓர்வெல்லியன் முறையாகவுமிருக்கலாம். அதாவது, ஒவ்வொரு வீட்டிலும் தமது குடும்பத்தினது தினசரி வரவு, செலவுகளைக் கண்காணிக்கும் ஒரு வரிப்பரிசோதகர் இருக்கவேண்டும். இப்பரிசோதகர்களுக்கு அவர்களது சேவைகளுக்கேற்பச் சன்மான மளிப்பது பயனுடையது.

தனிமனித சுதந்திரத்தையும், குடிமக்கள் தமது சொந்தப்பணத்தைத் தாம் விரும்பியவாறு செலவிடும் சுதந்திரம் இருக்க வேண்டுமென்பதையும் விரும்புவோர் இதனைக் கட்டாயமாக வெறுக்கவே செய்வர்.

1-வது நிபந்தனை வெறுமனே தொழில் நுட்பம்சார்ந்த ஒன்று மட்டுமல்ல. உலகவரி அதிகாரிகளுக்கு ஒரு நியம வரிமுறையினைக் காட்ட முயலாது, மேலே நாம் குறிப்பிட்ட சிக்கல்களைத் தவிர்க்கும் ஒரு வரி முறையே இன்று ஹங்கேரிக்கு தேவைப்படுகின்றது என்பதை மட்டும் கூற விரும்புகிறேன். இவ்வரிமுறை குடிமக்களது நேர்மையினைப் பரீட்சிக்கவோ, வீட்டுத்துறையினரின் பிரத்தியேக விடயங்களில் சட்டமியற்றுவோரும் பணிக்குழுவாட்சியினரும் தலையிடுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கவோ கையாளப்படக்கூடாது. அதேவேளையில், அரசினைக் கொண்டு நடத்துவதற்குத் தேவையான நிதியினைத் திரட்டுவதற்கு இவ்வரிமுறை போதுமானதாக இருக்கவேண்டும். வரிவகைகள் இயன்றமட்டும் தனிநபர் சாராததாகவிருத்தல் நல்லது. எல்லாம் சீராக அமையுமாயின், ஹங்கேரியில் சனநாயகம் வலுவடையும் ஹங்கேரிய மக்களிற் பெரும்பாலானோர் அரசின் மீது மீண்டும் பற்றுவைப்பர். தனியார் துறையினது சட்டரீதியான தன்மையும் அது சுமுகமாகச் செயற்படுவதற்குத் தேவையான நிலைமைகளும் உறுதி செய்யப்படும். அதன் பின்னரே ஒரு பொதுவான தனியார் வருமான வரிபற்றி நாம் சிந்திக்கலாம்.

2. வரிமுறையானது இயன்றளவு சார்பிலாத்தன்மை கொண்டதாக இருக்கவேண்டும். நியாயமெனப்படும் ஒரு சில விதிவிலக்குகள் தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் வரிமுறையினூடாக அரசு எவருக்கும் வெகுமதியளிக்கவோ, தண்டனையளிக்கவோ கூடாது. நலன் அல்லது பண்பாட்டுக் காரணங்களுக்காக, அல்லது சமூககாரணங்களுக்காக தேசிய சட்டசபையோ, உள்ளூராட்சி சட்டசபைகளோ எவருக்கேனும் மானியங்கள் வழங்கத் தீர்மானித்தால், வெளிப்படையாகவே அது செய்யப்படவேண்டும். இதன் நிமித்தமாக வருவாய்ப்பக்கத்தில் வரிக்கழிவுகள் வழங்கப்படாது, செலவீட்டுப் பகுதியில் இதற்கெனத் தனியான செலவீனங்கள் ஒதுக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு பாடசாலைப் பிள்ளைக்கும் இலவச பாட நூல்கள் வழங்கப்பட வேண்டுமா என்பது பற்றிய விவாதத்தில் நான் கலந்துகொள்ள விரும்பவில்லை. இது போன்ற கொள்கைகளைத் தீர்மானிக்கப் பாராளுமன்றத்திற்கு உரிமையுண்டு. ஆனால், இவ்விதத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது, வேறு செலவினங்களைக்குறைக்கவோ, மேலதிகவரிகளை விதிக்கவோ நேரலாமென்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் இலவச பாடநூல் பங்கீட்டை ஆதரித்து வாக்களித்த பின்னர், இதற்கான செலவினங்கள் பாதீட்டின் செலவுப்பக்கத்தில் "கல்விக்கான செலவினங்கள்" என்ற தலையங்கத்தின் கீழ் "பண்பாட்டுக்கான மானியங்கள்" என்ற பிரிவில் பட்டியலிடப்பட வேண்டும்.

வரிவிகிதக்குறைப்பு என்ற முறையில் இப்பணம் பாடநூல் வெளியீட்டாருக்கோ, நூல் விநியோகத்தாருக்கோ செல்லக்கூடாது.

கையாளப்படும் வரி எந்த வகையினதானாலும் சரி, வரிவிகிதமானது கட்டாயமாக ஒரே சீரானதாக இருக்க வேண்டுமென்பதே இந்த இரண்டாவது நிபந்தனையின் நிதரிசனமான கருத்தாகும். பொருட்கள், சேவைகள், தொழில் நடவடிக்கைகள், சமூகக் குழுக்கள் என்பவற்றிற்கு வரி விலக்கு அளித்தலுக்கு முற்றுப்புள்ளி இடவேண்டும். சமூகநலன், சுகாதாரம், பண்பாடு என்பன சம்பந்தமான கொள்கைகளுக்கு அரசமானியங்கள் தேவைப்பட்டாலும், அவற்றிற்கான பணம் வரிகளை மாற்றியமைப்பதன் மூலம் பெறப்படக்கூடாது. எவ்வித ஆதரவு திரட்டலுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் தாம் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்பதையும், ஒரே சீரான வரிவிகிதம் என்பதினின்றும் விலகமாட்டோம் என்பதையும் அதிகாரத்தி-லிருப்பவர்கள் தெளிவாக எடுத்துக் கூற வேண்டும்.

சந்தைப் பொருளாதாரமென்ற கண்ணோட்டத்திலுங் கூட, இந்த விதி அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. உண்மையான விலைகளின்றி உண்மையான ஒரு சந்தை இருக்கமுடியாது. பக்கச்சார்புள்ள வரிவிலக்குகள் விலையமைப்புடன் இணைக்கப்படுவதால், அவை ஒவ்வொரு பொருளினதும் மெய்ச்செலவு பற்றிய தெளிவான கருத்து உருவாவதற்குத் தடையாக இருக்கும். விலையமைப்பின் ஒவ்வொரு கூறும் ஒன்றிலொன்று தங்கியிருப்பதால் அவை விலைகள், வேதனங்கள் என்பவற்றின் மொத்தத் தொடையில் செலவுகளாகவே தோன்றும். இறுதியாக, வேறுபடுத்தப்பட்டதும் குழம்பியதுமான வரிகள் விலையமைப்பை உருக்குலைக்கும். எனவே, உண்மையான சந்தைப்-பொருளாதாரத்தை ஆதரிப்போர் ஒரேசீரான (சார்பிலாத்-தன்மையுள்ள வரிமுறையினை) வரி விகிதங்களை வலியுறுத்த வேண்டும்.

3. வரியமைப்பு விருத்திமுறையாக இருக்கவேண்டுமென்பது கட்டாயமில்லை. ஹங்கேரியில் பெரும்பாலானோர் விருத்திமுறை வரியினையே ஆதரிப்பதால், மேற்படி நிபந்தனை பலரை ஆச்சரியத்திற்குள்ளாக்கும் என்பதை நான் அறிவேன். எனினும், இதனை எதிர்ப்பதற்கு நான் தயாராக உள்ளேன்.

வருமானப் பங்கீடு என்பது, ஒழுக்காறு சார்ந்த ஒரு பிரச்சினையாகும். எனவேதான், பகுத்தறிவான காரணங்களின் அடிப்படையில் “சரியான“ வருமானப் பங்கீடு எதுவென்பதை விளக்கமுடியாதுள்ளது. சிலர் நலன், வருமானம் என்பவற்றில் சமத்துவத்திற்கு ஓர் உள்ளார்ந்த பெறுமானமளிக்கின்றனர்.

இவர்கள் உற்பத்திப் பொருட்களின் சமமான பங்கீடு (அல்லது இயன்றளவு சமமான வருமானப்பங்கீடு) என்பதற்காகக் குறைந்த தேசிய வருமானத்தை அல்லது உற்பத்தியில் திறன் குறைவை ஏற்றுக்கொள்ளவும் தயாராகவிருப்பர். எல்லா ஒழுக்காற்றுக்-கருத்துக்களும் போன்று இதுவும் அதீத பகுத்தறிவுத் தன்மை வாய்ந்த ஒன்றே. அதாவது, இதற்கெதிரான பகுத்தறிவான வாதங்கள் எவையுமில்லை. இந்தச் சமத்துவ நிபந்தனையினை நான் ஏற்றுக் கொள்ளத்தயாராக இல்லை என்பதை மட்டுமே இச்சந்தர்ப்பத்தில் கூறக்கூடியதாக உள்ளது. மற்றையோரிலும் பார்க்க மேலான நிலையிலிருப்போரை, மற்றையோரின் மட்டத்திற்கு கீழே இழுத்தல் எனக்கு எவ்வித திருப்தியையும் தரமாட்டாது. வறியோர், வசதி குறைந்தோர், வலது குறைந்தோர், அனாதைகள் என்போரின் நலனுக்காக என்ன செய்ய வேண்டுமென்பதை, வசதியுடன் வாழுவோர் தமது வருமானங்கள், சொத்துக்கள் என்பவற்றின் ஒரு பகுதியை இழக்கச்செய்யவேண்டும் என்பதினின்றும் வேறுபடுத்தி நோக்க வேண்டும் என்பதே எனது அணுகுமுறையாகும்.

"சமத்துவம்" என்பது பல பரிமாணங்களைக் கொண்ட ஒரு சிக்கலான ஒழுக்காற்றுப் பெறுமானமாகும். அதன் பல்வேறு அம்சங்களாக சட்டத்தின் முன் சமத்துவம், சமூகவகுப்பு, தோலின் நிறம், சமயச்சார்பு அல்லது பால் என்பவற்றின் அடிப்படையிலேற்படும் சிறப்புரிமைகளை நிராகரித்தல், சமமான அடிப்படை மனித உரிமைகள் போன்றவற்றை முற்று முழுதாகவே நான் ஏற்கத்தயார். உண்மையிலேயே எனது பெறுமானங்-களிலடங்கும் சமத்துவ விதிகளில் இவை முன்னணி வகிப்பனவாகும். இப்பெறுமானங்களை ஏற்பது, பொருள்சார்ந்த வருமானங்களைச் சமப்படுத்துதல் என்பதை நிராகரிப்பதோடு எந்த விதத்திலும் முரண்பட்டதல்ல.

வருமானப் பங்கீட்டில் சமூகநீதி என்ற விதியை நடைமுறைப்படுத்த விரும்புவோரோடு ஒத்துப்போக நான் தயாராக உள்ளேன். எனினும், சமூகநீதி என்பதன் வரைவிலக்கணம் பற்றி இது எதுவுமே கூறவில்லை. நெடுங்காலத்தில் சமூகத்தின் கீழ்த்தளத்தில் உள்ளோரது முன்னேற்றத்தை உறுதிப்படுத்தினால் மட்டுமே, ஒரு பங்கீட்டுமுறையானது நியாயமானது என்ற கருத்தை நான் ஏற்கின்றேன்.

சமூகநீதி பற்றி மேலே கூறப்பட்ட கருத்து, இயக்கரீதியான ஒரு நிபந்தனையைக் கொண்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தரப்பட்ட தேசீய வருமானத்தில், சமூகத்தின் கீழ் மட்டத்திலுள்ளோருக்குச் செல்லவேண்டிய சரியான பங்கு என்ன

என்பது பற்றி இது எதுவுமே கூறவில்லை. இந்த வகையில், இது ஒரு பங்கீட்டு நிபந்தனையன்று. செல்வந்தரது செல்வத்தை வறியவர்களின் நிலையோடு இது ஒப்பிட முயலவில்லை. வறியோரது இன்றைய நிலையினை நாளைய நிலையுடன் ஒப்பிடுவதால், சமூகநீதி பற்றிய கருத்து உண்மையில் ஒரு காலபரிமாணத்தைக் கொண்டதாகும். இந்தக் கால அடிப்படையிலான ஒப்பீடு, சாதகமான விளைவினைக் கொண்டிருக்கவேண்டுமென இது கூறுகின்றது. நம்பிக்கையற்றதும் நன்மை ஏற்படுமென்ற எதிர்பார்ப்பு இல்லாததுமான வாழ்க்கைக்கு வறிய மக்கள் தள்ளப்படக்கூடாது. தமது நிலை முன்னேற்றமடையுமென்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படவேண்டும். வாராவாரம் வறிய மக்களது நிலைமை முன்னேறுமென்பதை இது கருதமாட்டாது. குறிப்பிட்ட காலஎல்லையில் அவர்களது நிதிநிலைமை ஏற்றமடையுமென்ற நம்பிக்கையை அது ஏற்படுத்த வேண்டும். இதனை உறுதி செய்யாத சமூகம் நீதியானதல்ல.

சமூகத்தின் கீழ் மட்டத்திலில்லாத ஏனையோரின் வருமானப்பங்கீடு எவ்வாறு அமைய வேண்டுமென்பது பற்றி மேற்படி நிபந்தனை எதுவுமே கூறவில்லை. இதிலும் பல ஒழுக்கம் சார்ந்த அம்சங்கள் உள்ளனவெனினும், இவற்றை ஆராய்வது இந்நூலுக்கு அப்பாற்பட்டது. நாம் ஆராயும் விடயத்தோடு தொடர்புள்ள சிலவற்றை மட்டும் இங்கு நான் வலியுறுத்துகிறேன். வறிய மக்களின் வருமானம் தொடர்ந்தும் அதிகரிப்பதற்குச் சமூகத்தினது மொத்த வருமானம் அதிகரிப்பது இன்றியமையாததாகவிருப்பதால், அதனை அதிகரிப்பதற்கான ஆகக்கூடிய ஊக்குவிப்பை வருமானப்பங்கீடு அளிக்க வேண்டும். வருமானப் பங்கீட்டினூடாக வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்டனவே. ஒரு ரொட்டித்துண்டை N - நபர் கொண்ட மக்களிடையே சமமாகப் பங்கிட்டால் ஒவ்வொரு நபருக்கும் 1/N பங்கு கிடைக்கும். இவ்வாறு பிரிக்கப்படும் ரொட்டித்துண்டின் பருமன் அதிகரித்தால் மட்டுமே, மேலே கூறிய சமூக நீதிக்கான நிபந்தனை பூர்த்தி செய்யப்படும். எனவே, சமூக நீதிக்கான நிபந்தனையினை ஊக்குவிப்பதற்கான நிபந்தனையினின்றும் பிரிக்க முடியாது. இதனைக் கவனத்திலெடுக்காது விடும் எந்த ஓர் அரசியல்வாதியும் பொருளியலாளனும் கண்மூடித்தனமானவனும் மக்களை ஏமாற்றுவோனுமாவான். வரியமைப்புத் தொடர்பான இறுதியான பொது நிபந்தனைக்கு இது எம்மை இட்டுச்செல்கின்றது.

4. பொருளாதாரச் செயற்பாட்டினது முன்னேற்றத்திற்கும், முதலீடுகளினது அதிகரிப்பிற்கும் எதிரான அம்சங்களை அது

கொண்டிருக்கக் கூடாது. மேலதிக வேலை செய்வதற்காகத் தமது ஒய்வு நேரத்தில் ஒரு பகுதியை அர்ப்பணிக்க முன்வருவோர் மீது விருத்தி முறை வரியினை விதிக்கக் கூடாது. மேலும், தமது மேலதிக உழைப்புப் பற்றிய உண்மையினை மறைப்பதற்கு அவர்களை அது தூண்டவும்கூடாது. தமது பணத்தை மெத்தைக்கு அடியில் பதுக்காது, வட்டி உழைக்கும் நோக்கமாக அதனை வங்கியிலிடுவோரை அது தண்டிக்கக்கூடாது.

வரிச்சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதில் கவனம் செலுத்தாமலேயே பாராளுமன்ற அங்கத்தவர்கள், பொருளாதாரத்தினது செயற்பாடு, உற்பத்தி, முதலீடு என்பவற்றின் மீது வரி எவ்வித விளைவினைக் கொண்டிருக்குமென்ற வினாவினை மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டுமென்பது எனது சிபாரிசாகும். இவ்விளைவு எதிர்க்கணியமானதாக இருக்குமாயின், அச்சட்டத்தினை அவர்கள் நிறைவேற்றக்கூடாது. ஏனெனில், அவ்வித வரிச்சட்டம் ஹங்கேரிய பொருளாதாரத்தினது எதிர்கால அபிவிருத்திக்குப் பாதகமாகவிருக்கும். நலன் சார்ந்த கருத்திலும் கூட அது பாதகமானதாகவே இருக்கும் (வறியோருக்கான உதவி பற்றி மேலே 3 இல் கூறப்பட்ட எனது வாதங்களைப் பார்க்கவும்). கடைசியாக, இறைக்கண்ணோட்டத்திலும் அது நன்மையற்றதாகவே இருக்கும். வரிவிகிதங்களுக்கும் வருவாய்களுக்குமிடையிலான முக்கிய தொடர்புகளை விளக்குவதற்குக் கோட்பாட்டு மாதிரிகளையும் நடைமுறைக் கணிப்பீடுகளையும் கையாளும் இறைக்கொள்கைகள் பற்றிய ஆய்வுகள் பல உள்ளன. தேக்கநிலையிலிருக்கும் அல்லது மிகமந்த கதியில் வளர்ச்சியடையும் தேசிய வருமானத்தின் மீது உயர்ந்த வரி விகிதங்களை விதிப்பதன் மூலம் அதிகளவு வரி வருவாயினைச் சேகரிக்க முயலுதல் ஒரு தவறான இறைக் கொள்கையாகும். ஊக்குவிப்பிற்குப் பாதகமான அதி உயர்ந்த வரி விகிதங்களை விதிப்பதை நிதியமைச்சு தவிர்த்துக் கொள்ளுமாயின், தனது வரி வருவாய்களை அதிகரித்துக் கொள்வதில் அது வெற்றியடையும். தேசிய வருமானத்தினது வேகமான அதிகரிப்பிற்கு வழியமைத்துக் கொள்ளுமாயின், குறைந்த வரி விகிதத்திற்கூட அதிகளவு வரியினைத் திரட்டமுடியும்.

வரிவிதிப்பின் பிரதான விதிகள் பற்றிய மேற்படி சுருக்கமான ஆய்வின் பின்னர், இதனை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான வரிவகைகள் எவையெனப் பரிசீலிப்போம். உண்மையான வரிவிதிப்புச் சூத்திரங்களை விரிவாக ஆராய்வது எமது நோக்கமல்ல. இன்றைய ஹங்கேரியில் காணப்படும் சூழ்நிலையில் எவ்வகை வரிகள் பாதீட்டிற்குப் பெருமளவு

வருவாயினைப் பெற்றுத் தரமுடியும் என்பது பற்றி மட்டும் இங்கு நான் கூறவிரும்புகின்றேன்.

அ. ஏகபரிமாண நுகர்வு வரி அல்லது அதனது நவீன வடி-விலமைந்த சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான ஏதோ ஒரு வகை வரி என்பது மிக முக்கியமான வரியாகும். இன்றைய வரியமைப்பிற்குள்ளேயே மேற்படி வரியினை விதிக்கலாம். ஆனால், இன்றைய வரியமைப்பினின்றும் சற்று வேறுபட்டதாக அது இருக்க வேண்டும். அதாவது, எந்த ஒரு விதிவிலக்குமின்றி, எல்லாவித நுகர்வுகள் மீதும் மேற்படி வரியானது ஒரு சீராக ஒரே விகிதத்தில் விதிக்கப்பட வேண்டும்.

ஆ. உழைக்கப்பட்ட வருமானங்களின் மீது எவ்விதவிருத்தி முறைவரியும் விதித்தல் பிழையானது என்பது எனது கருத்து. தமது ஓய்வு நேரத்தைத் தியாகம் செய்து, மேலதிக நேரம் வேலை செய்ய விரும்பும் தாதிமார்கள், ஆசிரியர்கள், ஊழியர், எழுதுவினைஞர் என்போரை அரசு தண்டிப்பதன் காரணம் யாது?

இங்கு எனது கண்டனம் மேலதிக வேலை நேரம் அளிப்பது பற்றியதோ, வேலையின் தரத்திற்கேற்ப அதனை வேறுபடுத்துவது பற்றியதோ அன்று. A தொழிலில் செய்யும் வேலை (சிறந்த வினைத்திறன் காரணமாகவோ, அதிகம் பொறுப்பு வாய்ந்தது என்பதாலோ, கூடிய உடற்சக்தி விரயத்தை ஏற்படுத்துவதனாலோ), B தொழிலில் செய்யும் வேலையிலும் பார்க்க மூன்று மடங்கு கூடிய பெறுமதி வாய்ந்தது எனவும் விருத்திமுறைவரி செலுத்தியதன் பின்னர் தேறிய வேதனங்கள் 3:1 என மாறுவதாகவும் கருதுவோமாயின், Bக்கு Aயிலும் பார்க்க நான்கு மடங்கு வேதனம் வழங்குவதன் பயன் யாது? முற்றிலும் தேவையற்ற ஒரு வரி முறையான இது, வரி இலிகிதர் மீதும், சம்பளப் பட்டியல் தயாரிக்கும் இலிகிதர் மீதும் மேலதிக வேலைப் பளுவை மட்டுமே சுமத்தவல்லது.

இ. ஒரேயொரு ஏகபரிமாண (விருத்தி முறையல்லாத) இலாப வரி இருப்பதோடு, இவ்வித வரி ஒரே சீரான விகிதத்தையும் கொண்டிருக்க வேண்டும். சட்டப்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், அவை அரசிற்கோ, தனிநபருக்கோ, வெளிநாட்டவருக்கோ, ஹங்கேரியருக்கோ உரித்தானவை என்பதைக்கருதாது, அவற்றினது இலாபங்கள் மீது ஒரே விகிதமான வரியே விதிக்கப்படவேண்டும்.

"வழமையான" பதிவுசெய்யப்பட்டவையும், தொட்டுணரக் கூடியவையுமான நிறுவனங்களுக்கு வெளியே உழைக்கப்படும் வருமானங்களினின்றும் வரி திரட்டத் தவறுவதாகக் கூறப்படும்

கண்டனம், பின்னிரண்டு ((ஆ) உம், (இ) யும்) வகையான வரிகள் தொடர்பாகச் செல்லுபடியாகக் கூடும். வரிகளினின்றும் தப்பிக் கொள்ளும் இவ்வித வருமானங்கள் மிக உயர்வான-வையாகவிருக்கலாம் என்பதால் இக்கண்டனம் நியாயமானதே.

இந்த இரண்டுங் கெட்டான் நிலை உண்மையானது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இப்பிரச்சினையைக் கவனமாகச் சீர்தூக்கிப் பார்க்கும் அதேவேளையில், எல்லாப் புலப்படா வருமானங்களையும் ஒரே கூடையிற் போடாது ஆய்வு நோக்கிற்காக இவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

i) பல்வேறுவிதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் மக்கள் பணம் சம்பாதிக்கின்றனர் அல்லது பொருள் வடிவில் கொடுப்பனவுகளைப் பெறுகின்றனர். உதாரணமாக, ஒரு செயலாளர் மேலதிகத் தட்டச்சு வேலை செய்வதன் மூலமோ, ஒரு மொழி பெயர்ப்பாளர் மொழிபெயர்ப்பு மூலமோ, ஒரு பாடசாலை மாணவி குழந்தையொன்றைக் கவனிப்பதன் மூலமோ இவ்வித வருமானங்களைப் பெறலாம். மேற்படி நடவடிக்கைகள் தேசிய வருமானத்தை அதிகரிப்பதனால் முழுச் சமூகமுமே இவற்றின் மூலம் நன்மையடைகின்றது. இவ்வித வருமானங்கள் வரிக்குட்படுவதில்லை என்பதை நாம் ஏற்கவேண்டியுள்ளபோதும், மேலே நான் கூறிய கருத்துக்கள் இந்த வருமானங்களுக்கும் பெரிதும் பொருந்தும். ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு மேற்பார்வையாளனை நியமித்து அக்குடிமகனின் சம்பாத்தியங்களைக் கண்காணிப்பது சாத்தியமானதல்ல. எனவே, இவ்வித சம்பாத்தியங்களைப் பொறுத்தவரை, வரிவிலக்கு அளிக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படும் அதே வேளையில், இவ்வரிவிலக்கு அப்பொருட்கள், சேவைகளின் நிரம்பல் அதிகரிப்பதற்குத் தூண்டுகோளாகவும் அமைகின்றது. "முறையான" உற்பத்தி தேங்கி நிற்கும் இன்றைய சூழ்நிலையில், சுய தியாகம் செய்யும் இந்த மக்கள் அதிக பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்வது எல்லோருக்குமே நன்மை பயக்கும்.

சேவைகளுக்காக வழங்கப்படும் சிறு சிறு தொகைகளின் மீது வரி விதிப்பது குறித்து யதார்த்தமற்ற பிரமாணங்களைப் புகுத்துதலைத் தவிர்ப்பதில் விசேட கவனம் செலுத்தப்-படவேண்டும். ஒரு பக்கத்தில் இவை, தமக்கு உரித்தில்லாத கொடுப்பனவுகளைப் பெறுவோரைத் தூண்டும். மறுபக்கத்தில், பெரிய தொகைகளைப் பெறுவோர், அவற்றில் பெரும் பகுதியை மறைப்பதற்கும் இது தூண்டும். இதன் விளைவாக, அவ்வித வரிச்சட்டம் வரியமைப்பின் அதிகாரத்தை மேலும் தோல்வியுறச் செய்யும்.

ii) ஒரு தொழிற்சாலையைக் கொண்ட தனியார் முயற்சிகளுக்கு இலாபபவரி செலுத்துவதினின்றும் விலக்கு அளிக்கப்-படவேண்டுமென்ற கருத்தை எனது பிரேரணைகள் முன்வைக்கவில்லை. சட்டத்தின் துன்புறுத்தலுக்கு உட்படாததும், சட்ட வரம்பிற்குட்படாததுமான தனியார் துறையின் மங்கலான பகுதி மிகவும் பரந்துபட்டதாகும். இவ்வித தனியார் நிறுவனமும், அதனது உடமையாளரும் அச்சமோ, வெட்கமோ இன்றிப் பூரணமாகச் சட்டவரம்பிற்குள் வரவேண்டுமென எமது இந்த ஆய்வு அறிவுறுத்துகின்றது. சட்டப் பாதுகாப்பும் தனியார் உடன்படிக்கைகளின் அமுலாக்கலுக்கான உத்தரவாதமும் வழக்குவதற்கு ஈடாக, அவர்கள் இலகுவாகக் கட்டுப்படுத்தக் கூடிய அரசஉடைமை நிறுவனங்கள் போன்று வரிகளைச் செலுத்த வேண்டுமென்ற அறிவுரை தனியார் துறை முயற்சியாளருக்கு அறிவுறுத்தப்படுகின்றது. தனியார் துறையின் மங்கலான, அல்லது இருட்டான பகுதியிலேயே தொடர்ந்து இருப்பதைச் சில தனியாரும், குழுவினரும் விரும்புவார்களென நாம் எதிர்பார்க்கலாம். வரி செலுத்தாமை போன்ற காரணங்களுக்காகச் சட்ட நடவடிக்கைகளுக்குத் தாம் உட்படக் கூடுமென்பதை இவர்கள் ஏற்கவேண்டும். மேலும், உடன்படிக்கை செல்லுபடியாகும் மற்றைய சாரார்கள் (அவர்கள் அரசஉடைமை நிறுவனங்களாகவோ, தனியார் முயற்சிகளாகவோ, வாங்குவோராகவோ, விற்போராகவோ இருக்கலாம்) தம்மை ஏமாற்றினால், தமக்குச் சட்டப்பாதுகாப்பு இல்லை என்பதையும் அவர்கள் உணரவேண்டும். அரசாங்க அலுவலகங்கள் தம்மை முறையாக நடத்தாவிடில், அவர்கள் சட்ட நடவடிக்கை எடுக்கும் வாய்ப்பையும் இழக்கின்றனர். மேலும், மங்கலான இப்பகுதியினது வாடிக்கையாளருங்கூட இதேவிதமான ஆபத்தினை ஏற்கவேண்டியுள்ளது. உடன்படிக்கைகள் முறிக்கப்படுமானால், தமக்குச் சேரவேண்டியவற்றை மீளப்பெறுவதற்கு உரிமையோ, உத்தரவாதமோ இவர்களுக்கு இல்லை. தனியார் சொத்துக்களுக்குப் பாதுகாப்பும் அதிகாரமும் வழங்குவதில் நாடு எந்தளவிற்கு வெற்றியடைகின்றதோ, அந்தளவிற்குத் தனியார் துறை இருட்டிலிருந்து வெளியே வந்து வரி செலுத்தும் கடப்பாட்டை ஏற்றுக் கொள்வது நன்மையானது. தனியார் துறை மீது வரிவிதிப்பதற்கு இதுவே சிறந்த வழியாகும்.

ஒரு விருத்திமுறை வருமான வரிக்கெதிரான வாதங்களை மீண்டும் இங்கு கூற விரும்புகின்றேன்.

ஹங்கேரியில் இன்று காணப்படும் நிலைமைகளில் ஒரு விருத்தி முறை வரியினை விதிக்க முடியுமெனக் கருதுவது ஒரு

வெறுங்கற்பனையேயாகும். உத்தியோக பூர்வமான பதிவுகளில் காணக்கூடிய வருமானங்களைக் கொண்டோர் மீது மட்டுமே வருமானவரிப் பளு சுமத்தப்படுகின்றது. இச்சுமையை ஏனையோர் மீது திருப்புவதற்குப் போதுமான பொருளாதார, சமூக, அரசியல் அந்தஸ்து இல்லாதோரையே இவ்வரிகள் பெரிதும் பாதிக்கின்றன. ஒரு சிலர் வரிகளுக்கேற்பத் தமது வருமானத்தை உயர்த்திக் கொள்கின்றனர். தமது வரிகளை விலையதிகரிப்பினூடாக வாடிக்கையாளருக்கு மாற்றக்கூடிய தனியார் துறை முயற்சியாளரை விருத்தி முறைவரி பாதிப்பதில்லை. இறுதியாக, அதிக வரிச்சுமையை ஏற்கவேண்டுமென வரிப்பிரசாரத்தில் கூறப்படும் “புலப்படா வருமானத்தைப் பெறுவோர்” இதனால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை.

பாதீட்டினது வருவாய்ப் பகுதியை இப்பொழுது ஆராய்வோம்:

ஈ. ஒரு நுட்பமான கருத்தில் வரிவகையைச் சாராததாகவிருந்த போதும், சுங்கத்தீர்வையை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். பாதீட்டுக் குறை நிலையை ஈடு செய்வதற்குச் சுங்கத்தீர்வைகள் தவிர்க்க முடியாதனவாக இருப்பினும், விலை மட்டத்தினை மிகக்குறைவாகவே பாதிக்கும் வகையில் அவற்றினது அளவு சிறிதாக இருக்க வேண்டும். நாட்டுக்குள் வரும் எல்லா வித இறக்குமதிகள் மீதும் இத்தீர்வையானது ஒரே சீரான ஏகபரிமான தீர்வையாகவிருப்பது முக்கியமானதாகும். இறக்குமதிகளின் தோற்றுவாய் எது என்ற அடிப்படையில் சில இறக்குமதிகள் மீது ஹங்கேரி மேலதிக கட்டணம் அறவிடவேண்டுமா என்ற வினாவைப் பற்றி இங்கு நான் ஆராய விரும்பவில்லை. இங்கு ஆராயப்படுவது, பாதீட்டின் வருவாய்ப்பக்கமேயாதலால், இதை மட்டுமே கருத்திற்கொண்டு புதிய விலையமைப்பினது நிபந்தனைகள் பற்றி ஆராயவில்லை. இது பகுதி 2.4 இல் விரிவாக ஆராயப்படும். நியாயமான விதி விலக்குகள் தவிர ஏனைய எல்லாப் பொருட்களின் மீதும் இறக்குமதி இறுப்புக்கள் வேறுபடுத்தப்படக் கூடாது. இறக்குமதியாளன் கோப்பியையா, கணனிகளையா, கார்களையா அல்லது குழந்தைகள் அணிகலன்களையா இறக்குமதி செய்கின்றான் என்பதைக் கருதாது, இறக்குமதி இறுப்பு ஒரே சீரானதாக இருக்க-வேண்டும்.

உல்லாசப் பிரயாணிகளுக்கென ஒரு நியாயமான தீர்வையில்லாத கோட்டா நிர்ணயிக்கப்படலாம். இக் கோட்டாவிற்கு மேற்பட்ட எல்லாப் பொருட்களின் மீதும் ஒரே சீரான தீர்வை விதிக்கப்படலாம். எனினும், குறிப்பிட்ட இந்த

ஒரேசீரான இறக்குமதித் தீர்வையைச் செலுத்தத் தனிநபர்கள் தயாராகவிருப்பாராயின், தாம் விரும்பும் எல்வித பொருட்களையும் விரும்பிய அளவு இறக்குமதி செய்ய அவர்கள் அனுமதிக்கப்படவேண்டும். இதோ ஒரு சிறந்த உதாரணம்: தனியார் துறையினர் தாம் முன்னரே கொள்வனவு செய்த மாற்றக்கூடிய வெளிநாட்டு நாணயத்தைக் கொண்டு எவ்வளவு கணனிகளையும் கொள்வனவு செய்யவும், அவற்றை இறக்குமதி செய்யவும் உரிமை அளிக்கப்பட வேண்டும். ஒருவன் குறிப்பட்ட ஒரே சீரான தீர்வையைச் செலுத்திய பின்னர், தான் இறக்குமதி செய்த கணனிகளைக் கட்டில்லா விலைகளில்–அதாவது கொள்வனவு செய்பவன் கொடுக்கத்தயாராகவிருக்கும் விலைகளில்–விற்பதற்கு உரிமை வழங்கப்படவேண்டும்.

தனிநபர்களுக்குக் கட்டின்றி இறக்குமதி செய்யும் உரிமை இருத்தல், குடிமக்களின் நிபந்தனையற்ற ஒரு சட்ட உரிமையாகும். இறக்குமதிக்காகக் கையாளப்படும் வெளிநாட்டு நாணயம் எவ்வாறு பெறப்பட்டது என்பது இன்னொரு வினாவாகும். பகுதி 1.1 இல் கூறியது போன்று, குடிமக்கள் அவற்றைத் தனியார் சந்தைகளில் பெற்றிருப்பார்களாயின், எவ்வித பொருளாதாரப் பிரச்சினையும் எழமாட்டாது. கீழே பகுதி 2.5 இல் கூறப்பட்டுள்ளது போன்று, உறுதியாக்கல் செயலாக்கக் காலத்தில் ஓர் உண்மையானதும், ஒரே சீரானதும் மாற்றுந்தன்மையுள்ளதுமான ஒரு மாற்று விகிதம் உருவாக்கப்படவேண்டியது கட்டாயமாகும். இந்நிலையில், தனது போரின்டுகளை அரசவங்கியில் சுதந்திரமான முறையில் வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றுதல், ஒவ்வொரு ஹங்கேரிய குடிமகனதும் குடியுரிமையாக மாறும்.

எமது பிரதான அக்கறைக்குரிய விடயம் இப்பொழுது உறுதியாக்கற் செயற்பாடாகவிருப்பினும், தனியார் இறக்குமதிகள் தொடர்பாக இன்னுமொரு வினாவினைக் குறிப்பிடுதல் நன்மையானது. உறுதியாக்கல் செயற்பாடும், ஓர் உண்மையான மாற்று விகிதமும் பூரணமாக அமுலாக்கப்படுவதற்கு முந்திய காலகட்டத்தில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதே அது. உண்மையற்ற ஒரு நாணயமாற்று விகிதம் நிலவும் சூழ்நிலையில், அரசவங்கியானது ஒவ்வொரு குடிமகனுக்கும், அவனது குடியுரிமை என்ற வகையில் பெருமளவு வெளிநாட்டு நாணயத்தினை உத்தரவாதம் செய்தல் அர்த்தமற்றதாகும் என்பது எனது கருத்து. தனியார் இறக்குமதியும், நாணயத்தினது மாற்றக்கூடிய தன்மையும் உறுதியாக்கல் செயற்பாட்டின் ஒரு விளைவாகவே ஏற்படவேண்டும். சரியான பொருளாதாரச் சூழ்நிலைகளின்

(அதாவது, பகுத்தறிவான கூட்டில்லா விலைகளும், ஒரு பகுத்தறிவானதும் உறுதியானதுமான நாணயமாற்று விகிதமும் உள்ள சூழ்நிலேயின் என்பன) ஆதரவுடனேயே இவை நடை- பெறவேண்டும்.

பாதீட்டினது வருவாய்ப்பக்கம் தொடர்பான இந்த அடிப்படை விதிகள் பற்றிய பொதுவான சில கருத்துக்களை இப்பொழுது நோக்குவோம். மேலே கூறிய வருவாய்ச் சொத்து பற்றிய ஒரு பூரணமான மதிப்பீட்டினை முன்வைப்பதற்கு நான் முயலவில்லை. இங்கு கூறப்பட்டவற்றை விட வேறுசில மூலகங்களும் இருக்கக்கூடும் (உதாரணமாக, கட்டணங்கள்). எனினும், செயற்பாட்டுப் பட்டியலைத் தயாரிக்க முயலும் போது, பிரதான வருவாய் மூலகங்களின் (நுகர்வு வரி, இலாப வரி, இறக்குமதித் தீர்வை என்பன) கூட்டுத்தொகை, உண்மையான செலவீடுகளை ஈடு செய்வனவாகவிருத்தல் இன்றியமையாதது; எவ்வித சூழ்நிலையிலும் அறுவைச் சிகிச்சை நிபுணரின் கைகள் ஆட்டங்காணாதிருக்க வேண்டும். முற்றுமுழுதாகவும், நிச்சயமாகவும் வரிவிகிதங்கள் செலவீடுகளை உள்ளடக்கும் வகையில் நிர்ணயிக்கப்படல்வேண்டும்.

பாதீட்டின் வருவாய்ப்பக்கம் பற்றிப் பத்திரிகைகளிலும், அரசியல் பேச்சுக்களிலும், முன்னர் நடைபெற்ற விவாதங்களிலும் அரச பாதீட்டு, வரிச்சட்டம் என்பன பற்றிய பாராளுமன்ற விவாதங்களிலும் சில நுனிப்புல் மேய்வதனை ஒத்த கருத்துக்கள் வெளியிடப்பட்டன. இவற்றுட்சில கருத்துக்கள், அரசபாதீடா அல்லது பொதுமக்களா, யார் செலவினை ஏற்பது என்பதே பிரச்சினை என்ற எண்ணத்தை உருவாக்கின. பேராசை பிடித்த இறை அதிகாரிகள் பிரச்சினையைப் பொதுமக்கள் மீது சுமத்த முடியுமாயின், அதனைப் பெரும் வெற்றியாகக் கருதுகின்றனர். மக்களின் பாதுகாவலர்கள் பிரச்சினையைப் பாதீட்டின் மீது திணிக்க முடியுமாயின், வெற்றிப்பெருமிதம் கொள்கின்றனர். வெளிநாட்டுக் கடன் வடிவில் அரசு தற்காலிகமாக இதன் ஒரு பகுதியை வெளிநாட்டு மூலங்களுக்கு மாற்றும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய நிலைகளில், பொதுமக்களே எல்லாச் செலவுகளையும் சுமக்க வேண்டும் என்பதை இவர்கள் மறந்து விடுகின்றனர். இக்கடனானது நெடுங்காலத்தில் இன்றைய தலைமுறை உட்பட எதிர்காலத் தலைமுறையினராலும் செலுத்த வேண்டியதாகவிருக்கும். இந்த விவகாரம் மக்களுக்கும் பாதீட்டுக்குமிடையிலான தேர்வு பற்றியது அன்று. மாறாக, சனத்தொகையின் பல்வேறு வருமானப் பிரிவினரிடையிலும் இன்றைய, எதிர்காலத் தலைமுறையினரிடையிலும் வரிப்பளுவினைப் பங்கிடுதல் தொடர்பானதே இப்பிரச்சினையாகும். இச்செலவுகளை மக்கள் எவ்வாறு ஈடுசெய்ய வேண்டுமென்பது இன்னொரு பிரச்சினையாகும். இது தொடர்பாக பல்வேறு வழிகளை நாம் கூறலாம்

வரியினை உள்ளடக்கிய விலைகளை மக்கள் செலுத்தலாம் (நுகர்வு வரி) தொழில் வழங்குநர் இவ்வரிகளைச் செலுத்தவும் கூடும் (வேதனப்பட்டியல் வரி) பணவீக்கத்தினூடாக மக்கள் மறைமுக வரிக்குட்படுத்தப்படலாம் இது போன்ற வேறுபல வழிகளும் இருக்கலாம். வழி எதுவாகவிருப்பினும் மக்களே அச்செலவுகளைச் செலுத்துகின்றனர். இந்நிலை தவிர்க்க முடியாததாகவிருப்பதால், வரியிறுப்பு முறையினை எளிமையானதாகவும் திறமையானதாகவும் ஆக்குவது நல்லது என்பது எனது கருத்தாகும். எனது கருத்துக்களை நடைமுறைப்படுத்தினால், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வரி அதிகார அமைப்பினைக் களைந்தெறிவது சாத்தியப்படும். இதுவே ஒரு நன்மையான காரியமெனலாம்.

செலவீட்டுப் பகுதியை நாம் நோக்குவோமாயின், முன்னரே குறிப்பிட்டது போன்று, உறுதியாக்கற் செயற்பாட்டின்போது, செலவீடு ஒரு தரப்பட்ட அளவானது என்றே கருதப்படவேண்டும். தவிர்க்கப்பட வேண்டியன இரண்டு விடயங்கள் மட்டுமேயாகும்.

இவற்றுள் முதலாவது, நுகர் பொருட்களின் விலைகளுக்குப் பாதீட்டு மானியங்கள் வழங்குதலாகும். மானியங்கள் சிலவற்றை நீக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. உண்மையான செயற்பாடு ஆரம்பிக்கப்படு முன்னரே, இவ்வித நடவடிக்கைகள் சில மேற்கொள்ளப்படலாம். அதனால், குறிப்பிட்ட இலக்குகள் முன்னரே எட்டப்படவில்லையாயின், அறுவைச்சிகிச்சை நடைபெறும் நேரத்திலேயே இக்கடினமான காரியம் திட்டவட்டமாகவும் முற்று முழுதாகவும் சாதிக்கப்படவேண்டும். எதிர் விளைவுகள் எவையாகவிருப்பினும் மருந்தினை உட்கொள்ளாதிருப்பதற்கு எவ்வித நியாயமும் இருக்க முடியாது.

மறுபங்கீடு பற்றிய பந்திகளில் இப்பிரச்சினையை ஏற்கனவே நான் குறிப்பிட்டுள்ளேன். அரசு மனிதாபிமான முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை எனக்குண்டு. நாட்டினது தகுதிக்கேற்ப சமூக நலன் கொள்கைகளை மேற்கொள்ளுவது பாராளுமன்றத்தின் உரிமை மட்டுமன்றி அதன் ஒரு கடமையுமாகும். (மேலே கூறியது போன்று இது விரிவாகப் பின்னர் ஆராயப்படும்.) எனினும், இச் செலவீடுகள் விலைமானிய வடிவில் அமையக்கூடாது. ஏனெனில், மானியமளிக்கப்பட்ட விலைகள் இவ்வித மானியம் தேவைப்படுவோர், தேவைப் படாதோர் என்ற இரு சாராரையுமே சென்றடையும். அரசும் வேறு நிறுவனங்களும் தனிப்பட்டோரும் பண்பாட்டைவளர்க்க வேண்டுமென்ற கருத்தினை ஆதரிப்பவன் நான். ஆனால், இதுவும் மானியமளிக்கப்பட்ட விலைகள் என்ற வடிவில் செய்யப்படல் கூடாது. எம்மால் முடியுமானால் மாணவர்களுக்கு நூல்களுக்கான கூப்பன்களை வழங்கலாம் ஆனால், அந்நூல்களினது

விலைகள் உண்மையானதாக அதாவது செலவுகளையும் இலாபத்தையும் உள்ளடக்கியதாகஇருக்கவேண்டும். அந்நூல்களைச் சந்தை விலைகளில் கொள்வனவு செய்யத் தகுதியுள்ளவர்களுக்கு மானியமளிப்பது அவசியமில்லை.

ஹங்கேரியினது இன்றைய பொருளாதார நிலையில் உணவுப்பொருட்களுக்கு மானியமளித்தலை நியாயப்படுத்த முடியாது என்பது முக்கியமானது. இந்த நாடு இன்று அடைந்திருக்கும் அபிவிருத்தி நிலை, ஒவ்வொரு குடிமகனது உடற்கூற்றுத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குப் போதுமானது. இந் நிலையில் விலைகளைச் செயற்கையான முறையில் குறைவாக நிர்ணயிப்பதன் மூலம் உண்மையான சந்தை விலையினை செலுத்தும் தகுதியுள்ளவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படுவது ஏன்? அவுஸ்திரிய உல்லாசப் பயணிகளின் பார்வையில் ஹங்கேரியை ஒரு பரிகாசத்திற்குரிய நாடாக்குவதன் பயன் யாது? இன்றைய உணவுப் பொருள் விலைகளிலுங்கூட எமது சமூதாயத்தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத ஒரு மக்கள் குழுவினர் உள்ளனரென்பதை நான் முற்றாக ஏற்றுக்கொள்கிறேன், குறைந்த ஓய்வூதியம் பெறுவோர், பல்வித பிரச்சினைகளுக்குட்பட்டோர் போன்ற இப்பிரிவினருக்குப் பணஉதவி, பொருளுதவி, பங்கீட்டுப்பொருள் கூப்பன்கள் என்பவற்றினூடாக நேரடியாகவே உதவி வழங்கப்படவேண்டும். நிச்சயமாக இது விலையமைப்பினை உருக்குலைப்பதன் மூலம் செய்யப்படக்கூடாது.

பாதீட்டில் தவிர்க்கப்படவேண்டிய இன்னொரு அம்சம், தெளிவாக வரையறை செய்யப்பட்ட இரு விடயங்கள் தவிர்ந்த ஏனைய எல்லா உற்பத்தி மானியங்களுமாகும். நட்டத்திலியங்கும் அரச உடைமை நிறுவனங்கள், பாரிய விவசாயக் கூட்டுறவு நிறுவனங்கள் என்பன பற்றி கடந்த இரு தசாப்தங்களாக நடைபெற்று வரும் விவாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தகுந்த தருணமும் இதுவே. இதினின்றும் விதிவிலக்கு அளிக்க வேண்டியன பின்வரும் இரண்டுமாகும்:

அ. புதிய கொள்கை அமுலாக்கத்தினால் ஏற்படும் திடீர்த்தாக்கத்தினை சமாளிக்கவென வழங்கப்படும் இடைக்-கால உதவி (இது பற்றிப் பின்னர் விரிவாகக் கூறப்படும்.)

ஆ. இளம்பருவத் தொழில்கள் அல்லது தொழிற்கிளைகள் என்பற்றிற்கான இடைக்கால உதவி. தேசீய உற்பத்தியினைப் பாதுகாப்பதற்காக இளம் பருவத் தொழில் முயற்சிகளைப் பாதுகாத்தலை ஆதரிப்பது தொடர்பான வாதங்கள் பொருளியல் நூல்களில் ஏராளமாக உள்ளன. ஹங்கேரிய தொழில் முன்னோடிகள் நடைமுறை அறிவினைப் பெறுவதோடு, அளவுத் திட்டச் சிக்கனங்களை அடையும் வரை பொறுத்திருக்க வேண்டியது அவசியமானதாகும். எனினும், அரசமானியங்கள்,

அல்லது பாதுகாப்பு இறுப்புக்கள் என்ற வடிவிலமையும் இவ்வகை உதவிகள் குறிப்பிட்ட காலவரையறைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். அக்கால இடைவெளிக்குள் உற்பத்தியாளர் உரம் பெறத்தவறினால் உதவி நீக்கப்படவேண்டும். செயற்கை வழிகளினூடாக தகுதியற்ற தாபனங்களைப் பாதுகாப்பது தேவையற்றது.

சுருங்கக் கூறுவோமாயின், மேற்படி நடவடிக்கைகள் பாதீட்டுச் சமநிலையினை மீண்டும் நிலைநாட்ட வேண்டும். பணவீக்கத்தைத் தவிர்ப்பதற்கு இது இன்றியமையாதது. பணவீக்கம் ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தின் ஒரு விளைவு என்ற குறிப்பான கருத்தினைப் பகுதி 2.1 இல் கூறிய பொழுது, பணவீக்கத்தை ஏற்படுத்தும் செயல்முறையின் இறை அம்சங்களையே பிரதானமாக (வேறும் பல காரணிகள் இருந்தபோதும்) குறிப்பிட்டேன். பாதீட்டுச் சமநிலையினை ஏற்படுத்துவதற்கான வழிவகைகள், பதவியிலிருக்கும் அரசாங்கத்தினதும் வரவு - செலவுகளை நிர்ணயித்து சட்டமியற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களதும் கைகளிலேயே தங்கி உள்ளன.

"அறுவைச்சிகிச்சையின் பின்னர், பாதீட்டுச் செலவினங்களைக் குறைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வதோடு, அம்முயற்சிகளைத் தீவிரப்படுத்துதலும் இன்றியமையாததாகும். இம்முயற்சிகளில் நாம் காணும் வெற்றியே வரி விகிதங்களைக் குறைப்பதற்கான வாய்ப்பினை அதிகரிக்கும். இது அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நன்மதிப்பையும் உயர்த்தும். சிகிச்சைக் காலத்தில் செலவுக்குறைப்பினை மேற்கொள்ளலாம் என எதிர்பார்த்து, அற்நிச்சயமற்ற செலவுக்குறைப்பினை மனத்திற்கொண்டு முன்னதாகவே அதிகசெலவுகளை மேற்கொள்வதில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

## 2.3 மொத்தக்கேள்வியை நிர்வகித்தல்

உறுதியாக்கற் செயற்றிட்டத்தின் வெற்றியினைப் பாதிக்கக்கூடிய சில அம்சங்களைத் தெரிவு படுத்தும் நோக்கமாக ஒரு சில அம்சங்களை மட்டும் இங்கு ஆராய விரும்புகிறேன்.

அறுவைச்சிகிச்சையின் போது தனியாரிடமுள்ள பணம் நிலையானதாகவிருக்கும். எனவே, அவர்களது கொள்வனவுச் சக்தி கட்டுமீறும் என்ற பயம் அவசியமற்றதாகும். ஏலவே வலியுறுத்தியதற்கமைய, அரச உடைமை வங்கிகள் தனியார் துறைக்குக் கொடுக்கும்

கடன் கோட்டாக்கள் நிலையானதாக நிர்ணயிக்கப்பட வேண்டும். ஒரு பக்கத்தில் இக்கடன்கள் தனியார் துறை கோரும்போது அவர்களைச் சென்றடைய வேண்டும். அதாவது, அரசாங்கத்துறை அதனைத் தன்பால் திருப்பாதிருக்க வேண்டும். மறு பக்கத்தில், செயலாக்கத்தின் முதற்கட்டத்தில் தனியார்துறைக்கடன் கட்டு மீறாதிருத்தல் அவசியம். தனியார் துறை தனது சொந்தக் காலில் நிற்கும் நிலை ஏற்பட்டதன் பின்னர், அதனது கடனுக்கான கேள்வி அதிகரிப்புக்கேற்ப கடன் நிரம்பலை விரிவுபடுத்தலாம். இதேவேளையில், தனியார் துறை அலகுகள் தமக்கிடையே கடன் தொடர்புகளை விஸ்தரித்துக் கொள்ள ஊக்குவிக்கப்படவேண்டும். இவ்விதத் தொடர்புகளுக்குத் தேவையான சட்டவமைப்புக்களை உருவாக்குதலும் கட்டாயமானது.

முன்னைய பகுதியில் அரசபாதீடு விரிவாக ஆராயப்பட்டது. அங்கு கூறப்பட்ட விதிகளனைத்தும் பின்பற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக அரசபாதீட்டினால் உருவாக்கப்படும் கேள்வி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனவும் கருதுவோம்.

அரசஉடைமை நிறுவனங்களினது (ஓரளவு மட்டுமே அரசஉடைமைகளான பாரிய கூட்டுறவு நிறுவனங்கள் உட்பட) கேள்வி கட்டு மீறக்கூடும் என்பதே உண்மையான அபாயமாகும். பகுதி 1.2 இல் ஆராய்ந்த பிரச்சினைகளை இங்கு நாம் நினைவுகூருவோம். அரசஉடைமை நிறுவனங்களினது செலவுகளைக்கட்டுப்படுத்துவதற்கான சட்ட விதிகளை அங்கு நான் முன்வைத்தேன். இவ்வித கட்டுப்படுத்தலுக்கான உண்மையான பரீட்சை உறுதியாக்கற் செயற்பாடே என்பதை இங்கு நான் வலியுறுத்த விரும்புகிறேன். கடந்த ஓரிரு தசாப்தங்களில் நிதி அதிகாரிகள் பணக்கட்டுப்பாட்டுக் கொள்கைகளை இறுக்கமாகப் பின்பற்றியுள்ளனர். எனினும், இம்முயற்சி ஓரளவு மட்டுமே பயனளிப்பதாக இருந்தது. இது மொத்தக்கேள்வி கட்டு மீறுவதையும் யூகோஸ்லாவியா, அல்லது போலந்து நாட்டிற்போன்று பாயும் பணவீக்கம் தோன்றுவதையும் ஓரளவு தடுத்தது. இருந்துங்கூட, 15 தொடக்கம் 25 வீதமாகவிருக்கும் பணவீக்கம் ஏற்கனவே உயர்வான ஒன்றாகும். மேலும் மேற்படி கட்டுப்பாடுகள் பல்வேறுபட்ட விரும்பத்தகா பக்கவிளைவுகளையும் தோற்றுவித்தன. உண்மையிலேயே இலாபந்தரும் துறைகளிற் கூட உற்பத்தியினதும் முதலீட்டினதும் அதிகரிப்பினை இது தடைசெய்தது.இது இவ்வாறிருக்க, இது காலம்வரை மெய்வட்டி வீதங்கள் நம்பமுடியாத அளவிற்குக் குறைவாகவே (அதாவது சற்று எதிர்க்கணியமாகவே) இருந்து வந்துள்ளமையால் உண்மையிலேயே பகுத்தறிவு சார்ந்த ஒரு இறுக்கமான பணக்கொள்கையினை உருவாக்க முடியவில்லை. எதிர்காலத்தில் இக்கொள்கை முன்னரிலும் சாதுரியமான வகையிலும் திட்டவட்டமான முறையிலும் செயற்படுத்தப்படுவது விரும்பத்தக்கது. எனினும், மேலே கூறப்பட்ட நிபந்தனைகளின் கீழ், பண இறுக்கத்தினைக் கடைப்பிடித்தல்

சாத்தியமானது என்பதை இந்த அனுபவம் காட்டியுள்ளது. இக்-கொள்கையினது முதன்மையானதும் அதிமுக்கியமானதுமான கருவிகளுள் ஒன்று, கடன்களின் மீதான மெய்வட்டி வீதம் நேர்க்கணியமானதாகவும் உயர்வானதாகவும் இருத்தலாகும்.

எவ்வாறெனினும், உறுதியாக்கற் செயற்றிட்டத்தின் பல்வேறு அங்கங்களை ஒரே நேரத்தில் அமுல்ப்படுத்துவது கட்டாயம் என்பதற்கு அண்மைக்கால பணக்கட்டுப்பாட்டினது வரலாறு ஓர் அறிவூட்டும் எடுத்துக்காட்டாக உள்ளது. இதுவரை பின்பற்றப்பட்ட பண இறுக்கக் கொள்கையானது தேவையான வேறு துணை நடவடிக்கைகளின்றி விரும்பிய விளைவுகளை ஏற்படுத்தத் தவறியுள்ளது. பணவீக்கத்தையும் திறனற்ற நிறுவனங்களைச் செயற்கையாக வாழவைக்கும் வழக்கத்தினையும் இது முடிவுக்குக் கொண்டு வரவில்லை. இதன் விளைவாக, பலரது கண்ணோட்டத்தில் பண இறுக்கக் கொள்கையானது மதிப்பிழந்துள்ளதோடு, எதிர்காலத்தில் அதனது அமுலாக்கத்தினையும் சிரமமாக்கியுள்ளமை துரதிர்ஷ்டவசமானதேயாகும்.

மொத்தக் கேள்வியினைக் கட்டுப்படுத்தலோடு இணைந்து செல்லும் சில அம்சங்களைப் பற்றியும் நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். இங்கு இரண்டை மட்டும் நான் சுட்டிக்காட்டுகிறேன்.

1. மரபுசார்ந்த சோஷலிச பொருளாதார அமைப்பில் கடன் நிரம்பலானது அரசவங்கியமைப்பின் ஒரு தனியுரிமையாக-விருந்தது. வர்த்தகக்கடன், அதாவது அரச உடைமை நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று கடன்கொடுத்தல் என்பது கட்டாயமாகத் தவிர்க்கப்பட்டிருந்தது. எனினும், சந்தைச் சோஷலிச வகையைச் சார்ந்த சீர்திருத்தங்களின் கீழும், அரசஉடைமை நிறுவனங்களை ஓரளவு தாராண்மைப் படுத்தலின் கீழும், நிறுவனங்கள் தமக்கிடையே கடன் கொடுக்கும் வழக்கம் சடுதியாக வளர்ச்சியுற்றதோடு, எல்லாச் சோஷலிச சீர்திருத்த நாடுகளிலுமே இது பொதுவாகக் காணப்படும் ஒன்றாயிற்று. இவ்விதகடன்கள் கடன்கொடுக்கும், கடன் பெறும் நிறுவனங்களுக்கிடையிலான ஒரு சுயேச்சையான உடன்படிக்கையாகவும் வேறு சில சந்தர்ப்பங்களில் கட்டாயப்படுத்தப்பட்ட ஒன்றாகவும் இருந்தன. பொருட்களைக் கொள்வனவு செய்யும் ஒரு நிறுவனம் அவற்றை விற்கும் நிறுவனத்திற்குப் பணம் செலுத்த மறுப்பதன் மூலம் கடனுக்கு விற்குமாறு அதனைப் பலவந்தப்படுத்துகின்றது. இதன் விளைவாக, கடன் கொடுக்கும் நிறுவனம் தனது கடன்களைத் தீர்க்க வகையற்ற நிலையினையடைவதால், அது தனக்குப் பொருட்களை நிரம்பல் செய்வோருக்குப் பணம் செலுத்த மறுக்கும். இறுதியாக, உண்மையான ஒரு திரவ நெருக்கடியினை இது உருவாக்கும் பொழுது, கடன் கொடுத்தோர் தமதுகடன்களை மீளப்

பெறுவதற்காகக் கடன் வாங்கியோர் மீது படையெடுக்கின்றனர். சகிக்க முடியாத இந்த நிலை காரணமாக, வங்கியமைப்பு இரக்கம்கொண்டு கஷ்டநிலையிலிருக்கும் நிறுவனங்களின் உறுதிப்பத்திரங்கள், உண்டியல்கள் என்பவற்றின் ஒரு பகுதியைக் கழிவு செய்கின்றன. ஹங்கேரியினது போலியான கடன்முறை, போலியான வங்கிமுறை, போலியான முதற்சந்தை என்பவற்றின் ஓர் உருக்குலைந்த வெளிப்பாடே இதுவாகும். உண்மையான நிதிக்கொடுக்கல் வாங்கல்கள் போன்று தோற்றமளிக்கும் இவை, தட்டுப்பாட்டிற்கு இட்டுச் செல்லும். உற்பத்தி வீழ்ச்சி காரணமாக ஏற்படக்கூடிய தொழிலாளரின் எதிர்ப்பு, சர்வதேச ஒப்பந்தங்களை நிறைவேற்ற முடியாமை என்பவற்றால், நிறுவனங்களின் உற்பத்தியினை எந்தவகையிலும் நிறுத்த முடியாத ஒரு நிலை காணப்படுவதை இவை மூடிமறைக்கின்றன.

நிறுவனங்களுக்கிடையிலான வர்த்தகக் கடன்களானவை, அவற்றுக்கிடையிலான நிதித்தொடர்புகள், வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றின் ஓர் இயற்கையான விளைவே. எனவே, நிதிச்சமநிலையினை உறுதிப்படுத்தும் நிலுவைகளின் பணநிரம்பற் பக்கம் சார்ந்த ஓர் அம்சமாகவே அவை சேர்க்கப்படவேண்டும். உறுதியாக்கற் செயற்பாட்டின் கணியரீதியான திட்டமிடலின் போது இது தவிர்க்க முடியாததாகும். கடனை மீளப் பெறுவதற்காக வரிசையிற் காத்திருத்தல், அதன் விளைவாக ஏற்படும் திரவ நெருக்கடி போன்ற அதன் உருக்குலைந்த வெளிப்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி இடப்படவேண்டும். சந்தைப் பொருளாதாரங்களில் வழமையாகக் காணப்படும் சட்ட வடிவங்களையும் வர்த்தகக் கடன் தாபனங்களையும் அபிவிருத்தி செய்யவேண்டும். கடன்பட்ட நிறுவனங்கள் பலவந்தமாக மேலும் கடன் பெற இடமளிக்காது, நிறுவனங்களுக்கிடையே சுயேச்சையான கடன் தொடர்புகள் அபிவிருத்தியடைவது ஊக்குவிக்கப்பட வேண்டும். கழிவு செய்தலும், வாக்குறுதிச் சீட்டுக்கள், ஆணைகள் என்பவற்றை ஏற்பதும் வர்த்தக, நிதி வாழ்க்கையின் ஒரு நியாயமான பகுதியாக மாறவேண்டும்.

கடனை மீளச் செலுத்தமுடியாத அரச உடைமை நிறுவனங்கள் பல வரிசையில் நிற்றல், அவற்றிற்குச் சரக்குத் தொகுதிகளை நிரம்பல் செய்த தனியார் நிறுவனங்களுக்குப் பணம் செலுத்தாது செய்து விடுவதன் மூலம் அந்நிறுவனங்களையும் பாதிக்கக்கூடும். அரச துறையானது தனக்கு விரும்பாதவகையில் கடன் கொடுத்த தனியார் நிறுவனங்களை மேற்படி வரிசையின் இறுதிக்கோடிக்குத் தள்ளவும் கூடும். ஒரு செல்வாக்கற்ற தனியார் துறை நிறுவனத்திலும் பார்க்க, செல்வாக்குமிக்க அரசஉடைமை நிறுவனம் தனது கடன்களைத் திருப்பிப் பெறுவதற்கான வாய்ப்பு

அதிகமாகும். உதாரணமாக, அரசவங்கித் துறையினது தலையீட்டினூடாக ஓர் அரசஉடைமை நிறுவனம் அதனை இலகுவாகத் திரும்பிப்பெறக்கூடும். பகுதி 1.1 இல் கூறியதற்கமைய, தனியார் துறைக்கு உண்மையான பாதுகாப்பு தேவைப்படும் சந்தர்ப்பங்களுள் இதுவுமொன்றாகும். அரச உடைமை நிறுவனங்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்குமிடையிலான உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்தலை உறுதி செய்தல், எமது இரண்டாவது நிபந்தனைக்கமைய முக்கியமானதாகும். அரசஉடைமை நிறுவனமொன்று, ஒரு தனியார் நிறுவனத்துடன் கொள்வனவிற்கோ, விற்பனவிற்கோ உடன்படிக்கை செய்யுமாயின், அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு முற்றிலும் அது உட்படச் செய்யவேண்டும். ஒரு தனியார் நிறுவனத்திற்கும் இது பொருந்தும்.

2. உறுதியாக்கற் செயற்பாட்டில் வேதனங்கள் பற்றிய பிரச்சினையே அரசியல் ரீதியாக உணர்ச்சி பூர்வமானதும், மிகச் சிரமமானதுமாகும். அரசஉடைமை நிறுவனத்துறையினால் செலுத்தப்படும் வேதனங்களின் மொத்த அளவு, உறுதியாக்கற் செயற்றிட்டத்தில் அனுமதிக்கப்பட்ட எல்லைக்கு மேற்படா-திருக்குமாறு உறுதி செய்யப்படல் வேண்டும். உறுதியாக்கலுக்கு முந்திய காலப்பகுதியோடு ஒப்பிடும் போது, இந்த எல்லை எவ்வளவாக இருக்க வேண்டுமென்பதை என்னால் கூறமுடியாது. ஒரு குறுகிய காலத்திற்கு மிகைக்கொள்வனவுச் சக்தியினை வெளிக்கொணருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி இருக்கலாம். இது விலை அதிகரிப்பையும் ஏற்படுத்தக்-கூடும். செலவிடப்படாத கட்டாயச் சேமிப்பின் ஒரு பகுதியை உறிஞ்சுவதற்கும் "பண எச்சங்களை" இல்லாமற் செய்வதற்கும் இன்றியமையாத ஓர் இடைக்காலத் திருத்தும் விலைமட்ட அதிகரிப்பான" இது, சிலவேளைகளில் தேவையற்றதாகவும் இருக்கக்கூடும். எனவே மேலும் விரிவான ஆய்வின் மூலமே இது முடிவுசெய்யப்படல் வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நிலையாக இருக்க வேண்டியதான இந்த சராசரி வேதனமட்டம் தரப்பட்ட பின்னர், அதனை உறுதிப்படுத்துவதற்கு பல கருவிகளைக் கையாளலாம். இக்கருவிகளைத் தெரிவு செய்தல் பற்றி திட்டவட்டமாக எதனையும் கூற நான் விரும்பவில்லை. ஒரு கருத்தின்படி, நிறுவனங்களுக்குக் கடன் வழங்கல் வேதன நியமங்களோடு கட்டாயமாகப் பிணைக்கப்படவேண்டும். இது போதுமானதாகவிருக்குமா என்பது பற்றி எனக்கு ஐயமுண்டு. இதிலும் பார்க்கக் கடுமையான நடவடிக்கைகள் தேவைப்படலாம். கடந்தகால அனுபவத்தைக்

கொண்டு, சார்பு ரீதியாக அதிக செயற்றிறன் வாய்ந்த ஒழுங்குபடுத்தும் வழிகள் எவையென நாம் கூறலாம். குறிப்பிட்ட சூத்திரம் எதுவாகவிருக்க வேண்டும் என்பது பற்றி இந்த ஆய்வில் திட்டவட்டமான நிலைப்பாட்டினை மேற்கொள்ள நான் விரும்பவில்லை. எனினும், நிறுவனத்தின் மொத்த வேதன நிதியின் மீது எல்லை விதிக்கலாம் அல்லது வேதன நிதியினை உற்பத்தியின் ஒரு விகிதாசாரமாக நிர்ணயிக்கலாம் அல்லது வேறு ஏதேனும் சூத்திரமொன்று கையாளப்படலாம். நிறுவனங்களின் முகாமையாளரது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதால், இது உத்தமமான உற்பத்திக்காரணிச் சேர்க்கையினை மேலும் கடினமாக்கலாம் என்பதை நான் அறிவேன். இருப்பினும், இவ்வித நடவடிக்கையினை மேற்கொள்ளத்தவறினால், அரசஉடைமை நிறுவனங்களின் முகாமையாளர்கள் வேதனங்களைக் கண்மூடித்தனமாக உயர்த்திக் கொண்டே இருப்பர். இதன் விளைவாக, சில ஆண்டுகளுக்கு முன்னர் சீனாவும், இன்று யூகோஸ்லாவியாவும், போலந்தும் உள்ளது போன்ற அதே நிலையினையே நாமும் அடைவோம். மறைமுக வழிகளின் மூலமாக இந்த நிலையினைக்கட்டுப்படுத்த முடியாது. பணிக்குழுவாட்சி சார்ந்த அரசஉடைமை முறையின் கீழ், அரசஉடைமை நிறுவனத்தின் முகாமையாளன் வேதனங்களைச் சுயமாகவே கட்டுப்படுத்துவானென எதிர்பார்ப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்கு ஒப்பானதாகும்.

கீழே 3ம் அத்தியாயத்தில் இப்பிரச்சினையின் அரசியல் விளைவுகளையும், அது தொடர்பான தொழிற் சங்கங்களின் பங்கினையும் ஆராய்வோம். இக்கட்டத்தில் தேவையானவை, பொருளாதார வாதங்கள் மட்டுமேயாகும். அதிகரிக்கும் வேதனங்களை நிர்வாக நடவடிக்கைகளின் மூலம் கட்டுப்படுத்துவது திறனைப் பல்வேறு வழிகளில் பாதிக்குமென்பதையும் நான் அறிவேன். இந்த நிலையினை மாற்றுவதற்கு ஒரே வழி அரசஉடைமையினை தனியார் உடைமையாக மாற்றுவதே. வேதன அதிகரிப்புச் கோரும் ஊழியருக்கு எதிரான இயற்கையான எதிரி தனியார் உடைமையே. உடைமையாளனாகிய அவன் சொந்தப் பணத்தினின்றே வேதனங்களைக் கொடுக்கின்றான். இந்த உண்மையானதும் இயற்கையானதுமான முரண்பாட்டினைப் போலியான உடைமைச் சீர்திருத்தங்களினாற் சரிசெய்ய முடியாது. அரசஉடைமை பலமிக்கதாக இருக்கும் வரை, கீழிருந்து வரும் வேதன உயர்வுக்கான கோரிக்கைகளை எதிர்ப்பதற்கு நிர்வாக ஒழுங்குமுறையினையே கையாளவேண்டியிருக்கும்.

முதிர்ச்சியடைந்த பொருளாதாரமொன்றில் இறுக்கமான

பணக்கொள்கையானது வியாபாரத்துறையில் வேதனங்களைக் கட்டுப்படுத்தவும் அவற்றைக் குறைக்கவும் கூடத்தூண்டுமென எதிர்பார்த்தல் உண்மைக்கு மாறானதல்ல. நிறுவனம் தனக்கு வேண்டிய பணத்தினை பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதால், ஊழியருக்குக் கூடிய வேதனங்களை வழங்க முன்வராது. முதிர்ச்சியடைந்த முதலாளித்துவ பொருளாதாரங்களிற் கூட இது முற்றாகச் செயற்படுகின்றதா என்பது நிச்சயமற்றதாக இருந்த போதும், இதற்கான வாய்ப்புக்கள் அங்கு இருக்கவே செய்கின்றன. மூன்றிலிரண்டு பங்கு சோஷலிசமாகவும் காற்பங்கு முதலாளித்துவமாகவுமிருக்கும் ஹங்கேரிய பொருளாதாரத்தில் இது சாத்தியமானதல்ல. மிகமோசமான நிதிநிலைமைகளிலிருந்த பல அரசஉடைமை நிறுவனங்கள் கூட எவ்வித கட்டுப்பாடுமின்றி ஊழியரது வேதனங்களை உயர்த்தின என்பதற்கு பெருமளவு உதாரணங்களைக் கூறலாம். வேறு எதற்கு இல்லாவிடினும் இதற்கான பணத்தை எவ்வழியிலாவது பெறமுடியுமென்ற நம்பிக்கையிலேயே இவ்வாறு செய்தனர். இதன் காரணமாக, தமது நிரம்பலாளருக்கு கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறிய சந்தர்ப்பங்களுமுண்டு. ஹங்கேரிய அரசதுறையில் நேரடியான நிர்வாக எல்லைகள் விதிப்பதை தவிர்க்க முடியாதிருப்பதற்கும் இதுவே காரணமாகும். அரசஉடைமையில் சந்தை சீர்திருத்தங்களைப் புகுத்துவது என்பது ஒரு கருத்தாக உருவாகிய தசாப்தங்கள் முதல் இவ்வித எல்லைகள் தொடர்ந்து மீறப்பட்டு வந்துள்ளன. இக்கசப்பான உண்மையினை ஏற்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

வேதனக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்தலே உறுதியாக்கல் செயயற்பாட்டில் முக்கியமானது என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இதில் நாம் தோல்வியுறுவோமாயின், முழுச் சிகிச்சையுமே தோல்வியடைய நேரும்.

## 2.4 பகுத்தறிவான விலைகளை உருவாக்குதல்:

விரும்பத்தகு விளைவுகள் எவையெனக் கூறி இதனை நாம் ஆரம்பிப்போம். எழுமாறியானதும் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் பகுத்தறிவற்றதுமான இன்றைய விலை முறையினை நீக்கி, அர்த்தமுள்ள பொருளாதார தகவல்களைக் கொண்டிருக்கும் ஒரு பகுத்தறிவான சந்தை விலைமுறையினை எமது செயற்பாடு தாபிக்குமாயின் அது வெற்றியளிக்குமெனலாம். இது பலவித நிபந்தனைகளுக்குட்பட்டதாகவிருக்கும். இவற்றுட் சில சார்பளவில் இலகுவாக நிறைவேற்றக் கூடியனவாகவும் வெளிப்படையானவுமாகும். நிபந்தனைகளின் ஏனைய பகுதிகள் நிறைவேற்றுவதற்கு சற்றுச் சிரமமானதும் தவிர்க்கமுடியாத வகையில் முரண்பாடுகளைக் கொண்டனவுமாகும்.

வெளிப்படையான நிபந்தனைகளைக் கூறி ஆரம்பிப்போம், அரச தலையீட்டினால் பாதிக்கப்படாது, எல்லாத்தனியார்துறை கொடுக்கல் வாங்கல்களினதும் விலைகள் கட்டின்றித்தளம்பவிடப்படவேண்டும். தனியார் துறை அலகுகள் பல அரசதுறையுடன் விற்போராகவோ, கொள்வோராகவோ தொடர்புகொண்டிருப்பதால், "தனியார்துறை" விலையமைப்பு முழுப்பொருளாதாரத்திற்கும் பகுத்தறிவானதாக இருக்குமென்பதை இது உறுதி செய்யமாட்டாது. அரசதுறையின் விலைகள் தனியார் துறையினது செலவுகள், விலைகள் என்பவற்றைப் பாதிக்கின்றன. பல பொருட்கள், சேவைகளைப் பொறுத்தவரை தனியார்துறைக்கிடையிலான உள்ளீட்டு - வெளியீட்டுப் பாய்ச்சல்களே கூடுதலாகவிருப்பதால், தனியார்துறை விலைகளைத்தரமாகக்கொண்டே அரசதுறை விலைகளை அளவிடலாம்.

அரசதுறை விலைகளைச் சீராக்குதல் சிரமமான ஒரு காரியமாகும். உறுதியாக்கற் செயற்பாடு பூர்த்தியடைந்ததன் பின்னர் அரசதுறைவிலைகள் எவ்வாறிருக்க வேண்டுமென்பதைத் தெளிவாகக்கூறுவதன் மூலம் எமது ஆய்வினைத்தொடங்குவோம். சந்தையை சமப்படுத்தும் விலைகளை உருவாக்குவதே எமது இலக்காகும். ஒரு சில விதிவிலக்குகள் நீங்கலாக, விலைகள் பூரணமாகத் தாராண்மைப்படுத்தப்படவேண்டும். செயற்பாடு எவ்வளவு துரிதமாக இந்த இலக்கினை அடைகின்றதோ அந்தளவிற்கு அது சிறப்பானதாகவிருக்கும்.

வளர்ச்சியும் முதிர்ச்சியுமடைந்த சந்தைப்பொருளாதாரங்களிற் கூட, கட்டுப்படுத்தப்படும் சில பொருட்கள், சேவைகளின் விலைகள் (உ*ம் : அரசாங்க சேவைகள், இயற்கைத்தனியுரிமைகளின் வெளியீடு போன்றன) இதற்கு நிரந்தரமான விதி விலக்குகளாகும்.

உறுதியாக்கல் செயற்பாட்டினூடாக விலைகளைத் தாராண்மையாக்கலே இறுதி விளைவாகவிருக்க வேண்டுமென்பதை ஐயத்திற்கிடமின்றிக் கூறியபோதும், இதனை எவ்வாறு அடையலாமென்பதைச் சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே என்னாற் கூறமுடியும். உறுதியாக்கற் செயற்பாடு தொடங்குவதற்கு முன்னராக ஹங்கேரிய பொருளாதாரத்தின் தனியார் துறையில் தாராண்மையாக்கப்பட்ட விலைகள் எந்தளவிற்கு ஏற்கனவே அடையப்பட்டுள்ளன என்பதை முதல் நிபந்தனையாக நாம் ஏற்கவேண்டும். ஒரு சில விலைகளை மட்டும் கட்டுப்படுத்துவதும் வேறு சிலவற்றை அரைகுறையாகத் தாராண்மைப்படுத்தலும் தனித்-தனியாகவும் அவற்றினது இடைத்தாக்கத்தினூடாகவும் பல ஆபத்துக்களைக்கொண்டிருக்கும். தனியார் துறையில் மட்டுமன்றி

அரசஉடைமை நிறுவனங்களிலுங்கூட, கட்டில்லா விலைகளை உருவாக்குதல் அவசியமானது என்பதை செயற்பாட்டின் ஆரம்பத்திலேயே தரப்பட்டதாக நாம் ஏற்கவேண்டும். கட்டுப்பாடுகளை மீண்டும் உருவாக்கும் பின்னோக்கிய போக்கு வரவேற்கத்தக்கதல்ல. (வளர்ச்சியும் முதிர்ச்சியுமடைந்த சந்தைப்பொருளாதாரங்களிற்கூட, கட்டுப்படுத்திய விலைகளைக்கொண்டிருக்க வேண்டிய துறைகளில் கட்டில்லா விலைகளை உருவாக்கும் பிழையான நடவடிக்கைகள் மட்டுமே இதற்கு விதி விலக்காகும்.)

விலைமுறையினை ஆராயும் பொழுது அத்தியாவசிய நுகர்பொருட்கள், சக்தி, மூலப்பொருட்கள் என்பவற்றினது ஒதுக்குகளினளவு, நிரம்பல் நிலைமை என்பவற்றைக் கவனத்தில் எடுக்கவேண்டும் (பகுதி 2.7 ஐ பார்க்கவும்.)அரசாங்கத்தின் தவறு காரணமாகவோ துரதிர்ஷ்டவசமாகவோ உறுதியாக்கலின் ஆரம்பக்கட்டத்தில் பெருந்தட்டுப்பாடு ஏற்படுமாயின், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உச்சமடைதலை அனுமதித்தல் உசிதமானதா என்பது பற்றி நாம் சிந்திக்கவேண்டும். ஒரு குறுகிய மாற்றம்பெறும் காலப்பகுதியில் மட்டுமே இவ்விலைகளைக் கட்டுப்படுத்தலாம். ஆனால், இதே வேளையில், இறக்குமதி மூலமாகத் துரிதகதியில் நிரம்பலை அதிகரிக்கவும் (தொடர்ந்து விலைகளைத்தாராண்மைப்படுத்தவும்) தீர்மானம் மேற்கொள்ளுதல் இன்றியமையாதது. நிரந்தரமாகவே கட்டுப்படுத்தப்பட்ட விலைகள் நீங்கலாக, ஏனைய விலைக்கட்டுப்பாடுகளனைத்தையும் கூடிய விரைவில் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இடைக்கால நடவடிக்கைகளாக இவை கருதப்படவேண்டும். எவ்வளவு சீக்கிரமாக இறக்குமதி (தனியார் இறக்குமதி உட்பட) தளர்த்தப்பட்டு, அரசதுறை விட்டுச்செல்லும் இடைவெளிகளைத் தனியார்துறை நிரப்புவதற்கான வாய்ப்புக்கள் கூடுதலாக உள்ளனவோ, அந்தளவிற்குத் துரிதமாகக் கட்டுப்பாடுகளுக்கு முற்றுப்புள்ளியிடுதலும் சாத்தியமானதாகவிருக்கும்.

உறுதியாக்கற் செயற்பாட்டின் ஆரம்ப கட்டத்தில் கட்டில்லா விலைகளுடன் பரிச்சயமில்லாத அரசஉடைமை நிறுவனங்கள் தமது ஆரம்ப விலைகளை நிர்ணயிப்பதில் சிரமப்படலாம். இது ஓர் ஆரம்ப கட்டமே என்பதை நன்கு உணர்ந்து, இது தொடர்பாகச் சில விதிகளைக் கையாளுதல் நல்லது. சந்தைச்சக்திகளால் நிர்ணயிக்கப்படும் விலைகள், அரச நிறுவனங்கள் குறிக்கும் விலைகளினின்றும் வேறுபட்டதாகவிருக்கலாம்.

வர்த்தகத்தில் கையாளப்படும் பொருட்களைப் பொறுத்தவரை, உள்நாட்டு விலைகள் முதலாளித்துவ நாடுகளில் காணப்படும் விலைகளோடு சமப்படுத்தப்படல் நன்று என்பது ஏற்கப்பட்ட ஒரு விதியாகும். முதலாவதாக, ஒவ்வொரு பொருளுக்கும் முதலாளித்துவ

வெளிநாட்டு வர்த்தகர்கள் குறிப்பிடும் விலைகள் கவனத்திலெடுக்கப்படவேண்டும். தனியார்துறை நாணயமாற்று விகிதங்களைக் கையாண்டு இவ்விலைகளை உள்நாட்டு விலைகளாக மாற்றிய பின்னர் வெளிநாட்டு, உள்நாட்டு விலையமைப்புக்களுக்கிடையே பெரும் வேறுபாடு காணப்படக்கூடாது. அதாவது, வியன்னாவுக்கும், புடாபெஸ்ட்க்குமிடையே மின்சாரக்கருவிகளிலோ, கிழக்கு அவுஸ்திரியாவுக்கும் மேற்கு உறங்கேரிக்குமிடையே மாமிசத்திலோ, மியூனிக்கிற்கும் புடாபெஸ்ட்டுக்குமிடையே கார்களிலோ விலைவிகித வேறுபாடுகள் இருக்கக்கூடாது எனக்கூறலாம். இது சாத்தியமாகின், வெளிநாடுகளுக்குச் செல்லும் பண்டக்கொள்வனவு தொடர்பான தேவையற்ற பிரயாணங்கள் எவ்வித நிர்வாகரீதியான தடைகளுமின்றியே முடிவிற்குவரும். ஒப்பீட்டு நலனை அடிப்படையாகக்கொண்ட பண்டக்கொள்வனவு தொடர்பான பிரயாணங்கள் மட்டுமே நடைபெறும்.

இவ்வத்தியாயத்தில் முன்னர் கூறப்பட்ட எல்லா அம்சங்களையும் அமுலாக்குவதன் மூலமே மேற்படி கருத்து நிறைவேற்றப்படும். முற்றிலும் ஒரேசீரான நுகர்வுவரி விகிதங்கள், சுங்க இறுப்புக்கள் என்பவற்றை விதிப்பதோடு, உற்பத்தியாளர், நுகர்வோர் என்போருக்கான மானியங்களும் நீக்கப்படல் இதிலங்கும்.

1946ம் ஆண்டு உறுதியாக்கலின் போது, அக்காலத்திய உறங்கேரிய நாணயமான "பெங்கோ" வில் குறிப்பிடப்பட்ட 1938ம் ஆண்டு விலைகளினடிப்படையிலேயே போரின்டின் ஆரம்ப சார்பு விலையமைப்பு கணிக்கப்பட்டது. இதேபோன்ற ஒரு எளிமையான முறையே இன்றும் தேவைப்படுகின்றது. ஆனால், இன்றைய விலை நிர்ணயிப்பிற்கான அடிப்படை ஹங்கேரியினது பழையவிலைகளன்று சமகால முதலாளித்துவ நாடுகளின் சார்பு விலைகளே இன்று பொருத்தமான விலைகளாகும். உதாரணமாக, இன்றைய அவுஸ்திரிய அல்லது மேற்கு ஜேர்மன் விலைகளை ஆரம்ப விலைகளாக நிறுவனங்கள் ஏற்கலாம். மேற்படி விலைகள் தூய பொருளியல் கோட்பாடுகளின் கண்ணோட்டத்தில், மிக உத்தமமான விலைகளென நான் கருதமாட்டேன். இந்த விலைகளும் பல்வேறு காரணிகளால் உருக்குலைந்த நிலையிலேயே உள்ளன. ஹங்கேரியினது கேள்வி - நிரம்பல் நிலைமையும் செலவு அமைப்பும் வேறுபட்டன என்பதும் சொல்லாமலே விளங்கும். எனினும், இந்த அவுஸ்திரிய, மேற்கு ஜேர்மனிய விலைகள் ஓரளவு நேர்மையான விலைகளாகும். மேலும் சந்தைப்பொருளாதாரங்களில் மேற்குறிப்பிட்ட நாடுகளுடனேயே ஹங்கேரியினது பிணைப்புக்கள் இறுக்கமானவையாகும். ஹங்கேரிய வர்த்தகரும் உல்லாசப்பயணிகளும் பெரும்பாலும் இந்த நாடுகளுடனேயே தமது நாட்டை ஒப்பிடுகின்றனர். அரசினால் குறிக்கப்பட்ட விலைகளானாலும் சரி, அரசஉடைமை நிறுவனங்களினால்

தன்னிச்சையாக நிர்ணயிக்கப்பட்ட விலைகளானாலும் சரி, அவை பின்வருமாறு கணிக்கப்படவேண்டுமென்பது எனது கருத்தாகும். ஒரு குறிப்பிட்ட பொருள் அவுஸ்திரியாவிலோ, மேற்கு ஜேர்மனியிலோ என்ன விலையில் வாங்கப்படலாம் அல்லது விற்கப்படலாம் என்பதன் அடிப்படையில், செயற்பாட்டின் போது நிலவும் நாணயமாற்று விகிதத்தில் இவ்விலைகள் போரிண்டுக்கு மாற்றப்படவேண்டும். (நாணயமாற்று விகிதப்பிரச்சினை அடுத்த பகுதியில் ஆராயப்படும்.) செயற்பாட்டின் ஆரம்ப கட்டத்தில் இந்த உள்நாட்டு விலைகளிலேயே அரச விற்பனை நிலையமொன்று சந்தையில் நுழையவேண்டும்.

செயற்பாட்டின் ஆரம்பகட்ட விலைகளை நிர்ணயிப்பதற்கு இன்னுமொரு முக்கிய அடிப்படை, ஹங்கேரிய தனியார்துறையில் காணப்படும் சார்பு விலைகளாகும். இப்பிரச்சினை தொடர்பாக ஏற்கனவே நாம் வெளிநாட்டு நாணயமாற்று விகித ஆய்வில் குறிப்பிட்டுள்ளோம். உணவுப்பொருட்கள், தனியாருக்கு உரிமையான வீடுகளினது வாடகைகள், அசையாத ஆதனச்சந்தை, சேவைகள் துறையின் பெரும்பகுதி போன்ற இன்னோரன்னவற்றில் நேர்மையான தனியார் விலைகள் ஏற்கனவே உருவாகியுள்ளன. இவை அரசகாரியாலயமொன்றினால் செயற்கையாக உருவாக்கப்பட்டனவாக இல்லாது, நேர்மையான சந்தைவிலைகளாகவிருப்பதால், செயற்பாட்டுக் காலத்தில் ஓர் அரசஉடைமை நிறுவனம் தனது பொருட்களைச் சந்தையிலிடும்பொழுது இவ்விலைகளிலேயே ஆரம்பிப்பது உசிதமாகும்.

மேலே ஆராயப்பட்ட வெளிநாட்டு விலைகளும் உள்நாட்டு விலைகளும் பல்வேறு பொருட்களினதும் சேவைகளினதும் சார்பு விலைகளை நிர்ணயிப்பதற்கு ஆதாரமாகவிருக்கலாம். உறுதியாக்கலின் போது அரசஉடைமை நிறுவனங்கள் சந்தையில் நுழைகையில், மேற்படி சார்பு விலைகளைக்கையாள முடியும். பொது விலைமட்டநிர்ணயம் ஒரு வேறுபட்ட பிரச்சினையாகும். அது வேறுபல பேரினப்பொருளியல் காரணிகளில் (கடன் நிரம்பல், வேதனமட்டம், பேரினக்கேள்வி – நிரம்பல் என்பவற்றில்) தங்கியிருக்கும். இப்பேரினப்பொருளியல் தொடர்புகளை நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதோடு, அவைபற்றிப் பின்னர் மீண்டும் ஆராய்வோம்.

அரசநிறுவனமொன்று தனது கணிப்பீடுகளை மேற்கொள்ளும்பொழுது, அரச நிதி அதிகாரிகளினால் நிர்ணயிக்கப்பட்டு அரசவங்கியமைப்பினால் கையாளப்படும் மாற்றுவிகிதத்தினையே கவனத்திலெடுக்கும் (அடுத்துவரும் பகுதியைப்பார்க்கவும்). ஒரு பகுத்தறிவான மட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டு அரசாங்கத்துறையினால் விதிக்கப்படும் நேர்க்கணிய மெய்வட்டிவீதங்களையும் நிறுவனம் கவனத்திலெடுக்க வேண்டும். செயற்பாட்டின் ஆரம்பக்கட்டத்திலாவது கையாளப்படவேண்டிய இந்த விகிதங்கள் முன்னதாகவே

அறிவிக்கப்படவேண்டும். மெய்க்கடன் சந்தை நிலைமைக்கேற்ப அவை பின்னர் மாற்றியமைக்கப்படலாம்.

நிரந்தரமாகக் கட்டுப்படுத்தப்பட்ட தனியுரிமைப்பொருட்கள் நீங்கலாக, ஏனைய எல்லாவிலைகளையும் தாராண்மைப்படுத்தல் முக்கியமானது. கேள்வி - நிரம்பல் சமநிலையடைந்து சமநிலை விலை தோன்றுவதற்குச் சிறிதுகாலம் எடுக்கலாம். இதேவேளையில், வெளிநாட்டு வர்த்தகம் நடைபெறுவதையும், இதில் பெரும்பகுதி தனியார்துறை வர்த்தகராலேயே மேற்கொள்ளப்படுவதையும் நாம் நினைவுறுத்திக்கொள்ளவேண்டும். உள்நாட்டு உற்பத்தியாளருக்குப் போட்டியாக இறக்குமதியாளர்கள் (அவர்கள் ஹங்கேரிய அரசஉடைமை நிறுவனங்களாகவோ, ஹங்கேரிய தனியார் நிறுவனங்களாகவோ, வெளிநாட்டு முதலாளித்துவ நிறுவனங்களாகவோ, கூட்டு முயற்சிகளாகவோ இருக்கலாம்.) சந்தையில் நுழைவர், ஆரம்ப விற்பனவுவிலை உயரிய இலாபத்தைத் தருவதாக இருக்குமாயின், அது இறக்குமதியாளரைக் கவர்ந்து, காலப்போக்கில் விலைகளை வீழ்ச்சியடையச்செய்யும். இதற்கு மாறானநிலை காணப்படுமாயின், இது எதிர்த்திசையில் செயற்படும்.

தாராண்மைப்படுத்தலானது அடிப்படையில் ஒரேசீரான விலைகளுக்கே இட்டுச்செல்லும் எனினும், கோட்பாட்டுப் பொருளியலில் நிறைபோட்டியென அழைக்கப்படும் சந்தையமைப்பில் மட்டுமே முற்றிலும் ஒரே சீரானவிலைகள் உருவாகுமென்பது நன்கு தெரிந்த ஒன்றாகும். ஒரு வளர்ச்சியடைந்த சந்தைப்பொருளாதாரத்தின் பெரும்பாலானபகுதிகளின் பண்பாகவிருக்கும் நிறைவில் போட்டியில் விலைகள் ஓரளவு சிதறுண்டனவாகவே இருக்கும். ஹங்கேரியிலும் அதேதன்மை காணப்படுமென நாம் எதிர்பார்க்கலாம். இது ஓர் இயற்கையான சிதறலே ஆகும். பழுப்பு அல்லது கறுப்புச் சந்தை விலைகளுக்கு மாறாகச் சந்தைச்சமநிலையினின்றும் விலகிச்செல்லும் விலைகள் தனியார்துறை நிர்ணயிப்பிற்குப் பதிலாக அரச நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் விலைகள் போன்ற வேறு விதிகளினடிப்படையில் செயற்கையான முறைகளில் சந்தையமைப்பினை சிதறச்செய்வதற்கு உறுதியாக்கற் செயற்பாடானது முற்றுப்-புள்ளியிடவேண்டும். செயற்பாட்டினூடாக இவ்வித விலைச்சுவர்களை இடித்துவிடுதல், ஒரே சீரான விலையமைப்பினை உருவாக்குவதற்கு உதவியாகவிருக்கும்.

ஒரேசீரான சந்தைச்சமநிலை விலைகள் தோன்றுவதற்கு எவ்வளவு காலம் செல்லுமென்பதை எவராலும் கூறமுடியாது. இது பற்றிப் போலியான நம்பிக்கைகளைக்கொண்டிருப்பது நல்லதன்று பிரேங்பர்ட் அல்லது சியூரிக் போன்று, ஓர் ஒழுங்கானதும் நன்கு

இணைக்கப்பட்டதுமான சந்தையொன்று தோன்றுமென நாம் எதிர்பார்க்கமுடியாது. எனினும், சந்தை அராஜரீகம் பற்றி நாம் அஞ்சத்தேவையில்லை. காலத்துக்குக் காலமேற்படும் உயர்ந்த இலாபங்கள் அல்லது நட்டங்கள் போன்று, விலைத்தளம்பலும் சந்தையின் ஓர் இயல்பான பண்பே. ஹங்கேரியில் பொது அபிப்பிராயமானது நட்டங்களை ஏற்றுக்கொண்டுவிட்டது. மற்றையோர் உயர்ந்த இலாபங்களைப்பெறுவதைப் பார்த்து பொறாமைப்படுவதை மக்கள் நிறுத்தவேண்டும். ஒரு சிலர் மட்டுமே இவ்வித இலாபங்களைப்பெறக்கூடியதாக இருப்பினும், ஆயிரக்கணக்கானோர் ஆபத்துக்களை ஏற்பதற்கும், நேர்மையான வியாபார முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் இது தூண்டுகோளாக அமையும்.

இன்று ஹங்கேரியினது பொருளாதாரம் ஏற்றத்தாழ்வுகளையும் இசைவின்மையையும் கொண்டதாக உள்ளபோதும், நேர்மையான கட்டில்லா முயற்சி காணப்படுமாயின், அவ்வித நிலைமையின் விளைவுகள் முயற்சியாளரைப் பின்வாங்கச்செய்யாது, அவர்களைக்கவரவே செய்யும் (பகுதி 1.1 ஐப் பார்க்கவும்.) கேள்விக்கும் நிரம்பலுக்குமிடையிலான சமமின்மை எந்தளவு கூடுதலாகவிருக்கின்றதோ, அந்தளவிற்கு இவையிரண்டிற்குமிடையே சமநிலையை ஏற்படுத்துவதற்கான எந்த ஒரு நடவடிக்கையினூடாகவும் அதிக இலாபத்தை உழைக்கமுடியும். உண்மையிலேயே இசைவான பொருளாதார அமைப்பு காணப்படும் ஒரு பொருளாதாரத்தில், மேலதிக வருமானத்தைப் பெறுவதற்குத் தொழில் நுட்பக்கண்டுபிடிப்புக்களையும், முக்கியமான புதிய பொருட்களையும் புகுத்துவதுதவிர, வேறு வழிகளெதுவுமில்லை. குழம்பிய எமது உலகில் அதிக பணத்தைச் சம்பாதிக்க விரும்புவோர், ஓர் உண்மையான தங்கச்சுரங்கத்தையே கண்டுபிடிக்கின்றனர். எனினும், பகுதி 1.1 இல் விளக்கப்பட்டதுபோன்று, மக்களது ஒழுக்கப்-பெறுமானங்களிலும், மனப்பாங்குகளிலும் மாற்றங்களேற்படவேண்டும். கடந்த பல தசாப்தங்களாக ஹங்கேரியில் நிலவிய பொருளாதாரக் கோட்பாடு மக்களது மனப்பாங்கினை மாற்றியுள்ளது. இந்தக்கோட்பாட்டின்படி, உழைப்பின் மூலம் பெறும் வருமானம் மட்டுமே ஒழுக்கரீதியாக ஏற்புடையத் இலாபம் சம்பாதித்தலும், உத்தேசங்களில் ஈடுபடுவதும் கண்டிக்கப்படவேண்டியன; பற்றாக்குறைகளைப் பயன்படுத்தி இலாபங்களைப்பெறுவோர் நேர்மையற்றவர்கள் என்பதும் பரவலாகக்காணப்படும் இன்னொரு கருத்தாகும். பற்றாக்குறைகள் நிலவும் பொழுது விற்பனவு விலையினை உயர்த்துதல் எந்தவொரு விற்போனதும் சரியான நடத்தையே என்பது உணரப்படவில்லை. விலை என்பது பொருளாதார வகையைச்சார்ந்த ஒன்றேயன்றி ஒழுக்க நெறி சார்ந்த ஒன்றல்ல. விற்போரை விலைகளை உயர்த்தாதிருக்குமாறு கேட்பதன் மூலமோ, சுயகட்டுப்பாட்டினைக் கடைப்பிடிக்குமாறு கேட்பதன் மூலமோ பற்றாக்குறைகள் நீங்கி

விடமாட்டா. இவ்வாறு உபதேசம் (அல்லது கண்காணிப்பு நடவடிக்கைகள்) செய்வது சந்தர்ப்பத்தைப்பயன் படுத்தி ஆகக்கூடிய சுரண்டலை மேற்கொள்ளுவதினின்றும் விற்போரைத்தடுத்து விடமாட்டாது, ஒரு விற்போர் சந்தையில் அவர்கள் வகிக்கும் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி இடுதலே சிறந்த வழியாகும். (இப்பிரச்சினையும் பொதுவாக பற்றாக்குறைப் பொருளாதாரத்தினை ஒழிப்பது பற்றியும் மேலே பகுதி 2.1 இல் விரிவாக ஆராயப்படும்).

விலைகள் தொடர்பானஆய்வில் ஒரு கணம் நாம் அரசஉடைமை நிறுவனங்களைப்பற்றி நோக்குவோம். நட்டத்திலியங்கும் அரசஉடைமை நிறுவனங்களுக்கு மானியங்கள் நீக்கப்படுவதன் அவசியத்தை முன்னைய பகுதி கூறியது. எதிர்பார்க்கும் புதிய விலையமைப்பின் கண்ணோட்டத்தில் இக்கருத்தினை நாம் மீண்டும் நோக்குவோம். எந்த நிறுவனங்கள் உண்மையிலேயே நட்டத்தைக்காட்டுகின்றன, எவை போலியான நட்டத்தில் செயற்படுகின்றன என்பது பற்றிய போதிய அறிவு எமக்கில்லை என்றே கூறவேண்டும். கனிப்பொருள் தொழிலைப் பொறுத்தமட்டில், இக்கணிப்பு சார்பளவில் இலகுவானது. ஹங்கேரிய யூரேனியம் தனது செலவுப் பட்டியலில் ஒருசில காரணிகளையே கொண்டிருப்பதாலும், வெளியீட்டின் பெறுமதி உலக சந்தை-விலைகளினடிப்படையில் கூறப்படுவதாலும், அது பெரும் நட்டத்திலேயே இயங்குகின்றது என்பதை நாம் அறுதியிட்டுக் கூறக்கூடியதாக உள்ளது. எனினும், உற்பத்திக் கைத்தொழிலைப் பொறுத்த வரை இதே கணிப்பு நடைமுறைச் சாத்தியமற்றதாகவிருக்கும். இங்கு செலவுகள் என்பன பல்வேறு மானியங்கள், வரிவிலக்குகள் என்பவற்றின் செல்வாக்கிற்குட்பட்ட வேறுபட்ட உள்ளீட்டு விலைகளினால் பாதிக்கப்பட்டுள்ளன. இன்று நட்டத்திலியங்குவதாகக் கூறப்படும் பல அரசஉடைமை நிறுவனங்கள் செயற்பாட்டின் பின்னர் இலாபகரமானவையாகக் கருதப்படுமாயின் அதிலொன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதற்கு மாறான ஒன்று ஏற்படினும் அதாவது, இன்று இலாபத்தில் செயற்படுவதாகக் கருதப்படும் வேறு சில அரசஉடைமை நிறுவனங்கள் அவற்றினது கணக்குகளில் உண்மையான செலவுகளையும் வரிப்பளுவையும் உள்ளடக்கும் பொழுது அவ்வித இலாபங்களற்றனவாக மாறுமாயின், அதுவும் ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல.

## ஒரேசீரான ஒரு மாற்று விகிதத்தையும் மாற்றக்கூடிய தன்மையையும் புகுத்துதல்

செயற்பாட்டுக்காலத்தில் (மேலே கூறப்படும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர்) அதனுடன் நெருங்கிய தொடர்புள்ள பின்வரும் காரியங்களும் மேற்கொள்ளப்படவேண்டுமென்பது எனது கருத்து.

1. ஒரே சீரான ஒரு மாற்றுவிகிதத்தைக் கையாளுதல்.

2. உறங்கேரிய போரின்டு மாற்றக்கூடியதாக அமைதல் அதாவது, உறங்கேரிய அரசவங்கியானது எல்லா ஹங்கேரிய பிரசைகளுக்கும், எல்லா நிறுவனங்களுக்கும், தாபனங்களுக்கும் ஹங்கேரிய போரின்டைக் கட்டுப்பாடின்றி உறுதியான வெளிநாட்டு நாணயங்களாக மாற்றிக்கொடுக்க வேண்டும்.

3. அரசஉடைமை நிறுவனங்களினதும், தனியார் துறையினதும் எல்லா ஏற்றுமதி - இறக்குமதி நடவடிக்கைகளும் தாராண்மைப்படுத்தப்படவேண்டும்.

தனியார் நாணயக்கொடுக்கல் வாங்கல்களைத் தடைசெய்வதாலும், தனியார் மாற்று விகிதத்தைச் சட்டவிரோதமானதாக்குவதாலும் முதலாவது கருமத்தை நிறைவேற்றமுடியாது. இது தொடர்பாகப் பகுதி 1.1 இல் கூறிய எல்லாவற்றையும் - அதாவது, எல்லாத்தனி நபர்களுக்கும் வெளிநாட்டு நாணயத்தைக்கட்டுப்பாடின்றி கொள்வனவு விற்பனவு செய்யும் உரிமை இருக்க வேண்டுமென்பதை நான் எப்பொழுதும் ஆதரிப்பேன். தனியார் மாற்றுவிகிதத்திற்குக் குறையாத விலையில் நாணயத்தை விற்கவும், அவ்விகிதத்திலும் பார்க்க உயர்வற்ற விலையில் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி அதனை அரசவங்கியிடமிருந்து கொள்வனவு செய்யவும் முடியுமாயின் நிர்வாகரீதியான பலவந்தமின்றியே ஒரேசீரான மாற்றுவிகிதம் வளர்ச்சியுறும். அரசவங்கித்துறை இதனை உறுதிசெய்யுமாயின், தனியார் மாற்றுவிகிதம் ஓரளவு கீழ் நோக்கித்தள்ளப்படுமென நாம் எதிர்பார்க்கலாம் (ஏனைய நிலைமைகள் மாறாதிருப்பின், மாற்றுவிகிதமானது இன்றைய கறுப்புச்சந்தை விகிதத்திலும் குறைவாகவே அமையும். ஏனெனில் கறுப்புச்சந்தை விகிதம் சட்ட விரோதமானதாகையால், அது ஆபத்துக்கான ஒரு நட்டஈட்டையும் உள்ளடக்கியதாகவே இருக்கும்).

அரசவங்கிமுறையினால் கையாளப்படும் மாற்றுவிகிதம் ஹங்கேரிய நாணயச்சந்தையினை சீர்குலைக்காதிருப்பதற்கு சந்தையைச் சமப்படுத்தும் ஒரு மாற்றுவிகிதம் தேவைப்படும். இம்மாற்றுவிகிதம் எவ்வளவாக இருக்க வேண்டுமென்பதைக் கூறமுடியாது. ஏனெனில், இது உறுதியாக்கற்செயற்பாட்டின் ஏனைய பகுதிகள் எவ்வாறு முன்னேறுகின்றன என்பதிலும், செயற்பாடு ஆரம்பிக்கும்வரை பணவீக்கவிகிதம் எவ்வாறு மாறுகின்றது என்பதிலும் தங்கியிருக்கும். எவ்வாறெனினும், அவ்விகிதத்தை நிர்ணயிப்பதற்கு இன்றைய மங்கலான" தனியார் மாற்றுவிகிதமே அடிப்படையாகவிருக்கும். பகுதி 1.1 இல் கூறப்பட்டதுபோன்று, செயற்பாட்டின் முன்னர் தனியார் நாணயச்சந்தை சட்டரீதியாக்கப்பட்டிருக்குமாயின், நாளைய வெண்மையான தனியார் மாற்றுவிகிதம், இதிலும் முக்கியமானதொரு வழிகாட்டியாகவிருக்கும்.

போரின்டினது மதிப்பிறக்கம், செயற்பாட்டின் ஒரு பகுதியாகவிருக்கும் என்பதற்கான எல்லா அறிகுறிகளும் காணப்படுகின்றன. மதிப்பிறக்கத்தினளவு ஏற்கனவே குறிப்பிட்ட காரணிகளிலும் செயற்பாட்டின் ஆரம்பகாலம் வரை உத்தியோகபூர்வ மாற்றுவிகிதத்தின் அசைவிலும் தங்கியிருக்கும்.

அரசவங்கித்துறை மாற்றுந்தன்மையினை உறுதிப்படுத்தும் முன்னர், பல நிபந்தனைகளைப் பூர்த்திச்செய்ய வேண்டும். இவற்றுள் இரண்டினை இங்கு நான் விளக்க விரும்புகிறேன்.

உறுதியான நாணயங்களுக்கான கேள்வியினைக் கட்டுப்படுத்தலே மிக முக்கியமானது. இதில் மிகவும் பிரச்சினைக்குரிய பகுதி அரசதுறையாகும். அரசஉடைமை நிறுவனங்களின் உறுதியான நாணயங்களுக்கான கேள்வி (அல்லது மாற்றக்கூடிய நாணயங்களைச் செலுத்தவேண்டிய இறக்குமதிகள்) கட்டுமீறாது பார்த்துக்கொள்ள வேண்டும். கடந்தகால அனுபவம் ஆறுதல் அளிப்பதாக இல்லை. மென்மையான பாதீட்டுக்கட்டுப்பாடுகளின் கீழ் அரசஉடைமை நிறுவனங்கள் மேற்கத்திய இறக்குமதிகளுக்கும், உறுதியான நாணயங்களுக்கும் தீராத பசியினைக்கொண்டிருந்தன. உறுதியான நாணயங்களைக் கொள்வனவு செய்யத்தேவையான போரின்டை ஏதோ ஒருவகையில் பெற்றுக்கொள்ள முடியுமென்பதால், உறுதியான நாணயங்களைப் பெறுவதற்கு அவை முன்னுரிமையளித்தன. இந்நிறுவனங்களுக்கு போரின்டு தட்டுப்பாட்டினை ஏற்படுத்துவதிலும் பார்க்க, ஓர் உண்மையான சந்தைச் சமநிலைப்படுத்தும் மாற்றுவிகிதத்தைக் கையாளுவதிலேயே (அதாவது, அவற்றினது இப்பசியினைக் கட்டுப்படுத்துவதிலேயே) எல்லாம் தங்கியுள்ளன. எனவே, பகுதி 1.2 இலும், 2.3 இலும் கூறப்பட்டது போன்று, ஓர் இறுக்கமான பணக்கொள்கையை அமுலாக்குவதும், அரசதுறைக்கு வழங்கப்படும் கடன்களை உறுதியாகக் கட்டுப்படுத்துவதும் முக்கியமானதாகும். இது கைகூடுமாயின், நாட்டினது வெளிநாட்டு நாணயச் சமநிலையினைப் பாரதூரமாகப் பாதிக்காது மாற்றுந்தன்மையினைப் பாதுகாக்க முடியும். இல்லையாயின், மீண்டும் பிரச்சினைகள் தலைதூக்கும்; அந்நிலையில் அரசஉடைமை நிறுவனங்களுக்குக் கிடைக்கும் உறுதியான நாணயங்களினளவினைப் பங்கீடு செய்வதைவிட, வேறு தீர்வு இருக்கமாட்டாது. இது பலகுறைபாடுகளைக்கொண்டதாக இருந்தபோதும், அரசதுறையானது பொருளாதாரத்தில் ஆதிக்கம் கொண்டதாக இருக்கும் வரை, சாத்தியமான பல்வேறு தீர்வுகளினின்றும் இதனை நீக்க முடியாது. தனியார் நிறுவனங்களைப் பொறுத்தவரை இயல்பாகவே அவை இறுக்கமான பாதீட்டுக்கட்டுப்பாடுகளைக் கொண்டிருப்பதால், இவ்வித ஆபத்து இல்லை.

பணவேதனங்கள் விரும்பத்தகு அளவிலும் வேகமாக அதிகரிக்குமாயின், உறுதியான நாணயங்களுக்கான வீட்டுத்துறையினரது கேள்வி திட்டமிட்ட அளவை மிஞ்சக்கூடும். ஏனைய சந்தர்ப்பங்களிற் போன்று, இங்கும் இறுக்கமான வேதனக்கட்டுப்பாடுகளைக் கையாளுதல் அடிப்படையானது.

ஒரு மெய்யான மட்டத்தில் மாற்றுவிகிதத்தையும் நாணயத்தின் மாற்றுந்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு அரசு போதுமான அளவு வெளிநாட்டு ஒதுக்குகளைக் கொண்டிருப்பது இன்னொரு நிபந்தனையாகும். இவை தேசிய வங்கியின் வசமிருக்கும் உண்மையான ஒதுக்குகளாகவோ, விரும்பிய நேரத்தில் பெறக்கூடிய நம்பகமான கடன் ஆதாரங்களாகவோ இருக்கலாம். இவ்வித ஒதுக்குகள் அரசிடம் இருக்குமாயின், உறுதியான நாணயத்திற்கு ஏற்படும் மிகைக்-கேள்வியினால் அரசவங்கியமைப்பு வெளிநாட்டு நாணயத்தின் கட்டில்லா விற்பனையினை இடைநிறுத்த வேண்டிய கட்டாயமிருக்காது. அது தனது ஒதுக்குகளினின்றும் தேவையான நாணயத்தைப் பெற்றுக்கொள்ளலாம். உள்நாட்டு நாணய வடிவிலான மொத்தக்கேள்வியினைக் குறைத்தல் (அதிலும் முக்கியமாக எதிர்பார்த்ததிலும் கூடுதலாகவிருக்கும் வெளிநாட்டு நாணயத்திற்கான கேள்வியினைக் கொண்டிருக்கும் துறைகளைக்கட்டுப்படுத்தல்) அல்லது போரின்டை மீண்டும் மதிப்பிறக்கம் செய்தல் போன்ற கேள்வி, நிரம்பலைச் சமப்படுத்தும் வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியிருக்கும். (பகுதி 2.7 இல் வெளிநாட்டு நாணயஒதுக்குகள் பற்றி மீண்டும் ஆராய்வோம்).

ஒரேசீரானதும் உண்மையானதும் சந்தையினை சமநிலைப்-படுத்துவதுமான மாற்றுவிகிதமும் மாற்றுந்தன்மையும் காணப்படும் நிலையில் (மேலே கூறப்பட்ட நிபந்தனைகள் உறுதிப்-படுத்தப்பட்டிருக்குமாயின்) இறக்குமதிகளைப் பூரணமாகத் தாராண்மைப்படுத்தலாம். பொருளாதாரத்தில் எல்லாப்பகுதியினருமே கட்டுப்பாடின்றி இறக்குமதிகளை மேற்கொள்ளுதல் அனுமதிக்கக்-கூடியதாகவும் விரும்பத்தக்கதாகவுமிருக்கும். குறிப்பிட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாவிடில், பெரும் ஆபத்துக்களெதுவுமின்றி தனியார் இறக்குமதிகளை மட்டுமே தாராண்மைப்படுத்தலாம். அரசதுறைக் கேள்வியினைப் போதியளவு கட்டுப்படுத்தாத நிலையில் அரசஉடைமை நிறுவனங்களுக்குக் கட்டுப்பாடற்ற இறக்குமதிகளை அனுமதித்தல் ஓர் ஆபத்தான செயலாகும்.

மேற்படி மாற்றங்கள் நாட்டினது குறுங்கால உள்நாட்டு, வெளிநாட்டு நிதிச்சமநிலையினைப் புனரமைக்க உதவுமென்பதில் ஐயமில்லை. அவை உற்பத்தியில் தொடர்ச்சியான அதிகரிப்பிற்கும்

தரஉயர்விற்கும் கூடப் பங்களிக்கும். கட்டில்லா இறக்குமதிகளானவை அரசஉடைமை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வெளிநாட்டு அல்லது உள்நாட்டு இறக்குமதியாளர் போன்ற எவரால் மேற்கொள்ளப்படினும், விற்போரிடையே போட்டி ஏற்படுவதற்கு இவை இன்றியமையாதன. மேலும், பொதுமக்களுக்குச் சிறந்த நிரம்பலை உறுதிசெய்யவும், பற்றாக்குறையினை நீக்கவும், தொழில் நுட்பத் தரத்தினை உயர்த்தவும் இவ்வித போட்டி வலுவான ஒரு தூண்டுகோலாக அமையும்.

## 2.6 ஒரே நேரத்தில் இவை மேற்கொள்ளப்படுவது ஏன்?

முன்னைய பகுதிகளில் விபரித்த எல்லா நடவடிக்கைகளும் தனித்தனி நன்கு தெரிந்தனவாகும். இவற்றுட்பல ஏற்கனவே ஓரளவு அமுலாக்கப்பட்டுள்ளன அல்லது வெகு சீக்கிரமே அமுலாக்கப்பட உள்ளன. பணவீக்கத்தைக் குறைப்பது பற்றி அடிக்கடி உறுதிமொழி கூறப்பட்டு வந்துள்ளது. பாதீட்டுச் செலவீடுகளைக் குறைத்து, வருவாய்களை உயர்த்துவதற்கு அவ்வப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணக்கட்டுப்பாடு முழு மூச்சாக நடைபெற்று வருவதோடு, சில விலைகள் மீதான கட்டுப்பாடுகள் ஏற்கனவே நீக்கப்பட்டும்விட்டன.

இம்மாற்றங்களை அமுலாக்குவதில் காணப்படும் இசை-வின்மையும் மந்தகதியுமே பிரச்சினைக்குக் காரணமாயுள்ளன. ஒரு சில நடவடிக்கைகளில் காணப்படும் தெளிவின்மை, ஏனையவற்றின் திறனைக்குறைக்கின்றது. பத்து அரைகுறை விளைவுகளின் கூட்டுத்தொகை ஐந்து முழு வெற்றிகளாகவன்றி, ஐந்து முழுத்தோல்விகளாகவே இருக்கும். மேலே கூறிய நடவடிக்கை-களனைத்தும் ஒன்றிலொன்று தங்கியுள்ளன. பணவீக்கத்தைத் தடுக்கவேண்டுமாயின், பாதீட்டுச்சமநிலை இன்றியமையாதது. மறுபுறத்தில், வரியமைப்பினை ஒரு புதிய அடிப்படையில் அமைப்பதன் மூலமே பாதீட்டுச்சமநிலையினை அடையலாம். செலவீடுகளோடு ஒப்பிடும் பொழுது வருவாய்கள் பொதுவாகத் தாமதமடைவதால், பணவீக்கமானது செலவீட்டுப்பக்கத்திலும் பார்க்க வருவாய்ப்-பக்கத்திலேயே கூடிய தாக்கத்தைக் கொண்டிருக்கும். எனவே, பணவீக்கத்திற்கு மத்தியில் பாதீட்டுச்சமநிலையினை ஏற்படுத்த முடியாது. நட்டமடையும் நிறுவனங்களுக்கான மானியங்களை நிறுத்துவதற்கு ஒரு புதிய வரியமைப்பினைக் கையாளுவதன் மூலம் உண்மையிலேயே இலாபத்தில் அல்லது நட்டத்திலியங்கும் நிறுவனங்கள் எவையெனக்கண்டுபிடித்தலும் இன்றியமையாதன. எனினும், வேகமான பணவீக்கத்திற்கு மத்தியில் உண்மையான சந்தை விலைகள் உருவாக

முடியாது. விலைகளைப் பகுதி பகுதியாகச் சரிப்படுத்தல் ஒரு பகுத்தறிவான சார்புவிலையமைப்பினை உருவாக்கமாட்டாது. மாறாக, அது பணவீக்கத்தினை மேலும் தீவிரமடையச்செய்யும். இவ்வாறு குவிவுத்தன்மையைக் கொண்டதும், பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியிருப்பதுமான வேறும் பல உதாரணங்களைக்கூறலாம். இவையனைத்தையும் ஒருங்கு நோக்கும் பொழுது செயற்பாடு ஒரேமூச்சாக மேற்கொள்ளப்படவேண்டும் என்பதற்கான ஒரு பொருளாதார விளக்கத்தை இது தருகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு எதிர்க்கணியக் கூற்றினை முன்வைப்பது பொருத்தமாகும். உறுதியாக்கல் நடவடிக்கையின் ஓர் அங்கமாக மேற்படி நடவடிக்கைகள் நன்மைபயக்கக்கூடியனவாக இருந்தபோதும், ஏனைய நடவடிக்கைகளை அமுலாக்காது, ஒரு தனிப்பட்ட நடவடிக்கையினை மட்டும் மேற்கொள்ளுதல் ஆபத்தானதும் தீமைபயக்கக்கூடியதுமாகும். உதாரணமாக, வேதனக்கட்டுப்பாடு இல்லாத நிலையில் ஏனைய விலைகளை கட்டுப்பாடுகளினின்றும் முற்றாக விடுவித்தல் பெரும் தீமைகளை விளைவிக்கும். அரசதுறையினது கேள்வி இறுக்கமாக, கட்டுப்படுத்தப்படாத நிலையில் பூரணமாற்றுந்தன்மையினைப் புகுத்துதல் தீமையானது. இதேபோன்ற மேலும்பல உதாரணங்களைக் கூறலாம். மேற்படி ஆபத்துக்கள் கற்பனையானவன்று; இவை பெரிதும் உண்மையானவையே. இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட பல உறுதியாக்கல் நடவடிக்கைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோல்வியடைந்தமைக்குப் பொருளாதாரச் சூழ்நிலை சரியாக அமையாததும், அதிகாரிகள் இந்நடவடிக்கைகளை அவசர அவசரமாகப் புகுத்த முயன்றமையும், இலக்குகளை அவற்றினது பொருளாதார சூழ்நிலைகளினின்றும் பிரித்தெடுத்தமையுமே காரணங்களாகும்.

மேற்படி பொருளாதாரக் கருத்துக்களுக்கு மேலும் இரு வாதங்களை நான் கூற விரும்புகிறேன்.

இவற்றுள் முதலாவது பொருளாதார - உளவியல் சார்ந்த ஒன்றாகும். பணவீக்கத்தை நிறுத்தவேண்டுமானால், நாம் பணவீக்க எதிர்பார்க்கைகளை முற்றாக மாற்றிக்கொள்ளவேண்டும். இக்கருத்து ஏற்கனவே ஆராயப்பட்டுள்ளது. தொழில் வழங்குநரும் ஊழியரும் வியாபாரிகளும் கடனீவோரும் பணவீக்கத்தில் 20 வீத உயர்வு ஏற்படுமெனக்கருதும் போது, சந்தையில் கேட்கப்படுவதும் வழங்கப்படுவதுமான விலைகளையும் வேதனங்களையும் குறைந்தது 20 வீதமாவது உயர்த்திக்கொள்ளுவர் எனக்கூறலாம். ஒரு நம்பகமானதும் மரியாதைக்குரியதுமான அரசாங்கத்திடமிருந்து பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கான உறுதிமொழி கிடைக்குமானால், உறுதியாக்கற்

செயற்பாட்டினூடாக சுயமாகவே செயற்படும் பணவீக்க எதிர்பார்க்கைகளின் நச்சுவட்டத்தினை முறியடிக்கமுடியும்.

இரண்டாவது வாதம் ஓர் அடிப்படை மனிதாபிமானம் சார்ந்ததாகும். இன்றைய பொருளாதாரப் பிரச்சினைகளின் விளைவாக ஹங்கேரிய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது துயரினைப்போக்குவது அரசியல் நிறுவனங்களினதும் கட்சிகளினதும் அரசாங்கத்தாபனங்களினதும் முக்கிய கடமையாகும். பொருளாதாரத்தைப் புனருத்தாரணம் செய்வதற்குப் பெரும் தியாகங்கள் தேவைப்படும். ஆனால், இத்தியாகங்களை மேற்கொள்ளும் காலப்பகுதி முடிவின்றி நீடிக்கப்படக்கூடாது. காலை வெட்டிவிடலே ஒருவனுக்கிருக்கும் ஒரேயொரு நோய்தீர்க்கும் வழியாயின் ஒவ்வொரு வாரமும் மாதமும் அதனைச் சிறிது சிறிதாக வெட்ட முயலாது, தேவையான மயக்கமருந்தைக் கொடுத்து ஒரேயடியாக அதனைவெட்டி விடுவதே மனிதாபிமானச் செயலாகும்.

மக்கள் தமது வாழ்க்கைத்தரம் வாரந்தோறும் பாதிப்படைவதைக் கண்டு வெறுப்படைவதில் நியாயமுண்டு. மாமிசப் பண்டங்களின் விலை உயர்வினை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்யும் நிலையினை நாம் அடைந்துவிட்ட போதும், பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இதிலும் பார்க்கக்கூடிய தொகைகளைத் தொடர்ச்சியாக எவ்வித எதிர்ப்புமின்றியே இழந்து வருகின்றனர். இப்பொழுது நாம் அனுபவிக்கும் சித்திரவதை, மெதுவானதும் தொடர்ந்து ஏற்படுவதுமான பொருளாதார வீழ்ச்சி, பொருளாதார - சமூகத்துயரங்கள் என்பவற்றிலும் பார்க்க, எதிர் காலத்தில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தக் கூடியதும், ஒரு தரம் மட்டுமே ஏற்படுவதுமான தீவிரமான ஒரு தாக்கத்தினையும், அதனாலேற்படும் மன அதிர்ச்சியையும் மக்கள் ஏற்கத்தயாராகவிருப்பர் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

## 2.7 மனிதாபிமான ரீதியானதும் பொருளாதார ரீதியானதுமான ஒதுக்குகள்

தேவையான ஒதுக்குகளைப் பராமரிப்பதன் மூலம், சமூகம் செயற்பாட்டிற்குத் தயாராக இருக்கவேண்டும். இது தொடர்பாக, நான்கு விதமான ஒதுக்குகள் தவிர்க்க முடியாதவையாகும்.

1. 'மனிதாபிமான" ரீதியான ஓர் ஒதுக்கே மிக முக்கியமானதாகும். மிகவும் கஷ்டமான நிலையிலிருப்பவர்களுக்கு அவசர உதவி வழங்குவதற்கான இந்நிதி சரியான பொதுக் கண்காணிப்பின் கீழிருக்கவேண்டும். செயற்பாடு ஆரம்பித்தபின்னர் அனைவருமே புதிய சந்தை நிலைமைக்கேற்பத் தம்மை மாற்றிக்கொள்ள

வேண்டியிருக்கும். புதிய நிலைமைகளுக்கேற்பத் தம்மை நிரந்தரமாக மாற்றிக்கொள்ள முடியாதிருப்போருக்குப் பொருத்தமான ஒரு பொதுநலக் கொள்கையினூடாக உதவிவழங்கப்படவேண்டும். இது பற்றிய விரிவான விளக்கம் அடுத்த அத்தியாயத்தில் தரப்படும். இங்கு நான்கூறவிரும்புவது, மனிதாபிமானமுள்ள ஒவ்வொரு சமூகத்திலும் கட்டாயமாக இருக்கவேண்டிய நிரந்தரபாதுகாப்பு ஏற்பாடு பற்றியதன்று. செயற்பாட்டின் முதல் ஓரிரு ஆண்டுகளில் கொடுக்கவேண்டியிருக்கும் விசேட அவசர நிவாரண உதவி பற்றியதே இது. தமது சொந்தக்காலில் நிற்கக்கூடியோருக்கும் இவ்வுதவி நியாயப்படுத்தப்படலாம். உண்மையிலேயே இவ்வுதவி தற்காலிகமானது என்பதை விசேஷமாக வலியுறுத்துவது முக்கியமானது. காலப்போக்கில் ஒவ்வொருவனும் தனது சொந்தக்காலிலேயே நிற்க வேண்டுமெனச் சமூகம் எதிர்பார்க்கின்றது. சாதாரண வாழ்க்கை நடத்துவதற்குத்தேவையான நிலைமைகளை உருவாக்கிக்கொள்ளக் கூடியோருக்கு அரசின் தயாளசிந்தை தேவையற்றதாகும்.

.2 அதிமுக்கிய பாவனைப் பொருட்கள், எரிபொருள், மற்றும் சக்திமூலவளங்கள் குறைவின்றிக் கிடைப்பதை உறுதி செய்யும் வண்ணம் பொருட்கள், கொள்வனவு சக்தி என்பவற்றை அடக்கிய ஓர் ஒதுக்கு இருக்கவேண்டும். செயற்பாட்டின் ஆரம்பக்கட்டம் குழப்பம் நிறைந்ததாக இருக்கலாம். எனினும், போதுமான அரச ஒதுக்கீடுகள் இருக்குமானால் கடுமையான குழப்பநிலை தவிர்க்கப்படலாம்.

3. தற்காலிகப் பிரச்சினைகள் நிலவும்பொழுது, விசேட இறக்குமதித் தேவைகளுக்காக அரசு போதுமானஅளவு மாற்றக்கூடிய நாணய ஒதுக்கினைக் கொண்டிருக்கவேண்டும். பகுதி 2.5 இல் கூறப்பட்டதற்கமைய, அரச வங்கியானது நாணயத்தினது மாற்றக்கூடிய தன்மையைப்பாதுகாக்கவும் இவ்வித ஒதுக்கு தேவைப்படும் வெளிநாட்டு நாணயத்திற்கு மிகைக்கேள்வி தோன்றுமாயின், அது முதலாவதாக ஒதுக்குகளினின்றே ஈடுசெய்யப்படவேண்டும் (வெளிநாட்டு நாணயச்சந்தையில் சமநிலையை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் மேற்படி நடவடிக்கையின் பின்னர் மேற்கொண்டு என்னசெய்யலாமெனத் தீர்மானிப்பது வேறுவிடயமாகும்).

4. அரசுக்கும் தனியார் துறைக்கும் ஒதுக்கிவைக்கப்படும் நியமமான அளவு கடன்களை விடவும் ஒதுக்குக்கடன் கோட்டாக்கள் இருக்கவேண்டும். செயற்பாட்டுக்காலத்தில் எதிர்பாராத திரவநெருக்கடியை எதிர்நோக்கும் அரச, தனியார்துறை நிறுவனங்களுக்கு இடைக்காலக் கடன்களை வழங்க இவை

கையாளப்படலாம். நெருக்கடியினின்றும் விடுபடுவதற்கான இலகுக்கடனாகவன்றி, இவை இறுக்கமான நிபந்தனைகளைக்கொண்டனவாக இருக்க வேண்டும். உறுதியாக்கற் செயற்பாட்டினால் எழும் பிரச்சினைகளைச் சமாளிக்க இக்கடன் ஒரு நிறுவனத்திற்கு உதவுமானால் இது நன்மையானதே. நிறுவனம் தோல்வியடையுமானால், கடன் வீணாக்கப்பட்டுள்ளதாகக் கூறலாம். இவ்வித சந்தர்ப்பத்தில், ஆரம்பக்கடனை மீளமைப்பதினின்றும், புதிய கடன்களைப் பெறுவதினின்றும் நிறுவனம் தடைசெய்யப்படவேண்டும். மொத்தத்தில், செயற்பாடானது இயற்கைத்தெரிவு முறையினைத் துரிதப்படுத்துவதோடு, தொடர்ந்து நீடிப்பதற்குத் தகுதியுள்ளனவெனக்கருதும் நிறுவனங்களுக்கு இந்த இடைக்காலக்கடன்களை இறுதிவாய்ப்பாக ஆக்கவேண்டும்.

நான்கு விதமான ஒதுக்குகளுக்கும் தேவையான நிதியினைச் செயற்பாட்டுத்திட்டம் கொண்டிருக்கவேண்டும். உறுதியாக்கற் செயற்பாட்டின் நிலுவைச்சமன்பாடுகள் ஏறக்குறைய சமநிலையிலிருக்கும் அதேவேளையில், நெருக்கடியைச் சமாளிப்பதற்கு தனிப்பட்ட உதவித்திட்டங்கள், திட்டமிடாத இறக்குமதிகள் என்பவற்றை நிதிப்படுத்த வேண்டியிருப்பின், உறுதியாக்கற் செயற்பாடு தோல்வியையே தழுவும். அவ்வித அசாதாரண தேவைகளுக்காக ஒதுக்குகள் முன்கூட்டியே ஒதுக்கிவைக்கப்படுவதோடு, எஞ்சியவற்றை முதலீடு செய்யலாம். மறுபக்கத்தில், ஒதுக்கப்பட்ட தொகைக்கும் மேலாக ஒரு போரின்டோ, டொல்லரோ இந்நோக்கங்களுக்காகக் கையாளப்படக்கூடாது.

## 2.8 சர்வதேசக் கண்ணோட்டத்தில் உறுதியாக்கற் செயற்பாடு

உறுதியாக்கற்செயற்பாடு ஹங்கேரிய மூலவளங்கள், இயலளவு என்பவற்றின் அடிப்படையிலேயே அமையவேண்டும். இத்தகு செயற்பாட்டுத் திட்டமொன்றினை ஆக்குவோர், நிச்சயமாக உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் மட்டுமே வெளிநாட்டு உதவியினைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இந்த வகையில் திட்டமானது பெரிதும் முன்னெச்சரிக்கையானதும் எதிர்மறைப் போக்குடையதாகவும் இருத்தல் அவசியம். கூடுதலாக இருப்பின், இம்மேலதிகத்தொகை நன்மை பயக்கும் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படலாம்.

அதே வேளையில், அத்தியாயம் 1 இல் கூறப்பட்டுள்ள மாற்றங்களும் உறுதியாக்கல் செயற்பாடும் தாமாகவே வெளிநாட்டு உதவி கிட்டுவதற்கான சாத்தியங்களை உருவாக்கக்கூடும். இது தொடர்பான முக்கிய கருமங்கள் சிலவற்றை இங்கு நாம் ஆராய்வோம்.

1. இன்றைய அரசாங்கமும் தேர்தலுக்குப்பின்னர் வரும் புதிய அரசாங்கமும் ஹங்கேரியினது கொம்கொன் (Comcon) நாடுகளுடனான தொடர்பினை அமைதியான முறையில் சீராக்கிக்கொள்ளவேண்டும். ஒரு புறத்தில், ஹங்கேரி ஏற்றுமதி, இறக்குமதிகளில் தங்கியிருத்தலைக்குறைத்துக்கொள்ளவேண்டும். மறுபுறத்தில், வெளிநாட்டு வர்த்தகத்தில் மிகச்சாதகமான ஒரு கட்டமைப்பினை நாடு வளர்த்துக்கொள்ளவேண்டும்.

கொம்கொன் நாடுகளுடனான ஹங்கேரியினது ஏற்றுமதித்-தொடர்பின் ஒரு முக்கிய நீண்டகாலக் குறைபாடு, இச்சந்தைகளின் தரக்குறைவாகும். இத்தரக்குறைவே அரச உடைமை நிறுவனங்கள் இச்சந்தைகளுடன் கூடிய பிணைப்புக்களை ஏற்படுத்தக் காரணமாயுள்ளது. மாற்றக்கூடிய நாணயச் சந்தைகளில் ஏற்கப்படாத பொருட்களை மேற்கூறிய சந்தைகளில் விற்பனை செய்வது சார்பளவில் இலகுவானதாகும். உயர்ந்த தரத்தை வலியுறுத்தும் சந்தைகளுக்கு ஹங்கேரியினது கவனத்தை திசைதிருப்புவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். அதே வேளையில், அரசியல் மாற்றச்சூழ்நிலையிலுங் கூட வியாபாரத் தொடர்புகளைப் பேணுவதில் ஹங்கேரிய அரசாங்கம் விசேட கவனம் செலுத்துவது முக்கியமானதாகும். ஒருமுறை கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த-மொன்றினை இருப்பிரிவினருமே ஒருதலைப்பட்சமாக மாற்றமுடியாது. நேர்மையான வியாபாரத்தின் அடிப்படை விதியும் இதுவேயாகும். ஹங்கேரியின் மீதான நம்பகத்தன்மை எந்த விதத்திலும் குறையாது பார்த்துக்கொள்ளவேண்டும். பொருளாதார உடன்படிக்கைகளைக் கைவிடல், அவசரகால நிலைமைகளில் மட்டுமே ஏற்றுக்கொள்ளக்கூடியது. மேலும், அவ்வித நடவடிக்கையானது பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படவும் வேண்டும்.

மேலைத்தேச பொருளாதாரங்களுடனான உறங்கேரியினது தொடர்புகள் பற்றிய விடயத்தை நோக்கும்போது, வெளிநாட்டுத் தனியார் முதலீடு தொடர்பான சில பிரச்சினைகளை கூறுவது பொருத்தமானது. ஹங்கேரி பற்றிய மேலைத்தேச அரசுகளினதும் சர்வதேச நிறுவனங்களினதும் கண்ணோட்டம் பொது விவாதங்களில் தேவைக்குமதிகமாக விமர்சிக்கப்படுவதால், இது அத்தியாவசியமாகின்றது. அவற்றினது போக்கு ஹங்கேரியைக் குறிப்பிடத்தக்க அளவு பாதிக்குமாயினும், மேல்நாட்டு வியாபாரிகளினதும் தனியார் நிறுவனங்களின் முகாமை-யாளர்களினதும் எண்ணப்பாங்கு முக்கியத்துவம் வாய்ந்ததென்பதை நான் தொடர்ந்தும் வலியுறுத்த விரும்புகிறேன் ˙சர்வதேச

முதலாளித்துவம்" என்ற ஒன்று இல்லாததோடு, முதலாளித்து வாதிகள் ஒரு போதும் ஒன்று பட்டிருக்கவுமில்லை. வாஷிங்டனோ, பொன் அல்லது டோக்கியோவோ ஏதோ ஓர் உலக மத்திய நிலையத்தின் சொற்படியும் நடப்பதில்லை. அவற்றின் செயல்களனைத்தும் சந்தையின் புலப்படாக்கரத்தினால் அனுபவ அடிப்படையில் இணைக்கப்படுகின்றன. அரசின் கூற்றுக்களை அவர்கள் கவனத்திலெடுத்தபோதும், பொதுக்கழகங்களில் சந்தித்து உரையாடும் தமது வியாபார நண்பர்களின் ஹங்கேரிய அனுபவங்களிலேயே கூடிய கவனம் செலுத்துவர். உதாரணமாக, ஹங்கேரியில் தான் எதிர்நோக்கவேண்டியிருந்த பல்வேறு அதிகாரத்தடைகளைப்பற்றி பழகிய நண்பர் ஒருவர் கூறும் ஒரு கசப்பான கதை, அரசின் நூறு உறுதிமொழிகளை நம்ப முடியாததாக்கிவிடலாம். ஒரு சமூக – பொருளாதார முறைமை தனது சொந்தப் பிரசைகளுக்கு ஒன்றும், வெளியுலகிற்கு வேறொன்றுமாக இரண்டு முகங்களைக்கொண்டிருக்க முடியாது. வெளிநகரங்களிலிருந்து தலைநகரம் தொலைபேசித் தொடர்பற்றதாக இருப்பதோடு, ஒரு சிறு தேவைக்காகக்கூட நகரவாசிகள் வங்கிகளில் பலமணிநேரம் வரிசையில் காத்திருக்கும் நிலையில், புடாபெஸ்டில் நாம் நன்கு அலங்கரிக்கப்பட்டதும் மேல்நாட்டுப்பாணியில் அமைந்ததுமான வங்கிகளை இயங்க வைக்கமுடியாது.

ஹங்கேரியினது தனியார் துறையின் பொருளாதார நிலைமை, கலாசாரம், சுதந்திரம் என்பவற்றின் வளர்ச்சிக்கேற்பவே மேலைநாட்டு வியாபார உலகுடனான ஹங்கேரியினது தொடர்புகளின் முன்னேற்றமும் உயிர்ப்பும் இருக்கும். இலகுவில் ஏமாற்றப்படமுடியாத அறிவுணர்வும் சாந்தமான மனோநிலையும் கொண்ட ஒரு மேற்குலக முதலாளித்துவவாதி, வெளிநாட்டாருக்கு மட்டுமே சிறப்பாக வழங்கப்படும் வரிச்சலுகை, விசேட-மாற்றக்கூடிய நிபந்தனைகள், விசேட சுங்கத் தீர்வைகள் போன்ற விதிவிலக்குகள் நிறைந்த சூழ்நிலைகளில் சிறிதேனும் நம்பிக்கை வைக்க மாட்டான். ஆனால், எந்த ஒரு ஹங்கேரிய பிரசைக்கும் சாதாரணமாக வழங்கப்படும் நிபந்தனைகளிலேயே அவன் கூடிய நம்பிக்கை கொள்வான். பகுதி 1.1 இல் கூறியது போன்று, ஒரு முயற்சியுள்ள ஹங்கேரிய பிரசை அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் சிரமத்திற்கு உள்ளாகாமல் ஒரு வியாபாரத்தைத் தொடக்கமுடியுமெனின், ஒரு வெளிநாட்டவனும் மனநிறைவுடன் தனது வியாபாரத்தை மேற்கொள்வான். ஒரு ஹங்கேரிய பிரசைக்கு ஒழுங்கு முறையிலமைந்ததும், வெளிப்படையானதும் நிலையானதுமான ஒரு வரி விதிக்கப்-

படுமாயின், ஒரு வெளிநாட்டு முயற்சியாளனும் வரியானது படிப்படியாக உயர்த்தப்படலாமென்று அஞ்சத்தேவையில்லை. இந்த விடயத்தில் ஒரு தொடர்ச்சியானதும் சீரானதும் உயிர்த்துவமானதுமான வளர்ச்சி ஏற்படுவது அவசியம். செயற்பாடு தொடங்கப்படு முன்னரே மேற்கூறிய மாற்றங்கள் ஏற்படுவது விரும்பத்தக்கது.

செயற்பாடு தன்னளவிலேயே வெளிநாட்டு வியாபாரிகளிடையே நம்பிக்கையை உருவாக்குமென்பது எனது கருத்து. பணவீக்கம், பாதீட்டில் துண்டு விழுதல், சீரற்ற விலை நிலவரங்கள், புரிந்துகொள்ளமுடியாத வரியமைப்பு என்பவற்றுக்கும் மேலாக, ஒழுங்கும் உறுதிப்பாடும் இருப்பது கண்டு அவர்கள் மனநிறைவுபெறுவர்.

3. மேலே கூறியவை, மேலைநாட்டு அரசாங்கங்களிடமிருந்தும் சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்தும் ஹங்கேரி பெறக்கூடிய உதவியின் முக்கியத்துவத்தை எந்தவிதத்திலும் குறைத்து மதிப்பிடும் நோக்கங்கொண்டவையல்ல. இதுபற்றி விரிவாக ஆராயமுற்படாது, ஒரு சிறு கருத்தினை மட்டும் இங்கு முன்வைக்க விரும்புகிறேன். மேலைநாடுகளின் உதவியின் கணிசமான பகுதியினைத் திரட்டிக்கொள்வதற்கு உறுதியாக்கற் செயற்பாடு ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். 1970களில் வரம்பிலாக்கடன் அளிப்பினால் கடனைப்பெற்றுக்கொண்ட அரசாங்கங்களின் கைகளில் அக்கடன்கள் வெறுமனே கரைந்து போன அனுபவத்தை மேலைநாட்டு அரசியல், பொருளாதார உலகிற்பலர் உணர்ந்திருக்கிறார்கள். ஹங்கேரியைப் பொறுத்தவரையில், அதிகாரத்திலிருந்த அரசாங்கங்கள் 1970ம் ஆண்டு தொடங்கி ஒவ்வொரு வருடமும் புதுப்புதுத் திட்டங்களை முன்வைத்துக்கொண்டிருந்தன. அதே வேளையில், ஏற்கனவே பெறப்பட்ட கடன்கள் தொடர்ந்து பெருகிக்கொண்டிருந்ததுடன் பொருளாதாரச் சீர்குலைவு மோசமாகிக்கொண்டிருந்தது. ஆனால், இப்பொழுது தனித்துவம் வாய்ந்த ஓர் அரிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. சுயாதீனமாகத் தெரிவு செய்யப்படும் ஒரு அரசாங்கமும் உருவாகக்கூடிய பெரும் வாய்பொன்று காணப்படுகின்றது. இந்நூலின் உட்கருத்திற்கேற்ப, ஒருவகை அதிர்ச்சி தரக்கூடியதும், தீர்க்கமானதுமான உறுதியாக்கற் திட்டமொன்றை உருவாக்கக்கூடிய வாய்ப்பு புதிய அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளது. இதன் பயனாக, வெளிநாட்டு அரசாங்கங்களின் நன்மதிப்பைப் பெற முடிவதோடு, அவை அளிக்கும் ஆதரவையும் திரட்ட முடியும். சராசரி நிபந்தனைகளுக்கும் மேலான சிறப்பான நிபந்தனைகளுடன் புதிய கடன்களைப்பெறலாம் சிலசமயங்களில் ஏற்கனவே பெற்ற

கடன்களை மீளச்செலுத்துவதற்குச் சலுகைகளும்கூடப் பெறலாம் (இறுதியாகக் கூறிய விடயத்தைப்பின்னர் ஆராய்வோம்). நீண்ட எதிர்காலம் தொடர்பாக அளிக்கப்படும் தெளிவற்ற உறுதிமொழிகளை விட, ஓரிரு வருடங்களில் துரிதமான விளைவைத்தரக்கூடிய திட்டமொன்றிற்கே வெளிநாட்டு அரசாங்கங்களும் சர்வதேச நிதி நிறுவனங்களும் ஆதரவளிக்க முன்வரும்.

4. கடன் வழங்கியயோருடன் நாட்டினது கடன்களைப் பற்றி மீளப் பேச்சுவார்த்தை நடாத்துவதாக புதிய அரசாங்கம் ஹங்கேரிய மக்களுக்கு உறுதிமொழியளிக்க வேண்டும். ஆனால், வழமையான கருத்திலான மீளப்புத்திட்டமொன்றினை அது முன்வைக்கக்கூடாது. அத்தகைய ஒரு செயல், நிதியுலகில் ஹங்கேரியின் அதிகாரத்தைக் குறைப்பதாகவே இருக்கும். ஓர் அவசரகால நிலைமையின் கீழ் மீளமைப்பு மேற்கொள்ளப்படுதலை நாடு தவிர்த்துக்கொள்ளலாம்.

எவ்வாறெனினும், கண்மூடித்தனமாகவும், நன்கு சிந்திக்காமலும் கடன்சேவைச் சுமையை இன்றைய பரம்பரையினருக்கே விட்டுவிட வேண்டுமென்பது இதன் கருத்தன்று. நாடு ஒட்டுமொத்தமாகப் பல்வேறு துன்பங்கை ஏற்கனவே அனுபவித்தவிட்டது. எதிர்வரும் தசாப்தங்களிலும் பொறுமையுடனிருந்து மேலும் துயர்களைத் தாங்கிக்கொள்ள வேண்டுமென எதிர்பார்ப்பது முறையல்ல. அல்லது நீண்டகாலத்தில் ஏற்படக்கூடிய செழிப்பான உலகினை எதிர்பார்த்து, இன்று துன்பங்களைப் பொறுத்துத்கொள்ள வேண்டும் எனக்கேட்பதும் முறையன்று. ஹங்கேரிய மக்கள் இதுவரை சுமந்துவந்த கடன்சுமை, அடுத்த சில ஆண்டுகளிலாவது குறைக்கப்படவேண்டும்.

உலகின் பல நாடுகள் இன்று கடன்களைச் செலுத்தமுடியாது தத்தளித்துக்கொண்டிருக்கும் நிலையில், மேற்குலகப் பொருளாதார நிபுணர்களுக்கும், பொருளாதாரக்கொள்கை வகுப்போருக்கும் இது ஒரு சிக்கலான பிரச்சினையாக உள்ளது. இதனைப் பொறுத்தவரையில், கடன்பட்ட நாடு சோஷலிச நாடா, முதலாளித்துவ நாடா என்ற வேறுபாடின்றி, மத்திய வங்கிகளின் தலைவர்கள் ஒரே மாதிரியாகவே நடந்துகொள்கின்றனர். அவர்களது ஒரேயொரு தகுதிவிதியும் எதிர்மறையானதாகும். கடன்கொடுக்கும் வங்கிகளை வெறுப்படையச் செய்யக்கூடாது என்பதே அதுவாகும். மேலும், அரசியல் தலைமைப் பீடத்திலுள்ளோர் பொதுவாகச் சர்வதேச நிதிச்சந்தையினைப்-பற்றி எந்தவித அறிவுமற்றோராவர். இவர்கள் நிதி விடயங்களைப்

பொறுத்தவரை, எந்தவித விதிவிலக்குமின்றி, தமது சொந்த நாட்டின் வங்கிகளை முற்றாக நம்பியிருப்பர். தமது சொந்தநாட்டு வங்கியாளர், "கடன்களைத் திருப்பிச்செலுத்தா விட்டால் அது விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும்." என்று கூறிவிட்டால், உடனடியாகவே விழிப்படைந்து மக்களை மேலும் சிக்கனமாக இருக்கும்படி வற்புறுத்தத் தயாராகவிருப்பர்.

கடன்பெற்றவர் கடன் வழங்கியவரின் தயவில் தங்கியுள்ளது போன்று, கடன் வழங்கியவரும் கடன் பெற்றவருக்குப் பொறுமை காட்டவேண்டிய நிலையிலுள்ளனர். உறுதியாக்கற்றிட்டத்தினை அறிவிக்கும் அதே வேளையில், ஹங்கேரியினது புதிய அரசாங்கமானது, கடன் சேவைச் சுமையைக் குறைப்பதற்கும் உறுதிபூணல்வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் கடன் உடன்படிக்கைகளை மீறக்கூடாது. எனினும், கடன் வழங்கும் குழுவினரது பாரீஸ் கழகம் (Paris Club) பல்வேறு அரசாங்கங்கள், சர்வதேச நிதி நிறுவனங்கள், கிழக்கைரோப்பிய வியாபார, நிதிப்பங்காளர் என்போருடன் தனித்தனியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டும். ஆரம்ப ஏற்பாடுகளுக்கமைய, ஹங்கேரி தனது கடன்களைத் திருப்பிச் செலுத்தமுடியாது என்பதை உறுதியாக வலியுறுத்தவேண்டும். தனது கடன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு நியாயமான பேச்சுவார்த்தைகளை நடத்துவது அவசியம். செயற்பாட்டிற்கு முந்திய காலப்பகுதியில் இயன்றளவு கடன்களை மீளமைத்துக்கொள்ள வேண்டும். தொடர்ந்துவரும் பேச்சு வார்த்தைகளுக்குச் செயற்பாட்டுத் திட்டம் தானாகவே வழிசமைக்கும்.

பேச்சுவார்த்தைகளின் போதும், அதன்பின்னரும் எமது குறுங்கால வட்டிக்கொடுப்பனவுகள் முழுமையாகவே செலுத்தப்படல்வேண்டும். எமது நடுத்தரக்கால, நீண்டகாலத் தவணைக்கடன் பொறுப்புக்களையும் குறைத்துக்கொள்ளும் வாய்ப்புண்டு. கடந்த சில ஆண்டுகளில் பேச்சுவார்த்தைகள் மூலம் பல நாடுகள் இதில் வெற்றியடைந்துள்ளன. தற்காலிகமாக இது ஹங்கேரியின் கடன்பெறும் தகுதியினைப் பாதித்தபொழுதும், இதனை ஏற்றுக்கொள்வது நன்மைபயக்கும். உறுதியாக்கற் செயற்பாடு மக்கள் மீது சகிக்க முடியாத சுமைகளைத் திணிப்பதைத் தடுப்பதற்குக் கடன்களை மீளமைத்தல் இன்றியமையாதது.

## 2.9 பற்றாக்குறைப் பொருளாதாரத்தை நீக்குதல்

ஹங்கேரியில் இன்று பணவீக்கமும் பற்றாக்குறையும் ஒருங்கே காணப்படுகின்றன. இந்நூலில் விளக்கப்படும் பொருளாதாரக்-

கொள்கையானது, ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்பு கொண்ட இவ்விரு நிகழ்வுகளையும் நீக்குவதற்கு ஒரு வாய்ப்பினை வழங்குகிறது. இங்கு நான் உறுதியாக்கற் செயற்பாட்டுடன் தொடர்புடையதாக இக்கருத்துக்களை முன்வைத்தபோதும், அத்தியாயம் 1இல் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளுடன் இவை நெருங்கிய தொடர்புடையன என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

பற்றாக்குறை ஒரு சிக்கல் நிறைந்த பிரச்சினையாகும். அதன் தோற்றம் பல காரணிகளால் பாதிக்கப்படுகின்றது. இது சிற்றின, பேரினப் பொருளாதார மட்டங்களிலும் பிரச்சினைக்குரியதாகும். சோஷலிச முறையின் சொத்துடைமைத் தொடர்புகளும் கட்டுப்பாட்டு முறைகளும் நிதிவிலைவாசி முறைகளும் இதனை ஏற்படுத்தும் காரணிகளாகும். மேற்கூறிய பரிமாணங்கள் அனைத்திலும் ஒரே நேரத்தில் கடந்தகால நிகழ்வுகள் ஏற்பட்டதுடன், எதிர்கால மாற்றங்களும் நடைபெறுமாதலால், ஹங்கேரியில் பற்றாக்குறைப் பொருளாதாரத்தை நீக்குவதற்கு வாய்ப்புண்டு.

செயற்பாட்டின் பின்னர் பற்றாக்குறை முற்றுமுழுதாகவே நீங்கி விடுமென எதிர்பார்க்கமுடியாது. அனுபவம் மிக்க பழைய சந்தைகளுடன் ஒப்பிடும் போது புதிய நிலைமைகளுக்கேற்பத் தன்னைச் சுதாகரித்துக்கொள்ளும் சக்தி குறைந்ததும், உராய்வுகள் நிறைந்ததுமான ஒரு சந்தையே சிறிது காலத்திற்குக் காணப்படும். எனினும், தீராததும் பொதுவானதுமான பற்றாக்குறைப்பொருளாதாரத்தைக் குறிக்கும் முக்கிய காரணிகள், அத்தியாயம் 1இல் விபரிக்கப்பட்ட சமூக மாற்றத்தினாலும் அத்தியாயம் 2இல் விபரிக்கப்பட்ட உறுதியாக்கற் செயற்பாட்டினாலும் அடிப்படையாகவே நீக்கப்படலாம் என்பதை நாம் எதிர்பார்க்கலாம்.

பற்றாக்குறைப் பொருளாதாரத்தை நீக்குவதற்கான அனைத்து நிபந்தனைகளையும் நாம் ஏற்கனவே குறிப்பிட்டுவிட்டதால், அவைபற்றிய ஒரு சுருக்கமான பட்டியலை மட்டுமே இங்கு தருகிறேன்.

1. உறுதியாக்கற் செயற்பாட்டின்போது பேரினக்கேள்வி, பேரின நிரம்பல் இரண்டுமே சமநிலைப்படுத்தப்படவேண்டும். செயற்பாட்டின் மூலம் இதை நாம் நிறைவேற்றுவதுடன் புதிய சமநிலையையும் தொடர்ந்து பேணுவோமாயின், பற்றாக்குறைக்கான அடிப்படைக் காரணிகளுள் ஒன்றான பேரினமட்டக்கேள்வியை நாம் நீக்கலாம்.

கேள்வியானது கட்டுமீறும் பொழுது பணவீக்க அழுத்தத்தினையும் பற்றாக்குறையினை மீண்டும் உருவாக்குவதற்கான தூண்டுதலையும் நாம் எதிர்பார்க்கலாம் என்பதை வாசகர்களுக்குக் குறிப்பாக

உணர்த்த விரும்புகிறேன். மேலும் சுருக்கமாகக் கூறின், மிகைக்கேள்விக்கு எதிர் நடவடிக்கைகளாக அரசாங்கம் விலைவாசி உயர்வைத் தடுக்குமாயின், தவிர்க்க முடியாத வகையில் பற்றாக்குறையினை ஏற்படுத்தும் அமுக்கப்பட்ட பணவீக்கம் தோன்றும்.

இது உண்மையிலேயே அபாயகரமானது. உறுதியாக்கற் செயற்பாடு வீழ்ச்சியுறுமாயின் அல்லது செயற்பாட்டிற்குப் பிந்திய வருடங்களில் பேரினக்கேள்வி தொடர்ந்தும் அதிகரிக்குமாயின் விலையுயர்வைத் தடுக்க வேண்டுமென்ற கோரிக்கை பரவலாக எழுமென நாம் எதிர்பார்க்கலாம். உச்சவிலை நிர்ணயத்தையும் விலைகளை உறையச் செய்வதையும் மேற்கொள்ள வேண்டிய அரசியல் நிர்ப்பந்தத்தை பல்வேறு குழுக்கள் ஏற்படுத்தலாம். இதன் பிரதிபலிப்பாக பற்றாக்குறையினைத் தோற்றுவிக்கும் அமுக்கப்பட்ட பணவீக்கம் உருவாகும்.

செயற்பாட்டின்போது பேரினப் பொருளாதார நிலையில் உண்மையான சமநிலை பேணப்படவேண்டுமென்பதற்கு இதுவும் ஒரு வாதமாகும். ஏதேனும் ஒரு தவறு ஏற்படுமாயின் அது மிகைக்கேள்வி சார்ந்ததாக அன்றி, மிகை நிரம்பல் சார்ந்ததாகவே இருத்தல் வேண்டும்.

2. அரசதரப்புக் கேள்வியில் இறுக்கமான கட்டுப்பாடு இருக்க வேண்டியதன் அவசியத்தை தனிப்படுத்தி வலியுறுத்துவது அவசியமென நான் கருதுகிறேன். ஏற்கனவே பகுதி 1.2 இல் விளக்கியுள்ளது போன்று, அரசதுறை ஆதிக்கம் கொண்டிருக்கும் இன்றைய நிலையில், அரசஉடைமை நிறுவனங்களில் இறுக்கமான நிதிக்கட்டுப்பாடுகள் காணப்படுமென எதிர்பார்ப்பது வீண்நம்பிக்கையாகும். இந்தவகையில், இறுக்கமான நிதிக்கட்டுப்பாடுகள் என்பதால் நாம் விளங்கிக்கொள்வது யாதெனில், நிறுவனம் உட்தூண்டுதலினால் தானாகவே கட்டுப்பாடுகளை உருவாக்கிக்கொள்வதாகும். ஆனால், அரசஉடைமை நிறுவனங்களில் உண்மையான இலாப ஊக்குவிப்பு வளருதல் நடைமுறைச்சாத்தியமற்றது. முதலீட்டு நாட்டமும் வேதனங்கள் விலகிச் செல்லுதலும் திரும்பத்திரும்ப ஏற்படக்கூடியனவாகும். எனவேதான், அரசதுறையினது செலவீட்டு நாட்டம் வெளியிலிருந்தும் உயர்மட்டத்திலிருந்தும் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென நான் கூறுகிறேன்.

இக்காரியத்திற்கான செய்முறைகள் இன்னும் உருப்பெறா-விடினும், அவை தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் வளர்ச்சியடைந்துள்ளன. நெறிப்படுத்தும் சக்திகள் அனைத்தும்

அரசஉடைமை நிறுவனங்களுடன் ஒருயிர் ஓர் ஆத்மாவாக அரச பணிக்குழுவுடன் வசப்பட்டிருந்த முன்னைய காலப்பகுதியில், நிலைமை வேறுபட்டதாக இருந்தது. சர்வவல்லமை படைத்த இப்பணிக்குழு, ஒவ்வொரு மட்டத்திலும் உயர்ந்த செலவு செய்யும் நாட்டத்தினையும் கொண்டதாகவிருந்தது. ஆனால், இப்பொழுது பலகட்சிப் பாராளுமன்றம் என்ற உருவில் சுயாதீனமான எதிர்ச்சக்தியொன்று உருவாகலாம். பணிக்குழுவின் ஓர் அங்கமாக இல்லாத இந்தச் சட்டசபையானது, உண்மையாகவே முன்னையதை விட மேன்மையானதாகவும் நாட்டினது விருப்பத்தின் நிலைக்களனாகவும் செலவுகளுக்கு வரையறை விதிக்கக்கூடிய வல்லமை பெற்றதாகவும் இருக்கும். பணிக்குழுவினின்றும் சுதந்திரமாகச் செயற்படும் அல்லது பணிக்குழுவினை மேற்பார்வை செய்வதாகவிருக்கும் சட்டசபையானது, அரசஉடைமை நிறுவனங்களின் செலவு நாட்டத்தைக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும். இதற்கிணங்க, இச்சட்ட சபையானது முழுப் பொருளாதாரத்திலும் அரசதுறையின் மீது இறுக்கமான பாதீட்டுக்கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடியதாகவிருக்கும். இதனை நிறைவேற்றக்கூடிய வல்லமை இருக்குமானால், பற்றாக்குறையினை உருவாக்கும் அடிப்படைப்பொறிமுறைக்கு இது முற்றுப்புள்ளி வைக்கும். தோல்வியடையுமானால், பற்றாக்குறை மீண்டும் தோன்றும்.

3. பற்றாக்குறைப் பொருளாதாரத்தினை நீக்கும் அடிப்படை முறைகளுள் ஒன்று தனியார்துறையினை விரிவுபடுத்துவதாகும். இது ஏற்கனவே ஓரளவு நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசதுறையினால் பூர்த்தி செய்யமுடியாத கேள்விகள் முறைசார்ந்ததும் முறை சாராததுமான தனியார் நடவடிக்கைகளினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஏனைய சோஷலிச நாடுகளுடன் ஒப்பிடும் போது, ஹங்கேரியில் பற்றாக்குறைப்பண்பு குறைவாகவே காணப்படுகின்றது. வேறுபல காரணிகளுட்பட, முதலாவது பொருளாதாரம் விட்டுச்செல்லும் இடைவெளிகளை நிரப்புவதில், இரண்டாவது பொருளாதாரத்தின் வெற்றியும் இதற்கு ஒரு காரணமாகும்.

தனியார் துறையில் பாதீட்டுக்கட்டுப்பாடுகள் இறுக்கமான-தாயிருக்கும். தனியார் உடைமையாளன் செலவைத் தனது சொந்தப்பணத்திலிருந்தே மேற்கொள்ளவேண்டுமென்ற எளிய உண்மையே அவன் தன் செலவினைக் கடுமையாகக் கட்டுப்படுத்துவதற்கும் காரணமாகும். இதன் விளைவாக, தனியார்துறைக் கேள்வி அத்துமீறுவதற்கான அபாயமில்லை. எனவே, அரசதுறைபோன்று மிகைக்கேள்வியை உருவாக்கும் ஓர் உள்ளார்ந்த பொறிமுறையும் அங்கு இருக்கமாட்டாது.

பகுதி 1.1 இலும், 1.3 இலும் கூறியவற்றிற்கமைய, தனியார்துறை சுபீட்சமடையுமென நான் எதிர்பார்க்கிறேன். இவ்விதச் சூழ்நிலைகளின் கீழ் தனியார் முயற்சிகளினதும் சந்தைகளினதும் செயற்படுதன்மையினை பொதுமக்கள் உணர்ந்துகொள்வது விரும்பத்தக்கது. சுருங்கக்கூறுவோமாயின், பற்றாக்குறை நிலவும் பொழுது, ஒருவன் இலாபம் பெற அனுமதிக்கப்படுமாயின் அப்பற்றாக்குறையே முயற்சியாளரைக் காந்தம் போல் கவரும். மிகை இருப்பினைக்கொண்ட ஒரு சந்தை பெரியளவு இல்லாத பட்சத்தில் கேள்வியொன்று உருவாகி அவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள அசையும் மூலதனம் உடனடியாக அங்கு விரையும்.,

4. மேலே கூறிய மூன்று அம்சங்களுக்குமே விலைகளது கட்டுப்பாடற்ற தன்மையும் நெகிழுந்தன்மையும் தேவையான-வையாகும். கேள்விக்கும் நிரம்பலுக்குமிடையே பேரின சமநிலையைப் பேணுவதற்கும், சிற்றின மட்டத்தில் கேள்வியும் நிரம்பலும் துரிதமாக சமனடைவதை உறுதிப்படுத்துவதற்கும் இது இன்றியமையாதது. பகுதி 2.4 இல் வலியுறுத்தியது போன்று உறுதியாக்கற் செயற்பாட்டின் கீழ் கட்டில்லா விலைகள் முதன்மைபெறவேண்டும்.

எமது அறிமுகத்தில் ஒரே தடவையில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைப் படிப்படியாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளினின்றும் வேறுபடுத்திக்காட்டினோம். பற்றாக்-குறைப் பொருளாதாரத்தை நீக்குவதற்கு இவ்விரு நடவடிக்கை-களினதும் சேர்க்கை இன்றியமையாதது. உறுதியாக்கற் செயற்பாடானது பற்றாக்குறையினைப் போக்குவதற்குத் தேவையான (பேரினச்சமநிலை, விலைகள் பெருமளவு தாராண்மைப்ளபடுத்தப்படல்) நிபந்தனைகளை உருவாக்கும். ஆனால், இதனைப்பூர்த்தி செய்வதற்கு மேலும் சில நிபந்தனைகள் தேவையாகவிருக்கும். இவை நீண்டகால நடவடிக்கைகளாகும். தனியார் துறையினது செம்மையான வளர்ச்சி, அரசதுறையினது கேள்வியானது தொடர்ந்து கட்டுப்படுத்தப்படல் என்பவற்றோடு இவை தொடர்புடையன.

## 2.10 செயற்பாடும் மீட்சியும்

உறுதியாக்கற் செயற்பாட்டின் பிரதான கூறுகளை ஆராய்ந்த பின்னர், இங்கு சில இறுதிக்கருத்துரைகளையும் கூறலாம்.

இந்நூலிற் கூறப்பட்ட செயற்பாட்டை எந்த ஒரு நாடுமே மேற்கொண்டதில்லை. இரு உலகப்போரின் பின்னரும் சோவியத் யூனியன் பணவீக்கத்தினை ஒழிக்கவோ, பெருமளவு குறைக்கவோ

செய்தது. எனினும், ஹங்கேரியின் இன்றைய நிலையோடு ஒப்பிடும் பொழுது, சோவியத் செயற்றிட்டத்திற்குப் பின்னாலிருந்த சமூக, அரசியல் நிலைமைகள் முற்றிலும் வேறுபட்டனவாகவிருந்தன.

இரண்டாம் போரின் பின்னர், முதலாளித்துவ உலகில் பல பேரளவு உறுதியாக்கற் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 1946ல் ஹங்கேரி உலகவரலாற்றில் மிகவேகமாக வளரும் பாயும் பணவீக்கத்தினை ஒழித்தபொழுது, அது கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையிலான எல்லைக்கோட்டில் இருந்தது. வளர்ந்துவரும் சோஷலிச அமைப்பின் சில கூறுகள் (அதிகாரத்தை நோக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னேற்றம், சோவியத் படை காணப்பட்டமை) ஏற்கனவே அங்கு காணப்பட்ட பொழுதும், பொருளாதாரம் பெருமளவிற்குத் தனியார் உடைமையின் அடிப்படையிலேயே செயற்பட்டது. அக்காலப்பகுதியில் புனரமைப்பினை ஆதரித்த எல்லா அரசியற் கட்சிகளினதும் சக்திகளை உறுதியாக்கலானது ஒன்று திரட்டியது. மேலும், தனியார் முதலும் தொழிற்சங்கங்களும் கூட இதனை ஆதரித்தன.

அடிக்கடி சுட்டிக்காட்டப்படும் 1948ம் ஆண்டு மேற்கு ஜேர்மனிய சீர்திருத்தமும் ஒரு பெரும் வெற்றியாகும். ஒரு திட்டவட்டமான கருத்தில் இதனையும் ஒரு செயற்பாடு எனக்கூறலாம். ஒரேநேரத்தில் அமுலாக்கப்பட்ட மாற்றங்கள், ஒரு உறுதியான நாணயத்தையும் பொருளாதாரத்தின் பூரணமான தாராண்மையாக்களையும் புகுத்தின. எனினும், இது அடிப்படையிலேயே தனியார் பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஒரு சிலபாரிய தனியுரிமை நிறுவனங்கள் உடைக்கப்பட்ட பொழுதும், சொத்துத் தொடர்புகளின் மீது கைவைக்கப்படவில்லை. எர்உறார்ட்டும் அவரது ஆலோசகர்களும் பலகாரணிகளைக் கவனத்திற்கொள்ள வேண்டியிருந்தது. எனினும், ஒரு பரிசோதனைக்கூடத்திற் போன்று செயற்கையான தனியார் உடைமையாளர்களை உருவாக்கும் பிரச்சினை அவர்களுக்கு இருக்கவில்லை. உண்மையான தனியார் உடைமையாளர் ஏற்கனவே அங்கு காணப்பட்டனர்.

தீவிரமான வேறு சில உறுதியாக்கற் செயற்பாட்டின் அனுபவங்களும் (இஸ்ரேல், அல்லது பொலிவியாவினது போன்றன) இந்த நூலின் பரப்பிற்கு அப்பாற்பட்டனவாகும். இச்செயற்பாடுகள் மிகமோசமான பொருளாதாரங்களில் மேற்கொள்ளப்பட்டதோடு, எர்உறார்ட்டினது ஜேர்மனியில் போலன்றி இவை மிகப்பெரிய பொதுத்துறையினைக் கொண்டிருந்த போதும், இஸ்ரேலினதும் பொலிவியாவினதும் பொருளாதாரங்கள் அடிப்படையில் தனியார் பொருளாதாரங்களாகவே இருந்தன.

ஹங்கேரியும் (போலந்தும்) மட்டுமே பொருளாதாரத்தில் தனியார்துறைமயமாக்கல், உறுதியாக்கல் என்ற இரு பெரும் நடவடிக்கைகளை ஒரேயடியாக மேற்கொள்ள முயலும் முதலாவது நாடுகளாகும். இந்தச் சேர்க்கை, மேற்படி கருமத்தினை மிகவும் சிக்கலாக்குகின்றது.

விடாப்பிடியாகவும் துரிதமாகவும் செயற்பாடு அமுலாக்கப்படுதல், விட்டு விட்டுவரும் வலிகளும் வலிப்புக்களும் மிகக்குறுகிய காலத்திலேயே அகன்று விடுமென்ற நம்பிக்கையை மக்களிடையே தோற்றுவிக்கக்கூடும். மோசமாக நோய்வாய்ப்பட்டிருந்தோரும், தமது அன்புக்குரியோரின் நோய் அவஸ்தைகளை நேரில் கண்டோரும், இதை இனியும் என்னால் பொறுக்கமுடியாது எதுவரினும் சரி அறுவைச் சிகிச்சை மூலமாவது எனது துயரத்தைக் களைந்தெறியுங்களென" ஒரு நோயாளி வைத்தியரைக்கேட்கும் மனநிலையினை நன்கு அறிவர், இனியும் துன்பங்களைச் சகிக்க முடியாது என்ற கட்டத்தை ஹங்கேரிய மக்கள் அணுகிக்கொண்டிருக்கிறார்கள், எனவே ஒரு தீவிர செயற்பாட்டின் விளைவுகளை ஏற்பதற்கு அவர்கள் தயாராக உள்ளனர் என்பது எனது நம்பிக்கையாகும். தற்காலிகமாக மனச்சோர்வையும் தொல்லைகளையும் ஏற்படுத்திய போதும், செயற்பாடு உண்மையான ஒழுங்கையும், அமைதியையும் ஏற்படுத்துவதற்கான உறுதிமொழியை அவர்களுக்குத்தரக்கூடும்.

# 3. அரசியல் நோக்கில் பொருளாதார மாறுகையின் குறிக்கோள்கள்

## 3.1 செயற்றிட்டத்தின் சனரஞ்சகத்தன்மை

முன்னைய அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ள செயற்றிட்டம் எந்தளவு சனரஞ்சகமானது? எல்லோரையும் எல்லாவகையிலும் திருப்திப்படுத்துவது என்பது முடியாத ஒன்றே. இந்த ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ள எதிர்ப்புக்களை சந்திக்கக்கூடிய விடயங்களைப்-பற்றி ஆராயமுன்பு, சனரஞ்சகம் பெறக்கூடிய சில விடயங்களை நான் முன்வைக்கவிரும்புகிறேன். எனினும், இவை கூட எல்லோராலும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது சந்தேகமே. அவற்றினது கவர்சக்தி மக்களின் பொருள்ாதார நலன்களிலும் அரசியல், அறக்கோட்பாட்டு நோக்குகளிலும் தங்கியிருக்கும்.

1. இந்தநூலில் வெளியிடப்பட்டுள்ள கருத்து உண்மையான *சுயாதீனப் போக்குடைய* மக்களையே கவருவதாகவிருக்கும். தனிப்பட்ட சுதந்திரம் மட்டும் ஒரேயொரு தனிப்பட்ட தகைமையல்ல. சமூதாயத்தின் பொருளாதார மேன்மை, சமத்துவம், சமூகநீதி, தனிப்பட்டோரின் தேவைகளுக்கும் மேலாகத் தேசியத் தேவைகளின் முக்கியத்துவம் போன்ற ஏனைய பெறுமானங்கள் ஹங்கேரிய மக்களுக்கு மிகமுக்கியமானவையாக உள்ளன. இம்மதிப்பீடுகள் ஒன்றுக்கொன்று துணையாகவிருப்பதோடு, ஒன்றுக்கொன்று முரணாகவுமிருக்கலாம். மக்களின் தனிப்பட்ட சுயாதீனத்தையும் தனித்துவத்தையும் வாழ்வின் ஏனைய பெறுமானங்களிலும் பார்க்க உயர்வாக நோக்குபவர்களை இங்கு கூறப்பட்டுள்ள வளர்ச்சிப்பாதை கவரும். தனிப்பட்டோரை அரசினது நலன்களுக்கும் இயக்கங்கள், கட்சிகள், அல்லது தலைவர்கள் என்போரின் கட்டளைகளுக்கமையக் கூட்டுநலன்களுக்கு அடிமைப்படுத்துவதை இவர்கள் நிராகரிப்பர்.

மேற்கூறிய பந்தியில் 'தனிப்பட்டோர்' என்பதற்காகக் "குடும்பம்" என்ற சொல்லைப் பிரதியீடு செய்யலாம். செயற்றிட்டப்பிரதி தனிப்பட்டோர் என்பதற்கும், தனிப்பட்டோரை உள்ளடக்கிய மிகச் சிறிய சமூகமாகிய குடும்பத்திற்குமிடையே வேறுபாடுகாட்டவில்லை. அது குடும்பமொன்றுக்குச் சுயாதீனத்தையும் தனித்துவத்தையும் வற்புறுத்துகிறது. ஒரு குடும்பத்திற்கு இயன்றளவு கூடிய பொருளாதாரரீதியான முடிவுகளை எடுக்கும் உரிமையை வழங்குகிறது.

'சுதந்திரம்' என்பது இப்பொழுது ஹங்கேரியில் ஒரு நாகரிகமான

பதமாகக் கருதப்படுகின்றது. இப்பதத்திற்குப் பொருளாதார ரீதியில் உறுதியான ஒரு கருத்தை வழங்குவதற்கு எனது ஆய்வு முயலுகின்றது. ஒவ்வொரு தனிப்பட்டவனும் குடும்பமும் தனது உழைப்புச்சக்தி, உற்பத்திப் பொருட்கள், ஓய்வு நேரம், பணம், செல்வம் என்பவற்றைத் தான் விரும்பியவாறு செலவிட சுதந்திரமிருக்க வேண்டும். தனிப்பட்டோரையும் குடும்பத்தையும் அரசு அவர்கள் போக்கில் தனித்துவிடவேண்டும். தமது சுதந்திரத்தைத் தவறான வழியில் பயன்படுத்துவோரின பிடியிலிருந்து ஏனைய தனிப்பட்டோரையும் குடும்பங்களையும் பாதுகாக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் மட்டுமே அது தலையீடு செய்யவேண்டும்.

2. தைரியத்துடன் ஒரு வியாபார முயற்சியில் (இந்நூலில் விபரிக்கப்பட்ட கருத்தில்) ஈடுபடுவதற்கு தமது பணத்தையும் செல்வத்தையும் முதலீடு செய்து ஆபத்துக்களை ஏற்கத்தயாராக உள்ளோருக்கே இந்நூலில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் பொருந்தக்கூடியன.

மனித நடத்தையின் ஒரேயொரு ஒழுங்கு முறைமையினை மட்டும் காண்பவர்களுடன் என்னால் ஒத்துப்போகமுடியாது. தமது நேரத்தை ஒழுங்காகத் திட்டமிட்டு மேற்பார்வையாளர்களின் வழிகாட்டலின்படி வேலைகளைப்பூர்த்தி செய்து, பின்னர் தமது இல்லங்களுக்குச் சென்று எஞ்சியுள்ள நாட்பொழுதை ஓய்வாகவோ அல்லது குடும்பவிடயங்களைக் கவனிப்பதிலோ செலவிடும் அடக்கமான ஊழியரை நான் கண்டிக்கப்போவதில்லை. பெரும்பாலான மக்கள் இந்த வகைக்குள்ளேயே அடங்குவர். மேலும், உலகின் மேல் வெறுப்புற்று எப்பொழுதும் முணுமுணுக்கும் சிலர் இருப்பதையும் நானறிவேன். இத்தகையோர் சிந்தனையைத்தூண்டும் நன்மைபயக்கும் பாத்திரத்தையும் வகிக்கலாம். இறுதியாக, தேவையான உட்தூண்டல் சக்தியிருந்தும், சாதகமற்ற சூழ்நிலைகளினால் சுறுசுறுப்பின்றி இருக்கும் ஒரு சாராரும் உள்ளனர் (இவர்கள் பற்றிப்பின்னர் தனியாக ஆராயப்படும்).

மேற்கூறிய நடத்தைகள் தொடர்பாக விமர்சிக்கும் எவ்வித சிந்தனையும் எனக்குத் தோன்றவில்லை என்பதை வலியுறுத்தும் அதே வேளையில், இச்செயற்றிட்டமானது மேலே குறிப்பிட்ட மக்கட்தொகுதிகளை நம்பியிருக்கவில்லை என்பதையும் நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கு நாம் அடம்ஸ்மித்தினது கருத்துக்களை சற்று நோக்கவேண்டும். தமக்காகவும் தமது குடும்பத்துக்காகவும் மேலதிக வருவாயைத் தேடிக்கொள்ளக் கூடுதலான வேலைப்பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளத் தயாராகவிருக்கும் மக்கள், அதே சமயத்தில் சமூகத்திற்கும் நன்மை

புரிகிறார்கள். தேசிய வருவாயும் தேசிய செல்வமும் வெறுமனே கூட்டு மொத்தங்களோ, அல்லது மர்மமான பொருளாதாரப் புள்ளிவிபரக் கருத்துக்களோ அன்று. மேலதிக வருவாயைத் தேடுவதன் மூலம் ஒருவன் தேசிய வருவாயைக் கூட்டுகிறான். கூடுதலான செல்வத்தைக் தனக்காகவே சேமிக்கும் போது ஒருவன் தேசிய செல்வத்தைக் கூட்டுகிறான் தனக்காக ஒரு வீடு கட்டும் பொழுது நாட்டினது வீட்டு எண்ணிக்கையைக் கூட்டுகிறான். ஆயிரம் டொலர்களை வங்கியிலிடும் போது, நாட்டின் பணச்சேமிப்பிற்குப் பங்களிக்கிறான். தனிப்பட்டோரது நலன்களின் கூட்டு மொத்தமே தேசியநலனாகும்.

மக்கள் தமது சிந்தனைப் போக்கை மாற்றிக்கொள்ளவேண்டும். செல்வத்தைத் திரட்டுவது என்பது அவமானத்திற்குரிய ஒன்றாக நீண்ட காலமாக கருதப்பட்டு வந்துள்ளது. ஒருவன் கூடுதலாகப் பெற்றுக்கொண்டானாகில், அதுமற்றையோரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டதே; நல்ல நிலையில் உள்ளவர்கள் மற்றையோரை நசுக்குகிறார்கள்; செல்வந்தர்கள் தமது செல்வத்தை உடனடியாக ஏனையொருக்குப் பகிர்ந்து கொடுக்காவிட்டால் அது அவமானத்திற்குரியதே; செல்வந்தர்கள் தாமாகவே முன்வரா-விட்டால், அவர்களது செல்வம் பலாத்காரமாக அவர்களிடமிருந்து பறிமுதல்செய்யப்படல் வேண்டும் என்பது போன்ற தவறான கருத்துக்கள் மக்களது உள்ளத்தில் வேரூன்றிவிட்டன.

இன்று நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியிற் சிக்கியுள்ளது. இதற்காகப் பெரிதும் வருந்துபவர்களுக்கன்றி, தங்கள் அனுதாபமொழிகளை நிறுத்தி, வெவ்வேறு அலுவலகங்களுக்குப் பிச்சை கேட்டுப்போகாது, தங்கள் சொந்த நிதி நிலையை முன்னேற்ற முயற்சிப்பவர்களுக்கே மரியாதை செலுத்தவேண்டும். முறையீடு செய்வதற்குப் பதிலாக, மேலதிக நேரம் வேலை செய்தல், தங்கள் தோட்டங்களில் பழங்கள், காய்கறி என்பவற்றை உற்பத்தி செய்தல், வியாபார முயற்சிகளில் பணமுதலீடு செய்தல், உள்நாட்டில் தட்டுப்பாடான பொருட்களை வெளிநாடுகளினின்றும் இறக்குமதி செய்தல், ஏனையோருடன் இணைந்து புதிய வியாபார நிறுவனங்களை நிறுவுதல் போன்ற முயற்சிகளில் ஈடுபடவேண்டும். ஆயிரமாயிரம் வாய்ப்புக்கள் அனைவருக்காகவும் காத்து-நிற்கின்றன. "தமக்குத்தாமே உதவிக்கொள்பவர்களுக்கு ஆண்டவன் உதவிசெய்கிறான்" என்ற பழைய முதுமொழி ஒருபோதும் இந்தளவு பொருத்தமானதாக இருக்கவில்லை. உண்மையிலேயே தம்மைத்தாமே கவனித்துக்கொள்ள முடியாதவர்களுக்கு மட்டுமே அரசின் உதவி கிடைத்தல்வேண்டும். திறமையிருந்தும் அவநம்பிக்கை காரணமாகவோ, சோம்பல் காரணமாகவோ, தைரியமின்மை காரணமாகவோ எதுவும் செய்யாமல் இருப்பவர்கள்

உதவிக்கோ, அனுதாபத்திற்கோ தகுதியற்றவர்கள். கடந்த தசாப்தங்களில் இவர்கள் மேற்கொண்ட தனிப்பட்ட முயற்சிகள் அரசினால் தடை செய்யப்பட்டு, அதனால் பாதிக்கப்பட்டவர்களே இவர்களாவர். ஒரு புதுவகையான அறக்கல்வி தேவை என்றாலும், அதன் விளைவாக மாற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கமுடியாது. சமூக மாற்றங்களின் மூலமே பொதுமக்களின் நடத்தையில் மாற்றமேற்படும். தமது எதிர்காலத்தைத் தாமே உருவாக்கிக்-கொள்ள வேண்டுமென்பதை மக்கள் கூடிய விரைவில் உணர்ந்துகொள்வர்.

இதுமேலே முதலாவது கருத்தில் விபரிக்கப்பட்ட கவரும் சக்திவாய்ந்த ஒரு சேதனரீதியான துணை அம்சமாகும். தனிப்பட்ட (அல்லது குடும்ப) சுயாதீனத்தை விரும்புவோருக்கும், அந்தச் சுயாதீனத்தைப் பயன்படுத்த நினைப்போருக்கும் இந்த ஆய்வில் கூறப்பட்ட கருத்தோட்டம் கவர்ச்சிகரமானதாகவும். தங்கள் சொந்த முனைப்பு, செயல், முயற்சி என்பவற்றில் ஈடுபடவிரும்புவோருக்கு மிகவும் உகந்ததாகவுமிருக்கும்.

3. தங்களுக்கெனச் சொந்தமான சொத்துக்களை உடையவர்களுக்கோ, அல்லது அத்தகைய சொத்துக்களை அடைய விரும்புபவர்களுக்கோ இக்கருத்து உடந்தையானதாகவிருக்கும். இங்கு சொத்து என்பதை நான் ஒரு பரந்த ரீதியில் கருதுகிறேன். மிகச்சிறியதான அலகிலிருந்து (ஒரு சிறிய தோட்டம் அல்லது ஓரளவான தனியார் சேமிப்பு), சிறிது நடுத்தர தொகுதி (குடும்பவீடு, தனிப்பட்ட கடை அல்லது பட்டறை) முதலான ஏனைய பாரிய அலகுகள் அனைத்தையும் இது உள்ளடக்கும். ஆனால், இச்சொத்தினது அளவு எவ்வளவாகவிருப்பினும், எதேச்சையான அரச தலையீடுகளிலிருந்து உரிமையாளர் பாதுகாக்கப்பட-வேண்டும்.

ஒரு ஆரோக்கியமான பன்முக அரசியல் முறையில், உரிமை-யாளர் குழுவின் நலன்களில் முழுக்கவனத்தையும் செலுத்தும் கட்சிகளும் சங்கங்களும் தோன்றும். இவற்றுட்சில முற்றாகவோ அல்லது முதன்மையாகவோ சிறு அளவு விவசாயிகளிலும், மற்றும் சில நகரத்தின் மத்தியதர வகுப்பினரின் அல்லது பேரளவு முயற்சியாளரின் நலன்களிலும் நிபுணத்துவம் பெறுகின்றன. உரிமையாளர்களின் உபகுழுக்களையும் சென்றடையக்கூடிய பரந்தளவிலான செயற்றிட்டங்களைக்கொண்ட அரசியல் சக்திகளும் உள்ளன. இத்தகைய சங்கங்களுக்கு ஆலோசனை கூறுவது இந்த நூலின் நோக்கமல்ல. தனியார் சொத்தின் பாதுகாப்பான, சுயாதீனமான வளர்ச்சிக்கு முதன்மை இடம் கொடுக்கும் அரசியல் சக்திகளனைத்தும் இந்நூலின் கருத்துக்களுடன் தம்மை இனம் கண்டு கொள்ளலாம்.

இந்த ஆய்வின் நோக்கம், தனிப்பட்ட சொத்துக்கள் திரட்டப்படுவதை ஊக்குவிப்பது மாத்திரமன்றி, அந்த வழியில் எதிர் நிற்கும் தடைகளை நீக்கக்கூடிய கொள்கை ஒன்றை முன்வைப்பதுமாகும். விவசாயத்திலிருந்து இதற்கு ஓர் உதாரணம் காட்டலாம். இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ள செயற்றிட்டம், முன்னொருகாலப் பகுதியில் ஈவிரக்கமின்றி அழித்தொழிக்கப்பட்ட "குளாக்" வகுப்பினரை அரச பிரமாணங்களினூடக மீண்டும் தாபிக்கும் நோக்கத்தைக்கொண்டதல்ல. ஒருவகைச் செயற்கையான முறையில் குளாக் வகுப்பினரை மீண்டும் உருவாக்குவதற்குப் பதிலாக, ஒரு கிராமிய மட்டக் குழுவினரை ஏற்படுத்தலுக்கு இது சாதகமாக வாதிடுகின்றது. டென்மார்க், மேற்கு ஜேர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளின் பண்ணைகளைப்போன்று, நவீன தொழில் நுட்பக் கருவிகளுடன் கூடிய முதற்செறிவான பண்ணைகளின் சேதன வளர்ச்சியினூடாக, குறைந்தளவு ஊழியருடன் அதிகரித்த விவசாய உற்பத்தியைத் தோற்றுவிக்கும் பண்ணைகளின் எழுச்சிகண்டு நாம் மகிழ்ச்சியுறவேண்டும்.

விவசாயம் மட்டுமன்றி, உறுதியான செல்வந்த நிலைமையை அடைவதற்காக எவ்வகை தியாகத்தையும் செய்யத்-தயாராகவிருப்பவர்களுக்கும் இந்த மாற்று வழி கவர்ச்சி-கரமானதாயிருக்கலாம். கிடைக்கும் சந்தர்ப்பதைப் பயன்படுத்தி அதிகூடிய இலாபத்தை அடையநினைக்கும் துணிகரமான (Adventurous) வியாபாரிகளை நான் ஊக்குவிக்க விரும்பவில்லை. இங்கு முன்வைக்கப்பட்டுள்ள பொருளாதாரக் கொள்கையானது, வருடாவருடம் சிறிதுசிறிதாகச் சேமித்துத் தமது பணத்தைச் சொந்த வியாபார முயற்சியில் முதலீடு செய்து, சிறிய அளவிலிருந்து நடுத்தர அளவு, பேரளவு, இராட்சத அளவு என படிப்படியாக வளர்க்கக்கூடிய திறமையுள்ளவர்களுக்குப் பொருள் ரீதியாகவும் ஒழுக்கரீதியாகவும் சட்டரீதியாகவும் உத்தரவாதம் வழங்குவதையே குறிக்கின்றது. சிறிய அளவிலான உற்பத்தி, நாளுக்கு நாள், மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் முதலாளித்துவத்தை உருவாக்குகிறது என லெனின் கூறியது சரியானதே. இந்தவித நிலைமைக்காக அஞ்சுபவர்கள் உண்மையிலேயே இச்-செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வளர்ச்சியுடன் ஒத்துப்போகமுடியாது. ஏனெனில், அவர்கள் முன்னேற்றகரமான சிற்றளவு உற்பத்தியாளனைக்கூட, இச்சிற்றளவு உற்பத்தியிலிருந்து விடுபடாது தடுக்க விரும்புவர். ஒருவர் சிறு காணிக்கோ அல்லது பட்டறைக்கோ உரிமையாளராகவிருப்பதை இவர்கள் ஏற்பர். அத்தகைய முயற்சியாளர் முன்னேறி, தாம் சேகரித்த பணத்தை ஆடம்பரப்பயணங்களிலோ, ஆடம்பரமான கோடை விடுதிகளைக் கட்டுவதிலோ செலவிட்டால் அதனை ஆட்சேபிக்க மாட்டார்கள்.

ஆனால், சிற்றளவு உற்பத்தியாளர் உண்மையான முதலாளித்துவ வாதிகளாகப் பரிணமிப்பதை அதிகாரத்தலையீட்டின் மூலம் தடை செய்ய வேண்டுமென நினைப்பர். இவ்வாய்வு இத்தகைய சிந்தனையினை முற்றாகவே நிராகரிக்கின்றது. செயற்கையான முதலாளித்துவ நிறுவனங்களை உருவாக்க அரசு சட்டங்களை ஆக்கவேண்டுமெனக் கூறாது. இந்த ஆய்வு தனியார் முதல் திரட்டனை ஊக்குவிக்கத் தேவையான நிலைமைகளை உருவாக்க முயல்கின்றது. இவற்றை நம்பிக்கையுடன் நோக்குபவர்களுக்கே இது சாதகமானதாகும்.

4. பணவீக்கத்தினைத் தடுத்து நிறுத்துவதற்கான நிலைமையினை ஏற்படுத்த முடியுமென்ற நம்பிக்கையை செயற்றிட்டம் கொண்டுள்ளது. எனது கருத்தின் படி, பணவீக்கச் செயற்பாட்டினால் பயனடையும் ஒரு சிறு எண்ணிக்கையான சுரண்டல்காரர்கள் தவிர்ந்த கோடிக்கணக்கானவர்களை இது கவரும். அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பும் அரசியற்குழுக்கள், பணவீக்கத்தை நிறுத்துவதற்கான உறுதிமொழியினை அளித்து செயற்றிட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்று, தமது உறுதிமொழியைக் காப்பாற்றுவார்களாயின், அவர்கள் பெறக்கூடிய அரசியல் ஆதரவை எண்ணிப்பாருங்கள். பணவீக்கத்தை நிறுத்துவதற்காகத் தியாகங்கள் புரியவும் பலர் தயாராயுள்ளனர்.

எண்ணற்ற விலைவாசி உயர்வுகளுக்கு மத்தியிலும் இதுவரை எவருமே அத்தகைய உறுதிமொழியை வழங்காதிருப்பது வருந்தத்தக்க ஒன்றே. மக்கள் அவநம்பிக்கையுடன் நிலைமையை நோக்குவதற்கான காரணங்களுள் இதுவும் ஒன்றாகும். விலையுயர்வு வாரந்தோறும் உத்தியோகரீதியாக அறிவிக்கப்படுவதனால், கோபமுறும் மக்கள், மறுநாளே எவ்வித அறிவித்தலுமின்றி விலைவாசிகள் மேலும் உயர்வதைக்கண்டு வெறுப்படைகின்றனர். உண்மையிலேயே தேசியப்பொருளாதாரத்தினது சராசரியைக் கருதும்போது, உண்மை நுகர்வு அத்தனை மோசமானதாக இல்லை. சமூகத்தின் பரந்த பகுதியினருக்கு வழங்கப்படும் பணவேதன அதிகரிப்பு, விலைவாசியினது உயர்வினை ஈடுசெய்வதுடன், சில சமயங்களில் அது மிகையாகவும் காணப்படலாம். இருந்துங்கூட, தொடர்ச்சியான விலையுயர்வினால் அனைவருமே ஆவேச-முறுகின்றனர். இதனாற்றான் ஒரு நிச்சயமானதும் தெளிவானதுமான உறுதியாக்கற் செயற்றிட்டம், அதனை அறிமுகம் செய்வோர் அதுபெரும் அதிர்ச்சியினையும் ஒரே தடவையிலேற்படும் பெரும் விலையுயர்வினையும் கொண்டிருக்குமென திறந்த மனதுடன் முன்னெச்சரிக்கை விடுத்தாலுங்கூட, அது பெருமளவு பொதுசன ஆதரவைப் பெறக்கூடியதாக உள்ளது.

இந்தப்பொதுசன ஆதரவானது, உறுதிமொழி தொடர்ந்து பாதுகாக்கப்படுவதிலேயே தங்கியுள்ளது என்பதை வலியுறுத்தத் தேவையில்லை.

5. பற்றாக்குறைப் பொருளாதாரத்தினை ஒழிப்பதற்கான உறுதிமொழி, இத்திட்டத்தின் வரவேற்கத்தக்க அம்சங்களுள் ஒன்றாகும். பணவீக்கத்தைப் போன்றே இந்த விடயத்திலும் எந்தவொரு அரசியற்சக்தியோ, கட்சிச் செயற்றிட்டமோ மேற்படி கட்டுப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் வருந்தக் கூடியதே. மக்களின் மனக்குறைகளுள் இதுவும் ஒன்றாகும். கிராமவாசிகள், நகரவாசிகள், இளைஞர், முதியோர், ஏழை, பணக்காரர் ஆகிய அனைவருமே இப்பற்றாக்குறைப் பொருளாதாரத்தினாலும் நீண்ட வரிசைகளில் காத்துநிற்க வேண்டி இருப்பதனாலும், விற்போரின் தயவில் தங்கியிருக்கும் உணர்வினாலும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வித பற்றாக்குறை நுகர்வோரைக் கவலையுறச் செய்வதுடன், உற்பத்தியாளரின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கும் தொடர்ந்து இடையூறாக அமையும். ஆரம்பகாலத்தில் உறங்கேரிய – அவுஸ்திரிய எல்லையைக் கடக்கும் ஒரு ஹங்கேரியனுக்கு, அங்கு குறைந்த விலைகளில் எந்தவொரு பொருளையும் வாங்கக்கூடியதாக இருந்தமை மிகப்பெரிய அனுபவங்களுள் ஒன்றாக இருந்தது. இருமுறைகளுக்குமிடையே வெளிப்படையான ஒரு முக்கிய வேறுபாடாக இது இருந்தது. பற்றாக்குறையினை அகற்றுவது அத்தகைய ஒரு வெளிப்படையான மாற்றத்திற்கு வழி வகுக்கும். பொருளாதார அமைப்பு ஓர் உண்மையான மாற்றத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளதென்பதையும், ஹங்கேரியர்கள் இறுதியாக ஒரு நுகர்வோர் சந்தையின் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதையும் அது நிரூபிக்கும்.

6. இங்கு கூறப்பட்டுள்ள பொருளாதாரக்கொள்கையானது, அரசபணத்தினது தலைவிதியைப்பற்றி அக்கறை கொண்டவர்களையும் அதனது பிழையான உபயோகத்தினால் விரக்தியடைந்தவர்களையும் கவரக்கூடியது. அரச பணத்திற்குப் பொறுப்பான சகல அதிகாரிகளும் கடுமையான, பொது அரசியல் கண்காணிப்பிற்கு உள்ளாக்கப்படவேண்டுமென இவர்கள் கருதுகிறார்கள்.

7. இச்செயற்றிட்டமானது அரசஉடைமை என்ற விதியினை ஆதரிப்போருக்குப் பெரும் கவர்ச்சியானதோ, பெரும் அதிர்ச்சியளிப்பதோ அன்று. அரசஉடைமை நிறுவனங்களின் நிர்வாகிகளை மட்டும் இங்கு நாம் கருதவில்லை. சோஷலிசக் கொள்கையின் இதயபூர்வமான ஆதரவாளர்களையும், உற்பத்தியானது தனிப்பட்டோரின் உரிமையாக இருக்கக்கூடாது

என்பதில் அதீத ஈடுபாடுகொண்டவர்களையும் சேர்த்தே நாம் கருதுகிறோம். இங்கு முன்வைக்கப்படும் பொருளாதாரக் கொள்கையானது, அரசஉடைமையினை பொறுப்பற்ற விதத்தில் களைவதற்கு எதிராக எச்சரிக்கை விடுக்கிறது. பொறுப்பற்ற முறையில் தனியார் உடைமையை அழிக்கும் எதிர் நடவடிக்கையையும் அது வன்மையாகக் கண்டிக்கிறது. இச்செயற்றிட்டம் போலியான போட்டிக்கு மாறாக, இருதுறைகளுக்குமிடையே உண்மையான போட்டியுணர்ச்சியினை ஏற்படுத்த முனைகிறது. அதிகாரப்பலம் வாய்ந்த அரசநிறுவனங்களுடன் ஒப்பீட்டுரீதியில் தனியார்துறை எந்தளவு மேன்மையானதாக உள்ளதோ, அதே நேரடி விகிதாசாரத்தில் அதன் பங்கும் அதிகரிக்க வேண்டும். தனியார் முயற்சியாளர் தமது நிதிவசதிக்கும், தமது சொந்த செல்வத்தை ஈடாகவைத்துப் பெறக்கூடிய கடன்வசதிக்கும் ஏற்ற வகையிலேயே அரசதுறையின் சில அலகுகளைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பு அளிக்கப்படவேண்டும்.

இச்செயற்றிட்டம் உண்மையாகவே சுயாதீனமான நிறுவன-ங்களினால் ஏற்படுத்தப்படும் தாபனரீதியான உடைமையினது வளர்ச்சியினையோ, உண்மையான கூட்டுறவு உடைமையினது வளர்ச்சியினையோ தடைசெய்யக்கூடாது.

இவையனைத்துமே ஒரு சேதன வளர்ச்சியினூடாகச் சாதிக்கக் கூடியவையாகும். சேதன மாற்றத்தின்பின் எஞ்சியிருக்கும் அரசஉடைமையின் பங்கைத் தெளிவாக உணர்வதற்கு ஐந்து, பத்து, அல்லது இருபது வருடங்கள் காத்திருக்கவேண்டி நேரிடலாம். இப்பங்கானது உண்மையான சந்தை சார்ந்ததும் இறுக்கமான பாதீட்டு வரையறையினைக்கொண்டதுமான தனியார் துறையின் நடத்தையினை ஒத்ததாக மாறுவதற்கு, மிகச்சிறியதாக இருத்தல்வேண்டும். இதற்குமாறான விதத்தில் அது இருக்கக்கூடாது.

அரசதுறையின் வெற்றியில் இன்னமும் நம்பிக்கை கொண்டவர்கள் இதனை ஒரு தடையாகக்கருதாமல், அதனைச் சுறுசுறுப்பாக இயங்க ஊக்குவிக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பமாகக் கருதிக்கொள்ளவேண்டும். எல்லாவகைகளிலும் அரசஉடைமையை ஒரேயடியில் இல்லாமற் செய்ய விரும்பும் திட்டங்களிலும் பார்க்க இச்செயற்றிட்டம் கவர்ச்சிகரமானதே.

8. இங்கு முன்வைக்கப்பட்ட கொள்கை அரச மூலவளங்களையும் சொத்துக்களையும் சிதறடிப்பதற்கும் துஷ்பிரயோகம் செய்வதற்கும் அது எத்தகைய போர்வையில் நடந்தாலும், ஒரு தடைக்கல்லாக அமைகிறது. இது மக்களைச் சினங்கொள்ளச் செய்வதுடன்,

அவர்களை அவதூறுக்கும் உள்ளாக்குகின்றது. பல தசாப்தங்களாக அரசின் சொத்துக்கள் மக்களின் சொத்தே என்ற சுலோகம் முன்வைக்கப்பட்டு வந்துள்ளது. இது ஓர் அரைகுறை உண்மையே. இக்கூற்று நிரூபிக்கப்படவில்லை என்பதுடன், நிரூபிக்கப்-படமுடியாதது என்பதும் கண்கூடு. ஏனெனில், பத்துகோடி மக்கள் நாட்டின் சிக்கலான உற்பத்திமுறையினைத் தாமாகவே கட்டுப்படுத்தமுடியாது. இந்த ஆய்வில் பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, அரச சொத்தானது அனைவருக்கும் உரித்தான அதேவேளையில், தனிப்பட்ட ஒருவருக்கும் உரித்தானதல்ல.

எனினும், அரசினது சொத்தானது, நாட்டு மக்களின் தியாகங்களையும் உழைப்பையும் அடக்கியுள்ளமையால் மேற்படி சுலோகம் சரியானதே. இப்பெரும் பொக்கிஷத்தின் நடப்பு நிலைவரத்தை அறிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு. இங்கு முன்வைக்கப்படும் செயற்றிட்டமானது, அனைத்து விற்பனைகளும் நியாயமான வியாபார நிலைமைகளின் கீழும், பொதுமக்களின் பார்வையின் கீழும் நடக்கவேண்டுமென நிர்ப்பந்திக்கிறது. இச்செயற்றிட்டத்துக்கான ஆதரவைப்பெறுவதில் இக்கருத்து உதவியாகவிருக்கும்.

9. முன்னரே கூறப்பட்ட கருத்தின் ஒரு பகுதியாக இது இருந்தாலுங்கூட, இதை நான் மீண்டும் வலியுறுத்திக்-கூறவிரும்புகிறேன். அரசின் சொத்துக்கள் குறைந்தமட்ட விலைகளில் அந்நிய நாடுகளுக்கு விற்பனை செய்யப்படக்கூடாது. மேற்குலகுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டதாகவன்றி, விவேகமான தேசியக் கொள்கையொன்றே இங்கும் தேவையானதாகும். பிறநாட்டு வியாபாரிகள் ஹங்கேரிய நிறுவனங்களைக் கொள்வனவு செய்வதும், அலுவலகங்களையும் கடைகளையும் திறப்பதும் அல்லது உள்ளூர் முயற்சியாளர்களுடன் இணைவதும் ஹங்கேரிய மக்களுக்குப் பயன்படுமாயின், அவை பெரிதும் நன்மைபயக்கக்கூடியனவே. ஹங்கேரிய – மேற்குலக இணைப்பு நிறுவனங்கள் பெரும் பத்திரிகை விளம்பரத்துடனும், பத்திரிகை மாறல்களுடனும், மதுபான விருந்துகளுடனும் திறப்பு விழாக் கொண்டாடியபோதும், அவை வெற்றியின் ஓர் அறிகுறியாகமாட்டா. இத்தகைய இணைப்புக்கள் ஹங்கேரிய மக்களுக்கு உண்மையாகவே பயன்படுகின்றனவா என்பது நடைமுறை ஆய்வுக்குள்ளாக்கப்படல்வேண்டும்.

கட்டுப்பாடற்ற அந்நிய முதலீட்டினது ஊடுருவலைத் தடைசெய்யும் விதத்தில் சட்டவரம்புகள் தாபிக்கப்படல்வேண்டும். அதிகாரத்தடைகளின் மூலம் அந்நிய முதலீட்டினது ஈடுபாட்டினைப்

பாதிக்காது, எமது வரவேற்பின் எல்லைகளையும், அதை மீறுவது தொடர்பான நமது கருத்துக்களையும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் சுட்டிக்காட்டவேண்டும்.

இச்செயற்றிட்டத்தின் தேசியப்பண்பு தொடர்பான இன்னுமொரு கருத்தும் பயனுள்ளதாகும். மேற்கத்திய வியாபார உலகினை அடிமைத் தனமாக அப்படியே பின்பற்றுவது தேவையற்றது என்பதையும் இந்த ஆய்வு மீண்டும் மீண்டும் நினைவுறுத்தியுள்ளது. ஹங்கேரியானது வெகுவிரையில் நியூயோர்க், சியூரிக், டோக்கியோ பங்குச்சந்தைகளின் அனுபவங்களை இணைத்துப்பார்க்காது, மூவர்ண பங்குச்சந்தையொன்றை உருவாக்குமென்ற எண்ணத்தில் இந்த எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. சேதன வரலாற்று ரீதியான வளர்ச்சியின் விளைவாகவே பல திறமைமிக்க நிறுவனங்கள் உருவாகியுள்ளன என்ற நம்பிக்கையே அந்நிய அமைப்புக்களை வெறுமனே பின்பற்றுவதற்கெதிரான எனது அநாகரிகமான எச்சரிக்கையின் அடிப்படையாகும். கடந்த தசாப்தங்களில் பல நிறுவனங்கள், அவற்றினது செயற்கைத்தன்மையினாலும் நன்கு ஆலோசிக்கப்படாது சமூகத்தின் மீது திணிக்கப்பட்டனவாகவும் இருந்தமையால் தோல்வியைத்தழுவியுள்ளன. ஹங்கேரியின் வரலாற்று ரீதியான வளர்ச்சியின் புதிய கட்டமானது, பலவகையான நிறுவனங்கள், சட்டத்தாபனங்கள், சந்தையின் சமூக நடத்தைகள், வியாபார உலகின் பொருளாதார முகாமைத்துவம் என்பவற்றின் இயற்கையான தோற்றத்தை ஏற்படுத்தும். இது தவிர்க்க முடியாதவாறு அந்நிய உதாரணங்களாலும், மேற்கத்திய பங்காளர்களின் தொடர்புகளினாலும் பாதிப்புறும். சுய கௌரவத்தை இழக்காமல் எம்மாலியன்றவரை அவர்களிடமிருந்து கற்றுக் கொள்வோம். அந்நிய வங்கியாளரினதும், தொழிலதிபர்களினதும் அங்கீகாரத்தைப் பெறுவது எமது முதன்மையான தேவையல்ல. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வெளிப்போக்கான பார்வையிலேயே அவர்கள் இவ்வித அங்கீகாரத்தை வழங்குகிறார்கள். உள்நாட்டிலேயே நற்பெயரைச் சம்பாதித்துக்கொள்ளுதலே சிறந்தது.

10. இறுதியாக, இவ்வாய்வில் கூறப்பட்டுள்ள கொள்கை இன்னுமொரு விதத்திலும் கவர்ச்சிகரமானதாகவிருக்கலாம். பெரும்பான்மையான ஹங்கேரிய மக்கள் இன்று தமது நாடு கொந்தளிப்பும், ஒழுங்கீனமும் சீர்குலைவும் நிறைந்த ஒரு நாடாக இருப்பதை உணருகிறார்கள். இன்று ஒன்றும், நாளை வேறொன்றுமாக அவர்களுக்குக் கூறப்படுகின்றது. முரண்பட்ட நடவடிக்கைகள் அமுலாக்கப்படுவதுடன், பொருளாதார நிர்வாகிகளும் தனிப்பட்டோரும் அவற்றுள் எவற்றை ஏற்பது,

எவற்றை மீறுவது என்று சுயாதீனமாகவே முடிவெடுக்கின்றனர். சட்டம் எவ்வித அதிகாரத்தையும் கொண்டதாகத்தெரியவில்லை. சட்டங்களை மீறுவதற்கு மக்கள் விசேட ஆர்வம் கொண்டிருக்கவில்லை. அவர்கள் பிடிபடும் பட்சத்தில் கூட வெளியேவிடப்படுகின்றனர்.

அதேவேளையில், மக்கள் "ஒழுங்கு" என்பது போர்களையும் சிறையடைப்பையும் வெளிப்படையாகப் பேசுபவர்களின் அழிவையும் குறிப்பதாகக் கருதுகிறார்கள். "ஒழுங்குமுறையினைப் பின்பற்றல்", மீளவும் "ஸ்டாலின் மயப்படுத்தல்" (Re-Stalinisation) என்ற பதங்கள் ஒரே கருத்தினைக்கொண்டதாகப் பலர் கருதுகிறார்கள். அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் ஒரு உறங்கேரிய சமூக - சனநாயக சோஷலிசவாதியான சந்தோர் சாலை (Sandor Szalai) என்பவரின் கசப்பான வாசகத்தின் படி எமக்கு இரண்டு வழிகளே உள்ளன. இராணுவவிடுதி அல்லது விபசார விடுதி என்பனவே அவை. இராணுவ ஒழுங்கினை விரும்பாதோர் விபசார விடுதியின் அராஜரீகத்தை ஏற்கவேண்டும்.

வேறொன்றிலும் இல்லாவிடினும், இதிலாவது நான் ஒரு மூன்றாவது வழியினைக் காண்கிறேன். ஹங்கேரிய நாட்டுக்கு ஒழுங்கு தேவைப்பட்ட பொழுதும், அது இராணுவ விடுதிக்குரிய ஒழுங்காகவிருக்கக்கூடாது. இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ள பொருளாதாரக்கொள்கை, அத்தகைய ஓர் ஒழுங்கு எவ்வாறு சாத்தியப்படலாமென்பதை விளக்குகிறது. பணவீக்கத்தினால் உருவாக்கப்பட்ட மர்மத்துக்கு நாம் ஒரு முடிவினைத் தேடுவோம். இரவோடிரவாக விலைவாசிகள் உயர்ந்து, எவ்வித கணிப்பீட்டையும் சாத்தியமற்றதாக்கும் நிலையிலிருந்தும் நாட்டை மீட்சியுறச் செய்வோம். தனிப்பட்டோரின் சுயாதீனத்திற்கும் தனியார் சொத்து, சேமிப்பு, முதலீடு என்பவற்றின் பாதுகாப்பிற்கும் உத்தரவாதமளிக்கும் உறுதியான சட்டங்கள் இருத்தல் வேண்டும். அரச பாதீடு சமப்படுத்தப்படவேண்டும். அரசின் அளவற்ற செலவீடும் அதனை ஈடு செய்வதற்கான வெளியீடும் நிறுத்தப்படவேண்டும்.

## 3.2 நெருக்கடியின் மூலகங்கள்:

இங்கு முன்வைக்கப்பட்ட பொருளாதாரக்கொள்கையானது, எந்தளவு, மக்களின் எப்பிரிவினருக்குக் கவர்ச்சிகரமானதாகவிருக்கும் என்பது பற்றி கடைசிப் பகுதியில் ஆராய்ந்தோம். எனினும், தவறான எதிர்பார்க்கைகளை நான் உருவாக்க விரும்பவில்லை. இச்செயற்றிட்டமானது கவர்ச்சியாகவிருப்பதோடு, வெறுப்பையும்

ஏற்படுத்தலாம். அனுதாபத்தை உருவாக்கும் அதேவேளையில் அது எதிர்ப்பையும் உருவாக்கலாம். ஒரு வகுப்பினரின் நலனைப்பாதுகாத்தும், இன்னொரு வகுப்பினரின் நலனை எதிர்த்தும் செயற்படும் மார்க்சிய அமைப்பினைப்போன்று, ஒருவர் இச்செயற்றிட்டம்பற்றி பின்பற்றுகின்ற சாதக, பாதக நிலைகளை எளிமைப்படுத்தமுடியாது. மார்க்சிய அணுகுமுறையின் வகுப்பு என்ற பதத்தைக்கையாண்டால், இக்கொள்கையினை ஒரேவகுப்பைச்சார்ந்த பல்வேறு பிரிவினர் வேறுபட்ட விதங்களில் நோக்குவர். ஒரு தனிப்பட்டவர் இதனைப்பல்வேறு கோணங்களில் நோக்கலாம். எனது கருத்தின்படி இந்த ஆய்வில் வெளியிடப்பட்டுள்ள செயற்றிட்டம் பிரிக்க முடியாதவகையில் ஒருங்கிணைந்து ஒன்றாக இருந்தபோதும், பலர் இத்திட்டத்தின் சில கருத்துக்களை ஏற்கும் அதேவேளையில், ஏனையவற்றை நிராகரிக்கக்கூடும். ஒருவர் எதிர்நோக்கக்கூடிய பலவகையான நெருக்கடிகளுட்சிலவற்றை இங்கு நான் குறிப்பிடவிரும்புகிறேன்.

## அ. அரசதுறை ஊழியரின் வேதனங்கள்:

இங்கு முன்வைக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளை அரசதுறை ஊழியரின் எதிர்ப்புக்கு மத்தியில் செயற்படுத்த முனைவது பேரழிவையே ஏற்படுத்தும். உண்மையில் அது சாத்தியமற்ற ஒன்றாகும். இது தொடர்பாக, வெளிநாட்டு உதாரணங்கள் சிலவற்றை நினைவு கூரலாம்.

போருக்குப்பிந்திய ஜேர்மனிய - பிரித்தானிய வளர்ச்சியை ஒப்பிடுதல் அத்தகையதொரு உதாரணமாகும். வெற்றிவாகை சூடிய பிரித்தானியாவில் தொழிற்கட்சி அதிகாரத்தைக்கைப்பற்றி, பல தொழில்களைத் தேசியமயமாக்கிற்று. தொழிற்சங்க ஆதிக்கத்தில் அதீத வளர்ச்சி ஏற்பட்டது; மறுபங்கீட்டிற்கான போராட்டம் நிலைபெற்றது. தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தப் போராட்டங்கள் மூலம் தொழிலாளருக்குக் கூடிய பங்கினை உறுதி செய்ய முயன்றன. உற்பத்தியில் முக்கிய பங்கு வகித்த தொழிலாளர் சிலர், சில சந்தர்ப்பங்களில் வேலை நிறுத்தத்தினூடாக எல்லாத் தொழில்களையுமே செயலிழக்கச் செய்தனர். இவற்றின் விளைவாக பிரித்தானியாவினது பொருளாதார வளர்ச்சி நின்று, அது நெருக்கடி நிலையினை அடையாத போதும், போட்டி நாடுகளின் வளர்ச்சியோடு ஒப்பீட்டு ரீதியில் அது பின்தங்கி நின்றது.

தோல்வி கண்ட மேற்கு ஜேர்மனியில் நிலைமை வேறுபட்டதாகவிருந்தது. உறுதியாக்கற் செயற்பாட்டின் போது, அதிகாரமானது லிபரல் - கன்சர்வேற்வ் கூட்டணியின் கையிலிருந்து,

பின்னர் லிபரல் - சமூகசனநாயக கூட்டணியுடன் மாறி மாறிப் பகிரப்பட்டது. குறிப்பிட்ட சிறு காலப்பகுதியில் இவை இரண்டிற்குமிடையே பெரும் கூட்டாட்சியும் இடம் பெற்றது. இக்காலப் பகுதி முழுவதும் தொழிற்சங்கங்கள் அரசதுறைக்கும் தனியார் துறைக்கும் ஆக்கபூர்வமான முறையில் ஒத்துழைப்பை நல்கிவந்தன. வேறு வார்த்தைகளில் கூறுவோமாயின், போல்ஷ்விக் கருத்தில் ஒரு "வகுப்புச்சமரசம்" அங்கு நிலவியது. தனியார்வசமிருந்த (பெரிய, நடுத்தர, சிறிய) துறை, அரச பணிக்குழு, தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவம் செய்த ஊழியர் என்ற மூன்று பிரிவினரும் போரினால் பாதிக்கப்பட்ட ஜேர்மனியில் மறுபங்கீட்டிற்காகப் போராடுவது தற்கொலைக்கு ஒப்பானது என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். ஏற்கனவே இந்த ஆய்வில் கூறப்பட்டதற்கிணங்க, கைவசமுள்ள ஒரு துண்டு ரொட்டியைத் துண்டாடுவதில் நேரத்தை விரயம் செய்யாது, அதனது அளவினை மேலும் மேலும் அதிகரிப்பதற்காக இணைந்து போராடுவதே உசிதமாகும்.

போருக்குப்பிந்திய பிரித்தானிய - மேற்கு ஜேர்மனிய வளர்ச்சி பின்னையதற்குச் சார்பாகப் பெரும் வேறுபாட்டினைக் கொண்டதாகவிருந்தது. இதனை ஒரு தனிக்காரணியைக்கொண்டு விளக்கமுடியாது. நாம் குறிப்பிட்ட வேறுபாடுகளே பெரும் காரணங்களாக மட்டுமன்றி, அவையே சில சமயங்களில் முக்கிய காரணிகளாகவும் இருந்திருக்கலாம்.

நமது அண்டை நாடான போலந்தினை நோக்குவோம், கடந்த 10, அல்லது 15 வருடங்களாகத் தேசிய ஒருமைப்பாட்டிற்கான அரசாங்கம் உருவாகியபொழுது, ஊழியருக்கும் தொழில் வழங்குனரான அரசிற்குமிடையே சண்டைமூண்டது. வரலாற்றில் இது ஒரு தனித்துவம் வாய்ந்த போராட்டமாகும். ஏனெனில், ஜனநாயக விடுதலைக்கான போராட்டம் இங்கு, "வழக்கமான" தொழிற்சங்க செயற்பாடுகளுடன் (பணவேதனங்களை உயர்த்துவதற்கான வேலை நிறுத்த இயக்கம்) இணைந்ததாகவிருந்தது. ஒரேநேரத்தில் அது பாராளுமன்ற ஜனநாயகத்தின் வீரமிக்க வெளிப்பாடாகவும் பொருளாதாரச் சீர் குழைவுக்கு ஓர் ஆரம்பமாகவும் இருந்தது. உண்ணாவிரதப் போராட்டமொன்றில், கோடிக்கணக்கான மக்கள் அப்போராட்டத்தை வீரத்தின் ஓர் அடையாளமாகச் சொற்பநேரம் கடைப்பிடித்துவிட்டு பின்னர் அதனைக்கைவிட அரசியல் தலைவன் ஒருவன் மட்டும் தனது கொள்கைகளைக் கைவிடுவதற்குப்பதிலாக, விரைவில் மரணத்தையும் தழுவும் நிலைமையை இது ஒத்துள்ளது. அதன்பின்னர் மக்கள் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் உணவருந்துவர். அவர்களுக்கு மாமிசமும் பாணும் தேவைப்படும். இதைவிட அவர்களுக்கு அமைதியும் வசதியும் கூடிய வாழ்வும் வேண்டும். அத்தகைய வாழ்க்கைக்குரிய பொருள்

சார்ந்த நிலைமைகள் இடையறாத வேலை நிறுத்தங்களினால் பாதிப்படைந்துள்ளன. போலந்தின் அண்மைக்கால மாற்றங்கள் பொருளாதாரத்தின் முக்கிய பங்காளர்களான அரச பணிக்குழு, அரச தனியார்துறை முகாமையாளர், அரச - தனியார் துறை ஊழியர்கள் என்போருக்கிடையே கூட்டொன்று ஏற்படுவதற்குத் தேவையான நிலைமைகளை உருவாக்கியுள்ளது.

அந்திய உதாரணங்களிலிருந்து நாம் இப்பொழுது ஹங்கேரிய நிலைமைக்குத்திரும்புவோம். இந்த ஆய்வில் கூறப்பட்டுள்ள பொருளாதாரக் கொள்கை அரசதுறை ஊழியர்களுக்கு எவ்வகையான நன்மைகளைக் கொண்டிருக்கும்? கடைசிப்பகுதியில் அட்டவணைப்-படுத்தப்பட்டுள்ள பத்து அம்சங்களில் பெரும்பாலானவை வகுப்பு ஆய்வில் தங்கியிராதமையால் இவர்களுக்கும் பொருந்தும். உதாரணமாக, தனிப்பட்ட வியாபார முயற்சியொன்றில் ஈடுபடும் நோக்கமெதுவுமற்ற ஒரு தொழிற்சாலை ஊழியன், தன் சகோதரனின் தனிப்பட்ட விவசாயப்பண்ணை கிராமத்தில் மீண்டும் நன்னிலை எய்துவதையோ, அல்லது தனது புதல்வன் நகரத்திலுள்ள ஒரு தனியார் தாபனத்தில் தொழில் வாய்ப்புப் பெறுவதையோ மகிழ்ச்சியுடன் வரவேற்பான். ஏனெனில், அவனும் பணிக்குழுவின் பல்வேறுபட்ட கட்டுப்-பாடுகளுக்குட்பட்ட பிரசையாகவிருப்பதால், இங்கு முன்வைக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையின் தாராண்மை வாதம், மனித உரிமைகளின் பாதுகாப்பு என்பன அவனது வாழ்வை இலகுவாக்கும்.

ஆனால், உண்மை நிலவரத்தை நான் மறைக்க விரும்பவில்லை. இந்த நூலின் 1.4, 2.3 ஆகிய பகுதிகளில் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, நான் ஒரு கடுமையான வேதன ஒழுங்கு முறையினை வலியுறுத்துவேன். உறுதியாக்கற் செயற்பாட்டினை அமுலாக்கும் போது, அரசதுறை வேதனங்களை உறையச்செய்தலை, அல்லது ஒரு சிறிது மட்டுமே உயர அனுமதிப்பதை இது குறிக்கும். உண்மையான உறுதியாக்கற்றிட்டத்தினை அமுலாக்கும் பொழுதே ஒரு வேதன அதிகரிப்பும் இருக்கக்கூடுமாயின், அது எவ்வளவாகவிருக்க வேண்டுமென்பதை நிர்ணயிக்கலாம். இது எவ்வளவு என்பதை என்னால் கூறமுடியாவிடினும், உறுதியாக்கற் செயற்பாட்டினால் குறிப்பிடப்படும் பணவேதனமட்டம் இறுக்கமாக அமுலாக்கப்படவேண்டும். இதில் விட்டுக்கொடுப்போமாயின், அது எல்லாவற்றையுமே இழப்பதற்குச் சமனாகும். அதாவது, வேதனங்களும் விலைகளும் போட்டி-யடிப்படையில் உயரத்தொடங்கும். கேள்விக்கு மத்தியிலும் விலைகளைக் கீழ் மட்டத்திலேயே வைத்திருக்க முயலுவோமாயின், பற்றாக்குறை பெரிய அளவில் ஏற்படும். இதன் பயனாக, செயற்பாட்டிற்கு முன்னிருந்த நிலைமையை நாம் அடைய நேரிடும். எமது முயற்சி பயனற்ற-தாகுவதோடு, இன்னொரு செயற்றிட்டத்தினை அமுலாக்குதலும் சிரமமான காரியமாகிவிடும்.

சுயமாகவே ஏற்படும் வேதன ஒழுக்காற்றை அரசதுறை ஊழியர் முன்னதாகவே ஏற்றுக்கொள்ளச் செய்தல் நன்மையானதாகும். பொருளாதாரப் பேரழிவினின்றும் நாடு தப்பவேண்டுமானால், இது இன்றியமையாதது என்பதை அவர்கள் உணரச்செய்யவேண்டும். இறுதியாக, செயற்பாடு பூர்த்தியடையும்போது, மாற்றங்களின் பயனாக அவர்களும் நன்மையடைவர். ஒரு பகுதியினரின் இலாபங்கள், மற்றப் பகுதியினரின் நட்டத்திற்குச் சமனாகவிருக்கும் ஒரு பூச்சியக் கூட்டுத்தொகை விளையாட்டல்ல இது. மேற்கு ஜேர்மனியத் தொழிலாளர்கள், இன்று தமது பிரித்தானிய சகபாடிகளிலும் பார்க்கக் கூடிய நன்மையினை அடைந்துள்ளனர். பொருளாதாரம் இறுதியாக மீட்சியுறும் போது, உற்பத்தி அதிகரிக்கும்; பணவீக்கம் வீழ்ச்சியுறும்; விலைகள் நம்பகமானதாகவிருக்கும்; போரின்டினது பெறுமதி வீழ்ச்சி குறையும்; மக்களது சேமிப்புக்களின் கொள்வனவுச்சக்தி நிலையாக-விருக்கும்; தொழிலாளர் நன்மை பெறுவர்.

பல தசாப்தங்களாக ஊழியர் வேலைநிறுத்த உரிமையை இழந்திருந்தனர். இன்று அந்தப் பலம் வாய்ந்த கருவியை மீண்டும் பெறும் போது, அச் சக்தியைக்கையாளுவதினின்றும் அவர்களைத்-தடுத்தல் சுலபமானதல்ல என்பதை நான் உணருகிறேன்.

தொழிற்சங்க இயக்கத்தில் இன்று போட்டியுணர்வு உருவாகி-யுள்ளது. ஒரு வரலாற்றியலாளனாகவோ, அல்லது அரசியல் சமூகவியலாளனாகவோ இன்றைய நிலையை அவதானிக்குமொருவன் பல தொழிற்சங்க அதிகாரிகளின் நடத்தையினை இலகுவில் விளங்கிக்கொள்ளக் கூடிவனாகவிருப்பான். இன்றுவரை அவர்கள் அரசபணிக்குழுவோடு ஒத்துழைத்து வந்துள்ளது மட்டுமன்றி, அவற்றினது "பட்டியாக" செயற்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்-பட்டுள்ளனர். இன்று இந்தநிலை இல்லையெனக் காட்டுவதற்கு இதுவே தக்கதருணமெனப் பலர் உணரக்கூடும். இது தொழிலாளரிடையே பிரபல்யமடைந்துள்ளதுடன், எவ்வித ஆபத்தையும் கொண்டிராதது-மாகும். எவனொருவனும் இன்று வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிட்ட குற்றத்திற்காகப் போலிசாரால் கைது செய்யப்படுவதில்லை.

தொழிற்சங்கங்கள் தமது ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டுமென நான் உபதேசிக்கவில்லை. தொழிற்சங்க அதிகாரிகள் தொழிலாளருக்-கெதிராக இழைக்கப்படும் உண்மையான அநீதிகளுக்கெதிராகக் கவனமாக இருக்கவேண்டும். சமூகத்தில் தமது பெரும் செல்வாக்கினைக் கருத்திற் கொண்டு, புதிய அரசினது பொருளாதாரக்கொள்கை ஆக்கத்தில் பங்கு கொள்ளவேண்டும். ஆனால், வேலைநிறுத்தமென்ற இருமுனை ஆயுதத்தினை அவர்கள் அவதானமாகக்கையாளல் வேண்டும். எவ்வாறேனும், நாட்டினது பொருளாதார மீட்சி,

முதலாவதாக, பொருளாதாரத்தின் பிரதான பங்காளிகள் ஒருவருடனொருவர் ஒத்துப்போகின்றார்களா என்பதிலும், பின்னர், அந்த உடன்பாட்டினை அவர்கள் மதித்து நடக்கின்றனரா என்பதிலுமே தங்கியிருக்கும்.

## ஆ. வேலையின்மை:

வேலையின்மையின் அச்சுறுத்தல் இந்த ஆய்வின் முன்னைய பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை மீண்டும் இங்கு நெருக்கடிநிலையின் மூலகங்களுள் ஒன்றாகக் குறிப்பிடவேண்டியுள்ளது. தொழிலாளர் அனைவருக்கும் முன்னதாகவே புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டிருந்தாலொழிய, ஏற்கனவே உள்ள தொழில் வாய்ப்புக்களை அழித்தொழிக்கக்கூடாது என்ற கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. எனது கருத்தின்படி, இக்கோரிக்கையினை நிறைவேற்றுவதை உறுதிசெய்யமுடியாது. இது தொடர்பாகத் தீர்க்கமான உறுதிமொழியை அளிப்பது, எந்த ஒரு அரசாங்கத்தினதும் பொறுப்பற்ற ஒரு செயலாகும். நாட்டின் மீட்சியில் ஓர் ஆக்கபூர்வமான பங்கினை வகிக்கவிரும்பும் ஒரு தொழிற்சங்க இயக்கம், இத்தகையதொரு கோரிக்கையினை முன்வைக்கமுடியாது.

ஒருங்கிணைந்த ஒரு சந்தைப்பொருளாதாரத்திலுங்கூட இதனை உறுதிப்படுத்தமுடியாது. நடைமுறைச் சந்தை நிலைவரங்களுக்கேற்ப, உற்பத்தியானது விரைவாகவும் கூடிய நெகிழ்வுடனும் தன்னை மாற்றிக்கொள்ளும் போது, ஏதோ ஓர் இடத்தில் தொழில் வாய்ப்புக்கள் நீக்கப்படுவது சகஜமாகும். இதுபோன்ற உற்பத்தியின் விரைவானதும் நெகிழ்வுள்ளதுமான ஏற்புத்தன்மை நன்மையானதாகும்.

இரண்டாம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள தீவிரமான செயற்றிட்டத்திற்கிடையில், தொழில் உரிமைக்கான கோரிக்கையினை நிறைவேற்றுதல் அபத்தமானதாகும். காரியாலயத்தில் அமர்ந்து கொண்டு "அமைப்புக் கொள்கையினை" நாம் தீர்மானிக்க முடியாது. சந்தைக்கேள்வி, நிரம்பலைப் பரஸ்பரம் ஒழுங்குபடுத்தும் பொறுப்பினை சந்தையிடம் ஒப்படைப்பதே இங்கு கூறப்பட்டுள்ள செய்தியின் சுருக்கமாகும். சந்தை விலை நிலைவரத்தை முன்கூட்டியே கணிப்பதற்கான வழிமுறை எதுவும் இல்லையாதலால், எத்தொழிற்சாலை நிரந்தரமாக நட்டத்தையடையும் என்பதையும் கூற வழி எதுவுமில்லை. இச்செயற்பாடு பெரும் அதிர்ச்சியை உருவாக்குமென்பதை வெளிப்படையாகவே ஒத்துக்கொள்ளல்வேண்டும். எனவே, இப்பெரும் மாற்றத்துக்கு மத்தியில் தொழிலை இழக்கும் ஒவ்வொரு ஊழியனுக்கும் திறந்த கரங்களுடன் வேறொரு தொழிற்சாலை இன்னுமொரு இயந்திரத்துடனோ, அல்லது

மேசையுடனோ, வதிவிடத்துடனோ காத்து நிற்கும் என்பதை நாம் எவ்வாறு உத்தரவாதம் செய்யமுடியும்.

நிறைவேற்றமுடியாத உறுதிமொழிகளைவிட, நாம் செய்துகொள்ளக் கூடிய சில உண்மையான பொறுப்புக்களுள்ளன. இந்த ரீதியில் இடைக்கால நடவடிக்கைகளுக்கும் ஊழியச்சந்தை தொழில் உரிமை என்பவற்றுக்குமிடையே தொடர்பினைத் தாபித்தலுக்குமிடையிலான வேறுபாட்டினைக்காட்டியுள்ளது இந்நூல்.

இடைக்கால நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், பகுதி 2.6 இல் செயற்பாட்டுக் காலத்துக்கான மனிதாபிமான ஒதுக்குகளைப்பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. உறுதியாக்கற் செயற்பாட்டினால் பாதிக்கப்படும் அனைவருக்கும், அவர்கள் புதிய சூழ்நிலைக்கேற்பத் தம்மை மாற்றிக்கொள்ளும் வரைக்கும் உதவி வழங்கப்படல்வேண்டும். அவ்வுதவி எத்தகையதாயிருக்கவேண்டும், என்ன நிபந்தனைக்குட்பட்டதாய் இருத்தல் வேண்டும் என்பனபற்றி ஆராய்வதை எனது கடமையாக நான் கருதவில்லை. உதவியின் அளவையோ அல்லது அது எவ்வாறு வழங்கப்படலாமென்பது பற்றியோ அன்றி, அதனது இயல்பினையே எனது கருத்து உணர்த்துகிறது. இது அவமரியாதை செய்யும் ஒரு கொடுப்பனவன்று. தமது சொந்தத் தவறுகளின் நிமித்தமாகவன்றி, வேறு காரணங்களால் துயரத்துக்குள்ளாக்கப்பட்டோருடன் சமூகம் கொண்டுள்ள தொடர்பின் ஒரு வெளிப்பாடே இது. சிரமமான இக்காலப்பகுதியில் உதவி தேவைப்படும் மக்களின் கண்ணியத்துக்காக மனிதமரியாதையில் செலுத்தப்படுவதே இது.

நீண்டகாலம் பற்றி நாம் மீண்டும் சிந்திக்கும் பொழுது, உராய்விற்குரிய வேலையின்மை எப்போதுமே நிலவுமென்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். (சோஷலிசப் பொருளாதாரம் உட்பட அனைத்திலுமே உராய்விற்குரிய வேலையின்மை எப்போதுமே நிலவியுள்ளது என்பதையும், அதனது அளவுபற்றி நாம் அறிந்திருக்கவில்லை என்பதையும் கவனத்திற்கொள்ளவேண்டும்). பொருளாதாரம் எந்தளவு தன்னை மாற்றிக்கொள்ளக்கூடியதாக உள்ளதோ, அந்தளவிற்குத் தொழில் வாய்ப்புக்களும் நிறுவனங்களும் தொழில்களுங்கூட இல்லாமற்போவது சகஜமாகும். முன்னேற்றத்துக்கான முன்நிபந்தனை ஆக்கத்தன்மைகொண்ட அழிவாகும் என்ற சும்பேட்டரினது பிரபல்யமான கூற்றின்படி, எங்கு அழிவு உள்ளதோ, அங்கு தான் தொழில்வாய்ப்புக்களும் இழக்கப்படும். எனவே, உராய்விற்குரிய வேலையின்மை தொடர்பாக நிறுவனங்கள், சட்டப்பிரமாணங்கள் என்பவற்றைக்கொண்ட அமைப்பினை நாம் உருவாக்கவேண்டும். வேலையின்மைப்படிகள், மீள் பயிற்சித் திட்டங்கள், வீடமைப்பு, ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்துக்கு இடம் பெயரும் வாய்ப்பு

என்பவற்றை இது உள்ளடக்கும். அரசுக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் பெரும் ஒத்துழைப்பு தேவைப்படும் ஒரு துறை இதுவாகும்.

இறுதியாக, தொடர்ந்து நீடிக்கும் பரவலான வேலையின்மைக்கெதிரான முக்கிய பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சியாகும். இதனை மேலும் குறிப்பாகச் சொல்வதானால், இதுவே ஒரேயொரு பாதுகாப்புமாகும். ஹங்கேரியின் சோஷலிசப் பொருளாதாரத்தினதும் ஏனைய பல சோஷலிச நாடுகளினதும் பெரும் சாதனைகளுள் ஒன்று, நிறை தொழிலைப் பாதுகாத்தமையாகும். அரசியல் யாப்பில் தொழில் செய்வதற்கான உரிமையை இணைத்ததனால் அன்றி குறிப்பிட்ட பொருளாதார வளர்ச்சி உபாயத்தினாலேயே இது அடையப்பட்டது. ஒரு "பெறப்பட்ட உரிமை" என்ற அடிப்படையில், நிறைதொழில் மட்டத்திற்காக வேலைநிறுத்தம், அச்சுறுத்தல், அரசியல் அழுத்தம் என்பவற்றைப் பிரயோகிக்கும் ஒரு போராட்டம், முன்னைய பொருளாதாரத்தின் ஒரு சாதனையாகிய இதனைப்பாதுகாப்பதற்கு ஒரு வழியாகமாட்டாது. பொருளாதார வளர்ச்சியினை மீண்டும் துரிதப்படுத்தலும், அதனூடாக மேலும் மேலும் தொழில்களை உருவாக்குவதுமே நோக்கமாகவிருத்தல் வேண்டும்.

வேலையின்மை பற்றி, சில சமயங்களில் சரியான காரணங்களுடனும், வேறு சில சமயங்களில் மிகையாகவும் நாம் ஒருவரையொருவர் எச்சரித்துக்கொண்டபோதும், பொருளாதாரத்தின் பல கிளைகள் ஊழியப்பற்றாக்குறையினால் பாதிக்கப்படுகின்றன. எதிர் காலத்தில் இது மேலும் அதிகரிக்கலாம். எனவே, சேவைகள் துறை இப்பொழுதிலும் பார்க்க, மிகத்துரிதமாக வளர்ச்சியுறவேண்டும். அதற்குப்பெருமளவு ஊழியம் தேவைப்படும். தனியார்துறை வளர்ச்சியின் பங்கினை நான் குறிப்பாக வலியுறுத்த விரும்புகிறேன். எதிர்காலத்தில் அத்துறையினது துரிதமான வளர்ச்சியானது "செயற்பாட்டினால்" வெளியேற்றப்படும் ஊழியத்தின் ஒரு குறிப்பிடத்தக்க விகிதாசாரத்தினைத் தன்னுள் உறிஞ்சிக்கொள்ளும்.

## இ. வறியோர் தொடர்பான பிரச்சினை:

அரசாங்கம் பொருளாதாரக் கருத்துக்களை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்த, அதற்கெதிராக மனிதாபிமானக் கருத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய ஒரு நிலை உருவாகுமாயின், உறுதியாக்கலுக்கும் தேசிய பொருளாதார சுபீட்சத்தை உறுதிசெய்வதற்கும் இது பாதகமாக அமையும். அரசாங்கம் செல்வந்தருக்குச் சார்பாகவிருக்க, வறியோருக்குச்சார்பாகவிருப்போர் அரசாங்கத்தை எதிர்ப்போராக மாறும் ஒரு நிலையென்றும்

அதனைக்கூறலாம். அரசாங்கத்தினது பங்கு தொழில் நுட்பரீதியானதாகவிருக்க, எதிர்கட்சியினது பங்கு நலக்கொள்கையினை ஆதரிப்பதாகவிருக்கும் ஒரு இரண்டு பட்ட தன்மையென இதனைக் கூறினும் பொருத்தமானதே.

இந்தநூலின் ஒவ்வொரு வரியும், ஒவ்வொரு தனிமனிதனதும் மீதான அக்கறையினை உள்ளடக்கியதாகவுள்ளது என்பதை வாசகர்கள் தெளிவாக உணருவரென நான் நம்புகிறேன். செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கத்திற்கும் செல்லுபடியாகும் இது பொது மக்களது பொருள்சார்ந்த நலனை அதிகரிக்குமெனக் கருதுகிறேன். மோசமான பொருளாதாரப் பிரச்சினைகள் சனத்தொகையில் மிக்க வறியமக்களின் நிலையினை மேலும் மோசமாக்கும் என்பதையும் இக்கட்டத்தில் நான் புறக்கணிக்க விரும்பவில்லை. எனவே, நலக்கொள்கை பற்றிய சில கருத்துக்களை இங்கு கூறிவைக்க விரும்புகிறேன்.

பணவீக்கத்தைக்கட்டுப்படுத்துவதே இன்று முக்கிய நலக்கொள்கை என்பதை மீண்டும் வலியுறுத்தவிழைகிறேன். வறியோருக்கு உதவிதேவையெனக் கருதும் அனைவருமே, உறுதியாக்கற் செயற்றிட்டத்தினை முழுமனதுடன் ஆதரிப்பதோடு, அதனைத் தோல்வியுறச் செய்யும் எந்த ஒரு பிரேரணையையும் தவிர்க்கவும் வேண்டும்.

எனது இரண்டாவது கருத்தும் இன்னொரு நினைவுறுத்தலே: தற்காலிகமாகப் பிரச்சினைகளுக்குட்படுவோருக்கு உதவி வழங்குவதற்கான ஓர் ஒதுக்கு உறுதியாக்கற் செயற்பாட்டிற்கு முன்னதாகவே உருவாக்கப்படவேண்டும்.

பல ஆண்டுகளை உள்ளடக்கும் ஒரு நலக்கொள்கை தேவையானது என்பது எனது மூன்றாவது கருத்தாகும். இது பற்றிய மேலதிகக் கருத்துக்களை சிறப்பாக விளக்குவதற்கு என்னைவிடத் தகுதிவாய்ந்தோர் உள்ளனர். வறியோரதும் வசதிகுறைந்தோரதும் நலன்களுக்காக உணர்ச்சிவேகத்துடன் நடைமுறைச் செயல்களினூடாக உழைத்தோருக்கு எனது நன்றியைக்கூற இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். இத்தகையதொரு செயற்றிட்டத்தினை உருவாக்கும் பொருட்டு ஏனைய விற்பன்னர்களுடன் இணைவதற்கு அவர்கள் தயாராகஉள்ளனர். இந்த நூலில் மேற்படி பிரச்சினையின் இரண்டொரு பொருளாதார, ஒழுக்க விடயங்கள் தொடர்பாக மட்டுமே சில கருத்துக்களைக்கூற விரும்புகிறேன்.

ஒரு நலக்கொள்கை தொடர்பான செயற்றிட்டத்தினை உருவாக்கும் பொழுது, இரு எதிர்மாறான கருத்துக்களுக்கிடையே தவிர்க்க முடியாத முரண்பாடு ஏற்படுகின்றது. தேவைகள் எண்ணிறந்தன; ஆனால் சாதனங்கள் வரையறுக்கப்பட்டன. நலக்கொள்கையினை ஆக்குவோரும்,

நலக்கொள்கை உத்தியோகத்தரும் சமூகவிவகாரங்கள் பற்றிய ஆய்வாளரும் எழுத்தாளரும், வறுமை, துன்பம் என்பன பற்றிய வரலாறுகளையும் ஆயிரக்கணக்கான கசப்பான நிகழ்ச்சிகளையும் கூறமுடியும். தமது சகமனிதர் மீது அனுதாபங்கொண்ட எவரும் இவற்றைக்கண்டும் கேட்டும் மனமிளகாது இருக்கமுடியாது. மறுபக்கத்தில், மூக்கு முட்டக் கடன் பட்ட ஒரு நாடு இக்கட்டான நிலையிலிருக்கும். ஒரு செயற்றிறன் வாய்ந்த உற்பத்தி அதிகரிப்பும் பொருளாதார ஏற்றமுமே இந்த சங்கடமான நிலையினின்றும் நாட்டை விடுவிக்குமென்பதை சமூகப்பொறுப்புள்ள ஒரு பொருளியலாளன் உணருவான். இதற்கு முதலீடுகள் தேவைப்படும். இத்துடன் உண்மையான ஊக்குவிப்பை வழங்கக்கூடிய வேதனங்களும், அதிலும் மேலாகத் தமது முயற்சிகளினூடாக மிகக்கூடிய தூண்டுதலை வழங்கக்கூடியோருக்கு உயர்ந்த ஊதியங்களை உறுதி செய்தலும் இதிலடங்கும். நீண்டகால அபிவிருத்தி கருதி, கல்வியும் விஞ்ஞான ஆராய்ச்சியும் முன்னேற வேண்டும். இப்பட்டியலை மேலும் நீட்டிக்கொண்டேபோகலாம்.

எனது கருத்தின்படி, நலக் கொள்கை செலவீட்டிற்கு உச்ச எல்லை விதிப்பதே ஒரேயொரு சாத்தியமான செயலாகும். ஒரு பக்கத்தில், நல அரசியல்வாதிகளுக்கும் வறியோருக்காகக் குரலெழுப்புவோருக்கும், மறுபக்கத்தில், கல்மனம் படைத்த "திறைசேரியினருக்கு" மிடையே அன்றாடம் சிறு போராட்டங்களை ஏற்படுத்துவது தேவையற்றதாகும். ஒரு சனநாயகப் பாராளுமன்றமும் தேசியப் பாதீடு சம்பந்தமான ஒரு பொறுப்பு வாய்ந்த விவாதமும் இதற்காகவே இருக்கின்றன. ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் தமது சொந்த அரசியல் பொறுப்பினைக் கவனத்திற்கொண்டு, நலச்செலவீடு பற்றித் தீர்மானிக்கவேண்டும். தமது தீர்மானத்தை மேற்கொள்வதில், அவர் ஏனைய அனைத்துச் செலவீடுகளையும் (அரசசெலவீடுகள்) அரசவரி வருமானத்தினாலேயே நிதிப்படுத்தப்பட வேண்டுமென்பதையும் கவனத்திலெடுக்க வேண்டும். இறுதியாக, ஒரு வருடத்திற்குச் செல்லுபடியாகக்கூடிய ஒரு பாராளுமன்றத் தீர்மானத்தையும் மேற்கொள்ள வேண்டும். நலக்கொள்கை பற்றிய விரிவான திட்டங்களைத் தீட்டும் தனிநபர்கள், தாபனங்கள் என்பவற்றிற்கு ஒரு கட்டுக்கோப்பினை வழங்கும் வகையில் மேற்படி தீர்மானம் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு முன்னதாகவே மேற்கொள்ளப்படுதல் நன்மையானது என்பது எனது கருத்து. அவர்கள் தயாரிக்கும் செயற்றிட்டமானது ஒதுக்கிவைக்க வேண்டிய கருமங்களை (அதாவது, சூழ்நிலை சாதகமாக மாறுமாயின் மேற்கொள்ளவேண்டியவற்றையும், சூழ்நிலை எதிர்பார்த்ததிலும் மோசமாக மாறுமாயின் நீக்கிவிடவேண்டியவற்றையும்) க்குறிப்பிடும் நெகிழ்வினைக்கொண்டிருக்க வேண்டும். எனினும், ஹங்கேரி இன்று நலன்நோக்கங்களுக்காக எவ்வளவைச் செலவிடமுடியுமென்பதைத்

திட்டமிடவேண்டும். இதுவே நலக்கொள்கை பற்றிச் சிந்திக்கும் ஆரம்ப நிலையாக இருக்கவேண்டுமே தவிர, சுவீடனில் தனது பேரப்பிள்ளையைப் பராமரிக்கும் ஒரு பாட்டிக்கு அரச கொடுப்பனவு கிடைக்கின்றது என்பதாக இருத்தல் கூடாது. நாட்டினது நிலைமை சீர்திருந்திய பின்னர் - அதாவது, தலா தேசியவருமானம் சுவீடனது மட்டத்தையடைந்த பின்னர் - இது பற்றி நாம் சிந்திக்கலாம்.

காரணமின்றி இங்கு நான் *பாராளுமன்ற உறுப்பினர்களது* பங்கினை வலியுறுத்தவில்லை. சமூகத்தில் மக்கள் தம் தொழில்களினாலேயே இனங்காணப்படுகின்றனர். நிதி மந்திரியொருவர் பாராளுமன்றத்தில் உரையாற்றும் பொழுது திறைசேரியின் கருத்துக்களையே வலியுறுத்தவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார். அது அவரது கடப்பாடுமாகும். பத்திரிகைகள் அதிர்ச்சி தரும் வறுமை, துன்பம் என்பவற்றை வெளியிட்டு பொது அபிப்பிராயத்திலும் பாராளுமன்ற உறுப்பினரது மனச்சாட்சியிலும் செல்வாக்குக் கொண்டிருப்பது விரும்பத்தக்கது. இறுதியாக, ஒரு *தீர்மானம் மேற்கொள்ளப்படவேண்டும்.* பொருளியலாளரின் துறைசார்ந்த மொழியில், அருமையான சாதனங்கள் திறமையாக ஒதுக்கீடு செய்யப்படவேண்டுமெனக் கூறலாம். இத்தீர்மானத்தை மேற்கொள்ளும் உரிமையும் அரசியற்பொறுப்பும் பாராளுமன்றத்தினதாகும்.

வறியோர் தொடர்பான பிரச்சினை மீது இன்னொரு கருத்தையும் கூற விரும்புகிறேன். இது அரசியல், ஒழுக்க, பொருளாதார அம்சங்களோடு தொடர்புள்ள ஒன்றாகும். சுபீட்சமாக வாழ்ந்த ஏனையோரை, வறுமை நிலைக்குத்தள்ளுவதன் மூலமாகவன்றி, வறியவன் ஒருவனது வறுமை நிலை குறையுமாயின் மட்டுமே அவனது வாழ்க்கை முன்னேறும். இது ஒரு விவாதத்திற்குரிய விடயமென்பதை நான் அறிவேன். எனினும், இதுபற்றிய எனது கருத்தினைத் திட்டவட்டமாக வெளியிட விரும்புகிறேன். மற்றையோரிடம் "மிகையாகவுள்ள" தாக நான் கருதும் ஊதியங்கள், சேமிப்புக்கள், அல்லது செல்வத்தினை அவர்களிடமிருந்து பறித்து விடுவது எந்த விதத்திலும் எனக்கு ஒழுக்க ரீதியான நட்ட ஈடாக மாட்டாது. மிகை என்பது எவ்வளவு? வேறொருவன் என்னைவிட 50% கூடுதலாக உழைப்பது ஏற்கக்கூடியது எனக்கருதுவோம். அதன் இரு மடங்குகள் கூடுதலாக உழைப்பதும் நியாயமென்போம். ஐந்து, அல்லது ஆறு மடங்கு உழைத்தால் அது நியாயமற்றதா?

இவ்வித வாதம் ஏற்க முடியாத ஒன்றாகும். எந்தளவு ஊதியம் அல்லது செல்வம் ஒழுக்கரீதியாக அனுமதிக்கத்தக்கது அல்லது அதற்கு மேலுள்ளவை ஒழுக்கவீனமானவையே எனக்கூறுவதற்கு எவருக்குமே அதிகாரமில்லை. இவ்வாறு நாம் எடைபோடத் தொடங்குவோமாயின், அது தனியார் உடைமைகளைப் பறிமுதல் செய்வதற்கே இட்டுச்செல்லும்.

"செல்வந்தருக்கு" எதிராக வன்மையான வார்த்தைகளைக் கையாண்டு, ஹங்கேரிய சமூகத்தின் வறியமக்களுக்கு ஆறுதலளிப்பதை நாம் தவிர்த்துக்கொள்ளவேண்டும். ஆடம்பரப் பொருட்களை மக்கள் கொள்வனவு செய்வதை தொலைக்காட்சிச் செய்தி அறிக்கைகள் எத்தனை தடவை கண்டனம் செய்த பொழுதும், அது ஓய்வூதியம் பெற்றோரது உணவு மேசையிலிருக்கும் மாமிசத்தினளவை அதிகரிக்கமாட்டாது. ஓய்வூதியம் பெற்றோருக்கு மாமிசம் வழங்கப்படவேண்டும். சமத்துவம் பற்றிய வெறும் வாக்குச்-சாதூரியமின்றி இதுவே உண்மையான நலக்கொள்கையாகும்.

இந்த நாடு நீண்டகால முதலாளித்துவ அபிவிருத்தியினைக் கொண்டதாகவும், கௌரவமான தனியார் சொத்துடைமைகளைக் கொண்டதாகவும் நேர்மையான உழைப்பாலும், யதார்த்தமான வியாபாரத்தாலும் திரட்டப்பட்ட தனியார் சொத்துடைமைகள் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் சென்றடையலாமென்ற அறிவினாலேற்படும் ஊக்குவிப்பினைக்கொண்டதாகவும் இருக்குமாயின், எனது கருத்தை நான் சற்று அழுத்தமின்றியே கூறுவேன். மறுவார்த்தைகளில், ஒரு மேற்குலகப் பிரசை என்ற வகையில் சுவீடனில் காணப்படும் தீவிரமறுபங்கீட்டு முறை மிகையானதென நான் கருதினாலும், நான் ஒரு பிரேஞ்சுப்பிரசையாகவிருப்பின், ஓரளவு மறுபங்கீட்டைக் கொண்ட வரி முறையினை ஆதரிப்பவனாக இருப்பேன். அங்கும் கூட இது நல்ல முறையிலான முதல் திரட்டலைத் தடைசெய்வதாகவும் மக்கள் தம் செயற்றிறனை வெளிப்படுத்துவதற்கு தடையாக இருப்பதாகவும் நான் கருதுவேன். நான் ஒரு பிரெஞ்சுப் பிரசையாகவோ, சுவீடன் நாட்டுப் பிரசையாகவோ இல்லாதிருப்பதால் ஹங்கேரிய பிரச்சினையினையே நான் ஆராயவேண்டும்.

இங்கு நான் பகுதி 1.1 இல் கூறிய ஒரு விடயத்தினை ஞாபக மூட்ட விரும்புகிறேன். முதலாளித்துவத்தினை மீண்டும் ஏற்படுத்தும் முயற்சியில் நாம் இன்னும் ஆரம்பக்கட்டத்திலேயே இருக்கின்றோம். எமது நிகழ்ச்சி நிரலில் காணப்படும் விடயம் தனியார் துறையில் பங்கு கொள்ளும் ஒவ்வொருவனது மனதுக்கும் ஆறுதலளிப்பதோடு, சிறு நிலக்குடியானவர், நவீனமயப்படுத்தத் தொடங்கியிருக்கும் விவசாயி, தனிப்பட்ட கைவினைஞன், பெரிய தனியார் நிறுவனமொன்றின் உரிமையாளன் போன்றோருக்கு "எதற்கும் அஞ்சாது பொருள் திரட்டுங்கள்" என மீளுறுதியளிக்கவும் வேண்டும். அவர்கள் தமது எனக்கருதுபவற்றை அரசு பறிமுதல் செய்யாது என்பதற்கும், தான் விரும்பியபடி முதலீடு செய்யவேண்டும் என்பதற்காக அவர்களது மிகை ஊதியங்களை எந்த விதத்திலும் பறித்தெடுக்க மாட்டாது என்பதற்கும் உறுதியளிக்கவேண்டும். அவர்களது வாரிசுகளை ஏமாற்றவோ, வாரிசுரிமைச் சட்டங்களை அவர்கள் தவிர்க்குமாறு தூண்டுவதற்கோ

பல்வேறு தந்திரங்களைக்கையாள மாட்டாது என அரசு அவர்களுக்கு நம்பிக்கையூட்டவேண்டும். தமது பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் தாம் விட்டுச்செல்லும் சொத்துக்களுக்கு உரிமை கொண்டாடமுடியாது என்ற காரணத்தால், மக்கள் அச்செல்வத்தைத்தாமே செலவழித்துவிடத் தூண்டமாட்டாது என்பதையும் அரசு தெளிவாக்கவேண்டும். குறுகிய நோக்குக் கொண்ட துணிகரமான செயல்களிலும் பார்க்க, சிறந்த முயற்சியாளர்களை உருவாக்கும் பரம்பரைகளின் தாபகர்களையே அரசு விரும்புகின்றது என்பதை அது பிரகடனப்படுத்தவேண்டும்.

நலக்கொள்கை என்ற விடயத்தினின்றும் நாம் விலகிச்சென்றுள்ள போதும், இங்கு நாம் கூறியவை உண்மையிலேயே முக்கியமானவையாகும். பொது அபிப்பிராயத்தை உருவாக்குவோரும், பணவிடயங்களைப்பற்றிப் பாராளுமன்றத்தில் இறுதித்தீர்மானத்தை மேற்கொள்ளுவோரும் பாதீடு தாங்கிக்கொள்ளக்கூடிய உண்மையான பளுவிற்குறப்பட்டே நலக்கொள்கையினை உருவாக்கவேண்டும். சமூகக்கலகமும், சமத்துவம் பற்றிய சாதுரியமான பேச்சுக்களும் இதற்குப்பதிலீடாகமாட்டா.

## 3.3 ஒரு பலம் வாய்ந்த அரசாங்கத்திற்கான தேவை

இந்தநூலில் கூறப்பட்டுள்ள பொருளாதாரக் கொள்கையினை ஒரு பலம்வாய்ந்த அரசாங்கத்தால் மட்டுமே அமுலாக்கமுடியும். 1ம் அத்தியாயத்தில் பிரதானமாகக் கூறப்பட்ட படிப்படியான மாற்றங்களுக்கும் 2ம் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்ட முக்கிய செயற்பாட்டிற்கும் இது செல்லுபடியாகும். செய்யவேண்டிய காரியங்கள் பலவற்றிற்குப் பலமும் இறுக்கத்தன்மையும் தேவைப்படும். அரசாங்கம் தனது சொந்தக் கட்சிக்குள்ளேயே தனியார்துறையினது அபிவிருத்திக்குத்தடையாகவிருக்கும் அகந்தைகொண்ட அதிகாரிகளைக் கீழ்ப்படியவைக்கவேண்டும். பாராளுமன்றம் கூறும் இறை, பணக்கொள்கைகளை அது இறுக்கமாக அமுல் செய்து, நிதி, வேதனக்கட்டுப்பாட்டினை உறுதிசெய்யவேண்டும். ஓர் அடக்குமுறை ஆட்சியினாலோ, ஓர் அதிகாரத்துவ நிர்வாகத்தினாலோ, சில்லி அல்லது துருக்கிய வகையைச்சார்ந்த இராணுவ சர்வாதிகாரத்தினாலோ, மாபெரும் எழுச்சி, சந்தைப் பொருளாதாரத்தை மீளப்புகுத்தல் என்பவற்றுடன் கூடிய ஓர் உறுதியாக்கற் செயற்றிட்டத்தை அமுலாக்க முடியும். இவற்றிற்கு எதிராக ஒருவன் பொருளாதார வாதங்களைக் கூறலாம். பினோச்சேயோ, சதிப்புரட்சியின் பின்னர் அவரைச் சூழவிருந்த சிக்காகோ குழுவினரோ பரந்த அரசதுறையினைக்கொண்ட இன்றைய ஹங்கேரியில் முன்னேற முடியாது. பொருளாதார வாதங்களைக் கவனியாது விட்டாலுங்கூட, அரசியல், ஒழுக்கவியல்

காரணங்களுக்காக இவ்வகை அமைப்பினை நான் ஏற்கத்தயாராக இல்லை. தனது பலத்திற்காக அடக்குமுறைகளில் தங்கியிருக்கும் ஓர் அரசாங்கத்தினால் சாதிக்கப்படும் பொருளாதார விளைவுகள் எவையாகவிருப்பினும், உறுதியாக்கல் என்ற நோக்கத்திற்காக இதனை ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

மக்களது ஆதரவையே தனது பலமாகக்கொண்ட ஓர் அரசாங்கமே இதற்கு ஒரு வழியாகும். இவ்வித அரசாங்கமொன்று, பொருளாதாரத்தைத் திருத்தியமைத்துக்கொள்வதற்குச் சுதந்திரமான தேர்தலின் மூலம் மக்களின் அதிகாரத்தைப் பெற்றிருக்கும். 2ம் அத்தியாயத்தில் கையாண்ட, அதே உவமையையே இங்கும் நான் கையாளுகிறேன். நோயாளியைக் கேட்காமலேயே ஒரு வைத்தியன் தான் சரியெனக்கருதும் பட்சத்தில் தேவையான மயக்கமருந்தினைக் கொடுத்து அவனுக்கு அறுவைச் சிகிச்சையினைச் செய்யலாம். ஆனால், ஒரு நாகரிகமடைந்த சமூகத்தில் இவ்வித நடைமுறைகள் ஏற்கப்படுவதில்லை. ஒரு வைத்தியன் அறுவைச்சிகிச்சை ஏன் தேவையானது என்பதையும் அதனாலெழக்கூடிய ஆபத்துக்கள் எவையென்பதையும் நோயாளிக்கு விளக்கி, அதனை மேற்கொள்வதற்கு நோயாளியின் அனுமதியைப் பெறவேண்டும். நான் தகவுரை செய்யும் அறுவைச் சிகிச்சையினை மேற்கொள்வதற்கும் இதுவே சரியான வழியென எனக்குத் தோன்றுகின்றது. அறுவைச் சிகிச்சை கட்டாயத்தேவையாகவிருந்த பொழுதும், நோயாளிகள். என்ற வகையில் ஹங்கேரிய மக்கள் தமது தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளினூடாகத் தமது விருப்பத்தினைத் தெரிவிக்கவேண்டும்.

எதிர்கால ஹங்கேரிய அரசாங்கத்தினது சேர்க்கையைப்பற்றி ஊகிப்பது இந்த நூலின் நோக்கமன்று. இது எனது துறையினது பரப்பிற்கு அப்பாற்பட்ட ஒன்றாகவிருப்பதால். இதுபற்றி ஆலோசனை கூற எனக்குத் தகுதியோ, விருப்பமோ இல்லை. இதுபற்றிய ஒரேயொரு கருத்தினை மட்டும் இங்கு நான் கூறிவைக்கிறேன். இந்த நூலில் ஆராயப்பட்டுள்ள அரசியல், பொருளாதார, ஒழுக்க முரண்பாடுகள் ஒவ்வொரு கட்சிக்குள்ளும் இயக்கத்திற்குள்ளுங்கூட பிரதிபலிக்கவே செய்கின்றன. தனிப்பட்ட கட்சிகளுக்குள் பிரிவுகள், குழுக்கள் என்ற வடிவங்களிலும், குறிப்பிட்ட கட்சிகளினது செயற்றிட்டங்களில் அடிக்கடி ஏற்படும் சுயமுரண்பாடுகள், இசைவின்மைகள் என்ற வடிவங்களிலும், இவை தோன்றலாம். ஒரு கருத்தும், அதற்கு முற்றிலும் முரணான இன்னொரு கருத்தும் ஒரே நேரத்தில் கூறப்படுவதை நாம் காண்கிறோம். இவ்வித முரண்பாடுகள் நிலவுவதோடு, பொருளாதாரக் கஷ்டங்கள் அதிகரிக்கும் போது இவை மேலும் தீவிரமடைகின்றன.

பொதுவான பேச்சுவழக்கிலும், அரசியல் சாத்திரத்திலும் கூட்டு என்பது இரு கருத்துக்களில் கையாளப்படுகின்றது. குறுகிய கருத்தில்

இது ஒரு அரசாங்கத்தில் குறிப்பிட்ட சில கட்சிகள், அல்லது அரசியற் சக்திகள் கூட்டுச்சேர்வதைக் குறிக்கும். பரந்த ஒரு கருத்தில், பொதுக்கருமங்களை மேற்கொள்வதற்காகக் குறிப்பிட்ட கட்சிகள், இயக்கங்கள், சமூக சக்திகள் என்பவற்றிற்கிடையே ஏதோ ஒருவித கூட்டுறவு ஏற்படுத்தலையும் இது குறிக்கும். (இந்தக்கருத்தில், மேற்கு ஜேர்மனியில் அடீனோர், எர்உறார்ட் என்போருக்கிடையிலான கூட்டு, கிறிஸ்தவ சனநாயக அரசாங்கத்திற்கும் தனியார்துறை, தொழிற் சங்க இயக்கம் என்பவற்றுக்கிடையிலான ஒன்றாகும். இதில் தொழிற்சங்கங்கள் தமது வேலைநிறுத்த உரிமையினைக்கையாள மாட்டா என்ற உறுதி அளிக்கப்பட்டது. இங்கு நான் கூட்டு என்ற பதத்தைப் பரந்த கருத்திலேயே – அதாவது, கூட்டில் எச்சக்திகள் நேரடியாக அரசாங்கத்தில் முக்கிய பங்கு கொள்ளும், எவை அரசாங்கத்திற்கு வெளியே இருக்கும் அதே வேளையில் அதற்கு இடைஞ்சலாக இராது என்பவற்றைக் கூறாது விட்டுள்ளேன். பின்னையது ஒரு சிறந்த எதிர்க்கட்சியாகவிருப்பதோடு, அடிப்படைப் பொருளாதாரக் கருமங்களைப் பொறுத்தவரை அரசாங்கத்தோடு முரண்படாதிருக்கும். அதாவது, கூட்டில் எச்சக்திகள் அரசாங்கத்தில் நேரடியாக பங்குகொள்ளும், எவை அரசாங்கத்திற்கு வெளியே நின்று அதற்கு இடைஞ்சலாக இராது செயற்படுமென்பதையும் கூறாது விட்டுள்ளேன்.

பரந்த ஒரு கருத்தில், எதிர்கால ஹங்கேரியக் கூட்டினைப் பொறுத்தவரை, தனது எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டதும், உண்மையாகவே முயற்சியுள்ளதுமான தனியார் துறையொன்று தேவைப்படும். தனது நிலையினை எண்ணி அச்சங்கொண்டு, சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் தடைகளை ஏற்படுத்தும் ஓர் அரசு, பணிக்குழுவினை எதிர்கொள்ளவேண்டியதாக இருக்கக்கூடாது. மாற்றங்களினால் தாம் இழப்பினை அடைவதாகக்கருதும் கைத்தொழிற்றுறை ஊழியர், தமக்கிடையே போட்டியிடும் தொழிற்சங்கங்களினால் தூண்டப்பட்டு அரசாங்கக்கொள்கையினை எதிர்க்கக்கூடாது. இச்சக்திகளுக்கிடையே தோன்றும் சச்சரவுகளைச் சமாதானமான ஒப்பந்தங்களினூடாகத் தீர்த்து வைப்பதிலேயே பொருளாதார மாறுகையினது வெற்றி தங்கியிருக்கும்.

எதிர்காலக் கூட்டிணியொன்றில் (குறுகிய கருத்திலும், பரந்த கருத்திலும்) இணைவோர் ஒன்றுபடவேண்டிய கருமங்களைச் சுருக்கமாக இங்கு கூறமுயன்றுள்ளேன். இதில் அவர்கள் வெற்றியடைந்து, தமது ஒப்பந்தத்தினை மதித்து நடப்பார்களாயின் நாட்டினது பொருளா-தாரத்தினைச் சீராக்கவும், அபிவிருத்தியைத் துரிதப்படுத்தவும் வாய்ப்புண்டு. இதில் தோல்வியடைந்தால் கூட்டணி முறிவடையும். ஆரம்பந்தொட்டோ, அல்லது சிறிய கால இடைவெளியின் பின்னரோ அது தாக்கப்படுமாயின் அல்லது உடைத்தெறியப்படுமாயின், பொருளாதாரம் கீழ்நோக்கிச் சரியும்.

ISBN 955 - 9102 - 01 - X

Printed by Karunaratne & Sons Limited